
# லெனின்

## பொதுக் கல்வி



மொழிபெயர்ப்பாளர்கள்: ஆ. சுப்பிரமணியன்,
ரா. கிருஷ்ணையா, முதலியோர்.

இந்த நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் மார்க்சிய-லெனினியக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட தொகுப்புகளின் 5ம் பதிப்பில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டவை.

© தமிழ் மொழிபெயர்ப்பு முன்னேற்றப் பதிப்பகம், 1982

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102-462}{014(01)-82}$ 808—81 0101020000

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . . . . . . . 7
விவசாய செகண்டரிப் பள்ளிப் பண்ணைகளும் விவசாய சமுதாய மாற்றத்திற்கான பள்ளிகளும் . . . . . . . . . . . . . . . 21
நம்முடைய அமைச்சர்கள் எதைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள்? . . . . . 33
ருஷ்யர்களும் நீக்ரோக்களும் . . . . . . . . 39
அதிகரித்துக் கொண்டிருக்கும் முரண்பாடு. ஓர் அரசியல் கட்டுரையாளரின் குறிப்புகள் என்ற கட்டுரையிலிருந்து . . . . . . . . . . . . 41
மக்கள் கல்வி அமைச்சகக் கொள்கையைப் பற்றிய பிரச்சினை (மக்கள் கல்வியைப் பற்றிய விவாதத்துக்குப் பிற்சேர்ப்பு) . . . . . . . . 50
உக்ரைனியர்களுக்காக பிஷப் நீக்கொன் எவ்வாறு வாதிடுகிறார்? . . . . . . . . . . . 66
''கலாசார-தேசிய'' சுயாட்சி . . . . . . . . 70
நம் பள்ளிகளைப் பற்றி . . . . . . . . . . 77

தேசிய இனப் பிரச்சினைப் பற்றிய விமர்சனக் குறிப்புகள் எனும் புத்தகத்திலிருந்து . . . . 80
அ.ம. கோர்க்கிக்கு . . . . . . . . . . . 87
கட்சித் திட்டத்தைத் திருத்துவது பற்றிய விவரங் களிலிருந்து. திருத்தப்பட்டத் திட்ட நகலுக்கு. திட்டத்தின் பழைய, புதிய வாசகங்கள் . . . 89
பெத்ரோகிராதில் பொது நூலகத்தின் பணி களைப் பற்றி . . . . . . . . . . . 92
1918ம் ஆண்டு, ஆகஸ்டு 28ம் தேதி நடை பெற்ற கல்வியைப் பற்றிய அகில-ருஷ்ய காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து . . 94
சர்வதேசியவாத ஆசிரியர்கள் இரண்டாவது அகில-ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை, ஜனவரி 18, 1919. . . . . . . . . 98
1919 ஏப்ரல் 17ல் நடைபெற்ற முதலாவது அனைத்து-ருஷ்யக் கம்யூனிஸ்ட் மாணவர் களின் மாநாட்டில் ஆற்றிய உரை . . . 104
முதியோர் கல்வி பற்றிய முதல் அகில-ருஷ்யக் காங்கிரஸ், 1919, மே 6-19
1. வாழ்த்துரை, மே 6 . . . . . . . . . 106
கல்வி, சோஷலிஸ்ட் கலாசார ஊழியர்களின் முதலாவது அகில-ருஷ்யக் காங்கிரசில் (1919, ஜூலை 31) ஆற்றிய உரையிலிருந்து . 112
குபெர்னியா மக்கள் கல்வி இலாக்காக்களின் முதியோர் கல்விப் பிரிவுகளது நிர்வாகிகளின் மூன்றுவது அனைத்து-ருஷ்ய மாநாட்டு (பிப்ர வரி 25, 1920) சொற்பொழிவிலிருந்து . 118
இளைஞர் கழகங்களின் பணிகள். ருஷ்யாவின் இளங் கம்யூனிஸ்டுகள் கழகத்தினது மூன்றுவது

அனைத்து-ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை, 1920, அக்டோபர் 2 . . . . . . . . . . . . . 124

பாட்டாளி வர்க்கக் கலாசாரம் குறித்து என்னும் கட்டுரையிலிருந்து. நகல் தீர்மானம். . . . . . 150

குபெர்னியா, உயெஸ்து கல்வி இலாகாக்களின் அரசியல் கல்விப் பணித்துறையாளர்களது அனைத்து-ருஷ்ய மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு, 1920, நவம்பர் 3 . . . . 153

பாலிடெக்னிகல் கல்வி பற்றி. நதேழ்தா கன்ஸ்தன் தீனவ்னாவின் ஆய்வுரைகளைப் பற்றிய குறிப்புகள் . 170

கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தில் வேலை செய்யும் கம்யூனிஸ்டுகளுக்கு மத்தியக் கமிட்டியின் நெறிமுறைகள். . . . . . . . . . . 175

அ.வ. லுனச்சார்ஸ்கி, மி. நி. பக்ரோவ்ஸ்கி, எ.அ. லித்கென்ஸ் ஆகியோருக்கு, ஏப்ரல் 8, 1921 . . . . . . . . . . . . . . 178

புதிய பொருளாதாரக் கொள்கையும் அரசியல் கல்வி இலாக்காக்களின் பணிகளும். அரசியல் கல்வி இலாக்காக்களின் இரண்டாவது அகில-ருஷ்ய காங்கிரஸ் அறிக்கையிலிருந்து, அக்டோபர் 17, 1921 . . . . . . . . . . . . . . 180

சோவியத்துகளின் ஒன்பதாவது அகில-ருஷ்யக் காங்கிரஸ். டிசம்பர் 23-28, 1921.
2. பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய பிரச்சினைகளைக் குறித்து சோவியத்துகளின் ஒன்பதாவது அகில-ருஷ்யக் காங்கிரசின் (டிசம்பர் 28, 1921) நெறிமுறைகள் என்பதிலிருந்து . . . . . . . 190

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் முக்கியத்துவம் குறித்து எனும் கட்டுரையிலிருந்து . . . . . . . . . . . . . . 192

''ரு. சோ. கூ. சோ. குடியரசை மின்சாரமய மாக்கலும் உலகப் பொருளாதாரத்தின் இடை மாற்றக்கட்டமும்'' எனும் இ.இ. ஸ்தெபானவினுடைய நூலுக்கு முகவுரை. . 198

கல்வி போதிக்கும் ஊழியர்களின் மாநாட் டிற்கு. . . . . . . . . . . . . . . 201

நாட்குறிப்பிலிருந்து சில பக்கங்கள் . . . . 202

கூட்டுறவு குறித்து என்னும் கட்டுரையிலிருந்து . . 211

நமது புரட்சி (நி. சுஹானவின் குறிப்புகள் சம்பந்தமாய்) என்னும் கட்டுரையிலிருந்து . . 216

குறிப்புகள் . . . . . . . . . . . . . 218

பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . 237



## முன்னுரை

சோவியத் கல்விமுறையின் சித்தாந்த அடிப்படைகளும் அமைப்புத்துறைக் கோட்பாடுகளும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியால் வகுத்து முன்வைக்கப்பட்டன. கம்யூனிஸ்டுக் கட்சி லெனின் கருத்துகள் நெறிமுறைகளின் வழி இதைச் செய்தது. மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கு வெகு காலத்திற்கு முன்னதாகவே பாட்டாளி வர்க்கத்துக்கு அறிவு புகட்டவும், அரசியல் ரீதியில் போதனை அளிக்கவும் லெனினுல் தலைமை தாங்கி நடத்தப்பட்ட கட்சியானது தொடர்ந்து போராடியது. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவும், கலாச்சாரத்தையும் கல்வியையும் சாதாரணப் பொது மக்களும் எளிதில் பெறக்கூடிய அமைப்பைக் கொண்ட சோஷலிச சமுதாயமாக முதலாளித்துவச் சமுதாயத்தை மாற்றுவதற்கும் பாட்டாளிகளை ஆயத்தம் செய்ய வேண்டுவது ஓர் இன்றியமையாத நிபந்தனை என்பதை கட்சி இதில் கண்டது.

மக்களின் கல்விக்கு லெனின் எல்லாவற்றிற்கும் மேலான முக்கியத்துவம் கொடுத்தார். சமுதாய வளர்ச்சியின் இந்த அல்லது அந்த கட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் பொதுப் படையான அரசியல் கடமைகள் சம்பந்தப்பட்ட போதனைகள் அவர்களது கல்வி பயிற்றுவிப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றில் லெனின் கவனம் செலுத்தினர். இத்தகைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஜாராட்சி நிலைமைகளில்

பாட்டாளிகளிடம் முன்னேற்றமான வர்க்க விழிப்புணர்வை வளர்க்கும் பணிகளுடன் லெனின் இணைத்தார்.

சர்வாதிகாரத்தை எதிர்த்துப் புரட்சிகரமாகப் போராடாமலும் நிலப் பிரபுக்கள், முதலாளித்துவ வர்க்கத்தினர் ஆகியோரின் ஆட்சியைத் தூக்கி எறியாமலும் பொதுக் கல்வியை அடிப்படையாக மாற்றியமைப்பது இயலாது என்ற கருத்திற்கு ருஷ்யப் பாட்டாளிகளை லெனின் தட்டி எழுப்பினுர்.

வர்க்க சமுதாயத்திலான கல்வியின் வர்க்கத் தன்மையைப் பற்றிய மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் போதனையை லெனின் ஸ்தூலமாக வெளிப்படுத்தி வளர்த்தார். சாமான்யப் பொது மக்கள் அறிவைப் பெறும் வழியை ருஷ்ய சர்வாதிகாரம் திட்டமிட்டு வேண்டுமென்றே தடுத்து வந்திருப்பதை லெனின் நிதர்சனப்படுத்தி விளக்கினுர். ''நம்முடைய அமைச்சர்கள் எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறுர்கள்'' (1895) என்ற அவருடைய கட்டுரையில் பின்வருமாறு எழுதினுர்: ''அமைச்சர் தொழிலாளர்களைத் துப்பாக்கி ரவைகள் எனவும் அறிவையும் கல்வியையும் தீப்பொறி எனவும் கருதுகின்ருர்; இந்தத் தீப்பொறி துப்பாக்கி ரவையில் விழுந்தால் அந்த வேட்டு அரசாங்கத்திற்கு எதிராக முதலாவதாகவும் முக்கியமாகவும் திருப்பி விடப்படும் என்று அமைச்சர் நன்கு புரிந்துள்ளார்.'' (இப்புத்தகத்தின் பக்கம் 35 பார்க்க.)

வர்க்க சமுதாயத்தில் கல்வியிலும் வளர்க்கும் முறையிலும் வர்க்க சாராம்சம் உள்ளது என்பதை மறைக்கச் செய்யப்படும் முயற்சிகளை அழித்து வீழ்த்தக்கூடிய அளவு கடுமையாக லெனின் விமர்சித்தார். செகண்டரிப் பள்ளி சீர்திருத்தத்தை நிறைவேற்றும் திட்டத்தில் உள்ள பிற்போக்குத் தன்மையையும் கற்பனுவாத சாராம்சத்தையும் லெனின் தன்னுடைய Gymnasium Farms and Corrective Gymnasia (1895) என்ற கட்டுரையில் தோலுரித்துக் காட்டினுர். இத்திட்டம் ருஷ்யாவில் உள்ள வறுமைமிக்க குடியான மக்களுக்காக பதினைந்தாயிரம் முதல் இருபதாயிரம் வரையிலான பெண்களுக்கும் பையன்களுக்குமான செகண்டரிப் பள்ளிகளை நிறுவவும், அதே நேரத்தில் இப்பள்ளிகள் உற்பத்தி செய்யும் சங்கங்கள் போன்றவைகளாக இருக்கும்படி வகை செய்ய

வும் உத்தேசித்திருந்தது. இத்திட்டத்தின்படி மாணவர்களுக்கு குளிர் காலத்தில் செகண்டரி பள்ளிப் பாடத்திட்டப்படி போதிக்கப்படும். கோடை காலத்தில் படிப்பதற்காக ஆகும் செலவை ஈடுகட்ட மாணவர்கள் விவசாய வேலைகள் செய்ய வேண்டும்.

விவசாய செகண்டரிப் பள்ளிகள் விவசாயிக் குழந்தைகளுக்கு செகண்டரிக் கல்வி அளிப்பதற்கானவையாகும். சமகால ருஷ்யாவில் ஒரு பொதுமாதிரி நவீன அரசுச் செகண்டரி பள்ளியை நிறுவுவதற்கு இது முன்னோடியாகும்.

இந்தத் ''திட்டம்'' கற்பனாவாதமானது என்றும் பயனுள்ளதாக இருக்க முடியாது என்றும், மிதவாதிகள் ருஷ்யாவின் எதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றும், இத்திட்டம் பண்ணை அடிமை உடைமை உணர்வைக் கொண்டதாக உள்ளது என்றும் லெனின் விளக்கினார்.

''மக்கள் கல்வி அமைச்சகக் கொள்கையைப் பற்றிய பிரச்சினை'' (1913) என்ற தன்னுடைய கட்டுரையில் ஜார் அரசாங்கம் கல்வித் துறையில் கடைப்பிடித்து வந்த கொள்கையின் வர்க்க சாராம்சத்தை லெனின் குறிப்பாகவும் மிகவும் வன்மையான வகையிலும் அம்பலப்படுத்தினார். அந்தக் கட்டுரையில் ருஷ்யாவில் இருந்த பொதுக் கல்வியின் தன்மையை விளக்கும் அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்களை வெளியிட்டார். ருஷ்யாவில் உள்ள இளம் தலைமுறையினரில் ஐந்தில் நான்கு பங்கினர் அறியாமையில் ஆழ்த்தப்பட்டுள்ளனர் என்ற உண்மையையும் வயது வந்தவர்களில் 27 சதவீதத்தினர் மட்டுமே எழுத்தறிவு பெற்றவர்கள் என்பதையும் லெனின் சுட்டிக்காட்டினார். வெகுஜனங்களிடமிருந்து ஒளியும் அறிவுமான கல்வியை இந்தளவுக்கு வலிந்து பறித்துக் கொண்ட இவ்வளவு காட்டுமிராண்டித்தனமான வேறு நாடு இல்லை, ருஷ்யாவைத் தவிர அத்தகைய நாடு எதுவும் ஐரோப்பாவில் இருக்கவில்லை என்று லெனின் அக்கட்டுரையை முடிக்கிறார்.

மக்களின் கலாசார வளர்ச்சிக்கு மிகவும் கடுமையான விரோதி சர்வாதிகாரம் தான் என்பதை லெனின் எடுத்துக் காட்டினார். உழைக்கும் மக்கள் கல்வியைப் பெற எடுக்கும் முயற்சிகளை ஒடுக்க சர்வாதிகாரம் தன்னால் முடிந்ததனைத்தையும் செய்தது. அது (சர்வாதிகாரம்) கல்விக்கு அதிக அளவு

தீங்கு பயக்கும் சமயநிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டது. ருஷ்யர்கள் அல்லாத மக்களினங்களிடம் காலனி கொள்கையை அது கையாண்டது. அவர்களுக்கு அவர் களுடைய தாய் மொழியிலேயே கல்வி கற்பிக்கும் பள்ளிக் கூடங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு மறுக்கப்பட்டது.

வர்க்க சமுதாயத்திலான கல்வியை கலாசாரத்தை மற்றும் கல்விக் கூடத்தின் வர்க்கத் தன்மையை மறைக்க முயன்ற எல்லாவித சந்தர்ப்பவாதிகள் திருத்தல்வாதிகள் ஆகியோரின் ஒவ்வொரு முயற்சிக்கும் எதிராக, புரட்சி இயக்க வளர்ச்சி யின் எல்லாக் கட்டத்திலும் லெனின் உறுதியாக முன்வந் தார். இது விஷயமாக அதிகமாகச் சுட்டிக் காட்டியிருக்கும் கட்டுரை ''தேசிய இனப் பிரச்சினைப் பற்றிய விமர்சனக் குறிப்புகள்'' (1913) என்பதாகும். அதில் அவர் கலாசார-தேசிய சுயாட்சி என்ற ஆழ்ந்த தவறான கொள்கையை விமர் சிக்கிறார். இது ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகள் மத்தியில் உதித்தது. பின் ருஷ்ய மென்ஷிவிக்குகளால் மேற்கொள்ளப் பட்டது. இது முதலாளித்துவ சமுதாயத்தில் ஒரே ஒரு தேசியக் கலாசாரம் நிலவுகிறது என்ற கருத்தை வெளியிட் டது. இந்தத் தத்துவத்தின் ஆதரவாளர்கள் கொண்டிருந்த கருத்துரையை மறுத்துரைத்த லெனின் பின்வருமாறு எழு தினார்: ''ஒவ்வொரு தேசிய கலாசாரத்திலும் ஜனநாயக மற்றும் சோஷலிசக் கலாசாரத்தின் கூறுகள் உள்ளன. அவை கள் ஆரம்ப அடிப்படைக் கூறு வடிவில் மட்டுமே இருக்க லாம். ஏன் எனில் ஒவ்வொரு தேசிய இனத்திலும் உழைக்கும் சுரண்டப்படும் மக்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய வாழ்க் கை நிலைமை ஜனநாயகம், மற்றும் சோஷலிசம் பற்றிய சித்தாந்தம் தவிர்க்க இயலாதபடி தோன்ற வழி வகுக்கிறது. ஆனால் ஒவ்வொரு தேசிய இனமும் வடிவத்தில் முதலாளித் துவக் கலாசாரத்தையும் கொண்டுள்ளது. (அநேக நாடுகள் பிற்போக்கான சமயஞ் சார்ந்த கலாசாரத்தையும் கொண் டுள்ளன) அவைகள் வெறும் கூறுகள் அல்ல, ஆனால் ஆதிக்கம் செலுத்தும் கலாசாரம் ஆகும்.'' (Lenin, *Selected Works*, Vol. 20, p. 24.)

ஒவ்வொரு நாட்டிலும் இரு கலாசாரங்கள் உள்ளன என்று லெனின் போதித்தார். இந்த போதனையால் முதலா ளித்துவ தேசியத்தின் அபாயத்திற்கு எதிராக அவர் பாட்

டாளி வர்க்கத்தை எச்சரித்தார். தேசியத் தனிமைநிலை, பிற தேசங்கள்பால் சகிப்புத்தன்மை அற்ற தோரணை எனும் உணர்வில் வளரும் தலைமுறையினர் பயிற்றுவிக்கப்படுவது முதலாளித்துவத் தேசியத்தின் வெளிப்பாடுகளில் ஒன்று.

மகத்தான சோஷலிஸ்டுப் புரட்சி, பணக்கார வர்க்கத்தினருக்கு கல்வித் துறையில் இருந்த தனிச் சலுகைகளுக்கு ஒரு முடிவு கட்டியது. விஞ்ஞானம், கலாசாரம், கலை சாதனைகள் அனைத்தையும் வெகு ஜனங்கள் எளிதில் பெறக்கூடிய நிலைக்குக் கொண்டு வந்தது.

சமுதாயப் புரட்சியானது கலாசாரப் புரட்சிக்கு ஓர் இன்றியமையாத முன் நிபந்தனையாகும் என்று லெனின் கருதினார். முதலாளித்துவ சமுதாய நிலைமைகளில், முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்திற்கான மாற்றத்தை அமைதியான வழியில் மட்டுமே செய்து முடிக்க முடியும் எனவும், உற்பத்தி சக்திகளும் கலாசாரமும் ஒரு நிச்சயமான வளர்ச்சிக் கட்டத்தை அடைந்தால் மட்டுமே அது சாத்தியம் என்றும் எல்லாவித சீர்திருத்தவாதிகளும் வெளியிட்ட துணிபுரைகளை லெனின் கடுமையாக விமர்சித்தார். ''நமது புரட்சி'' என்ற கட்டுரையில் அந்தக் கருத்து நிலையை விரிவாக விளக்கிய நி. சுஹானவின் குறிப்புகள் தொடர்பாகக் கருத்துரைத்த லெனின் பின்வருமாறு எழுதுகிறார்: ''சோஷலிசத்தைக் கட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட கலாசாரத் தரம் தேவை என்றால் (யாராலும் அந்தக் குறிப்பிட்ட கலாசாரத் தரம் என்ன என்று கூற முடியாது; ஏன் எனில் அது ஒவ்வொரு மேற்கத்திய நாட்டிலும் வேறுபடுகிறது.) அந்தக் குறிப்பிட்ட கலாசார தரத்துக்குத் தேவையான முன் தேவைகளைப் புரட்சிகரமான வழியில் முதலில் அடைவதன் மூலம் ஏன் அவ்வேலையை நாம் ஆரம்பிக்கக்கூடாது? அதன்பின் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் அரசாங்கத்தின் மற்றும் சோவியத் அமைப்பு முறையின் உதவியுடன் மற்ற நாடுகளை முந்துவதற்கு ஏன் தொடர்ந்து செயல்படக் கூடாது?'' (Lenin, *Selected Works*, *Vol.* 33, pp. 478-79.)

ஜாராட்சியால் அஞ்ஞான இருளிலும் அறியாமையிலும் அமுக்கி வைக்கப்பட்ட வெகு ஜனங்கள், சோஷலிச சமுதாயத்தை தீவிரமாக கட்டுபவர்களாகவும் புதிய கலாசார மதிப்புகளை உருவாக்குகிறவர்களாகவும் ஆவதற்கு அவர்

களுக்கு கலாசாரம் எளிதாக கிட்டக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதுதான் பண்பாட்டுப் புரட்சியைப் பற்றிய லெனினுடைய முக்கியமான போதனையாகும். 1918 ஜனவரியில் நடந்த சோவியத்துகளின் மூன்ருவது அகில ருஷ்யக் காங்கிரசில் பேசிய லெனின் பின்வருமாறு கூறிஞர்: ''பழங் காலத்தில் தொழில் நுணுக்கம் கலாசாரம் ஆகியவற்றின் பலன்கள் ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்குமாறும் மற்றவர் களுக்கு குறைந்த பட்ச தேவையான கல்வியும் மேம்பாடும் கிடைக்காதவாறும் செய்யவே மானுட மேதையும் மனித மூளையும் படைக்கப்பட்டன. இப்பொழுதிலிருந்து விஞ்ஞான அற்புதங்களும் கலாசார சாதனைகளும் தேசம் முழுவதற்கும் சொந்தம். இனிமேல் மனித மூளையும் மனித மேதையும் ஒடுக்கவும் சுரண்டவும் என்றுமே பயன்படுத்தப்பட மாட்டா.'' (Lenin, *Selected Works*, Vol. 28, pp. 481-482.) புரட்சிகரமான நடவடிக்கைகளில் பொது மக்கள் பங்கு கொள்வதானது அவர்களுடைய முற்போக்கான சோஷலிச உணர்வை வளர்ப்பதற்கு அவசியமான முன் தேவை என லெனின் கருதிஞர்.

கலாசாரப் புரட்சியின் வெற்றி சாதனை ஒரு நாளில் பெறக்கூடிய விஷயம் அல்ல. அது நீடித்த நடை முறையாகும் என்பதனை லெனின் அறிவுறுத்திஞர். வயது வந்தோரிடையே உள்ள கல்லாமையைப் போக்குவது, பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகள் அனைவருக்கும் சர்வப் பொதுவான முறையில் கல்வி அளிப்பது, எல்லா தேசிய இனங்களையும் சார்ந்த உழைக்கும் மக்களின் கலாசாரத் தரத்தை உயர்த்துவது, உண்மையான ஒரு மக்கள் அறிவுஜீவிகள் பகுதியை உருவாக்குவது ஆகியவை அதன் முக்கியமான பணிகளாகும்.

கலாசாரப் புரட்சியை நிறைவு படுத்துவதில் பள்ளிக்கூடம் ஒரு மிகவும் முக்கியமான இணைப்பு என்று லெனின் கருதிஞர். முதலாளித்துவ ஆதிக்கத்தின் கருவியாக பள்ளிக்கூடம் இருப்பதிலிருந்து, அந்த ஆதிக்கத்தை அழிக்கக்கூடிய கருவியாகப் பள்ளிக்கூடத்தை மாற்ற வேண்டியது அவசியமாக இருந்தது. 1918 ஆகஸ்டில் நடந்த கல்வி சம்பந்தமான முதல் அகில ருஷ்ய காங்கிரசில் அவருடைய பேச்சில் லெனின் பின்வருமாறு கூறிஞர்: ''கல்வித் துறையிலான நமது வேலை,

முதலாளி வர்க்கத்தைத் தூக்கி எறிவதற்கான போராட்டத்தின் ஒரு பகுதியே. வாழ்க்கையிலிருந்தும், அரசியலிலிருந்தும் விலக்குண்டு நிற்கும் கல்வி பொய்யும் பித்தலாட்டமுமே என்பதை நாம் பகிரங்கமாக என்றும் பிரகடனப்படுத்துவோம்.'' சர்வாதிகாரத்தைத் தூக்கி எறிந்த பிறகு பாட்டாளிகளால் நிறுவப்படும் உண்மையான ஜனநாயகமான ஒருங்கிணைந்த பொதுக்கல்விப் பள்ளியை லெனின் முதலாளிகளின் வர்க்கப் பள்ளிக்கு எதிராக வைத்தார்.

பழைய பள்ளியை விமர்சிக்கும் போது அது ''உண்மையான கம்யூனிஸ்ட் கல்விக்கான'' பள்ளியாக அடிப்படையிலேயே மாற்றப்பட வேண்டும் என்று லெனின் கூறினார். பழைய பள்ளிகளில் பேராதிக்கம் செலுத்தி வந்த நெட்டுருப்போடும் பழக்கத்தை உறுதியாகக் கண்டித்த லெனின் ''நன்கு கற்ற இன்றைய மனிதனுக்கு இன்றியமையாத எல்லா விவரங்களும் அடங்கிய அறிவை'' ஒவ்வொரு மாணவனும் வளர்த்து, அதில் பரிபூர்ணம் அடைய வேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். உயர்ந்த கல்வியுடையவர்களாகவும் உயர்ந்த பண்பாடுடையவர்களாகவும் உயர்ந்த கோட்பாடு உடையவர்களாகவும், கம்யூனிசத்தைக் கட்டுவதற்கு மனித இனம் சேகரித்த அறிவைப் பயன்படுத்தும் ஆற்றல் உடையவர்களாகவும் இளைஞர்களை உருவாக்கும் அடிப்படையில் பரந்த பொதுக்கல்வியை பள்ளிக்கூடம் மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்பது லெனினுடைய கருத்து.

வாழ்க்கையுடனும் சோஷலிஸ்ட் கட்டுமானப் பணியுடனும் நெருங்கிய தொடர்புடையதாகவும் மேலும் புதிய சமுதாய அமைப்பு முறையின் வெற்றிக்காகத் தீவிரமாகப் போராடுகிறவர்களை உருவாக்கக் கூடியதாகவும் பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் லெனின் தன்னுடைய பேச்சிலும், எழுத்திலும் வலியுறுத்தினார்.

''இளைஞர்களுக்கான போதனை அமைப்புமுறை, மற்றும் பயிற்சி ஆகியவற்றை அடிப்படையாக மறுவார்ப்புச் செய்தால் மட்டுமே, இளம் தலைமுறையினரின் முயற்சிகள் பழைய சமுதாயம் போல் அல்லாத ஒரு சமுதாயத்தை அதாவது, ஒரு கம்யூனிஸ்டு சமுதாயத்தை உருவாக்குவதில் வெற்றி பெற முடியும் என்ற உறுதியை நம்மால் கொடுக்க முடியும்''

என ருஷ்ய இளம் கம்யூனிஸ்ட் கழகத்தின் மூன்றுவது அனைத்து ருஷ்ய காங்கிரசில் நிகழ்த்திய அவருடைய உரையில் லெனின் சுட்டிக்காட்டினுர்.

உள்நாட்டுப் போர் மிக உக்கிரமாக நடந்து கொண்டும் நாடு அழிவுகளில் சிக்கிக் கொண்டும் இருந்த மிகக் கடினமான காலமான 1920ஐ ஒட்டிய ஆண்டுகளில் லெனின் முன்னேட்ட நோக்குடன் இளைஞர்களை நோக்கி ''படியுங்கள்'' என்று மிக எளிய சொல்லில் ரத்தினச் சுருக்கமாகக் கூறினுர்.

எதை எப்படிப் பயில்வது என்பது குறித்துத் தன்னுடைய கருத்தை விளக்கிய லெனின் அப்பணியை அகல்விரிவான தெளிவுடன் வகுத்து முன்வைத்தார்: கம்யூனிசத்தைக் கட்டப் பயில்வது, பெற்ற பயிற்சியை அன்ருட முழு வேலையுடன் இணைப்பது, விஞ்ஞான அறிவில் இளைஞர்கள் பாண்டித்தியம் பெறும்படிக் கற்றுக் கொடுத்தல். ''மனித இனத்தால் உருவாக்கப்பட்ட எல்லா அறிவுக் கருவூலங்களாலும் உன் அறிவை செழுமைப்படுத்தினுல் மட்டுமே நீ ஒரு கம்யூனிஸ்ட் ஆக முடியும்'' என்ருர் அவர்.

பாட்டாளிகளால் ஆட்சி அதிகாரம் வென்று பெறப்பட்ட ஆரம்ப நாட்களிலிருந்து போல்ஷிவிக் கட்சி புதிய பொதுக் கல்வி முறையை ஒழுங்கு படுத்துவதில் பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்தது. கல்விக்கான மக்கள் கமிசாரகம் அமைக்கப்பட்டது. அ.வ. லுனசார்ஸ்கி, ந.க. குருப்ஸ்கயா, மி.நி. பக்ரோவ்ஸ்கி போன்ற கட்சியின் முக்கிய தலைவர்களாலும் லெனினது நெருங்கிய நண்பர்களாலும் அது தலைமை தாங்கப்பட்டது. பள்ளிக்கூடங்கள் பற்றிய சோவியத் ஆட்சி அதிகாரத்தின் முதல் அரசாணைகள் லெனினது முன் முயற்சியாலும் அவருடைய வழிகாட்டுதலின் கீழும் விரிவாக விளக்கப்பட்டன. ''பயிற்சிக் கூடங்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற எல்லா நிலையங்களையும் நிறுவனங்களையும் கல்விக்கான மக்கள் கமிசாரகத்தின் நிர்வாக எல்லைக்குட்படுத்தி மாற்றுவது'' பற்றிய அரசாணையை 1918, ஜூன் 5ல் மக்கள் கமிசார்களின் கவுன்சில் நிறைவேற்றியது. இது மக்கள் கல்விக்கான அரசு அமைப்பு முறையை உருவாக்க அடிக்கல் இட்டது.

சோவியத் ஆட்சி அதிகாரத்தின் முக்கிய கடமை எழுத்தறிவு இன்மையை ஒழிப்பதுதான். 1919 டிசம்பர் 26ல் மக்கள் கமிசார்களின் கவுன்சிலால் பிறப்பிக்கப்பட்ட அரசாணை

''ருஷ்ய சோவியத் கூட்டாட்சி சோஷலிஸ்ட் குடியரசு [R.S.F.S.R.] மக்களிடையே எழுத்தறிவு இன்மையை ஒழிப்பது பற்றியதாகும்.'' அந்த அரசாணை லெனினுல் கையெழுத்திடப்பட்டது. அந்தக் குடியரசு மக்கள் நாட்டு அரசியல் வாழ்வில் உணர்வு பூர்வமாகப் பங்கேற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கவும், எட்டு முதல் ஐம்பது வயது வரையான எழுதப்படிக்கத் தெரியாத எல்லா மக்களுக்கும் அவர்கள் விரும்பியபடி அவர்களுடைய தாய்மொழியிலோ அல்லது ருஷ்ய மொழியிலோ எழுதப் படிக்க இயலுமாறு செய்வதுமே அந்த அரசாணையின் நோக்கமாகும். எழுத்தறிவின்மையை ஒழிப்பது என்ற பிரச்சினையைத் தீர்க்க மிக அதிகமான முயற்சிகள் தேவைப்பட்டன. ஏன் எனில் புரட்சிக்கு முந்திய ருஷ்யா கல்வித்தரத்தைப் பொறுத்தமட்டில் ஐரோப்பிய நாடுகளில் மிகக் கீழானவற்றின் நிலையில் இருந்தது. அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குச் சற்று முன்னுல் பள்ளி செல்லும் வயதுடைய குழந்தைகளில் ஐந்தில் நான்கு பங்கு குழந்தைகள் பள்ளிக்குச் செல்லவில்லை. அப்படிப் பள்ளிக்குச் சென்றவர்களில் பெரும்பகுதியினர் ஆரம்பக் கல்வியை மட்டுமே பெற்றனர். பெரும்பகுதியான வயது வந்தவர்களுக்கு எழுதவும், படிக்கவும் தெரியாது.

1897ம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி ஜாராட்சி ருஷ்யாவில் ஒன்பது முதல் நாற்பத்தொன்பது வயதுக்குட்பட்ட மக்களிடையே எழுதப்படிக்கத் தெரிந்த ஆண்களின் சதவீதம் 28.4 ஆகவும், பெண்களின் சதவீதம் 16.6 ஆகவும் இருந்தது. 100க்கு மேற்பட்ட தேசிய இனங்களும், தேசிய மற்றும் இனக் குழுக்களைச் சார்ந்த அநேகமாக எல்லோரும் எழுத்தறிவு இல்லாதவர்களாகவே இருந்தனர். எடுத்துக்காட்டாக, தாஜிக்கிஸ்தானில் ஒன்பது வயது முதல் ஐம்பது வயதுக்குட்பட்ட மக்களிடையே எழுத்தறிவு உள்ளவர்களின் எண்ணிக்கை 2.3 சதவீதம் மட்டுமே, கிர்கீசியாவில் 3.1 சதவீதம் மட்டுமே. எழுதப்படிக்கத் தெரிந்த பெண்களின் எண்ணிக்கை இல்லை என்றே கூறலாம். ருஷ்யாவின் தொலை வடக்கிலும் மத்திய ஆசியாவிலும் மற்ற பகுதிகளிலும் இருந்த தேசிய இனங்களுக்கு சொந்தமான வரிவடிவமுள்ள மொழியுங் கூடக் கிடையாது. ஜாராட்சி ருஷ்யாவிலிருந்து வாரிசாகப் பெற்ற அளவற்ற வறுமை, பொருளாதாரத்திலும் கலா

சாரத்திலும் பின்தங்கிய நிலை, ஆகியன வெளிநாட்டுப் படையெடுப்பாலும் உள்நாட்டுப் போராலும் ஏற்பட்ட பொருளாதார சீர்குலைவால் மேலும் உக்கிரமடைந்தன.

சோவியத் ருஷ்யாவில் ஒரு தலைமுறையினரின் வாழ்நாளிலேயே ஆழத்திலும், வீச்சிலும், இதுவரைக் கண்டறியாத ஒரு கலாசாரப் புரட்சி நடைபெற்றுள்ளது. வெகுஜன எழுத்தறிவின்மையிலிருந்து நவீனக் கல்வியின் சிகரத்தை எட்டிப்பிடிப்பதில் வெற்றி பெறக்கூடிய பெரிய பாய்ச்சல் நடந்துள்ளது. எல்லாவிதப் பயிற்சிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை 80 மில்லியனாகும். நாட்டில் 1,84,000 பொதுக்கல்விப் பள்ளிகளும்; 4,260 சிறப்பு செகண்டரி கல்வி ஸ்தாபனங்களும்; 811 பல்கலைக்கழகங்களும் கல்விகூடங்களும்; 5,476 தனித் தொழில் மற்றும் தொழில் நுட்ப பள்ளிகளும் கல்லூரிகளும் உள்ளன. சோவியத் யூனியனில் வாழும் எல்லா தேசிய இனத்தவர்களின் கல்வித் தரமும் ஒரே நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. தேசியப் பொருளாதாரத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் தொகையின் பொதுக் கல்வி அறிவின் தரம் ஒரே சீராக உயர்ந்து கொண்டே வருகிறது. 1939ல் ஒவ்வொரு 1,000 நபருக்கும் 123 பேர் மேல்நிலைக் கல்வி அல்லது முற்றுப் பெருத மேல்நிலைக்கல்வி, செகண்டரி கல்வி அல்லது முற்றுப் பெருத செகண்டரி கல்வி பெற்றவர்கள் என்ற நிலை இருந்தது. 1972ல் அது 697 ஆகும். அதனுடைய கல்வியின் அளவிலும் வீச்சிலும் சோவியத் நாடு இன்று உலகில் முதன்மையான இடங்களில் ஒன்றை வகிக்கிறது.

சோவியத் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளிலேயே குழந்தைகள் அவர்களுடைய சக்திக்கு மீறின வேலைகளில் அமர்த்தப்படாமல் இருக்க வேண்டுமென்பதில் லெனின் மிக அதிக கவனம் செலுத்தினர். மேலும் வேலை செய்யக்கூடிய இளம் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய உடல் மற்றும் ஒழுக்க ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளச் சாதகமான நிலைமைகளை வழங்க வேண்டும் என்பதிலும் லெனின் அக்கறை காட்டினர். வளரும் தலைமுறையினரை சோஷலிசத்தைக் கட்டும் நாடு தழுவிய வேலையில் ஏன் ஈடுபடுத்தக் கூடாது என்ற கேள்வியையும் எழுப்பினர்.

1920 பிப்ரவரியில் குபேர்னியா கல்வி இலாக்காக்களின் பிரிவுகளான முதியோர் கல்விப் பிரிவுகளின் இயக்குனர்களின்

3 ம்அகில ருஷ்ய மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் பேசிய லெனின் தன்னுடைய பேச்சில் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டினர்: ''முதலாளித்துவ உலகின் கல்விமுறையின் அடிப்படைத் தவறுகளில் ஒன்று அது உழைப்பை முறைப்படுத்தும் அடிப்படைப் பணியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டதேயாகும் ஏன் எனில் முதலாளிகள், தொழிலாளர்கள் கீழ்படிந்தவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருக்க, கல்வி அறிவும், பயிற்சியும் கொடுக்க வேண்டியிருந்தது. முதலாளித்துவ சமுதாயத்தில் சமுதாய உழைப்பை முறைப்படுத்தும் மற்றும் போதனை தரும், பணிகளின் இடையே எவ்வித சம்பந்தமும் இருந்ததில்லை.'' சோஷலிச நாட்டில் இந்த அடிப்படைத் தவறை பள்ளிக்கூடம் களைய வேண்டும். அது மக்களின் வாழ்க்கையுடனும் அக்கறைகளுடனும் நெருக்கமாகப் பிணைக்கப்பட வேண்டும். அதனால்தான் இளைஞர்களுக்கான பாலிடெக்னிகல் கல்விக்கு லெனின் மிகப் பெரிய இடத்தை ஒதுக்கினர். அதாவது தொழில், விவசாயம் முக்கியமாக மின்சாரம் ஆகியவற்றுடன் செய்முறை அறிமுகம் ஏற்பட மிகப் பெரிய இடத்தை ஒதுக்கினர். மின்சாரத்தைப் பரவலாக்க விரிந்த அடிப்படையை அமைக்க வேண்டும். அவ்வேலைகளில் பள்ளிக்கூடம் தீவிர பங்கு பெற வேண்டும் என்ற கருத்து 1920ம் ஆண்டிலேயே லெனினல் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. அந்த ஆண்டில் தான் நாடு முழுவதையும் மின்சாரமயமாக்க வேண்டும் என்ற திட்டம் தீட்டப்பட்டு வேலை நடந்து கொண்டிருந்தது.

மின்சாரம் பற்றிய அடிப்படைக் கருத்துக்களை வளரும் தலைமுறையினருக்குக் கற்பிப்பதற்கும், அதனை தொழில்களில் பயன்படுத்துவதற்கும் லெனின் முதல் இடம் கொடுத்தார். பாலிடெக்னிகல் கல்வி முறையைப் பற்றிய ந.க. குருப்ஸ்கயாவின் ஆய்வுரை பற்றி லெனின் எழுதிய குறிப்பில்கூட இதையே விரிவாக எழுதினர்.

பாலிடெக்னிக் கல்வியின் உள் அடக்கம், கால நிலைமைக்கு ஏற்ப அதனை செயல்படுத்துதல் ஆகியவற்றைப் பற்றி கொள்கையளவில் இத்தகைய குறிப்புகளில் லெனின் அநேக முக்கிய கருத்துக்களை உருவாக்குகிறர். கற்றுக் கொள்ளுகிறவர் பரந்த கல்வி அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அவர் ஒரு கம்யூனிஸ்டாக இருக்க வேண்டும், அவருக்கு பாலிடெக்னிக்

கண்ணேட்டம் வேண்டும். இவையாவும் தேவையானவை என்று லெனின் எழுதினர். அருகில் உள்ள மின் நிலையங் களுக்கு மாணவர்கள் விஜயம் செய்வது, சோதனைகளுடன் கூடிய விரிவுரை வகுப்புகளுக்குச் சென்று கவனிப்பது, மின் நிலையத்தில் நிறைய செய்முறை வேலைகளைச் செய்வது, அர சாங்கப் பண்ணைகள், தொழிற் கூடங்களுக்கு கல்விச் சுற்று லாவாகச் செல்வது, பாலிடெக்னிகல் கல்வியைப் பற்றிய சிறிய பொருட்காட்சிகளை நிறுவுவது, விளம்பர மாதிரி புகை வண்டிகளையும் நீராவிக் கப்பல்களையும் செய்வது ஆகியவை முதல் முக்கியத்துவம் வாய்ந்தவை என லெனின் கருதினர். பாலிடெக்னிகல் கல்வியை செயல்படுத்துவதற்கு, பொறி யியல் வல்லுனர்கள், விவசாயத்துறை வல்லுனர்கள், பல் கலைக்கழக இயற்பியல் கணிதத் துறை பட்டதாரிகள் ஆகி யோரைப் பயன்படுத்த வேண்டும் என்று லெனின் ஆலோ சனை கூறினர். இந்த முறையில் சமீப காலத்திற்குள் பாலி டெக்னிகல் கல்வி பயின்றவர்களை உருவாக்கி அவர்களைக் கொண்டு சோஷலிசத்தின் தேவைகளுக்கு பொருத்தமான உயர் தொழில் நுணுக்க நிலைக்கு, விவசாயம் தொழில் ஆகிய வற்றை உயர்த்த வேண்டும் என அவர் விரும்பினர்.

சோவியத் கல்வி முறையானது, லெனினின் பாலிடெக் னிகல் கோட்பாட்டுக்கு அதனுடைய ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றின் போதும் விசுவாசமாக இருந்து வந்துள்ளது. இது நாள்வரை இளம் தலைமுறையினருக்குக் கற்பிக்கும் வழி வகைகளின் அடிப்படைக் கொள்கையாக அதுதான் இருந்து வருகிறது.

சோவியத் பள்ளிக்கூடம், அதனுடைய மாணவர்களுக்கு பாலிடெக்னிகல் அறிவு, திறமை ஆகியவற்றைக் கொடுத்து சமுதாயத்தில் மனிதனுடைய முதல் முக்கிய சமுதாயச் செய லான உழைப்பைச் செயல்படுத்த அவர்களைத் தயாரிக்கிறது. ஏதேனும் சில வேலைகளைச் செய்ய திட்டவட்டமான விஞ் ஞான அறிவு மனிதனுக்கு தேவை. கற்கின்ற எல்லோருக்கும் எல்லா விஞ்ஞானங்களிலும் சம அறிவை கொடுக்க முடியும் என்பது முடியாத ஒன்ருகும். ஆனல் அநேக உற்பத்திப் பிரிவு களில், ஒரு ஸ்தூலமான நிலைமையில் ஒரே மாதிரியான உற்பத்தி அம்சங்களை மக்கள் சந்திக்கின்றனர். இயற்கை, தொழில் நுணுக்கம் ஆகியவற்றின் பொது விதிகள், நிறுவன

அமைப்பு பாணி பொருளாதார உற்பத்தி உறவுகளின் ஒழுங்கு முறைகள், தொழில் நுணுக்க செயல்முறைக் கட்டுப் பாட்டில் சைபர்னேத்திய விதிகள் ஆகியவை இத்தகைய அம்சங்களாகும். இத்தகைய அறிவின் அடிப்படையில் சுயேச் சையாக மேம்பாடடைந்த உற்பத்தித் திறன்கள்தான் பாலி டெக்னிகல் திறமைகள் எனப்படும். இவ்வாருக, பொதுக் கல்வியும் பாலிடெக்னிக் அறிவும் கோட்பாட்டில் வேறு பட்டது போன்று ஒன்றிலிருந்து மற்றது கூர்மையாக வரம்பு செய்யப்பட்டதல்ல. பிந்தியது முந்தியதுடன் அடிப்படை யிலேயே சேர்க்கப்பட்டுள்ளது.

கல்வியிடம் புதிய கடமைகளை நம்முடைய காலம் எதிர் பார்க்கிறது. சமுதாய உற்பத்தியில் உயர் வளர்ச்சி வீதத்தை உறுதி செய்யவும், மேலும் விஞ்ஞான தொழிற் நுணுக்க முன்னேற்றத்தை உறுதி செய்யவும், விஞ்ஞான ரீதியில் முறைப்படுத்தப்பட்ட உழைப்பைப் பயன்படுத்தி அத னுடைய உற்பத்தித் திறனை மேலும் மேலும் உயர்த்தவும் அறிவை சுயேச்சையாகப் பெற்று அதனை நடைமுறையில் பயன்படுத்தவும் தங்களை முழுமையாகத் தயார் செய்து கொண்ட மக்கள் தேவை.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி, இதிலிருந்து செயல்படத் தொடங்கி அதனுடைய இருபத்தி நான்காவது காங்கிரசில், 1971-1975 ஆகிய ஐந்தாண்டு காலத்தில் பொது செகண்டரிக் கல்விக்கு மாறிச் செல்லும் பணியினை முழுமை செய்யும் கல்வி முறையை அமைத்தது.

1973ல் முழு செகண்டரி கல்வியை முடித்தவர்கள் 3.8 மில்லியனாகும். 10-11 ஆண்டுகளுக்கு முன் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்த குழந்தைகளின் எண்ணிக்கையை 1973ம் ஆண்டு எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால் அது 76 சதவீதம் தான் இருக்கும்.

இளைஞர்களுக்குச் செகண்டரி கல்வியை வழங்குவதின் அளவில் சோவியத் பள்ளிக்கூடம் உலகில் முதல் இடம் வகிக் கிறது. அது கடந்து வந்த பாதை, அது அடையக்கூடிய சாதனை கள் எல்லையற்றவை என்று காட்டுகிறது. சோவியத் சமு தாயத்தின் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் இந்த அல்லது அந்த காலப் பகுதியில் எத்தகைய புதுமாதிரியான பள்ளி கள் உருவாக்கப்பட்டாலும் பொதுக்கல்வியை முறைப்

படுத்தும் சோஷலிசக் கொள்கையின் அடிப்படை மாறுமல் இருந்து வந்துள்ளது. மேலும் வாழ்க்கையின் இந்த அக வளர்ச்சித் துறையில் எல்லா மக்களுக்கும் சம வாய்ப்புகள் உத்திரவாதம் செய்யப்பட்டன.

தற்போது சோவியத் யூனியன் கம்யூனிச நிர்மாணத்தில் பிரம்மாண்ட அளவும் முக்கியத்துவமும் உடைய பிரச்சினை களைத் தீர்த்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய நிலைமை களில், அவர்களுடைய சித்தாந்த ஒழுக்க குணும்சங்களாலும் அவர்களுடைய கல்வித் தரத்தாலும், அவர்களுடைய உழைப் பால் ஏற்பட்ட உருக்குறுதியாலும் பழைய தலைமுறையினர் களின் பணியை வெற்றிகரமாக முடிக்கக் கூடிய ஆற்றலுடை யவர்களாக மக்களைப் பயிற்றுவிப்பதில் பள்ளிக்கூடத்தின் சமுதாய பொருளாதாரப் பாத்திரம் கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

அ. கலினின்.

## விவசாய செகண்டரிப் பள்ளிப் பண்ணைகளும் விவசாய சமுதாய மாற்றத்திற்கான பள்ளிகளும்[1]

### (ரூஸ்கொயே பகாத்ஸ்த்வோ[2])

நரோத்னிக்குகளாலும்[3] பின்னல் நன்கு மனதில் பதியும் படியாக ரூஸ்கொயே பகாத்ஸ்த்வோ என்ற பத்திரிக்கையாலும் ருஷ்யாவில் முதலாளித்துவப் பிரச்சினைக்குக் கூறப்பட்ட தீர்வு வெகு நாட்களுக்கு முன்பாகவே தெரிந்ததே. முதலாளித்துவம் இருப்பதை அவர்கள் மறுக்கவில்லை, அதனுடைய வளர்ச்சியை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. ஆனல் ருஷ்யாவில் நீண்ட நாளைய பண்டப் பொருளாதார வளர்ச்சிக்கு மகுடம் சூட்டியது போல் உள்ளது நம்முடைய முதலாளித்துவம், என்பதனையும் இது இயற்கையானதும் தேவையானதுமான வளர்ச்சி என்பதனையும் நரோத்னிக்குகள் கருதவில்லை. இது ஒரு தற்செயலானது, ஆழமாக வேர்விடாத நிகழ்ச்சி, நாட்டின் முழு வரலாற்று வாழ்வினல் தீர்மானித்து வைக்கப்பட்டப் பாதையிலிருந்து பிரிந்து செல்வதை வெறுமனே சுட்டிக்காட்டுவதுதான் என்றே அவர்கள் கருதுகிருர்கள். முதலாளித்துவப் பாதையை விட்டுவிட்டு ''நாம் நம்முடைய தாய் நாட்டிற்கு வேறு ஒரு பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்று நரோத்னிக்குகள் கூறுகிருர்கள். ''சமுதாயம்'' ''முழுவதும்'' இருக்கக் கூடிய சக்திகளைப் பயன்படுத்தி உற்பத்தியை ''சமுதாய மயமாக்க'' வேண்டும் என்று கூறுகிருர்கள். முதலாளித்துவத்திற்கு அடிப்படை இல்லை என்பதனை சமுதாயம் ஏற்கனவே ஏற்றுக்கொள்ள ஆரம்பித்து விட்டது என்று அவர்கள் கூறுகிருர்கள்.

இதிலிருந்து பின்வருவன தெளிவாகின்றன: தாய்நாட்டிற்கு வேறு ஒரு பாதை தேர்ந்து எடுக்கப்பட்டால், இதன் தேவையை சமுதாயம் முழுமையும் புரிய ஆரம்பித்துவிட்டால், பிறகு உற்பத்தியை ''சமுதாயமயமாக்கல்'' என்பதில் எந்தப் பெரிய கஷ்டமும் அதற்குத் தேவையான வரலாற்றுக் காலத்தை தயார் செய்ய வேண்டியதும் இருக்காது. ஒருவர் செய்ய வேண்டியதெல்லாம் இத்தகைய ''சமுதாயமயமாக்கல்'' என்பதற்கு ஒரு திட்டம் வகுத்து அதன் நடைமுறை சாத்தியத்தை சரியான நபர்களிடம் அவர்கள் ஏற்கும்படி எடுத்துக் கூறினுல் போதும். பிறகு ''தாய் நாடு'' தவருன முதலாளித்துவ பாதையிலிருந்து சமுதாயத்திற்குரியதாக்கும் பாதைக்குத் திரும்பி விடும்.

இத்தகைய ஒளிமயமான வாய்ப்புகளைத் தரக்கூடிய ஒரு திட்டம் எவ்வளவு மகத்தான சிறப்புயுள்ளதாக இருக்கும் என்பதனை ஒவ்வொருவரும் அறிவார்கள். அதனுல்தான் இத்தகையத் திட்டத்தை தீட்டித்தரும் வேலையை ஏற்றுக் கொண்டவரும் ரூஸ்கொயே பகாத்ஸ்த்வோ பத்திரிகைக்கு ஒழுங்காக விஷயதானம் செய்பவருமான திரு. யுழக்கோவ் அவர்களுக்கு ருஷ்ய மக்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். ரூஸ்கொயே பகாத்ஸ்த்வோ, மே மாத இதழில் ''நாடு தழுவிய கட்டாய செகண்டரி கல்விக்கானத் திட்டம்'' என்ற உபதலையங்கத்துடன் கூடிய அவருடைய ''கல்வி கற்பனுவாதம்'' என்ற கட்டுரையை நாம் பார்க்கிறேும்.

உற்பத்தியைச் ''சமுதாயமயமாக்கல்'' என்பதனுடன் இதற்கு என்ன தொடர்பு இருக்கிறது என்று வாசகர் கேட்கலாம். திரு. யுழக்கோவின் திட்டம் ஒரு விரிவான திட்டமாயிருப்பதால் இது நேரடியாக மிகவும் தொடர்புடையது. பள்ளி செல்லும் வயதுடைய (8 வயது முதல் 20 வயது வரை, அதிக பட்சம் 25 வயது வரை) எல்லா ஆண் பெண்களையும் கொண்ட ஒரு செகண்டரிப் பள்ளியை ஒவ்வொரு வோலஸ்திலும்[4] [Volost] அமைக்க அக்கட்டுரை ஆசிரியர் திட்டமிடுகிருர். இத்தகைய விவசாய செகண்டரி பள்ளிகள்[5] உற்பத்திச் சங்கங்களாகவும் இருக்கும். இவை பண்ணை, ஒழுக்கம் ஆகியவற்றை கவனிக்கக் கூடியதாக விளங்கும். அவர்களுடைய உழைப்பினுல் விவசாய செகண்டரிப் பள்ளிக் கூடத்தில் உள்ளவர்களைப் பாதுகாப்பதோடல்லாமல் (திரு. யுழக்

கோவின் கருத்துப்படி இப்பள்ளியில் உள்ளோரின் தொகை மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்காகும்) எல்லா குழந்தைகளையும் பாதுகாப்பதற்குத் தேவையான மூலாதாரப் பொருள்களையும் தருமாம். ஒரு வோலஸ்த் மாதிரி விவசாய செகண்டரி பள்ளியைப் பற்றி (அல்லது ''விவசாய செகண்டரிப் பள்ளி பண்ணை'' அல்லது ''விவசாய செகண்டரிப் பள்ளி'') இவ்வாசிரியர் தரும் விரிவான விபரமானது இப்பள்ளி மட்டுமே பாதிக்கு மேற்பட்ட எல்லா உள்ளூர் மக்கள் தொகையை பாதுகாக்கும் என்று காட்டுகிறது. இத்தகைய ஒவ்வொரு விவசாய செகண்டரிப் பள்ளிக்கும் (20,000 இரட்டை, அதாவது 20,000 ஆண்கள் பள்ளிகள், 20,000 பெண்கள் விவசாய செகண்டரிப் பள்ளிகளும் ருஷ்யாவிற்காகத் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்) நிலமும் உற்பத்தி சாதனங்களும் ($4^1/_2$ சதவீத வட்டியும் ஒவ்வொரு ஆண்டும் $^1/_2$ சதவீத முதலைத் திருப்பித் தரக்கூடிய அரசாங்கத்தால் உறுதியளிக்கப்பட்ட ஸேம்ஸ்துவோ[6] பத்திரங்கள் திட்டமிடப்பட்டுள்ளன) அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் மனதில் கொண்டால் இந்தத் ''திட்டம்'' உண்மையிலேயே எவ்வளவு ''பெரியது'' என்பதனை நாம் அறிந்து கொள்ள முடியும். மக்கள் தொகையில் பாதி பேருக்கு உற்பத்தி சமுதாயத்திற்குரியதாக்கப்பட்டு விட்டது. இவ்வாறு ஒரே அடியில் தாய் நாட்டிற்கு மாறுபட்ட பாதை தேர்ந்தெடுக்கப்பட்டது! அதுவும் ''அரசாங்கத்திற்கோ, ஸேம்ஸ்துவோவிற்கோ, மக்களுக்கோ எவ்விதச் செலவும் [sic!] (கவனியுங்கள்!) இல்லாமல்'' அக்காரியம் சாதிக்கப்பட்டிருக்கிறது. ''முதல் முதலில் பார்க்கும் பொழுது இது ஒரு கற்பனாவாதம் போல் தோன்றலாம்'', ஆனால் இது ''நாடு தழுவிய ஆரம்பக் கல்வி என்ற திட்டத்தை விட சாத்தியமுள்ளது''. இதற்குத் தேவையான நிதி சம்பந்தப்பட்டச் செயல் நடைமுறை சாத்தியமற்றதோ அல்லது கற்பனாவாதமோ அல்ல என திரு. யுழக்கோவ் கூறுகிறார். மேலும் அக்காரியத்தை ஏற்கனவே நாம் பார்த்தது போல் செலவு இல்லாமல், எவ்வித செலவும் இல்லாமல் சாதிக்கப்பட்டிருக்கிறது; மேலும் ''ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள கல்வித் திட்டத்தில் எவ்வித மாறுதலும் இல்லாமல் இக்காரியம் சாதிக்கப்பட்டது''!! ''ஒரு சோதனையுடன் தன் முயற்சியை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று எண்

ஞமல் உண்மையிலேயே நாடு தழுவிய கல்வியை அடைய விரும்பும் ஒருவருக்கு இவை எல்லாம் சாதாரண முக்கியத் துவமுடையதல்ல'' என்று திரு. யுழக்கோவ் சரியாகவே குறிப்பிடுகிறுர். ''செயல் திட்டம் ஒன்றைத் தீட்டும் குறிக் கோளை நானே அமைத்துக் கொள்ளவில்லை'' என்று அவர் கூறுவது உண்மையே. ஆனல் ஒரு விவசாய செகண்டரிப் பள்ளியின் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை இப்பள்ளி களின் மக்கள் தொகை முழுமையையும் காப்பதற்குத் தேவை யான மனித சக்திக்கான திட்டம், மேலும் ஆசிரியர்கள், நிர் வாக அலுவலர்கள் ஆகியோரைப் பற்றிய புள்ளி விபரங் கள் ஆகியவற்றை அவர் நமக்குத் தருகிறுர். பயிற்றுனர், டாக்டர்கள், தொழிற்நுணுக்க நிபுணர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கு பணமாகக் கொடுக்க வேண்டிய சம்பளம், விவசாய செகண்டரிப் பள்ளியில் உள்ள உறுப்பினர்களுக்கு கொடுக்க வேண்டிய உணவு பங்கீடு ஆகிய இரண்டையும் சுட்டிக்காட்டுகிறுர். அவ்வாசிரியர் விவசாய முயற்சிக்குத் தேவையான வேலை நாட்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு விவசாய செகண்டரிப் பள்ளிக்கும் தேவையான நிலத்தின் அளவு, அப்பள்ளியை நிறுவுவதற்கான நிதி மூலதாரங்கள் ஆகியவற்றைப் பற்றி விரிவாகக் கணக்கிட்டுக் கூறுகிறுர். நாடு தழுவிய செகண்டரி கல்வியின் பலனை அனுபவிக்க முடி யாத ருஷ்யர்களல்லாத தேசிய இனத்தவருக்கும்[7] கிறிஸ்த வரல்லாதப் பிரிவினருக்கும் ஒரு பக்கம் அவர் வழி வகுக் கிறுர். இன்னெரு பக்கம் கெட்ட நடத்தையினுல் விவசாய செகண்டரிப் பள்ளியிலிருந்து விடுபட்ட நபர்களுக்கும் வழி வகுக்கிறுர். ஒரே மாதிரியான விவசாய செகண்டரிப் பள்ளி யில் மட்டும் அந்த ஆசிரியரின் கணக்கீடுகள் நின்று விடுவ தில்லை. இல்லவே இல்லை. 20,000 இருபாலர் விவசாய செகண்டரி பள்ளிகள் அனைத்தையும் நிறுவுவதில் உள்ள பிரச் சனையை அவர் கிளப்பி, அதற்குத் தேவையான நிலத்தை எப்படிப் பெறுவது, ''திருப்திகரமான பயிற்றுனர், நிர்வாகி கள், மேனேஜர்கள் ஆகியோர்களை'' எப்படிப் பெறுவது என்பதனைச் சுட்டிக் காட்டுகிறுர்.

இத்தகையத் திட்டத்தின் ஆட்கொள்ளும் ஆர்வத்தை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். தத்துவ அளவில் மட்டும் ஆர்வமுடையதல்ல (உற்பத்தியைச் சமுதாயமயமாக்கல் என்று

வகுக்கப்பட்ட திட்டமானது, எல்லாச் சந்தேகப் பேர்வழி களின் சந்தேகங்களைத் தீர்த்து அவர்களை இறுதியில் ஏற்றுக் கொள்ளச் செய்வது, இத்தகையத் திட்டங்களின் சாத்தியக் கூறுகளை மறுப்பவர்கள் எல்லோரையும் ஒழிப்பது ஆகிய வற்றிற்காக ஸ்தூலமாக நிறுவப்பட்டிருக்கிறது என்பது தெளி வாகும்), ஆனால் இது செயல் முறையிலும் உண்மையானது. சுப்ரீம் அரசாங்கம், நாடு தழுவிய கட்டாய செகண்டரி கல்வி முறையை அமைப்பதற்கானத் திட்டத்தின் மேல் எந்த அக் கறையும் காட்டாதது விசித்திரமாக இருக்கும். அதுவும் குறிப் பாக, இத்திட்டத்தின் ஆசிரியர் அதை ''எந்தவித செலவும் இல்லாமல்'' முடிக்க முடியும் என்று மதிப்பீடு செய்த பிறகு இத்திட்டம் ''கலாசாரச் சூழ்நிலைகளிலிருந்து வரும் தடங் கல்களைப் போல் நிதி, பொருளாதாரச் சூழ்நிலைகளால் அவ் வளவு தடங்கல்களைச் சந்திக்க வேண்டி இராது'' அவ்வாறு இருப்பினும் அவை ''வெல்ல முடியாததல்ல.'' இத்தகையத் திட்டம் பொதுக் கல்வி அமைச்சரகத்தை மட்டும் பொறுத்த தல்ல. உள் நாட்டு விவகார அமைச்சரகம், நிதி அமைச் சரகம், விவசாய அமைச்சரகம் ஆகியவற்றையும் பின்னால் நாம் பார்க்கப் போகிற யுத்த அமைச்சகத்தையும் கூட இத் திட்டம் சம அளவில் பொறுத்தது. இத்திட்டமான ''விவ சாய செகண்டரி சமுதாய மாற்றத்திற்கான பள்ளிகள்'' அநேக மாக நீதித் துறை அமைச்சரகத்திற்குத் தான் போக வேண் டிய இருக்கும். ஏனைய அமைச்சரகங்கள் கூட இத்திட்டத்தில் அக்கறை கொள்ளும் என்பதில் ஐயமில்லை. திரு. யுழக்கோ வின் சொற்களின்படி ''இத்திட்டம் மேலே கணக்கெடுத்துக் கூறப்பட்ட தேவைகளுக்கு (அதாவது கல்வி, பராமரிப்பு ஆகியவற்றைப் பற்றிய) ஈடு கொடுக்கும். மேலும் இதைத் தவிர அநேக மற்ற தேவைகளுக்குக் கூட இத்திட்டம் ஈடு கொடுக்கும்''.

எனவே மிகவும் விசேஷமான இத்திட்டத்தை நாம் விளக் கமாக சோதிப்பதைப் பற்றி வாசகர்கள் புகார் செய்ய மாட் டார்கள் என்று நாம் உறுதி கொள்ளலாம்.

திரு. யுழக்கோவின் முக்கிய எண்ணம் பின்வருமாறு: விவசாயத்திற்கு என அர்ப்பணிக்கப்பட்ட, கோடைகாலத்தில் என்ன நடந்தாலும் படிப்பு நடைபெறாது. மேலும் விவசாய செகண்டரிப் பள்ளிக்கூடத்தில் பட்டம் பெற்ற மாணவர்கள்

சில காலம் அங்கேயே வேலை செய்யும்படி விடப்படுகிறார் கள். அவர்கள் குளிர்கால வேலையும் செய்கிறார்கள். விவசாய வேலையுடன் அவர்கள் தொழில் வேலைகளையும் செய்வார்கள். இவ்வாறு வேலைசெய்து ஒவ்வொரு விவசாய செகண்டரிப் பள்ளியும் தன்னுடைய சொந்த உழைப்பால் எல்லா மாண வர்களையும் தொழிலாளர்களையும் ஆசிரியர்களையும் நிர்வாக அலுவலர்களையும் பராமரிக்கவும்,கல்விக்காக ஆகும் செலவை ஏற்கவும் கூடியதாகச் செய்கிறார்கள். திரு. யுழக்கோவ் சரியாகக் குறிப்பிட்டதைப் போல் இத்தகையப் பள்ளிக் கூடங்கள் பெரிய விவசாயக் கூட்டுறவுச் சங்கமாக இருக்கும். உற்பத்தியைச் ''சமுதாயமயமாக்கல்'' என்ற நரோத்னிக்கு களின் திட்டம் முதலாளித்துவ வாழ்க்கையில் ஏற்படும் நிலை மாற்றங்களைத் தவிர்ப்பதற்காக ருஷ்யா தேர்ந்தெடுக்க வேண்டிய புதிய பாதையின் முதல் படிகளாகும். இதுவே திரு. யுழக்கோவின் திட்டம் என்று நாம் கருதியது சரி என்ப தில் எள்ளளவு சந்தேகத்தையும் இந்தக் கடைசி வெளிப் பாடு உண்டாக்காது.

''தற்காலத்தில் மாணவர்கள் 18 முதல் 20 வயது வரை யிலும் எப்பொழுதாவது சில நேரங்களில் ஓரிரு ஆண்டுகள் தாமதித்தும் செகண்டரிப் பள்ளியிலிருந்து பட்டம் பெறுகிறார்கள். இந்தத் தாமதம் கட்டாயக் கல்வியால் இன் னும் அதிகம் பரவலாகும். மக்கள் காலம் தாழ்ந்து பட்ட தாரிகளாவார்கள். மூன்று உயர் வகுப்புகள் 16-25 வயதுள்ள மாணவர்க் குழுவாகச் செய்யப்படும் பொழுது 25 ஆண்டு கள் வயதின் எல்லையானால் 25 வயதை அடைந்ததும் அவர் கள் அந்தப் படிப்பை முடிக்காமலேயே விட்டுவிட வேண்டி இருக்கும். இப்படியாக, ஐந்தாம் வகுப்பில் படிக்கும் மாண வர்களாகிய] வயது வந்தோரின் கூடுதலான எண்ணிக்கையை மனதில் கொண்டால் விவசாய செகண்டரிப் பள்ளியில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினர் வேலைக்குப் போகும் வயதினர் என தைரியமாகக் கருதலாம்'' என்று திரு. யுழக் கோவ் சிந்திக்கிறார். இந்த விகிதம் மூன்றில் ஒன்றிலிருந்து நான்கில் ஒன்றாகக் குறைக்கப்பட்டாலும், எட்டு விவசாய செகண்டரிப் பள்ளி வகுப்புகளுடன் ஆரம்பப் பள்ளிக்கு ஆயத் தம் செய்யும் இரு வகுப்புகளைச் (எழுத்தறிவற்ற எட்டு வயது குழந்தைகளும் சேர்க்கப்படலாம்) சேர்ப்பதால் நமக்கு

இன்னும் அதிகமான எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் கிடைப்பார்கள். அவர்கள் அரைகுறை தொழிலாளர்களின் உதவியுடன் கோடைகால வேலையைச் சமாளிப்பார்கள் என்று கட்டுரை ஆசிரியர் மேலும் கணக்கிடுகிறுர். ஆனுல் ''பத்து வகுப்பு விவசாய செகண்டரிப் பள்ளி பண்ணைக்கு குளிர்கால தொழிலாளர்களின் தொகை அவசியம் தேவை'' என்று திரு. யுழக்கோவ் சரியாகவே குறிப்பிட்டிருக்கிறுர். அவர்களை எங்கிருந்து பெறுவது? கட்டுரை ஆசிரியர் இரு தீர்வுகளைத் தருகிறுர்: 1) உழைப்பாளர்களை கூலிக்கு அமர்த்துதல் (''அவர்களில் சில தகுதியுள்ளவர்களுக்கு உற்பத்தியில் ஒரு பகுதி கொடுக்கப்படலாம்''). விவசாய செகண்டரிப் பள்ளி பண்ணைகள் இலாபம் தரக்கூடியதாகவும், வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு கூலியைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ஆனுல் அவ்வாசிரியர் ''அதை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்த வேறு ஒரு தீர்வைத்'' தருகிறுர்: 2) விவசாய செகண்டரிப் பள்ளி வகுப்பை படித்து முடித்தவர்கள் கீழ் வகுப்பில் படிக்கும்போதான படிப்புச் செலவு, பராமரிப்புச் செலவு ஆகிய செலவுகளை ஈடு செய்ய வேலை செய்யும்படி கடமைப்படுத்தப்படுவார்கள். அது அவர்களுடைய ''நேரடியான கடமை'' என்று மேலும் திரு. யுழக்கோவ் கூறுகிறுர். ஆம், படிப்புச் செலவை கொடுக்க முடியாதவர்களுக்கு மட்டுமே இது கடமையாகும். அவர்கள் தான் தேவையானகுளிர்கால வேலையாட்களின் எண்ணிக்கையையும் அதிகப்படியான கோடைகால வேலையாட்களின் எண்ணிக்கையையும் நிறைவு செய்கிறுர்கள்.

மக்கள் தொகையின் ஐந்தில் ஒரு பகுதியை விவசாயக் கூட்டுறவுச் சங்கமாக மாற்றி ''சமுதாயமயமாக்குவது'' என்பது திட்டமிடப்பட்ட ஸ்தாபனத்தின் முதல் பண்புக் கூறுகும்.எத்தகைய வேறுபட்ட பாதையை தாய் நாடு தேர்ந்தெடுக்கும் என்பதனைப் பார்க்கக்கூடிய ஆற்றலை அதுவே நமக்கு அளிக்கிறது. ''படிப்புச் செலவையும்'' வாழ்ந்ததற்கான செலவையும் ''கொடுக்க முடியாதவர்களுக்கு'' தற்சமயம் பிழைப்பிற்கு கூலி வேலை ஒன்றுதான் மூலாதாரமாகச் செயல்படுகிறது. இது கூலி இல்லா கட்டாய உழைப்பால் மாற்றீடு செய்யப்படுகிறது. ஆனுல் நாம் இதனுல் மனசஞ்சலம் அடையக் கூடாது:அதற்குப் பிரதிபலனுக நாடு தழுவிய

செகண்டரி கல்வியின் பெருமையை மக்கள் அனுபவிப்பார்கள் என்பதனை நாம் மறக்கலாகாது.

மேலும் அவர் தொடருகிறார். கட்டுரையாளர் ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனியான விவசாய செகண்டரிப் பள்ளித் திட்டத்தை முன்வைக்கிறார். ஐரோப்பியக் கண்டத்தில் இருபாலார் கூட்டுக் கல்விக்கு எதிராக ஒரு தப்பெண்ணம் நிலவுகிறது. அதை ஏற்றுக் கொள்ளும் எண்ணத்துடன் செய்யப்பட்டத் திட்டமாகும் இது. இருபாலார் கூட்டுக் கல்வி அதிக விவேகமானதாக இருக்கும். ''ஒரு வகுப்பிற்கு ஐம்பது மாணவர்கள், அல்லது எல்லா பத்து வகுப்புகளுக்கும் 500 மாணவர்கள், அல்லது ஒவ்வொரு விவசாய செகண்டரிப் பள்ளி பண்ணைக்கும் 1,000 மாணவர்கள் (500 மாணவர்களும் 500 மாணவிகளும்) என்பது சராசரிப் பள்ளிக்கு சரியான கட்டுக்கோப்பாகும்.'' அது 125 ''ஜோடி உழைப்பாளர்களையும்'' அதற்கு ஏற்ற எண்ணிக்கையுடைய அரை குறை உழைப்பாளர்களையும் கொண்டிருக்கும். ''எடுத்துக்காட்டாக, மைனர் ருஷ்யாவில்* உள்ள பயிரிடப்பட்டு வரும் 2500 டெஸியாட்டினுக்கள் கொண்ட நிலத்தையும்** இந்த பல உழைப்பாளிகளால் பயிரிட முடியும் என்று நான் குறிப்பிட்டால், எத்தகைய மகத்தான சக்தி இந்த விவசாய செகண்டரிப் பள்ளியால் கிடைக்கிறது என்பதனை ஒவ்வொருவரும் அறிய முடியும்!..'' என யுழக்கோவ் கூறுகிறார்.

ஆனால் இந்த உழைப்பாளிகளைத் தவிர ''ஆண்டு முழுவதும் உழைப்பவர்களும்'' இருப்பார்கள். அவர்களுடைய படிப்புச் செலவையும் பராமரிப்புச் செலவையும் ''வேலை செய்து கழிப்பார்கள்''. எத்தனை பேர்கள் அவர்களில் இருப்பார்கள்? ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து ஓர் ஆண்டில் பட்டதாரிகளாக ஆகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 45 ஆக இருக்கும். மூன்று மாணவர்களில் ஒருவன் மூன்று ஆண்டு காலத்திற்கு இராணுவத்தில் பணிபுரிவான் (இப்பொழுது நாலில் ஒருவன் அப்படி செய்கிறான். கட்டுரையாளர் பணி

---

* இப்பொழுது உக்ரைன்.—ப-ர்.

** டெஸியாட்டினு—இது ரஷ்ய நிலப்பரப்பை குறிக்கும் அளவு சொல்.

1 டெஸியாட்டினு-$2^1/_2$ ஏக்கர், அல்லது 1 டெஸியாட்டினு-1.0925 ஹெக்டேர்.—ப-ர்.

செய்யும் காலத்தை மூன்று ஆண்டுகளாகக் குறைத்து இந்த எண்ணிக்கையை மூன்றில் ஒருவராக உயர்த்துகிறார்). ''மீதி உள்ள மூன்றில் இரு பங்கினரையும் அதே நிலையில் வைப்பது தான் நியாயம். அதாவது அவர்களுடைய படிப்பிற்கானச் செலவையும் இராணுவத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களுடைய தோழர்களின் படிப்புச் செலவையும் அவர்கள் வேலை செய்து கழிப்பதற்காக வைத்திருப்பதுதான் நியாயம். எல்லாப் பெண்களும் இதே காரியத்திற்காக நிறுத்தி வைக்கப்படலாம்.''

வேறுபட்ட பாதையைத் தேர்ந்தெடுத்த தாய் நாட்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட புதிய முறையானது தெளிவான வரையறையைப் பெறுகிறது. இப்பொழுது எல்லா ருஷ்யப் பிரஜைகளும் இராணுவ பணிசெய்ய கடமைப்பட்டவர்கள். கட்டாயமாக இராணுவத்தில் சேர்க்கப்படும் வயதுடைய நபர்களின் எண்ணிக்கை தேவையான இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருப்பதால் இராணுவ வீரர்கள் சீட்டுப் போட்டு எடுக்கப்படுகின்றனர். சமுதாயமயமாக்கப்பட்ட உற்பத்தியில் புதியவர்கள் சீட்டுப் போட்டே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆனால் மீதியுள்ளவர்களைப் பொறுத்தவரையில் ''அதே நிலைமையில் வைக்கத்'' தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது மூன்று ஆண்டுகள் அவர்கள் கட்டாயப் பணியாற்ற வேண்டும். இது உண்மை. இராணுவத்தில் அல்ல, ஆனால் விவசாய செகண்டரிப் பள்ளியில். இராணுவத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்களுடைய தோழர்களுக்கு ஆகும் பராமரிப்புச் செலவை அவர்கள் வேலை செய்து கழிப்பார்கள். எல்லோரும் இப்படிச் செய்ய வேண்டுமா? இல்லை. படிப்புச் செலவை கொடுக்க முடியாதவர்கள் மட்டும் இப்படிச் செய்ய வேண்டும். கட்டுரையாளர் இந்தச் சரத்தை ஏற்கனவே கூறிவிட்டார். கீழே நாம் படிப்புச் செலவைக் கொடுக்கக் கூடியவர்களைப் பற்றி பார்ப்போம். பழைய பாணியிலான விவசாய செகண்டரிச் சிறப்புப் பள்ளியை அவர்களுக்கு அவர் திட்டமிடுகிறார். இராணுவத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்களின் பராமரிப்புச் செலவை, படிப்புச் செலவை கொடுக்க முடியாதவர்கள் ஏன் வேலைசெய்து கழிக்க வேண்டும்? படிப்புச் செலவை கொடுப்பவர்களால் அச்செலவு ஏன் கழிக்கப்படக் கூடாது?

இந்தக் காரணம் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியது. விவசாய செகண்டரிப் பள்ளி மாணவர்கள் பணம் கொடுக்கிறவர்கள் பணம் கொடுக்காதவர்கள் என்று பிரிக்கப்பட்டால், சமகாலத்து சமுதாயத்தின் கட்டுக்கோப்பு இந்தச் சீர்திருத்தத்தால் பாதிக்கப்படாது என்பது தெளிவு. இது திரு. யுழக்கோவினுலேயே மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டதாகும். அது அப்படியானல் அரசாங்கத்தின் பொது செலவு (இராணுவ வீரர்களுக்கான செலவு) வாழ வழியில்லாதவர்களால்* ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இப்பொழுது மறைமுக வரிகள். இத்தியாதி உருவத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதைப் போல் என்பது புரிந்து கொள்ளக் கூடியது. புதிய முறை எந்த விதத்தில் வித்தியாசமானது? தற்காலத்தில் வேலை இல்லாதவர்கள் அவர்களுடைய உழைப்புச் சக்தியை விற்க முடியும். யுழக்கோவின் புதிய முறையில் அவர்கள் இலவசமாக உழைக்க கடமைப்படுத்தப்படுவார்கள் (அதாவது அவர்களைப் பராமரிக்க மட்டுமே). இந்த வேறுபாட்டைத் தவிர வேறு என்ன உள்ளது? இவ்வாருக, ருஷ்யா முதலாளித்துவ அமைப்பில் ஏற்படும் நிலைமாற்றங்களை தவிர்க்கும் என்பதில் சிறிதளவும் சந்தேகம் இருக்க முடியாது. ''பாட்டாளி வர்க்கத்தின் சீழ் பிடித்தப் புண் என்ற'' அபாயத்தைக் கொண்ட கூலி உழைப்பு விரட்டி அடிக்கப்பட்டு... கூலி இல்லாத கட்டாய உழைப்பிற்கு வழிவிடப்படுகிறது.

கட்டாய உழைப்பு, கூலி இல்லா உழைப்பு என்ற உறவு முறைகளில் வைக்கப்பட்ட மக்களே இவ்வுறவுகளுக்கு ஒத்திருக்கிற நிலைமைகளில் தங்களைக் காண்பார்கள் என்ற உண்மை வியப்பைத் தரக் கூடியதல்ல. நரோத்னிக்கால் (''மக்களின் நண்பரால்'') மேலே கூறப்பட்டதற்குப் பிறகு உடனேயே நமக்குக் கூறப்பட்டதை சற்று கேளுங்கள்:

''படிப்பை முடித்துவிட்டு விவசாய செகண்டரிப் பள்ளியில் மூன்று ஆண்டுகள் தங்கும் இளைஞர்களிடையே திருமணத்தினை அனுமதித்தால்; குடும்பத்துடன் உழைப்பவர்களுக்குத்

---

* அப்படி இல்லையெனில் பிழைக்க வழியில்லாதவர்களின் மீது அரசாங்கத்தின் ஆதிக்கம் செலுத்தப்பட முடியாததாகலாம்.—ப-ர்.

தனியே குடியிருப்பு அமைக்கப்பட்டால்; அவர்கள் இப் பள்ளியை விட்டுச் செல்லுகையில் அவர்களுக்கு குறைந்தது, மிகச் சிறிய அளவில் பணமாகவும் பண்ட வகையாகவும் ஒரு சிறு உதவித்தொகை கொடுக்கப்பட விவசாய செகண்டரிப் பள்ளியின் இலாபம் அனுமதித்தால் பிறகு அங்கே இத் தகைய மூன்று ஆண்டு தங்குவது என்பது இராணுவ சேவையை விட எவ்வளவோ குறைவான பளுவாகும்...''

இத்தகைய அனுகூலமான நிலைமைகள் விவசாய செகண் டரிப் பள்ளியில் சேர்வதற்கு மக்களை முயற்சி எடுக்கத் தூண் டும் என்பது வெளிப்படையல்லவா? நீங்களே தீர்மானம் செய்யுங்கள்: முதலாவதாக, அவர்கள் திருமணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். இப்பொழுது நிலவி வரும் சிவில் சட்டத்தின்படி உண்மையில் இத்தகைய அனுமதி (அதிகாரி களிடமிருந்து) தேவையே இல்லை. ஆனல் இத்தகையவர்கள் விவசாய செகண்டரிப் பள்ளி மாணவர்கள், **ஆண்களும் பெண்களுமானவர்கள்** என்பதை மனதில் கொள்ள வேண் டும். அவர்கள் 25 வயதுடையவர்கள் என்பதும் உண்மை. இருப்பினும் அவர்கள் விவசாய செகண்டரிப் பள்ளி மாண வர்கள். பல்கலைக்கழக மாணவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படாத போது விவசாய செகண்டரிப் பள்ளி மாணவர்கள் அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படுவார் களா? அதை விட மேலானது என்னவென்றல் அந்த அனுமதி பள்ளி அதிகாரிகளைச் சார்ந்திருக்கும், அதன் விளைவாக அதிக கல்வி அறிவுள்ள மக்களைச் சார்ந்திருக்கும். தவருகப் பயன் படும் என அஞ்சவேண்டிய காரணம் எதுவும் இல்லை. விவ சாய செகண்டரிப் பள்ளியில் பட்டம் பெற்றுவிட்டு அங்கேயே நிரந்தரமான வேலையாட்களாகத் தங்கிவிடுபவர்கள் அதன் பிறகு மாணவர்களல்ல. இருந்த போதிலும் 21 முதல் 27 வயதுக்கிடையே உள்ள அவர்கள் கூட திருமணம் செய்ய அனுமதி பெற வேண்டும். தாய் நாட்டால் தேர்ந்தெடுக்கப் பட்ட புதிய பாதை, ருஷ்ய பிரஜைகளின் சிவில் உரிமைகள் சிலவற்றைக் குறைப்பதில் ஈடுபட்டிருக்கிறது என்பதனை நம் மால் அங்கீகரிக்காமல் முடியவில்லை. ஆனல் நாடு தழுவிய செகண்டரி கல்வியின் பலனை தியாகம் புரியாமல் பெற முடி யாது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இரண் டாவதாக, குடும்பத்துடன் உழைப்பவர்களுக்குத் தனித்த

குடியிருப்புகள் வசதிகள் செய்து தரப்படும். அநேகமாக இப்பொழுது ஆலைத் தொழிலாளர்கள் வசிக்கும் ஒரே ஒரு படுக்கை அறையை கொண்ட வீடுகளை விட மோசமாக இருக்காது. மூன்றாவதாக, நிரந்தரமான வேலையாட்கள் இதற்காக ''சிறிதளவு உதவித்தொகை'' பெறுகின்றனர். முதலாளித்துவ குழப்பத்தில் இருப்பதை விட அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் அமையும் அமைதியான ஒரு வாழ்வின் அனுகூலங்களை மக்கள் விரும்புவார்கள் என்பது ஐயமில்லை. சில உழைப்பாளிகள் நிரந்தரமாக விவசாய செகண்டரிப் பள்ளியில் தங்குமளவிற்கு அவற்றை விரும்புவார்கள் (திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவதால் நன்றியுடனேயே தங்க விரும்பலாம்). ''விவசாய செகண்டரிப் பள்ளியில் முழுக்க முழுக்க தங்கி தங்களை அப்பள்ளியுடன் பிணைத்துக் கொள்ளும் [sic!!] (கவனியுங்கள்!) இந்தக் குறைந்த நிரந்தரமான வேலையாட்கள் விவசாய செகண்டரிப் பள்ளியின் இத்தகைய உழைப்புச் சக்திகளை நிறைவு செய்கிறார்கள். நம்முடைய விவசாய செகண்டரிப் பள்ளியின் சக்திகள் சாத்தியமான உழைக்கும் சக்திகள். எந்த வகையிலும் கற்பனாவாதமாகாது''.

எங்கள் மேல் இரக்கம் கொள்ளுங்கள்! இவற்றிலெல்லாம் என்ன ''கற்பனாவாதம்'' இருக்கிறது? நிரந்தர இலவச வேலையாட்கள், அவர்களுடைய எஜமானர்களுடன் தாங்களே ''இணைந்து கொண்டார்கள்.'' அவர்களுடைய எஜமானர்களால் திருமணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்,—எந்த வயோதிக விவசாயியையும் கேட்டுப் பாருங்கள். அவருடைய சொந்த அனுபவத்திலிருந்து* இவையெல்லாம் நிச்சயம் சாத்தியமானது என்று உங்களுக்குக் கூறுவார்.

(தொடரும்.**)

1895 ஆண்டு இலையுதிர் காலத்தில் எழுதப்பட்டது

நூல் திரட்டு,
ருஷ்யன் பதிப்பு,
தொகுதி 2,
பக்கங்கள் 61-69

---

* இத்தகைய காரியங்கள் ருஷ்யாவில் நிலப்பிரபுத்துவ காலத்தில் ஏற்பட்டன. நிலப்பிரபுத்துவச் சட்டங்கள் ருஷ்யாவில் 1861ல் ஒழிக்கப்பட்டன.—மொ-ர்.

** சமார்ஸ்கி வெஸ்த்னிக் என்ற செய்தித்தாளில் இதைத் தொடர்ந்து எந்த தொடரும் வரவில்லை.—ப-ர்.

# நம்முடைய அமைச்சர்கள் எதைப் பற்றி சிந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள்?[8]

உள்நாட்டு விவகார அமைச்சர் துர்னேவோ புனித ஸினேட்டின்[9] முதன்மை வழக்குரைஞரான பொபெதனேஸ்த் ஸெவ் என்பவருக்கு கடிதம் ஒன்று எழுதினார். 2603 என்று எண்ணிடப்பட்ட இந்தக் கடிதம் 1895ம் ஆண்டு, மார்ச்சு மாதம் 18ம் நாள் எழுதப்பட்டது. இது ''மிகவும் ரகசிய மானது'' என்று பொறிக்கப்பட்ட எழுத்துக்களைத் தாங்சி இருந்தது. எனவே அமைச்சர் இந்தக் கடிதத்தை பரம ரகசி யமாக வைத்திருக்க விரும்பினார். ஆனால் ருஷ்யப் பிரஜை கள் அரசாங்கத்தின் எண்ணங்களை தெரிந்து கொள்ளலாகாது என்ற அமைச்சரின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர் கள் இருக்கிறார்கள் என்பது நிரூபணமாகிவிட்டது. அதன் விளைவு, கையால் எழுதப்பட்ட இந்தக் கடிதத்தின் நகல் ஒன்று எல்லா இடங்களிலும் சுற்றுக்கு விடப்பட்டுள்ளது.

திரு. துர்னேவோ திரு. பொபெதனேஸ்த்ஸெவுக்கு எதைப் பற்றி எழுதினார்?

அவர் ஞாயிறுப் பள்ளிகளைப்[10] பற்றி அவருக்கு எழு தினார். அக்கடிதம் வருமாறு: ''1860முதல் 1870ம் வரை உள்ள ஆண்டுகளில் நடைபெற்ற உதாரணம் போல் அரசாங்கத் தில் நம்பத்தகாத நபர்களும் ஒரு குறிப்பிட்ட மனப் போக் கை உடைய மாணவ இளைஞர்கள் ஒரு பகுதியும் ஞாயிறுப் பள்ளிகளில் ஆசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் நூலகர்களாகவும் இத்தியாதி நபர்களாகவும் நுழைய

முயற்சி செய்து கொண்டிருக்கிருர்கள் என்று சமீப காலத்தில் கிடைக்கப்பெற்ற செய்தி வெளிப்படுத்துகிறது. இந்த நீண்ட நாளேய முயற்சி பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற அவாவினுல் உந்தித் தள்ளப்பட முடியாது. ஏன் எனில் இத்தகையப் பள்ளிகளில் பணிகள் இலவசமாகச் செய்யப்படுகின்றன. எனவே ருஷ்யாவில் நிலவிவரும் அரசு முறைக்கும் சமுதாய ஒழுங்கிற்கும் எதிராக அரசாங்க விரோத சக்திகள் சட்ட பூர்வமான போராட்டம் நடத்த மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கை வழிவகை அமைத்துத் தருகிறது என்பதனே இந்த முயற்சி நிரூபிக்கிறது.''

அமைச்சர் இவ்விதமாகத்தான் விவாதிக்கிருர்! கற்ற மக்களிடையே தொழிலாளர்களுடன் தங்களுடைய அறிவை பகிர்ந்து கொள்ள விரும்புகிறவர்கள். அவர்களுடைய அறிவு தங்களுக்கு மட்டுமே பயன்பட வேண்டும் என்று எண்ணுமல் அது மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் உள்ளனர். அமைச்சர் உடனடியாக ''அரசாங்க விரோத சக்திகள்'' இங்கே இருப்பதாகத் தீர்மானிக்கிருர், அதாவது ஒரு வகை சதிகாரர்கள் மக்களேத் தூண்டி ஞாயிறுப் பள்ளிகளில் நுழையச் செய்கிருர்கள் என்று எண்ணுகிருர். தூண்டுகோல் இல்லாமல் கற்ற மக்களின் மனதில் மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஆவல் உண்மையிலேயே எழ முடியாதா? ஆனுல் அமைச்சர் சஞ்சலப்படுத்தப்படுகிருர். ஏன் எனில் ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதில்லே. அமைச்சருக்காக வேலே செய்கிற அதிகாரிகள், ஒற்றர்கள் தங்களுடைய சம்பளங்களுக்காக மட்டுமே வேலே செய்கிறவர்கள், யார் மிக அதிகமாக சம்பளம் கொடுக்கிருரோ அவருக்கு வேலே செய்கிறவர்கள் ஆகியோரை அமைச்சர் பார்த்துப் பழக்கப்பட்டிருக்கிருர். திடீர் என்று மக்கள்... இலவசமாக சேவை செய்வதும், வேலே செய்வதும், கற்பிப்பதும் எல்லாம் செய்வதும் அவருக்கு சந்தேகமாக இருக்கிறது. இந்த விஷயத்தை நன்ருக ஆராய்ச்சி செய்து காண உளவாளிகளே அனுப்புகிருர். அக்கடிதம் மேலும் கூறுகிறது: ''கீழ்க்கண்ட செய்தியில் இருந்து'' (உளவாளிகளிடமிருந்து பெறப்பட்டது, அவர்கள் சம்பளம் வாங்குவதால் அவர்களுடைய வாழ்வு நியாயப்படுத்தப்படுகிறது) ''பயங்கர போக்குடையவர்கள் ஆசிரியர்கள் அணியில் நுழைந்துள்ளார்கள்

என்பது மட்டுமல்ல, பள்ளிக்கூடங்களே நம்பத்தகாத நபர்களின் ஒரு மொத்த குழுவின் அதிகார பூர்வமற்ற வழிநடத்துதலின் கீழ் உள்ளன. அவர்களுக்கும் அதிகார பூர்வமான நபர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. அவர்கள் ஆசிரிய, ஆசிரியைகளின் அழைப்பின் பேரில் மாலை நேரங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தவும் மாணவர்களுக்கு பாடம் கற்பிக்கவும் செய்கிறார்கள்... அவர்கள் தாங்களாகவே இவ்வேலைக்கு அங்கே தங்களை அமர்த்திக் கொள்ளுகிறார்கள். சொற்பொழிவு நிகழ்த்த வெளியாட்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்ற உண்மையானது வெளிப்படையாக புரட்சிகரமான வட்டாரத்திலிருந்து சொற்பொழிவாளர்கள் என்று ஊடுருவுவதற்கு முழு வழி விடுகிறது''.

எனவே பாதிரியார்கள், உளவாளிகள் ஆகியோர்களால் சோதிக்கப்பட்டு சம்மதம் தெரிவிக்கப்படாத ''வெளி ஆட்கள்'' தொழிலாளிகளுக்குப் பாடம் கற்பிக்க விரும்பினால் அது முழுப் புரட்சியாகும்! நம்முடைய அமைச்சர் தொழிலாளர்களைத் துப்பாக்கி ரவைகள் எனவும் அறிவையும் கல்வியையும் தீப்பொறி எனவும் கருதுகின்றார்; இந்தத் தீப்பொறி துப்பாக்கி ரவையில் விழுந்தால் அந்த வேட்டு அரசாங்கத்திற்கு எதிராக முதலாவதாகவும் முக்கியமாகவும் திருப்பி விடப்படும் என்று அமைச்சர் நன்கு புரிந்துள்ளார்.

இந்த அரிய எடுத்துக்காட்டில் மேன்மை தங்கிய அமைச்சரின் கருத்துக்களை நாம் முழுமையாகவும் நிபந்தனை இன்றியும் ஒப்புக் கொள்கிறோம் என்பதையும் அதை மகிழ்வோடு கவனிக்கிறோம் என்பதையும் நம்மால் மறுக்க முடியாது.

மேலும் அந்த அமைச்சர் தன்னுடைய கடிதத்தில் அவருடைய ''செய்தி'' சரி என்பதற்கான ''நிரூபணங்களை'' எடுத்துக் காட்டுகிறார். அவைகள் நேர்த்தியான நிரூபணங்கள்!

முதலாவதாக, ''பெயர் இன்னமும் தீர்மானிக்கப்படாத ஒரு ஞாயிறுப் பள்ளி ஆசிரியர் ஒருவரின் கடிதம்.'' அந்தக் கடிதமானது ஒரு சோதனையில் கைப்பற்றப்பட்டதாகும். அது சமுதாயப் படிநிலைகளை அடிமையாக்குவதும் விடுதலை செய்வதும் என்பதைப் பற்றிய கருத்தைக் கொண்ட வரலாற்றுச் சொற்பொழிவுகளைப் பற்றிய ஒரு திட்டத்தைக்

குறிப்பிடுகிறது. மேலும் ராஸின், புகச்சோவ் ஆகியோரின் கலகத்தைப்* பற்றிய குறிப்பும் இருந்தது.

விவசாயிகள் கலவைக் கொம்புகளுடன் வருவது போன்ற பேய்க் கனவுகளை அவர் காணக்கூடிய அளவு பின்னே குறிப்பிடப்பட்ட பெயர்கள் அந்த நல்ல அமைச்சரை பயமுறுத்தியிருக்கின்றன என்பது வெளிப்படை.

இரண்டாவது நிரூபணம்:

''உள்நாட்டு விவகார அமைச்சகம் கீழ்க்கண்ட விஷயங்களைக் குறித்து ஒரு மாஸ்கோ ஞாயிறுப் பள்ளியில் பொது சொற்பொழிவுகளுக்கான திட்டம் ஒன்றை இரகசியமாகப் பெற்றிருந்தது: 'சமுதாயத்தின் தோற்றம். புராதன சமுதாயம். சமுதாய அமைப்புமுறையின் வளர்ச்சி. அரசும் அதன் அவசியமும். ஒழுங்கு. சுதந்திரம். நீதி. அரசியல் அமைப்பின் உருவங்கள். வரம்பற்ற, அரசியல் சட்ட முடியாட்சி முறை. உழைப்பு—பொது நலத்தின் அடிப்படை. பயன்பாடும் செல்வமும், உற்பத்தியும் பரிவர்த்தனையும் மூலதனமும், செல்வம் எப்படி வினியோகிக்கப்படுகிறது. தனியார் நலத்தின் தொடர்ச்சி. சொத்தும் அதன் தேவையும். விவசாயிகளை நிலத்துடன் விடுதலை செய்தல். வாடகை, இலாபம், கூலி. கூலியும் அதன் பல்வேறு உருவங்களும் எதைச் சார்ந்துள்ளன? சிக்கனம்'.

''இத்திட்டம் ஆரம்பப் பள்ளிகளுக்குப் பொருந்தாது. இத்திட்டத்தில் உள்ள சொற்பொழிவுகள் விரிவுரையாளருக்கு தன்னுடைய மாணவர்களை கார்ல் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் தத்துவங்களுடன் சிறுகச் சிறுக பரிச்சயம் ஏற்படுத்த சந்தர்ப்பம் நல்குகின்றன. அதே நேரத்தில் டயோசீசன்[11] அதிகாரிகளின் சார்பாக ஆஜராகும் நபர் சொற்பொழிவில் உள்ள சமூக-ஜனநாயக பிரசார அம்சங்களை பார்க்கக் கூடிய நிலையில் இல்லை.''

''மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் தத்துவங்களைப்'' பற்றி இந்த அமைச்சர் பெரிதும் அச்சம் கொண்டிருக்கிறார் என்பது வெளிப்படை. ஏனென்றால் அவற்றைப் பற்றிய ''தடயம்'' ஒன்றுகூட இல்லாத இத்தகையத் திட்டத்தில்

---

* அவை நிலப்பிரபுகளை எதிர்த்த இரு விவசாயக் கலகங்களாகும் (1670-71; 1773-75).—மொ-ர்.

இந்தத்''தடயத்தை'' உற்றுநோக்குகிறார். அதில் ''பொருத்த மற்றது'' என்று எதை அந்த அமைச்சர் கண்டு பிடித்தார்? அநேகமாக அரசியல் கட்டமைப்பு உருவங்கள், அரசியல் சட்டம் ஆகியவற்றைப் பற்றிய பிரச்சினைகளை அவர் பொருந்தாது எனக் கருதலாம்.

திருவாளர் அமைச்சர் அவர்களே, எந்த பூகோளப் புத்தகத்தையும் எடுங்கள், அந்தப் பிரச்சினைகள் அங்கு கையாளப் பட்டிருக்கும்! குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படும் இந்த விஷயங்களை வயது வந்த தொழிலாளர்கள் அறிய மாட்டார்களா?

ஆனால் அந்த அமைச்சர் டயோசீசன் இலாக்காவிலிருந்து வரும் நபர்கள் மீது எந்த நம்பிக்கையும் வைக்கவில்லை. ''அவர்கள் அநேகமாக என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதனை அறிய தவறிவிடுவார்கள்.''

மாஸ்கோவிலிருந்து புரோஹரவ்ஸ்காயா ஐவுளி ஆலையைச் சார்ந்த மதக்குருவின் ஞாயிறுப் பள்ளி, எலெட்ஸ் நகரத்தில் இருந்த ஞாயிறுப் பள்ளி, டிஃப்ளிசில் உத்தேசிக்கப் பட்டப் பள்ளி ஆகியவற்றிலிருந்த ''நம்பத்தகாத'' ஆசிரியர்களின் எண்ணிக்கையை கணக்கெடுப்பதில் இந்தக் கடிதம் முடிகிறது. திரு. துர்னோவோ திரு. பொபெதனோஸ்த்செவுக்கு ''இந்தப் பள்ளிகளில் வகுப்புகளை நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கும் நபர்களை விரிவாக சோதிக்கும்படி'' அறிவுறுத்துகிறார். இப்பொழுது ஆசிரியர்களின் பட்டியலைப் படித்தால் மயிர் கூச்சரியும்: அந்தப் பட்டியலில் உள்ளவர் எல்லாம் முன்னாளைய மாணவர், மீண்டும் ஒரு முன்னாளைய மாணவர், இன்னும் மீண்டும் பெண்களுக்கான கல்வி நிறுவனத்தின் முன்னாளைய மாணவி, முன்னாளைய சிறு இராணுவ அதிகாரிகள் (ஊந்தெர்கள்[12]) ஆசிரியர்களாக இருக்கலாம் என்று அமைச்சர் விரும்புகிறார் போலும்.

எலெட்ஸ் நகரிலுள்ள பள்ளி''சொஸ்னா நதிக்கு அப்பால் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கேயுள்ள மக்கள் முக்கியமாக மிகச் சாதாரண பொதுமக்களும் (ஓ! பயங்கரம்!) உழைப்பாளி மக்களுமாவார்கள். மேலும் இரயில் பணிமனைகளும் அங்கேயுள்ளது'' என்று அந்த அமைச்சர் ஒரு குறிப்பிட்ட அச்சத்துடன் கூறுகிறார்.

''சாதாரண மக்களிடமிருந்தும் உழைப்பாளி மக்களிட

*மிருந்தும்'' பள்ளிக்கூடங்கள் எவ்வளவுக்கெவ்வளவு விலகி இருக்க முடியுமோ அவ்வளவு தூரம் விலகி இருக்க வேண்டும்.*

*தொழிலாளர்களே! உழைக்கும் மக்கள் அறிவைப் பெறுவதைக் கண்டு நம் அமைச்சர்கள் உயிர்போகும் அளவு எப்படி பீதியடைகிறார்கள் பாருங்கள்! எச்சக்தியும் தொழிலாளிகள் வர்க்க உணர்வு பெறுவதை தடுக்க முடியாது என்பதனை ஒவ்வொருவருக்கும் காட்டுங்கள்! அறிவு இல்லையெனில் தொழிலாளிகள் பாதுகாப்பற்றவர்கள், அறிவுடையவர்கள் எனில் அவர்கள் ஒரு சக்தி!*

*நவம்பர்-டிசம்பரில் 8 (20) 1895க்குப் பிந்தாமல் ரபோச்சியே தேலோ என்ற செய்தித் தாளுக்காக எழுதப்பட்டது*

நூல் திரட்டு, *தொகுதி 2, பக்கங்கள் 75-80*

## ருஷ்யர்களும் நீக்ரோக்களும்

என்ன விநோதமான ஒப்புநோக்கு? என்று வாசகர்கள் எண்ணலாம். ஓர் இனத்தை எப்படி ஒரு தேச இனத்துடன் ஒப்பிடலாம்?

இது ஓர் அனுமதிக்கப்பட்ட ஒப்புநோக்கு. அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்களில் கடைசியானவர்கள் நீக்ரோக்கள். யாரையும் விட அவர்கள் இன்னமும் அடிமைத்தனத்தின் கொடூரமான குறிகளைத் தாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். வளர்ச்சி அடைந்த நாடுகளில் கூட—ஏன் எனில் முதலாளித்துவத்திற்கு சட்ட ரீதியான விடுதலையைத் தவிர வேறு ''வழி'' இல்லை. பிந்தியது கூட ஒவ்வொரு சாத்தியமான வழியிலும் அதைத் தடை செய்கிறது.

ருஷ்யர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் ''அநேகமாக'' 1861ல் **பண்ணை அடிமையிலிருந்து** விடுவிக்கப்பட்டார்கள்[13] என்று வரலாறு கூறுகிறது. கிட்டத்தட்ட இதே காலத்தில் தான் அமெரிக்க அடிமைச் சொந்தக்காரர்களை எதிர்த்து நடந்த உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து வட அமெரிக்காவின் நீக்ரோக்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

அமெரிக்க அடிமைகளின் விடுதலை, ருஷ்ய அடிமைகள் விடுதலையான முறையை விட சற்று குறைவான ''சீர்திருத்த முறையில்'' தான் நடந்தது.

**அதனால்தான்** இன்று, அரை நூற்றாண்டுக்குப் பின், ருஷ்யர்களிடம் நீக்ரோக்களை விட அடிமைத்தனத்தின் அநேக தடையங்கள் உள்ளன. உண்மையில் வெறும் தடையங்களைப் பற்றிப் பேசுவதை விட நிறுவனங்களைப் பற்றிப் பேசுவது தான் மிகச் சரியானதாகும்... ஆனால் இந்தக் குறுகிய கட்

டுரையில் நாம் கூறிய எழுத்தறிவுச் சம்பந்தப்பட்டப் பிரச்சனையை பற்றிய ஒரு சில எடுத்துக்காட்டுகளுடன் நிறுத்திக் கொள்ளுவோம். கல்வியறிவின்மை என்பது அடிமைத் தனத்தின் அறிகுறிகளில் ஒன்றாகும். பாதுஷாக்கள், திரு. புரிஷ்கேவிச்சுகள் போன்றவர்களால் அமுக்கப்பட்ட ஒரு நாட்டில் பெருவாரியான மக்கள் கல்வி அறிவுடையவர்களாக இருக்க முடியாது.

ருஷ்யாவில் ஒன்பது வயதுக்குள்பட்ட குழந்தைகளைத் தவிர 73 சதவீதம் எழுத்தறிவற்றவர்கள்.

அமெரிக்க ஐக்கிய நாட்டு நீக்ரோக்களில் (1900ல்) 44.5 சதவீதம் எழுத்தறிவற்றவர்கள்.

இத்தகைய அவமானகரமான உயர்ந்த சதவீத எழுத்தறிவற்றவர்கள் வட அமெரிக்க குடியரசு போன்ற முன்னேற்றமடைந்த நாகரிகமான நாட்டிற்கு ஓர் அவமானமாகும். மேலும் பொதுவாக அமெரிக்காவில் நீக்ரோக்களின் நிலைமை நாகரிகமடைந்த நாட்டிற்கு தகுதியுடையதாக இல்லை என்று ஒவ்வொருவரும் அறிவர்: முதலாளித்துவத்தால் பூர்ண விடுதலையோ, முழு சமத்துவமோ கொடுக்க முடியாது.

அமெரிக்காவில் வெள்ளையர்களிடையே எழுத்தறிவற்றவர்களின் விகிதம் 6 சதவீதம்தான் என்பது கற்றுக்கொள்ளக் கூடியதாகும். ஆனால் அமெரிக்காவை முன்னாளைய அடிமைகளை கொண்ட பகுதியாகவும் (ஒரு அமெரிக்க ''ருஷ்யா''), அடிமைகள் இல்லாத பகுதியாகவும் (ருஷ்யா அல்லாத ஓர் அமெரிக்கா) நாம் பிரித்தால் முந்திய பகுதியில் 11-12 சதவீத எழுத்தறிவற்றவர்களையும், பின்னர் குறிப்பிட்ட பகுதியில் 4-6 சதவீத எழுத்தறிவற்றவர்களையும் வெள்ளையர்களிடையே நாம் காண முடியும்.

முந்திய அடிமைகளை கொண்டப் பகுதியில் எழுத்தறிவற்றவர்களின் விகிதம் வெள்ளையர்களிடையில் இருமடங்கு உயர்ந்துள்ளது. அடிமைத்தனத்தின் தடையங்களை நீக்ரோக்கள் மட்டுமே காட்டவில்லை!

நீக்ரோக்களின் நிலைமைக்காக அமெரிக்கா வெட்கப்பட வேண்டும்!...

| | |
|---|---|
| 1913, ஜனவரியின் பிற்பகுதியிலும் பிப்ரவரியின் முற்பகுதியிலும் எழுதப்பட்டது | நூல் திரட்டு, தொகுதி 22, பக்கங்கள் 345-346 |

## அதிகரித்துக் கொண்டிருக்கும் முரண்பாடு. ஓர் அரசியல் கட்டுரையாளரின் குறிப்புகள்

என்ற கட்டுரையிலிருந்து

திரு. கஸ்ஸோவினுடைய விளக்கம் சம்பந்தமாக அரசாங்க டூமாவின் பல்வேறு கட்சிகளினுடைய நடைமுறை சூத்திரங்கள் மிக்க சுவையானவை. அரசியலைப் பகுத்து ஆய்வு செய்ய, தேவையான துல்லிதமான விஷயங்களை அவை நமக்குத் தருகின்றன. இவ்விஷயங்கள் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளால் அதிகாரப் பூர்வமாக உறுதி செய்யப் பட்டவை. வழக்கமாக நம்மில் அநேகருக்கு இந்த விஷயம் பகுத்தாய்வு செய்வதற்கு தேவையாயிருக்கிறது. தினசரி செய்தித் தாள்களின் அல்லது அரசாங்க டூமாவின்[14] மொழி பிறழாமல் அப்படியே வெளியிடப்பட்ட அறிக்கைகளின் குவியலால் அது அழிந்து விடுகிறது. ஆயினும் நாம் பல்வேறு கட்சிகளின் உண்மைத் தன்மையைப் புரிந்துகொள்ள விரும்பினுல் இதனைக் கருத்தில் கொண்டு செயல்படுவது நல்லது.

நம்பிக்கையில்லாத் தீர்மான சூத்திரத்தை ஏற்றுக் கொண்ட மறுநாள் ரேச் என்ற பத்திரிகையில்[15] வெளியான ஒரு முக்கிய கட்டுரை அறிவித்ததாவது: ''ருஷ்ய சமுதாயம் இவ்வாருக டூமாவிடமிருந்து எதை எதிர்ப்பார்க்க உரிமையுள்ளதோ அதைப் பெற்றுவிட்டது'' (இதழ் 37, பிப்ரவரி 7). டூமா திரு. கஸ்ஸோவை நம்புகிறதா என்பதனை அந்த எல்லா ''சமுதாயம்'' அறிய விரும்புவதைப் போல் இது தொனிக்கிறது!

இது உண்மையல்ல. ஜனநாயகவாதிகளும் மக்களும் நம்

பிக்கையில்லாத் தீர்மானத்தின் உள்நோக்கத்தைப் புரிந்திருக்க வேண்டியுள்ளது. அவ்வாறு அறிந்திருப்பது, அரசியலில் ஓர் அசாதாரண புலப்பாடு எனக் கருதக் கூடியதின் காரணங்களைப் புரியவும் சாதாரண நிலைக்கு கொண்டுவர ஒரு வழியைக் காணவும் உதவும். இத்தகைய தீவிரப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் ''எங்களுக்கு நம்பிக்கை இல்லை'' என்ற சொற்றொடர்களால் மட்டுமே, காடேட்டுகள்[16], அக்டோபர்வாதிகள்[17], சமூக-ஜனநாயகவாதிகள் ஆகியோர்களிடையே ஐக்கியம் உண்டாகாது. அக்டோபர்வாதிகளின் நடைமுறை சூத்திரம் பின்வருமாறு:

''அரசாங்க டுமா.... கருதுகிறது: 1) அரசியல் போராட்டங்களில் செகண்டரி பள்ளி மாணவர்களின் எல்லா ஈடுபாடுகளும் ருஷ்ய இளம் சக்திகளின் ஆன்மீக வளர்ச்சியை அழிக்கக் கூடியவை.மேலும் சமுதாயத்தின் அன்றாட சாதாரண வாழ்வு முறைக்குத் தீங்கு விளைவிப்பதாகும்; 2) செகண்டரி பள்ளிகளில் விரும்பத்தகாத நடவடிக்கைகள் உள்ளன என்று அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படும் பொழுதெல்லாம் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுவது அவசியம். நிலைமை அசாதாரண குணும்சத்தை* அடையும் வரை காத்திருக்கலாகாது: 3) இயல்பான ஆசிரியர் செல்வாக்கிற்குப் பதிலாகப் பள்ளி அதிகாரிகளுக்குத் தெரியாமல் 1912ம் ஆண்டு டிசம்பர் 10ல் எடுக்கப்பட்டதைப் போன்ற மாணவர்களுக்கு எதிரான போலீஸ் நடவடிக்கையை எதிர்த்து மிக அழுத்தமாக அறிவிக்கிறது; 4) பள்ளியை விட்டு நீக்கப்பட்ட மாணவர்களின் தலைவிதியைத் தீர்மானிப்பதில் எடுக்கும் மெதுவான நடவடிக்கையை கல்விக்கு எதிரான நடவடிக்கை எனக் கருதுகிறது. இத்தகைய நிகழ்ச்சியை விரைந்து கவனித்து முடிவெடுக்க வேண்டும் என்றும் மாணவர்களிடம் தாராளமான போக்கை கடைபிடிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறது.

* இந்த வாசகம் ஜனவரி 25ல் நடந்த டுமா கூட்டத்தில் கொண்டுவரப்பட்டது. பிப்ரவரி 1ல் நடந்த டுமா கூட்டத்தில் 2வது பிரிவு கீழ்க்கண்ட வாசகத்துடன் மாற்றி எழுதப்பட்டது: ''இந்தக் குறிப்பிட்ட விஷயத்தைப் பொறுத்து, செகண்டரிப் பள்ளிகளில் மாணவர்களுக்கு சம்பிரதாயமானதும், அலட்சியமானதுமான போக்கு நிலவுகிறது என்பதனையும் ஆசிரியர்கள் அவர்களுடைய குடும்பத்திலிருந்து பிரிக்கப்படுகிறார்கள் என்பதனையும் கருத்தில் கொண்டு முளைத்து வரும் தலைமுறையினரைப் பற்றி மனிதாபிமான கருத்தை நிறுவுவது அவசியம்.''

அடுத்த காரியத்தைத் தொடருகிறது.''

இந்த அறிவிப்பில் உள்ள அரசியல் கருத்துக்கள் என்ன? பள்ளிக்கூடத்தில் அரசியல் தீங்கு பயப்பது மாணவர்கள் குற்றம் சாட்டப்பட வேண்டியவர்கள். ஆனுல் அவர்களை அவர்களுடைய ஆசிரியர்கள்தான் தண்டிக்க வேண்டும், போலீஸ் இல்லை. அரசாங்கத்தின் ''தாராளத் தன்மையின்'' குறைவு, மந்தப்போக்கு ஆகியவற்றிற்காக அதன் மேல் நாங்கள் அதிருப்தி கொண்டுள்ளோம்.

இவைகள் எல்லாம் ஜனநாயக விரோத கருத்துக்கள். இது மிதவாத குணம் பொருந்திய எதிர்ப்பு, ஏனெனில் இது உணர்த்துவதாவது: பழைய ஆட்சி அதிகார முறை இருக்கட்டும், ஆனுல் அந்த முறையைக் கொண்டு மிக லேசாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நீங்கள் கசையடி கொடுக்கலாம், ஆனுல் அது குற்றத்தின் அளவை விட அதிகமாக இருக்கக் கூடாது. பலர் அறிய கசையடி கொடுக்கக் கூடாது.

முற்போக்குவாதிகளின்[18] நடவடிக்கை சூத்திரங்களைப் பாருங்கள்:

''... டூமா கீழ்க்கண்ட முடிவுகளை எடுக்கிறது: 1) செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் செகண்டரி பள்ளிகளில் அண்மையில் என்ன நடந்தது என்று அறிவிக்கப்பட்டப் பிறகும் கல்வி அமைச்சகம் அதனுடைய கடமைகளைச் செய்வதில் மனப்பூர்வமற்ற போக்கைக் கடைபிடித்தது. மேலும் போலீஸால் திடீரென தாக்கப்படுவதிலிருந்து செகண்டரிப் பள்ளிகளைப் பாதுகாக்கத் தவறியது. 2) போலீஸ் அதிகாரிகளால் உபயோகிக்கப்பட்ட முறைகளைக் கல்வி அமைச்சகம் எதிர்க்கவில்லை. அம்முறைகள் பள்ளிகளில் திடீர்ச் சோதனைச் செய்தல், குழந்தைகளைப் பிடித்து காவல் நிலையங்களில் கைதியாக வைத்திருத்தல், புலன் விசாரணை செய்வதில் அனுமதிக்க முடியாத முறைகளைப் பயன்படுத்துதல் ஆகியவை முழுக்க முழுக்க நியாயமற்றவைகள். எல்லாவற்றிற்கும் மேலாக இவ்விஷயத்தில் அரசாங்கத்தைப் பாதுகாப்பது அல்ல, —ஆனுல் செகண்டரிப் பள்ளிகளில் ஒழுங்கை மீண்டும் புதுப்பிப்பதாகும்; 3) கல்வி அமைச்சகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் பள்ளிக்கூடத்தைக் குடும்பத்திலிருந்து பிரிக்கக்கூடிய திசையில் செல்லும் நடவடிக்கைகள், அதனுடைய இரக்கமற்ற சம்பிரதாயமான தன்மை மூலம் இளம் தலைமுறையினரின் ஒழுக்க, அறிவு வளர்ச்சியை உடைத்துவிடுகின்றன. மேலும் அவை பள்ளி வாழ்வில் அசாதாரணமான நடவடிக்கைகளுக்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்கு

கின்றன. கல்வி அமைச்சரால் தரப்பட்ட விளக்கத்தை திருப்தியற்ற விளக்கமாக கருதி டூமா அடுத்த விஷயத்திற்குச் செல்லுகிறது.''

இந்தச் சூத்திரம் ஜனவரி 30ல் தாக்கல் செய்யப்பட்டது. அக்டோபர்வாதிகள் நம்பிக்கை இல்லா தீர்மானத்தை சேர்த்துக் கொண்டால் அவர்களுக்கு ஆதரவு அளிப்பதாக அவ்வப்பொழுது முற்போக்குவாதியினர் அறிவித்தனர். இந்தப் பேரத்தின் முடிவுகளை மேலே கண்டோம்.

எந்த அடிப்படையில் அந்தப் பேரம் நடைபெற முடியும்? முக்கியமாக ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான்.

முற்போக்குவாதிகள் கூட பள்ளிக்கூடங்களில் அரசியல் அவசியமற்றது என்று கருதுகின்றனர். மேலும் அவர்கள் கூட ''ஒழுங்கை புதுப்பிக்க'' (நிலப்பிரபுத்துவ ஒழுங்கை) வேண்டும் என்று அறைகூவல் விடுகின்றனர். அவர்களும் ''அவர்களுடைய பங்கிற்கு எதிர்ப்பு[19]'' தெரிவிக்கின்றனர். இந்த எதிர்ப்பு என்பது பழைய ஆட்சி அதிகார முறைக்கு அல்ல, ஆனால் அதை பயன்படுத்தும் முறைக்கு எதிர்ப்பு. அதாவது உணர்ச்சியற்றதன்மை, இன்னேரன்னவற்றைப் பயன்படுத்துவது. 1860களில் திரு. பிரகோவ் கசையடி இருக்க வேண்டும் என ஒப்புக்கொண்டார். ஆனால் அந்தக் கசையடி நிதானத்தோடோ அல்லது உணர்ச்சியற்ற தன்மையிலோ நடத்தப்படக் கூடாது என்று வலியுறுத்தினார். முற்போக்குவாதிகளுக்கு தற்கால சமூக சக்திகள் ''ஒழுங்கை நிலைநாட்டுவதில்'' ஆட்சேபணை இல்லை. ஆனால் அவர்கள் பின்னால் குறிப்பிட்டவர்களை இதனை அதிக ''கருணையுடன்'' செய்யுமாறு அறிவுறுத்துகிறார்கள். ஐம்பது ஆண்டு காலத்தில் நம் நாட்டில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது!

காடேட்டுகளின் நடைமுறை சூத்திரம்:

''கல்வி அமைச்சரால் தரப்பட்ட விளக்கத்தைக் கேட்ட பிறகு பின் வருவன கருத்தில் கொள்ளப்பட்டன: 1) இது கல்வி கண்ணோட்டத்தைப் போலீஸ் கண்ணோட்டத்துடன் கொண்டு முழு குழப்பம் அடைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது; 2) பள்ளிக்கூடத்திற்கும் குடும்பத்திற்கும் இடையில் நட்புப் பூர்வமான ஒத்துழைப்பு உறவுகளை நிறுவ ஏற்ற சாதாரண அடிப்படைகளை இந்த விளக்கம் முழுமையாக மறுப்பதாகும்; 3) மாணவர்களிடையே ஆழமான ஆத்திரத்தை

எழுப்பக் கூடியதும், சமுதாயத்தில் நியாயமான எரிச்சலை உண்டாக்கக் கூடியதுமான கோட்பாட்டை அந்த அமைச்சகம் கடைபிடித்தால், பள்ளி இளைஞர்கள் விரைவில் அரசியலில் ஈடுபாடு கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை அந்த அமைச்சகமே உருவாக்குகிறது. எனவே இத்தகைய நிலைமைகளைத் தலைதூக்காமல் தடுக்க வேண்டிய அமைச்சகமே இந்நிலைகளை உருவாக்குகிறது; 4) அரசிற்கு எதிரான குற்றங்களைச் செய்த குற்றவாளிகளாக மாணவர்களை நடத்துவது முளைவிட்டு வரும் தலைமுறையினரிடமுள்ள அதிபுத்திசாலிகளின் வாழ்வை முடமாக்குகிறது, அவர்களுடைய அணிகளிலிருந்து அநேகரை அகற்றி பலிவாங்குகிறது. இது ருஷ்யாவின் எதிர்காலத்திற்கு ஓர் அச்சத்தை உண்டாக்குகிறது;—அமைச்சரால் தரப்பட்ட விளக்கம் திருப்தியற்றது என்று அரசாங்க டூமா கருதி அடுத்த வேலையைத் தொடர்கிறது.''

இங்கே கூட அரசியலில் ''இளமையில்'' ஈடுபடுவது கண்டிக்கப்பட்டுள்ளது. அந்தக் கண்டனம் மிக அடக்கமான வார்த்தைகளால் ஆனது. மேலும் அது சொற்களால் மூடி மறைக்கப்பட்டதாகவும் உள்ளது. இது ஒரு ஜனநாயக விரோதக் கருத்தாகும். அக்டோபர்வாதிகளும் காடேட்டுகளும் ஒன்றுபோல் போலீஸ் நடவடிக்கைகளைக் கண்டிக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் வந்தபின் தடுப்பதற்கு பதிலாக வருமுன் தடுப்பதை விரும்பினார்கள். அந்த முறை மாணவர்களின் கூட்டங்களை தடுக்க வேண்டும், கூடிய பிறகு அவர்களைக் கலைக்கும் முறையாக இருக்கக் கூடாது. இத்தகையதொரு சீர்திருத்தம் இந்த முறையை மெருகேற்ற மட்டுமே செய்யும், ஆனால் அதை மாற்றாது என்பது தெளிவு. ''அமைச்சரகக் கொள்கையில் நாங்கள் அதிருப்தியடைந்துள்ளோம்'' என்று காடேட்டுகள் கூறுகிறார்கள். அக்டோபர்வாதிகளைப் போலவே காடேட்டுகள் கூறுவதிலிருந்து இந்தக் கொள்கையில் இன்னும் சற்று அதிதீவிரம் இல்லாத ஒரு மாற்றத்தை விரும்புவது சாத்தியம் என்பது தெரிகிறது.

அக்டோபர்வாதிகளை விட, காடேட்டுகளே, அரசாங்கத்திற்கு எதிராக மிகக் கடுமையாகப் பேசுகிறார்கள். இத்தகைய கடுமையான சொற்களை காடேட்டுகளும் அக்டோபர்வாதிகளும் பயன்படுத்துவதால் அவர்கள் மக்கள் முன் வைக்கக் கூடிய பிரச்சினைகள் முழுக்க முழுக்க ஜனநாயக விரோதமானவையாகவும் மிதவாதமானவையாகவும் இருப்பதை

அரசியல் பக்குவமடையாத சக்திகளால் காண முடியாமல் விட்டுவிடப்படுகின்றன.

மக்களுக்கு, மனப்பூர்வமாக அரசியலை அரசாங்க டூமா கற்றுக்கொடுக்க வேண்டும். காடேட்டுகளிடமிருந்து அரசியலைப் படிக்கிறவர்கள் தங்களை கெடுத்துக் கொள்ளுகிறார்கள். தங்களுடைய அரசியல் உணர்வை வளர்த்துக் கொள்ளவில்லை.

அக்டோபர்வாதிகள், முற்போக்குவாதிகள், காடேட்டுகள் ஆகியோர்கள் ஒரு பொது விதியின் அடிப்படையில் அற்ப விஷயத்திற்குப் பேரம் பேசியுள்ளனர். இது தற்செயலாக நடந்ததல்ல. அது முக்கியமாக அவர்களுடைய சித்தாந்த, அரசியல் ஒருமைப்பாட்டின் விளைவே. கொடுக்கப்பட்ட விளக்கம் திருப்திகரமாக இல்லை என்பதனைக் கண்டுபிடிப்பதற்காக காடேட்டுகள் பள்ளிகளில் அரசியல் நுழைவதை நேரடியாகக் கண்டிக்க ஒத்துக்கொள்ளுகிறார்கள். இத்தகைய காடேட்டுகளின் கோட்பாடுகளைப் போல லாயக்கற்ற கோட்பாடு வேறு ஒன்றும் இருக்க முடியாது. ஆனால் காடேட்டுகள் இதை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஏன் எனில் அவர்களே மாணவர்கள் ''இளமையிலேயே'' அரசியலில் ஈடுபடுவதைக் கண்டிக்கிறார்கள்.

துருதொவிக்குகள் குழுவின்[20] சூத்திரமாவது:

''அப்படி இருக்க: 1) 1912, டிசம்பர் 9ல் செகண்டரி பள்ளி மாணவர்களுக்கு எதிராக மிருகபலம் உபயோகிக்கப்பட்டது. செகண்டரிப் பள்ளி மாணவர்கள் மேல் கல்வி கண்காணிப்பில் போலீஸ் பங்கு பெற்றது அவமானமானது. இது சமுதாயத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கல்வி அமைச்சர் திரு. கஸ்ஸோவினால் கொடுக்கப்பட்ட விளக்கம் இதனை முழுமையாக அங்கீகரிக்கிறது. அவர் வெகுஜன அபிப்பிராயத்தை குரோத மனப்பான்மையுடன் அலட்சியப்படுத்தினார்; 2) கூட்டு அமைச்சகத்தின் குறிப்பாக, கல்வி அமைச்சர் திரு. கஸ்ஸோவின் கொள்கையின் முழு விளைவே இந்த ரகசியப் போலீஸ், உளவறிதல் ஆகிய முறையாகும். இம்முறை முழு அழிவிற்கும் முளைவிடும் தலைமுறையினர் எதிர்காலத்தில் பலத்த அதிர்ச்சிக்கு ஆளாகும் பயத்திற்கும் இட்டுச் செல்லுகிறது. டிசம்பர் 9ல் வெளியேற்றப்பட்ட அனைவரும் உடனே மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று டூமா வலியுறுத்துகிறது. மேலும் கல்வி அமைச்சர் திரு. கஸ்ஸோவால் தரப்பட்ட விளக்கம் திருப்திகரமானதல்ல எனக் கருதி அவருடைய பதவி விலகலை உடனடியாக கோரி, டூமா அடுத்த விஷயத்திற்குச் செல்லுகிறது.''

கண்டிப்பாகச் சொல்லப்போனுல் இச்சூத்திரம் வெளிப் படையாக ஒரு மிதவாதக் கட்சியின் விதியாகும். ஆனுல் ஒரு மிதவாதி எப்படி கூறியிருக்க வேண்டும் என்பதிலிருந்து வேறுபட்டு ஒரு ஜனநாயகவாதி எப்படிக் கூறியிருக்க வேண் டும் என்பது இதில் அடங்கவில்லை. கல்வியைக் கண்காணிப் பதற்கு இரகசியப் போலீசாரின் உதவியை நாடுவதை ஒரு மிதவாதக் கட்சிக்காரன்கூட அவமானமாகக் கருதுவான். ஆனுல் ஒரு ஜனநாயகவாதி, அரசியல் குழுக்களை ஒழுங்கமைத் தலிலும் அரசியலைப் பற்றியப் பேச்சுக்களை நடத்துவதிலும் ஒரு ''கண்காணிப்பாளருக்கு'' ஆக்கிரமிக்க உரிமை கிடை யாது என்று கூற வேண்டும். (மக்களுக்குக் கற்பிக்க வேண் டும்). ''கூட்டு அமைச்சகத்தின் கோட்பாடு முழுவதையும்'' ஒரு மிதவாதக் கட்சிக்காரன் கூட கண்டிக்கலாம். ஆனுல் ருஷ் யாவின் ஜனநாயகவாதி ஒருவன் ஒன்றை தெளிவுபடுத்த வேண்டும்: அதாவது, சில பொது நிலைமைகள் உள்ளன. அவற் றின்படி வேறு எந்த அமைச்சகமும் ஓர் அமைச்சகத்தின் கோட்பாட்டை தொடர்ந்து நடைமுறைபடுத்தலாம்.

துருதொவிக்குகளது சூத்திரத்தின் ஜனநாயகம் அதை எழுதியவர்களின் மன உணர்ச்சிகளின் பொதுப்போக்கையே பிரதிபலிக்கிறது. உணர்ச்சி அரசியலின் ஓர் அறிகுறியே என் பதற்கு மறுப்பு இல்லை. ஆனுல் நடைமுறை சூத்திரத்தின் நன்கு ஆலோசிக்கப்பட்டக் கருத்தைக் கொண்டதாக இருக்க வேண்டுமே அல்லாது வெறுமனே ''மனதிற்கு இதமான'' உணர்ச்சிமயமானதாக இருக்கக் கூடாது.

சமூக-ஜனநாயகவாதிகளின் நடைமுறை சூத்திரத்தைப் பார்ப்போம்:

''கல்வி அமைச்சர் அளித்த விளக்கத்தைக் கேட்டு அதைக் கருத்தில் கொண்டு அது சுட்டிக்காட்டுவதாவது: 1) சுய கல்வி மூலம் அவர்களுடைய மன வளர்ச்சியின் எல்லையை நீடிக்க விருப்பம், இயற்கையானதும் உற்சாகப்படுத்தக் கூடி யதுமான பள்ளி இளைஞர்களின் விருப்பம், தோழமை உறவு கொள்ளுதல் ஆகியவற்றை சமாளிக்க ஓர் உறுதி; 2) உயர், செகண்டரி, ஆரம்ப பள்ளிகளில் மிக ஆழமாகப் பதிந்து விட்ட அலுவலக சடங்குமுறை, உளவுப் பார்த்தல், போலீஸ் புலன்விசாரணை செய்தல் போன்ற முறையை நியாயப்படுத்துதலாகும். இம்முறையானது இளைஞர் களின் உள்ளத்தையும், ஒழுக்கத்தையும் முடமாக்குகிறது.

சுதந்திரமான சிந்தனையும், சுதந்திரமான மனோபாவத்தையும் இரக்கமின்றி நசுக்கும் முறை இது. இதன் விளைவால் மாணவர்களிடையே தற்கொலை ஒரு தொத்து நோயாகிவிட்டது. கொடுக்கப்பட்ட விளக்கம் திருப்தியற்றது என்று டூமா கருதுகிறது. அதே நேரத்தில்: 1) பொதுக்கல்வி விஷயத்தில் போலீஸாரின் கருத்து ஆதிக்கத்திற்கும் ருஷ்யர்களின் வாழ்வு முழுமைக்கும் மேல் உள்ள ரகசிய போலீஸாரின் ஆதிக்கத்திற்கும் இடையே பிரிக்க முடியாத பிணைப்பு உள்ளது என்பதனையும், குடிமக்களின் ஸ்தாபன ரீதியான, தனிப்பட்ட எல்லா வடிவ செயல்களையும் நசுக்குதல், குடிமக்களின் உரிமைகளின் தேவைகள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு, 2) அரசியல் அமைப்பிலும் அரசாங்க நிர்வாக முறையிலும் ஒரு புரட்சிகரமான மாற்றம் மட்டுமே குடிமக்களை போலீஸ் கைவிலங்குகளிலிருந்து விடுவிக்க முடியும். மேலும் அவைகளிடமிருந்து பள்ளிக்கூடங்களையும் விடுவிக்க முடியும் என்று கருத்தில் கொண்டு டூமா அடுத்த விஷயத்திற்குச் செல்லுகிறது''.

இந்தச் சூத்திரத்தைக் கூட குற்றமற்றது, குறைவற்றது என்று கருத முடியாது. இது விஷயத்தை அதிக ஜனரஞ்சகமான மொழியிலும் அதிக விளக்கமாகவும் முன் வைத்திருக்க வேண்டும் என்று விரும்புவதையும் அரசியலில் ஈடுபட சட்ட ரீதியான உரிமையை அழுத்தவில்லை என்பதற்காகவும் இன்ன பிறவற்றிற்காகவும் வருத்தப்படுவதையும் தவிர்க்க முடியாது.

இருப்பினும் எல்லா சூத்திரங்களைப் பற்றிய நம்முடைய விமர்சனம் எவ்விதத்திலும் அவை உருவான விதத்தின் விளக்கத்தைக் குறிக்கோளாக கொண்டதல்ல. ஆனால் அவற்றை எழுதியவர்களின் அடிப்படை அரசியல் கருத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டது. ஒரு ஜனநாயகவாதி ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லியிருக்க வேண்டும்: அதாவது, அரசியல் குழுக்களும் பேச்சுகளும் இயற்கையானவை, வரவேற்கத்தக்கவை என்று சொல்லி இருக்க வேண்டும். அது தான் முக்கிய விஷயம். அரசியல் ஈடுபாட்டைக் கண்டிக்கும் எல்லா கண்டனங்களும், அரசியலில் ''இளமையில்'' ஈடுபடுவதைத் தடுப்பதாக இருந்தாலும் அவையெல்லாம் பாசாங்கும், பம்மாத்தும் ஆகும். ''கூட்டு அமைச்சகத்திலிருந்து'' அரசாங்க முறை என்ற மட்டத்திற்கு இந்தப் பிரச்சினையை ஒரு ஜனநாயகவாதி உயர்த்தியிருக்க வேண்டும். ''இரகசியப்

*போலீஸின் ஆதிக்கத்துடன்'' உள்ள ''பிரிக்க முடியாத பிணைப்பை'' முதலாவதாகவும், பொருளாதார வாழ்வில் நிலப்பிரபுத்துவ மாதிரியான பெரும் நிலக்கிழார்களின் ஆதிக்கத்துடனுள்ள பிணைப்பை இரண்டாவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும்.*

*1913, பிப்ரவரி 6-9ல் (19-22ல்) எழுதப்பட்டது*

நூல் திரட்டு,
தொகுதி 22,
பக்கங்கள் 383-388

## மக்கள் கல்வி அமைச்சகக் கொள்கையைப் பற்றிய பிரச்சினை[21]

### (மக்கள் கல்வியைப் பற்றிய விவாதத்துக்கு பிற்சேர்ப்பு)

நமது மக்கள் (இப்படிக் கூறுவதை மன்னிக்கவும்) ''கல்வி'' அமைச்சகம் அதனுடைய செலவினங்களின் அதி வேக வளர்ச்சியைப் பற்றி அசாதாரணமான முறையில் பெருமை அடித்துக் கொள்ளுகிறது. பிரதம மந்திரியும் நிதி அமைச்சரும் 1913ம் ஆண்டு வரவு-செலவு திட்டத்திற்குத் தந்த விளக்கக் குறிப்பில், புரட்சிக்குப் பிந்திய ஆண்டுகளுக் கான மக்கள் கல்வி (அம்மாதிரி அழைக்கப்பட்டதாம்) அமைச் சகத்தின் மதிப்பீடுகளின் சுருக்கத்தை நாம் காணுகிருேம். இந்த மதிப்பீடுகள் 1907ல் 4,60,00,000 ரூபிள்களிலிருந்து 1913ல் 13,70,00,000 ரூபிள்களாக அதிகரித்தன. பிரம் மாண்டமான வளர்ச்சி—ஆறு ஆண்டுகளில் கிட்டத்தட்ட மூன்று மடங்கு பெருகியது.

ஆனல் ருஷ்யாவில் போலீசின் ''சட்டம் ஒழுங்குகள்'' அல் லது ஒழுங்கின்மைகள் ஆகியவற்றைப் பற்றி பெருமையாகப் பேசும் நம்முடைய அதிகாரப் பூர்வமான சொற் சிலம் பக் காரர்கள் ஒரு விஷயத்தை வீணுக மறக்கிருர்கள். அதாவது அலட்சியப் படுத்தக்கூடிய மிகச் சிறிய தொகைகள் அவற் றின் அதிகரிப்பு சதவீதக் கணக்கில் கொடுக்கப்படும் போது எப்பொழுதும் ''பிரம்மாண்டமான'' வேகத்தில் வளர்ச்சி அடையும். மூன்று கோப்பெக் வைத்திருக்கும் ஒரு பிச்சைக் காரனிடம் நீங்கள் ஐந்து கோப்பெக்கைக் கொடுத்தால் அவனுடையச் ''சொத்து'' உடனே ''பிரம்மாண்டமான'' வளர்ச்சியைக் காட்டும். அது 167% அதிகமானதாகும்!

மக்களின் உணர்வை இருளடையச் செய்ய எண்ணுமலும் ருஷ்யாவில் மக்கள் கல்வியின் பிச்சைக்கார நிலையை மறைத்து வேறு புள்ளிவிவரங்களை மேற்கொள் காட்டுவதைக் குறிக்கோளாகக் கொள்ளாமலுமிருந்தால் அது அமைச்சகத்திற்கு மேலும் பொருத்தமுடையதாக இருந்திருக்காதா? இன்றைய ஐந்து கோப்பெக்குகளுடன் நேற்றைய அல்தீனை[22] ஒப்பிடும் மேற்கோள்களைக் காட்டாமல், நம்மிடம் இருப்பதை நாகரிகமான அரசிற்கு எது அவசியமோ அதனுடன் ஒப்பிட்டிருந்தால் அது இன்னும் அதிகப் பொருத்தமாக இருந்திருக்காதா? தன்னையோ மக்களையோ ஏமாற்ற விரும்பாத ஒருவன் அமைச்சகம் இந்தப் புள்ளி விவரங்களைச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருந்தது என்பதனையும் அப்படி இத்தகைய புள்ளி விவரங்களைச் சமர்ப்பிக்காத அமைச்சகம் தன்னுடைய கடமையைச் செய்ததாகாது என்பதனையும் ஒப்புக்கொள்ள வேண்டும். மக்களுக்கும் மக்களுடைய பிரதிநிதிகளுக்கும் நம்முடைய அரசின் தேவைகள் என்ன என்பதனை விளக்குவதற்குப் பதிலாக அமைச்சகம் இந்தத் தேவைகளை இருட்டடிப்புச் செய்து முட்டாள்தனமான அரசின் புள்ளி விவர விளையாட்டில் ஈடுபடுகிறது, ஒன்றையும் விளக்காத பழைய புள்ளி விவரங்களை அரசு அசை போடுகிறது.

மக்கள் கல்வியைப் பற்றி ஆராயத் தேவைப்படும் சாதனங்கள் ஆதார விவரங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை அமைச்சகத்திற்குக் கிடைக்கக் கூடிய அளவில் நூறில் ஒரு பங்கு கூட நிச்சயமாக என்னிடம் கிடையாது. ஆனுல் நான் குறைந்தபட்சம் சிறிதளவு ஆதார விவரங்களையாவது பெற முயற்சி செய்தேன். நம்முடைய மக்களின் மனதை ''இருளடையச் செய்யும்'' அரசின் நிலைமையை உண்மையில் தெளிவாக விளக்கக்கூடிய, மறுக்க முடியாத அதிகார பூர்வமான புள்ளி விவரங்களை என்னுல் மேற்கோள் காட்ட முடியும் என்று தைரியமாக உறுதிபடுத்துகிறேன்.

1910க்கான அதிகார பூர்வமான அரசாங்க சார்பிலான ருஷ்யன் ஆண்டுத் தகவல் வெளியீடை நான் எடுத்துக் கொள்கிறேன். அது உள்ளாட்சித்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது (செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், 1911). வெளி

பக்கம் 211ல், ருஷ்யப் பேரரசில் ஆரம்பப் பள்ளி, செகண்டரிப் பள்ளி, உயர்பள்ளிகள், எல்லாவித கல்வி ஸ்தா

பனங்கள் இவை எல்லாம் சேர்த்துப் பள்ளிக்குப் போகிற வர்களின் மொத்த எண்ணிக்கை 1904ல் 62,00,172 ஆக வும், 1908ல் 70,95,351 ஆகவும் இருந்தது என்பதாக இந் நூலில் படித்தேன். இது ஒரு வெளிப்படையான வளர்ச்சி. 1905ம் ஆண்டு ருஷ்ய மக்கள் திரளிடையே மகத்தான விழிப் புணர்ச்சியை உண்டாக்கிய ஆண்டு, பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் சுதந்திரத்திற்காகப் போராடிய மகத்தான மக்கள் போராட்டத்தின் ஆண்டு, அதிகார வர்க்க வெறி கொண்ட அமைச்சகத்தையே நிர்பந்தப்படுத்திய ஆண்டாக இருந்தது.

ஆனால் ''இலாக்கா'' ரீதியான அதி விரைவான முன் னேற்ற நிலைகளின் கீழும் நாம் அனுபவிக்க வேண்டிய சிறுமைத்தனத்தைப் பாருங்கள். அதிகார வர்க்கத்தைத் தொடர்ந்து வைத்திருந்த காரணத்தாலும், அடிமையுடை மையாளர்களான நிலப்பிரப்புக்களின் சர்வவல்லமை படைத்த ஆட்சி அதிகாரம் காரணமாயும் இது நேர்ந்தது.

அதே ருஷ்யன் ஆண்டுத் தகவல் வெளியீடு அதே இடத் தில் 1908ல் 1000 பேருக்கு சராசரி 46.7 பேர் பள்ளிக்குச் செல்லுகிறார்கள் (1904ல் இந்தத் தொகை 1000 பேர்களுக்கு 44.3 பேர் ஆகும்) என்று கூறுகிறது.

மக்கள் கல்வி அமைச்சகம் டூமாவிற்கு இந்த எண்ணிக்கை யைப் பற்றி அறிவிக்காமல் சோம்பியிருந்தது எனும் உள் துறை அமைச்சகத்தின் ஒரு வெளியீட்டில் கூறப்படும் இத் தகைய விவரங்களில் இருந்து நாம் அறிவதென்ன? இந்த விகிதாச்சாரம் எதைப் பற்றிக் கூறுகிறது: 1000 பேருக்கு 50க்கும் குறைவானவர்களே பள்ளி செல்லுகிறார்கள் என் பதைத் தானே?

பிடிவாதமான, மக்களைக் குழப்பும் தவறான கல்வியை ஆதரிக்கும் கனவான்களே; ருஷ்யாவின் நம்ப முடியாத பின் தங்கிய நிலையும் அநாகரிகத்தன்மையும் தாங்கிப்பிடிக்கப் படுகின்றன. நம் அரசின் பண்ணையடிமை உடைமையாளர் களான நிலப்பிரபுக்களது சர்வ வல்லமையே இதற்குக் காரணம். ருஷ்யாவில் பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தைகள் மற் றும் வளர் இளம் பருவத்தினர் எண்ணிக்கை மக்கள் தொகை யில் 20 சதவிகிதத்துக்கும் அதிகமாக உள்ளது. அதாவது ஐந்தில் ஒரு பங்குக்கும் அதிகமாயுள்ளது. திருவாளர்கள்

கஸ்ஸோவும், ககோவ்த்ஸெவும் கூட சிரமமில்லாமல் இந்த எண்ணிக்கையை அவர்களுடைய இலாக்கா எழுத்தர்களிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

ஆகவே மக்கள் தொகையில் 22 சதவிகிதம் பள்ளி செல்லும் வயதுடையவர்கள் உள்ளனர். ஆனுல் அவர்களில் 4.7 சதவிகிதம் மட்டுமே பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கிருர்கள். அதாவது, இது ஐந்தில் ஒரு பங்கை விடச் சற்று அதிகம் அவ்வளவே!! ருஷ்யாவிலுள்ள குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் ஆகியோரில் கிட்டத்தட்ட ஐந்தில் நான்கு பங்கினருக்கு மக்கள் கல்வி மறுக்கப்படுகிறது என்பது இதன் பொருள்!!

இந்த அளவிற்கு வெகு ஜனங்களிடமிருந்து ஒளியும் அறிவும் தரக்கூடிய கல்வி கொள்ளையிடப்பட்ட அநாகரிகமான நாடு வேறு ஒன்றும் இருக்க முடியாது. இத்தகைய வேறு எந்தநாடும் ஐரோப்பாவில் இருக்கவில்லை. ருஷ்யாமட்டுமே விதிவிலக்கு. ஜனத்திரளின், சிறப்பாக விவசாயிகளின் அநாகரிகத்தனமான இந்தப் பின்னடைதல் தற்செயல் நிகழ்ச்சியல்ல. நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தின் கீழ் இது தவிர்க்க முடியாதது. இந்நிலப்பிரபுக்கள் கோடிக்கணக்கான டெஸியாட்டிஞ[23] நிலங்களை அபகரித்துக் கொண்டவர்கள். டூமாவிலும் அரசாங்க ஆலோசனைக் கவுன்சிலிலும்[24] அரசு அதிகாரத்தைப் பறித்துக் கொண்டவர்கள் இவர்கள். ஒப்பளவில் குறைந்த அந்தஸ்துடைய இந்த நிறுவனங்களில் மட்டுமல்லாமல் எல்லா நிறுவனங்களிலும் இவர்கள் அதிகாரத்தைப் பறித்துக் கொண்டவர்கள்...

வளரும் தலைமுறையினரில் ஐந்தில் நான்கு பேர் ருஷ்யாவின் பண்ணையடிமை உடைமையாளர் அரசு முறையால் கல்லாமைப் படுகுழியில் தள்ளப்படுகிருர்கள். நிலப்பிரபுத்துவ அதிகாரிகள் மக்களை முட்டாள்களாக்கும் இச்செயல், ருஷ்யாவின் கல்லாமையுடன் பரஸ்பர தொடர்புடையது. அதே அரசாங்கத்தின் ருஷ்யன் ஆண்டுத் தகவல் வெளியீடு (பக்கம் 88) ருஷ்ய மக்கள் தொகையில் 21 சதவீதம் மட்டுமே கல்வி அறிவுடையவர்கள் என மதிப்பிடுகிறது. பள்ளி செல்லும் வயதிற்கும் முந்திய நிலையில், அதாவது ஒன்பது வயதுக்குட்பட்ட குழந்தைகளை (மொத்த மக்கள் தொகையிலிருந்து)

கழித்துவிட்டாலும் கூட கல்வி அறிவுடையவர்களின் எண்ணிக்கை இன்னமும் 27 சதவீதமே.

நாகரிகமடைந்த நாடுகளில் எழுத்தறிவில்லாதவர்களே இல்லை (ஸ்வீடன் அல்லது டென்மார்க்கைப் போல்) அல்லது 2 சதவிகிதம் (சுவிட்சர்லாந்து, ஜெர்மனியில் உள்ளது போல்) தான் உள்ளனர். பின் தங்கிய ஆஸ்திரியா-ஹங்கேரியுங்கூட அதனுடைய ஸ்லாவ் மக்களுக்கு நிலப் பிரபுத்துவ முறை ருஷ்யாவை விடவும் ஒப்பிட முடியாத அளவு மேம்பாடு அடையக் கூடிய நிலைமைகளை வழங்கியுள்ளது. ஆஸ்திரியாவில் 39% சதவிகிதமும் ஹங்கேரியில் 50 சதவிகிதமும் எழுத்தறிவில்லாதவர்கள் உள்ளனர். நம்முடைய தேசிய வெறியர்கள், வலதுசாரிகள், தேசியவாதிகள், அக்டோபர் வாதிகள் ஆகியோர் தாங்களும் சிந்திப்பதை நிறுத்திவிட்டு மக்களையும் சிந்திக்கவிடாமல் செய்வதை ''அரசறிஞர் பாணியை'' நோக்கமாக கொண்டிராத பட்சம் இத்தகைய விவரங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவர்கள் ஏற்கெனவே சிந்திப்பதை மறந்து விட்ட போதிலும் ருஷ்ய மக்கள் மேலும் மேலும் சிந்திப்பதற்குக் கற்றுக் கொண்டுவருகிறார்கள். மேலும் எந்த வர்க்கம் அரசில் தன்னுடைய ஆதிக்கத்தினால் ருஷ்ய விவசாயிகளைப் பொருளாதார, ஆன்மிக வறுமைப் படுகுழியில் தள்ளுகிறது என்பதனையும் அவர்கள் சிந்திக்கக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்த அளவில் அமெரிக்கா வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாகாது. அங்கு 11 சதவிகிதம் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் உள்ளனர். நீக்ரோக்களிடையே எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 44 சதவிகிதம் உள்ளனர். என்றாலும் அமெரிக்க நீக்ரோக்கள் ருஷ்ய விவசாயிகளை விட ''மக்கள் கல்வியைப்'' பொறுத்த மட்டில் இரு மடங்குக்கும் கூடுதலாக நல்ல நிலையில் உள்ளனர். அமெரிக்க நீக்ரோக்கள் அமெரிக்கக் குடியரசிற்கு அவமான மேற்படும் முறையில் எவ்வளவு தான் ஒடுக்கப்பட்டு இருப்பினுங்கூட, அவர்கள் ருஷ்ய விவசாயிகளை விட மேம்பட்ட நிலையில் இருக்கிறார்கள். ஏனெனில் சரியாக அரை நூற்றாண்டிற்கு முன்பாக மக்கள் அமெரிக்க அடிமைச் சொந்தக்காரர்களை அடியோடு முறியடித்து அந்தப் பாம்பை நசுக்கிவிட்டனர். அடிமைத்தனத்தையும் அடிமை

யுடைமை அரசு முறையையும், அமெரிக்காவில் அடிமையை உடைமையாக வைத்துக் கொள்ளும் அரசியல் சலுகை களையும் மக்கள் முழுமையாகத் துடைத்தெடுத்துவிட்டனர்.

திருவாளர்கள் கஸ்லோக்களும் ககோவ்த்ஸெவ்க ளும் மக்லக்கோவ்களும் ருஷ்ய மக்களுக்கு அமெரிக்க உதா ரணத்தை எப்படிக் கடைபிடிப்பதென்பதைக் கற்பிப்பார் கள்.

1908ல் அமெரிக்காவில் 1.7 கோடி பேர்கள் பள் ளிக்குச் சென்று கொண்டிருந்தனர். அதாவது ஆயிரம் குடி களுக்கு 192 பேர்கள். இது ருஷ்யாவிலுள்ள எண்ணிக்கையை விட நான்கு மடங்கு அதிகம். நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 1870ல் நாட்டிலிருந்து அடிமைத் தனத்தை ஆதரிக்கும் கடும்பிற்போக்காளர்களை களையெடுத்து நீக்கிய பிறகு அமெரிக்கா அப்பொழுதுதான் தன்னுடைய சுதந்திரமான வாழ்க்கை முறையை கட்ட ஆரம்பித்தது. அப்பொழுது அமெரிக்காவில் 68,71,522 பேர்கள் பள்ளிக் குச் சென்று கொண்டிருந்தார்கள். அதாவது 1904ல் ருஷ்யா வில் இருந்ததை விட அதிகம். இது கிட்டத்தட்ட 1908ல் ருஷ்யாவில் இருந்த அளவாகும். ஆனால் 1870ம் ஆண்டு வரை பின்னோக்கிச் சென்றாலும் 1000 குடிகளுக்கு 178 (நூற்று எழுபத்து எட்டு) பேர்கள் பள்ளிக்கூடங்களில் சேர்ந்திருந்தனர். இது இன்றைய ருஷ்யாவில் சேர்ந்துள்ளோர் தொகையை விட நான்கு மடங்கிற்குச் சற்று குறைவு.

கனவான்களே, அரை நூற்றுண்டிற்கு முன் அமெரிக்கர் கள் தாங்களே வென்ற அந்தச் சுதந்திரத்தை மக்களால் நடத்தப்படும் உறுதியான புரட்சிப் போராட்டத்தின் மூலம் மட்டுமே ருஷ்யா இன்னும் தனக்கென வென்றுபெற இருக்கிறது என்பதற்கு இதோ மேலும் ஒரு புதிய சான்று.

ருஷ்யாவில் மக்களின் மனதை இருளடையச் செய்வதற் காக அமைச்சகத்திற்கு ஆகும் செலவு 1913ல் 13.67 கோடி ரூபிள் என திட்டமிடப்பட்டுள்ளது. இது மக்கள் தொகையில் (1913ல் 17,00,00,000) தலைக்கு 80 கோப்பெக்குகள்தான். திரு. நிதி அமைச்சர் தன்னுடைய வரவுசெலவு திட்ட விளக்க நூலின் 109ம் பக்கத்தில் கொடுத்துள்ள "கல்விக்காக அரசு செலவு செய்யும் ஒட்டு மொத்தமான செலவை" அதாவது 20,49,00,000 ரூபிள்களை நாம் ஒப்புக் கொண்டாலும் அது

தலைக்கு 1 ரூபிள் 20 கோப்பெக்குகள்தான் ஆகும். பெல்ஜியம், பிரிட்டன், ஜெர்மனி ஆகியவற்றில் மக்கள் கல்விக்காக செலவிடப்படும் தொகை தலைக்கு இரண்டு முதல் மூன்று ரூபிள்களும் மூன்று ரூபிள் ஐம்பது கோப்பேக்குகளும் கூட ஆகும். 1910ல் அமெரிக்காவில் 42.6 கோடி டாலர்களை அதாவது 85.2 கோடி ரூபிள்கள் மக்கள் கல்விக்காகச் செலவு செய்யப்பட்டன. அதாவது தலைக்கு 9 ரூபிள் 24 கோப்பெக்குகள் ஆகும். நாற்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னே 1870ல் அமெரிக்க குடியரசு மக்கள் கல்விக்காக ஆண்டு ஒன்றிற்கு 12.6 கோடி ரூபிள்களைச் செலவழித்துக் கொண்டிருந்தது. அதாவது தலைக்கு 3 ரூபிள்கள் 30 கோப்பெக்குகள்.

அரசாங்க அதிகாரிகளின் அறிக்கைகளும், அதிகாரிகளும் ருஷ்யா ஏழை நாடு எனவும் அதனிடம் பணம் இல்லை என்றும் நம்மிடம் கூறுவார்கள். ஆம்! மக்கள் கல்வி விஷயத்திற்கு வரும் பொழுது ருஷ்யா ஏழை நாடு மட்டுமல்ல, அது ஒரு பிச்சைக்கார நாடுமாகும். நிலப்பிரபுக்களால் ஆளப்படும் பண்ணையடிமையுடைமை அரசு, போலீஸ், இராணுவம், வாடகைகள், அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளைப் பெற்ற நிலப்பிரபுகளுக்குப் பத்தாயிரம் ரூபிள்கள் சம்பளம், நேற்று கொரியாவிலோ யாலு நதியிலோ, இன்று மங்கோலியாவிலோ துருக்கிய அர்மீனியாவிலோ ஆபத்தான சாகசங்கள், கொள்ளையடித்தல் ஆகியவற்றிற்காகச் செலவு செய்யும் பொழுது ருஷ்யா ‘‘பணக்கார’’ நாடாகி விடுகிறது. பொதுமக்கள் பண்ணையடிமையுடைமையாளர்களான நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தைத் தூக்கி எறியக்கூடியளவு தங்களைத் தாங்களே போதிய கல்வி அறிவுடையவர்களாக ஆக்கிக் கொள்ளாத வரை ருஷ்யா மக்கள் கல்விக்கானச் செலவைப் பொறுத்த மட்டில் எப்பொழுதும் ஏழையாகவும் பிச்சைக்கார நாடாகவும் தான் இருக்கும்.

மக்கள் ஆசிரியர்களின் சம்பளம் பற்றி பேசும் பொழுது ருஷ்யா ஏழை நாடாகிவிடும். அவர்களுக்கு அவலத்தனமான அற்பத்தொகை சம்பளமாக அளிக்கப்படுகிறது. மக்கள் ஆசிரியர்கள் பட்டினி கிடக்கிறார்கள். மனிதர்கள் வாழ தகுதியற்ற, கணப்பில்லாத குடிசைகளில் கிடந்து விறைத்துப் போகிறார்கள். குளிர் காலத்தில் விவசாயிகள் தங்களுடைய

குடிசைகளுக்குக் கொண்டு வரும் கால்நடைகளுடன் ஆசிரியர்கள் தங்குகிறுர்கள். மக்கள் ஆசிரியர்கள் ஒவ்வொரு உரியாத்னிக்காலும்[25] கிராமிய கருப்பு நூற்றுவரைச்[26] சார்ந்த ஒவ்வொருவராலும் சுயவிருப்பால் வேலை செய்யும் உளவாளியாலும் அல்லது துப்பறிவாளர்களாலும் துன்புறுத்தப்படுகிறுர்கள். உயர் அதிகாரிகளால் குற்றம் சாட்டப்படுதல், துன்புறுத்தப்படுதல் ஆகியவை பற்றி ஒன்றும் கூற வேண்டியதில்லை. மக்கள் கல்வியின் நேர்மையான ஊழியர்களுக்கு கண்ணியமான சம்பளம் கொடுக்கும் விஷயத்தில் ருஷ்யா மிகவும் ஏழ்மையான நாடாகும். ஆனுல் சோம்பேறி நிலப்பிரபுக்களுக்கும் மூர்க்கத்தனமான இராணுவ சாகசக்காரர்களுக்கும் சீனி சுத்திகரிப்பு ஆலைச் சொந்தக்காரர்களுக்கும் எண்ணெய் அரசர்களுக்கும் மற்றும் இது போன்றவர்களுக்கும் கோடிக்கணக்கில் வீணுக்கும் பொழுது ருஷ்யா மிகப் பணக்கார நாடாகும்.

கனவான்களே, அமெரிக்க வாழ்விலிருந்து எடுக்கப்பட்ட இன்னுமொரு கடைசி விவரம் உள்ளது. இது ருஷ்ய நிலப்பிரபுக்களாலும் அவர்களுடைய அரசாங்கத்தாலும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, புரட்சிகரமான போராட்டத்தின் மூலம் சுதந்திரத்தையடைந்த மக்கள் எப்படி வாழ்கிறுர்கள் என்பதைக் காட்டும். 1870ல் அமெரிக்காவில் 2,00,515 ஆசிரியர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய மொத்த சம்பளம் 3.78 கோடி டாலர்கள். அதாவது ஆண்டு ஒன்றுக்கு ஓர் ஆசிரியருக்குச் சராசரியாக 189 டாலர்கள் அல்லது 377 ரூபிள்கள். அது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது! இன்று அமெரிக்காவில் 5,23,210 பள்ளி ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களுடைய மொத்தச் சம்பளம் 25.39 கோடி டாலர்கள். அதாவது ஓர் ஆண்டிற்கு ஓர் ஆசிரியருக்கு 483 டாலர்கள் அல்லது 966 ரூபிள்கள். ருஷ்யாவிலும் அதனுடைய உற்பத்தி சக்திகளின் இப்போதைய நிலையில் கூட, இந்தக் கணத்தில் கூட, மக்களை அவர்களுடைய அறியாமை, சோகம், ஒடுக்கு நிலை ஆகியவற்றிலிருந்து விடுவிக்க உதவும் பள்ளி ஆசிரியர் பட்டாளத்திற்கு, அதைவிட குறையாத திருப்திகரமான சம்பளம் கொடுக்க உத்திரவாதம் அளிக்க முடியும். ருஷ்யாவின் அரசு அமைப்பு முழுவதும் அடி முதல் முடி வரை அமெரிக்க அமைப்பு முறைப்

படி ஜனநாயகப் படுத்தி மாற்றி அமைக்கப்பட்டால்... மட்டுமே இது முடியும்.

ஒன்று, பண்ணையடிமையுடைமையாளர்களான நிலப்பிர புக்களின் முழு அதிகாரத்திலிருந்து தோன்றிய, ஜூன் மாதம் மூன்றும் தேதிய[27] சட்டத்தின் சட்டம் ஒழுங்கு அல்லது ஒழுங்கின்மையால் எழுந்த வறுமை, மற்றும் அநாகரிகம், அல்லது சுதந்திரத்தை வென்றுபெறும் திறமை, உறுதி ஆகிய வற்றின் விளைவான சுதந்திரம், நாகரிகம்—இத்தகையதான கோட்பாட்டு விளக்கத்தைத் தான் மக்கள் கல்வி அமைச்சகத்தால் முன்வைக்கப்பட்ட மதிப்பீடுகளில் இருந்து ருஷ்ய குடிமக்கள் பெறுகிறார்கள்.

இதுவரை நான் அந்த விவகாரத்தின் முற்றிலும் பொரு ளாயத ரீதியான அல்லது நிதி சம்பந்தப்பட்ட அம்சத்தைக் கூட தொட்டிருக்கிறேன். ருஷ்யாவில் உள்ள ஆசிரியர்கள், அவர்கள் கற்பிக்கும் மாணவர்கள் ஆகியோரின் ஆன்மிக அடிமைத்தனம், அவமானம், அடக்கப்படுதல், உரிமைகள் இன்மை ஆகியவை பற்றிய சித்திரம் ஒப்பிட முடியாதபடி அதிக அளவில் துன்பகரமானதாகவோ அல்லது மிகவும் வெறுக்கத்தக்கதாகவோ இருக்கிறது. இந்த விஷயத்தில் மக்கள் கல்வி அமைச்சகத்தின் மொத்த நடவடிக்கை மக் களின் உரிமைகளை அப்பட்டமாக கேலி செய்வதாகவும், மக்களை நிந்தை செய்வதாகவும் உள்ளது. மக்கள் கல்வி விஷ யத்தில் பொதுவாகவும் தொழிலாளர்களிடையே குறிப்பாக வும், போலீசின் கடுமையான கண்காணிப்பு, போலீசின் வன் முறை, போலீசின் தலையீடு, மக்கள் தங்களுடைய அறிவை விருத்தி செய்து கொள்ள தாங்களே எது செய்தாலும் அதைப் போலீஸ் மூலம் அழிப்பது இதுதான் அமைச் சகத்தின் முழுமையான நடவடிக்கை ஆகும். இந்த அமைச்ச கத்தின் மதிப்பீட்டை வலதுசாரிகள் முதலாக அக்டோபர் வாதிகள் ஈறாக உள்ள நிலப்பிரபுத்துவ பெருமக்கள் அங்கீ கரிப்பார்கள்.

நாலாவது டூமாவின் உறுப்பினர்களான கனவான்களே, என்னுடைய வார்த்தைகளின் சரியானத்தன்மையை நிரூபிக்க நிலப்பிரபுக்களாகிய உங்களால் கூட ஆட்சேபிக்க முடியாத சாட்சியை நான் அழைக்கிறேன். மூன்றாவது, நான்காவது அர சாங்க டூமாவின் உறுப்பினரும் சமாராவில் இரண்டாவது,

மூன்றுவது பெண்கள் செகண்டரிப் பள்ளியின் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினரும் சமாரா நகர டூமாவின் பள்ளிக்கூட குழுவின் உறுப்பினரும் சமாரா குபெர்னியாவின் ஸேம்ஸ் துவோ தணிக்கை போர்டின் உறுப்பினரும் முன்ஞளைய மக்கள் பள்ளிகளின் தணிக்கையாளருமான அக்டோபர்வாதி திரு. க்லூமெவ் என்பவர் என்னுடைய சாட்சியாகும். மக்களை முட்டாளாக்கும் நம்முடைய அமைச்சகத்தின் ''வேலை யில்'' (ஒற்று, கொலைபாதகன் ''வேலை'') அதி முக்கிய பதவிகளைத் திரு. க்லூமெவிற்கு அரசாங்கம் தானே கொடுத் துள்ளதையும் நம்முடைய நிலப்பிரபுக்களின் ஸேம்ஸ்து வோவில் உள்ள நிலப்பிரபுக்கள் தாங்களே கொடுத்துள்ள தையும் உங்களுக்கு நிரூபிக்கவே இந்த அக்டோபர்வாதியின் (மூன்றுவது டூமாவின் அதிகாரப்பூர்வமான குறிப்பேட்டி லிருந்து பயன்படுத்தப்பட்ட) பதவிகள், பட்டங்கள் ஆகியவற்றின் பட்டியலை நான் உங்களுக்குக் கொடுத்திருக்கி றேன்.

சட்டத்திற்குக் கீழ்படிந்த, கடவுளுக்குப் பயந்த சிவில் ஊழியராக தன்னுடைய பதவிக் காலம் முழுவதும் திரு. க்லூமெவ் பணியாற்றியுள்ளார். இப்படிப்பட்டவர் வேறு யாரும் உண்டோ? திரு. க்லூமெவ் மாவட்டத்தில் தன் னுடைய விசுவாச மிக்க சேவையால் பிரபுக்கள், நிலப்பிரபுக் கள் ஆகியோரிடையே நல்ல நம்பிக்கையைச் சம்பாதித்தார். இப்படிப்பட்டவர் வேறு யாரும் உண்டோ?

முழுவதும் நம்பிக்கைக்குப் பாத்திரமான (நிலபிரபுத்து வப் பார்வையில்) சாட்சி ஒருவரின் பேச்சிலிருந்து உங்களுக்கு சில மேற்கோள்கள் இதோ இருக்கின்றன. மக்கள் கல்வி அமைச்சகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு சம்பந்தமாக மூன்றுவது டூமாவில் அவர் பேசிய பேச்சிலிருந்து இவை எடுக்கப்பட்டன.

சில கிராம ஈராண்டு பள்ளிகளை நான்காண்டு பள்ளி களாக மாற்றக்கூடிய திரு. க்லூமெவின் பிரேரணையை ஏக மனதாக சமாரா ஸேம்ஸ்துவோ நிறைவேற்றியது என திரு. க்லூமெவ் மூன்றுவது டூமாவில் கூறினுர். மண்டல கண்காணிப் பாளர் இதை மறுத்துவிட்டார் என்று சட்டத்தை மதிக்கும் கடவுளுக்குப் பயப்படும் திரு. க்லூமெவ் அறிவிக் கிறுர். ஏன்? அதிகார பூர்வமான விளக்கமாவது: ''பள்ளி செல்

லும் குழந்தைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதை முன்னிட்டு.''

எனவே திரு. க்லூமெழவ் கீழ்க்கண்ட ஒப்பீட்டைச் செய்தார்: நாம் (நிலப்பிரபுக்களால் ஒடுக்கப்பட்ட ருஷ்யாவை அவர் கூறுகிறார்) சமாரா கிராமங்களில் வாழும் மக்களில் 6000 பேருக்கு ஒரே ஒரு நான்காண்டு பள்ளிக்கூடத்தைக்கூட பெற்றிருக்கவில்லை. செர்டோபால் (பின்லாந்து) நகரில் 2800 மக்களுக்கு நான்கு செகண்டரி (செகண்டரி மட்டத்துக்கு மேலான பள்ளிகளும்) பள்ளிகள் உள்ளன.

இந்த ஒப்பீடு மிக்கத் தகுதியுடைய பெரெதோனவ்* என்ற அக்டோபரிஸ்டால்... சொல்தவறுக்கு மன்னிக்கவும்... மிக்கத் தகுதியுடைய திரு. க்லூமெழவால் மூன்றாவது டூமாவில் செய்யப்பட்டது. பிரதிநிதி திருவாளர்கள், மக்களுடையதை இல்லை எனினும் குறைந்தது நிலப்பிரபுக்களினது ஒப்பீட்டைப் பற்றி ஆலோசிக்கின்றனர்! தீர எண்ணிப்பாருங்கள்! பள்ளிக்கூடங்களைத் திறக்க யார் மனுச்செய்தார்? அது இடதுசாரிகளா? குடியானவர்களா? தொழிலாளர்களா? இல்லை, அவர்கள் இல்லவே இல்லை!! சமாரா ஸேம்ஸ்துவோதான் ஏகமனதாக மனுச் செய்துள்ளது, அதாவது சமாரா நிலப்பிரபுக்களும் அவர்களில் மிக்க ஆர்வமுள்ள கருப்பு நூற்றுவர் ஆதரவாளர்களும் மனுச் செய்துள்ளனர். பள்ளிக்கூடம் செல்லத் தக்க வயதுடையவர்களின் எண்ணிக்கை மிகச் ''சிறியது'' என்ற சாக்கைக் கூறி அரசாங்கம் அதனுடைய மேற்பார்வையாளர் மூலம் இந்த வேண்டுகோளை மறுத்துவிட்டது!! ருஷ்யாவில் மக்கள் கல்வியை அரசாங்கம் தடை செய்கிறது என்றும் ருஷ்யாவில் மக்கள் கல்வியின் மிகப் பெரிய விரோதி அரசாங்கம்தான் என்றும் சொல்லும்பொழுது நான் சகல வழிகளிலும் சரியான உண்மையையே கூறுகிறேன் அல்லவா?

நாம் பின்லாந்தில் கலாசாரம், நாகரிகம், சுதந்திரம், எழுத்தறிவு, படித்த பெண்கள் இன்னோரன்னவற்றைப் பார்க்கிறோம் எனில் அதற்கு ஒரே ஒரு காரணம்: ருஷ்ய அரசாங்

* பெரெதோனவ்—ஸலகூப் என்ற நாவலாசிரியர் எழுதிய குட்டிப் பிசாசு என்ற நாவலில் வரும் கதாபாத்திரம்—அதில் இப்பாத்திரம் ஆசிரியர்—உளவாளியாயும் மக்குத்தனமும் அற்பத்தனமுடையவராகவும் சித்தரிக்கப்படுகிறது.

கம் போன்ற அத்தகைய ''சமூக தீங்கு'' அங்கே இல்லை என்பதே ஆகும். இப்பொழுது இத்தீங்கை பின்லாந்து தலையில் திணித்து அந்நாட்டையும் அடிமை நாடாக்க நீங்கள் விரும்புகிறீர்கள். கனவான்களே, அதில் நீங்கள் வெற்றி பெற முடியாது!! பின்லாந்தின் மீது அரசியல் அடிமைத்தனத்தைத் திணிக்கும் உங்களுடைய முயற்சிகளால், அரசியல் அடிமைத்தனத்திலிருந்து ருஷ்ய மக்கள் விழிப்புணர்ச்சிபெறுவதை நீங்கள் துரிதப்படுத்த மட்டுமே செய்வீர்கள்!

அக்டோபர்வாதி திரு. க்லூஜெவின் மற்ருெரு சாட்சியை நான் இங்கு கொணர்வேன். ''ஆசிரியர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள்?'' என்று தன்னுடைய பேச்சில் திரு. க்லூஜெவ் கேட்டுவிட்டு தானே கீழ்க்காணும் பதிலைத் தருகிருர்:

''பபோவ் என்ற பெயருடைய பிரசித்தி பெற்ற காலஞ்சென்ற சமாரா மனிதர் ஒருவர் பெண்களுக்கான ஆசிரிய கலாசாலையை நடத்துவதற்குத் தேவையான பணத்தைத் தன்னுடைய மரண சாசனத்தில் அறக்கட்டளையாக எழுதி வைத்தார்.'' யார் அந்த கலாசாலையின் தலைவராக நியமிக்கப்பட்டார் என்று உங்களுக்கு தெரியுமா என்ன? பபோவின் மரணசாசன சாரத்தை நிறைவேற்றும் அதிகாரி எழுதுவது இதுதான்: ''காவற்படைத் தளபதியின் விதவை அந்தக் கலாசாலையின் தலைவியாக நியமிக்கப்பட்டார். பெண் ஆசிரிய கலாசாலை என்று அழைக்கப்படும் கல்வி ஸ்தாபனம் ஒன்று உள்ளது என்பதனைத் தன்னுடைய வாழ்நாளில் முதன் முதலில் கேள்விப்படுவதாக அந்த விதவையே ஒப்புக்கொண்டார்''!!

புரோஸ்வெஷேனியே[28] என்ற சஞ்சிகைக்குத் தெம்யான் பேத்னியின் கட்டுக்கதையை வெளியிட்டதற்காக அபராதமும் அதன் ஆசிரியருக்குச் சிறை தண்டனையும் அளிக்கப்பட்டது. நான் இந்த விஷயத்தை அப்படிப்பட்டக் கட்டுக்கதையிலிருந்து எடுத்ததாக நினைக்க வேண்டாம் திருவாளர்களே. இல்லை. இந்த விஷயம் அக்டோபர்வாதி க்லூஜெவின் பேச்சிலிருந்து எடுக்கப்பட்டது. அவர் இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை ஆலோசிக்கக் கூட (கடவுளுக்குப் பயப்படும் மேலும் போலீசுக்குப் பயப்படும் மனிதராக இருப்பதால்) பயப்படுகிருர். ஏன் எனில் இந்த விஷயம் ருஷ்யாவில் மக்

களின் கல்விக்கு ருஷ்ய அரசாங்கத்தை விட அதிகக் கொடிய தும், சமரசப்படுத்த முடியாததுமான விரோதி வேறு யாரும் இல்லை என்பதை எவ்விதச் சந்தேகத்துக்கும் இடமின்றிக் காட்டுகிறது. மேலும் மக்கள் கல்விக்காக மரண சாசனமாகப் பணத்தை எழுதிவைக்கும், கனவான்கள் அப்பணத்தைத் தூர எறிகிறார்கள். தூர எறிவதை விட மோசமான காரியம் செய்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் தங்களுடைய பணம் மக்கள் கல்விக்குப் பயன்படுத்தப் பட வேண்டும் என்று அவாவுறுகிறார்கள். ஆனால் அது உண்மையில் காவற்படை தளபதிகளுக்கும் அவர்களுடைய விதவைகளுக்கும் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதாகவே தெரிய வருகிறது. இத்தகைய பரோபகாரிகள் தங்களுடைய பணத்தை எறிய விரும்பாவிடில் அவர்கள் இந்தப் பணத்தை சமூக-ஜனநாயகவாதிகளுக்கு உரிமை சாசனம் செய்ய வேண்டும் என்பதனை அறிய வேண்டும். அவர்கள் மட்டுமே அந்தப் பணத்தைப் பயன்படுத்தி உண்மையான கல்வியை அதாவது ''காவற்படை தளபதிகள்''... அஞ்சி நடுங்கும், சட்டத்திற்குக் கீழ்படியும் க்லூமெவ்கள் ஆகியோர்களைச் சார்ந்திராத உண்மையான கல்வியை மக்கள் பெற ஏற்பாடு செய்ய முடியும்.

அதே க்லூமெவின் பேச்சிலிருந்து இன்னமும் வேறு ஒரு மேற்கோள்:

''பாதிரியாருக்கான பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கு மேல் கல்வி ஸ்தாபனங்களில் எளிதில் இடம் கிடைக்க வேண்டும் எனும் நம்முடைய (மூன்றாவது டூமாவின்) விருப்பம் பயனில்லாதது. நம்முடைய விருப்பங்களை ஏற்றுக்கொள்வது சாத்தியம் என்பதாக அமைச்சகம் எண்ணவில்லை''. ''பாதிரியாருக்கான பயிற்சி கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமன்றி, பொதுவாக விவசாயிகளின் குழந்தைகளுக்கும் நகரப்புற குட்டிமுதலாளி வர்க்கத்தினரின் குழந்தைகளுக்கும் இதற்கிடையே அரசாங்கம் உயர்கல்வியைத் தடை செய்கிறது. இது ஓர் அலங்கார சொல் அல்ல ஆனால் உண்மை'' என்று மக்கள் கல்வி அமைச்சகத்தின் அக்டோபர்வாதி அதிகாரி கூறினார். ''1.9 லட்சம் உயர்நிலைப்பள்ளி மாணவர்களில் 18 ஆயிரம் பேர்கள்தான் விவசாயிகள். மக்கள் கல்வி அமைச்சகத்தின் எல்லா கல்வி ஸ்தாபனங்களிலும் படிக்கும் மொத்த மாணவர்களில் விவசாயிகள் 15 சதவீதமே இருக்கின்றனர். சமயக் கலாசாலைகளில் 20,500 மாணவர்களில் 1300 மாணவர்கள்

மட்டுமே விவசாயிகள். காடேட்டு படைவகுப்புப் பள்ளிகள்[29], போன்ற ஸ்தாபனங்களில் விவசாயிகள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை'' (இந்த மேற்கோள்கள் க்லூமெழவின் பேச்சிலிருந்து தற்செயலாக 1912 மே மாதம் 22ம் தேதிய நேவ்ஸ்கயா ஸ்வெஸ்தா[30], 6ம் இதழில் கா. தொப்ரஸோர் தவ்வால் ஒரு கட்டுரையில் மேற்கோள்களாகக் காட்டப் பட்டுள்ளன).

மூன்றுவது டூமாவில் இவ்வாறுகத்தான் திரு. க்லூமெழவ் பேசினுர். நாலாவது டூமாவை ஆட்டிப் படைப்போரால் அந்தச் சாட்சிகளின் வாக்குமூலங்கள் மறுத்து நிராகரிக்கப் படப்போவதில்லை. அந்தச் சாட்சியாளர் அவருடைய சொந்தக் கருத்திற்கு எதிராகவும் அவருடைய விருப்பத்துக்கு அப்பாலும் பொதுவாக ருஷ்யாவில் தற்போதுள்ள நிலைமையையும் குறிப்பாக மக்கள் கல்வியின் நிலைமையையும் பற்றிய புரட்சிகரமான மதிப்பீட்டை முழுமையாக ஊர்ஜிதம் செய்கிறுர். பிரபலமான அரசாங்க அதிகாரியும் ஆளும் கட்சியான அக்டோபர்வாதக் கட்சியின் உறுப்பினருமான ஒருவரின் வார்த்தைகள் மூலம் விவசாயிகளுக்கும் குட்டி முதலாளி வர்க்கத்தினருக்கும் கல்வி பெறுவதற்கான வழியைத் தடுக்கிறது என்று குறிப்பிடப்படும் ஓர் அரசாங்கத்திற்கு உண்மையிலேயே என்ன தகுதியிருக்கிறது?

கனவான்களே, இந்த நகர்புற குட்டி முதலாளி வர்க்கத்தினர், விவசாயிகள் ஆகியோர்களின் பார்வையில் இத்தகைய அரசாங்கம் என்ன தகுதியைப் பெறும் என்று கற்பனை செய்து கொள்ளுங்களேன்!

ருஷ்யாவின் நகர்புற குட்டி முதலாளி வர்க்கத்தினரும் விவசாயிகளும் மொத்த மக்கள் தொகையில் 88 சதவீதம் உள்ளனர். அதாவது பத்தில் ஒன்பது பேர்களுக்குச் சற்று குறைவாக உள்ளனர் என்பதனை மறக்காதீர்கள். பிரபுக் குலத்தினர் ஒன்றரை சதவீதம்தான். எனவே அரசாங்கம் எல்லாவித பள்ளிக்கூடங்களுக்கும் கல்வி ஸ்தாபனங்களுக்கும் மக்களில் பத்தில் ஒன்பது பேர்களிடம் பணத்தை எடுத்து, பிரபுக்குலத்தினருக்கு கற்பிக்க அந்தப் பணத்தைப் பயன்படுத்தியும் விவசாயிகளுக்கும் குட்டிமுதலாளி வர்க்கத்தினருக்கும் கல்விக்கான வழியைத் தடுத்தும் செயல்படுகிறது!! இந்தப் பிரபுக் குலத்தினரின் அரசாங்கம்

என்ன தகுதியுடையது என்பது தெளிவாகவில்லையா? இந்த அரசாங்கம் மக்கள் தொகையில் நூற்றில் ஒரு பங்காக உள்ளவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க மக்கள் தொகையில் பத்தில் ஒன்பது பங்காக இருப்பவர்களை நசுக்குகிறது. அதற்கு என்ன தகுதியிருக்கிறது?

இதோ, என்னுடைய சாட்சியான மக்கள் கல்வி அமைச்சகத்தின் அக்டோபர்வாதி அதிகாரியும் மூன்றுவது (நான்காவது) டூமாவின் உறுப்பினருமான திரு. க்லூழெவின் சாட்சியத்திலிருந்து நான் இறுதியாகக் கொடுக்கும் கடைசி மேற்கோள்:

''காஸான் பிரதேசத்தில் 1906 முதல் 1910 வரை ஐந்தாண்டு காலத்தில் கீழ்க்கண்டவர்கள் அவர்களுடைய பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர்: செகண்டரி மற்றும் ஆரம்பக் கல்வி நிறுவனங்களின் 21 தலைமை ஆசிரியர்கள்; மக்கள் பள்ளிக்கூடங்களின் கண்காணிப்பாளர்கள் 32 பேர்; நகர்புற பள்ளி ஆசிரியர்கள் 1 0 5 4 பேர்; இதே வகையைச் சேர்ந்த 8 7 0 பேர்கள் மாற்றப்பட்டார்கள்'' என்று திரு. க்லூழெவ் கூறினர். ''நம்முடைய பள்ளி ஆசிரியர் அமைதியாக எப்படித் தூங்க முடியும் என்பதை நினைத்துப் பாருங்கள்'' என ஆச்சரியப்பட்டார் திரு. க்லூழெவ். ''இரவில் ஆஸ்திரகனில் அவர் படுக்கப் போவார். மறுநாள் அவர் வியாத்காவில்[31] இருக்கமாட்டார் என்பது என்ன நிச்சயம்? வேட்டையாடப்பட்ட முயலைப் போல் துரத்தப்படும் ஆசிரியரின் மன நிலையை புரிந்துகொள்ள முயலுங்கள்!''

இது ஏதேனும் ''இடதுசாரி'' பள்ளி ஆசிரியரின் ஆச்சரியம் அல்ல. மாருக, ஓர் அக்டோபர்வாதியினுடையதாகும். இந்த விவரங்கள் எல்லாம் சுறுசுறுப்பான ஒரு சிவில் அதிகாரியால் மேற்கோள் காட்டப்பட்டவை. வலதுசாரி, தேசியவாதி, அக்டோபர்வாதி கனவான்களே, இதோ உங்கள் சாட்சி!! ஆசிரியர்களிடம் அரசாங்கத்தின் போக்கு மிக அவதூறுனதாகவும் மிக வெட்கக் கேடானதாகவும் வெறுப்பை உண்டாக்கக் கூடிய கொடுங்கோன்மைத் தன்மையதாகவும் இருப்பதை ''உங்களுடைய'' இந்தச் சாட்சியாளர் கட்டாயமாக ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தது!! கனவான்களே, நான்காவது டூமா, அரசு ஆலோசனைக் குழு ஆகியவற்றை ஆட்டிப் படைப் போர்களே, உங்களுடைய சாட்சியாளர் ஆசிரியர்கள் ருஷ்யாவில் முயல்களைப் போல் ருஷ்ய அர

சாங்கத்தால் ''வேட்டையாடப்படுகிருர்கள்'' என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப் படுத்தப்பட்டுள்ளார்!!

இந்த மெய்நடப்பாலும் இதைப் போன்ற ருஷ்ய வாழ்க்கையில் ஏற்படும் ஆயிரம் ஆயிரம் மெய் நடப்புகளில் ஒன்ருன இந்த மெய் நடப்பு வழங்கியுள்ள அடிப்படையிலும் ருஷ்யர்களேயும் ருஷ்யாவின் மக்களினங்கள் எல்லோரையும் நாம் கேட்கிருேம்: பிரபுக்குலத்தினர் உரிமைகளேப் பாதுகாக்கவும் மக்களின் ஆசிரியர்களே முயல்களேப் போல ''வேட்டையாடவும்'' நமக்கு ஓர் அரசாங்கம் தேவையா? இந்த அரசாங்கம் மக்களால் துரத்தப்பட வேண்டிய தகுதியுடையதல்லவா?

ஆம், ருஷ்ய மக்களின் ஆசிரியர்கள் முயல்களேப் போல் வேட்டையாடப்படுகிருர்கள்! ஆம், ருஷ்ய மக்கள் தொகையில் பத்தில் ஒன்பது பேரை அரசாங்கம் கல்வி கற்கவிடாமல் தடுக்கிறது. ஆம், நம்முடைய மக்கள் கல்வி அமைச்சகம் போலீஸ் வேவுத்துறை அமைச்சகமாகும். இந்த அமைச்சகம் இளேஞர்களே ஏளனம் செய்யக்கூடியதாகவும் மக்களின் அறிவுத் தாகத்தை எள்ளி நகையாடக் கூடியதாகவும் உள்ளது. மதிப்பிற்குரிய நான்காவது டூமா உறுப்பினர்களே, எல்லா ருஷ்ய விவசாயிகளும்—சிறப்பாக, ருஷ்ய தொழிலாளர்களேப் பற்றிச் சொல்லத் தேவையில்லே—அவர்கள் முயல்களேப் போன்றவர்களல்ல. தொழிலாளி வர்க்கத்தால் 1905ல்[32] இதை நிரூபிக்க முடிந்தது. மீண்டும் ஒரு முறை இவ்வர்க்கத்தால் அதிக அழுத்தத்துடனும் அதிக வினயத்துடனும் கஸ்ஸோவின் அல்லது பிரபுக்குலத்தினரின் கல்வி அல்லாத உண்மையான மக்கள் கல்விக்காகவும் உண்மையான சுதந்திரத்திற்காகவும் புரட்சிகரமான போராட்டத்தைத் தம்மால் நடத்த முடியும் என்பதனே நிரூபிக்க முடியும்!

ஏப்ரல் 27(மே 10) 1913ல்
எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 23,
பக்கங்கள் 125-135

## உக்ரைனியர்களுக்காக பிஷப் நீக்கொன் எவ்வாறு வாதிடுகிறுர்?

உக்ரைனியன் டூமாவில் சமர்ப்பிக்கப்பட்ட உக்ரைனியன் பள்ளிக்கூடம் உக்ரைனிய சங்கங்கள் பற்றிய மசோதாவில் தன்னுடைய கையொப்பத்தை முதலில் போட்டவர் வலது சாரியும், அரசாங்க டூமாவின் பிரதிநிதியுமான பிஷப் நீக்கொன் என்று கியெவ்ஸ்கயா மீஸ்ல்[33] என்ற பத்திரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த மசோதா கூறுகிறது: ஆரம்பப் பள்ளிகளில் உக்ரைனிய மொழியில் கற்றுக் கொடுக்க அனுமதிக்கப்பட வேண்டும்; உக்ரைனிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்; உக்ரைனிய மொழிப் போதனையும் உக்ரைனிய வரலாறும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்; உக்ரைனியன் சங்கங்கள் அடிக்கடி துன்புறுத்தப்படுத்துவது கூடாது, அவை ''அதிகாரிகளின் விருப்பத்திற்கு ஏற்ப மூடப்படக் கூடாது. இது அப்பட்டமான சட்ட ஒழுங்கு இல்லாமையை அடிக்கடி உண்டாக்குகிறது.''

இவ்வாருக, புரிஷ்கேவிச் கட்சியின் தோழர் பிஷப் நீக்கொன் சில குறிப்பிட்ட விவகாரங்களில் சட்டமின்மையை விரும்புவதில்லே.

பிஷப் நீக்கொன் தான் எழுப்பும் ''பிரச்சினே மிக முக்கியத்துவம் வாய்ந்தது. முப்பத்தேழு மில்லியன் உக்ரைனியர்களின் வக்ரத்தைப் பொறுத்தது'' என்று அவர் கருதுவதும் முற்றிலும் சரியே. ''இப்படி வளமான, அழகான, திறமை

படைத்த, செழிப்புமிக்க, கவித்துவம் நிறைந்த உக்ரைனியா அழிந்து போகவும், சிறுகச் சிறுக அற்பத்தனமாக, மெது வாக நாசமாக போகவும் கண்டனம் செய்யப்படுகிறது'' என்று கூறுவதும் முற்றிலும் சரியே.

மகாருஷ்ய இனத்தவர்களால் உக்ரைனியர்கள் நசுக்கப் படுவதை எதிர்க்கும் எதிர்ப்பு முழுக்க நியாயமான ஒன்று. ஆனால், உக்ரைனியனின் கோரிக்கைகளை ஆதரித்து எப்படி பிஷப் நீக்கொன் வாதங்களை முன்வைக்கிறார் என்பதனை நாம் பார்ப்போம்:

''உக்ரைனிய மக்கள் இத்தகைய அபக்கியாதி பெற்ற சுயாட்சியைப் பெற விரும்பவில்லை. ஸபரோஷ்ஸ்கயா சேச்[34] அல்லது அதைப் போன்றதையோ மீண்டும் நிறுவுவதை அவர்கள் விரும்பவில்லை; உக்ரைனியர்கள் பிரிவினைவாதிகள் அல்ல. உக்ரைனிய மக்கள் வேற்று இனத்தவர்கள் அல்ல. அவர்கள் நம்முடைய சொந்த மக்கள், நம்முடைய இரத்த வழி சகோதரர்கள். இப்படி இருக்க அவர்கள் அவர்களுடைய மொழி, தேசிய கலாச்சாரம் ஆகியவற்றின் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் சில வரையறைகளால் கஷ்டப்படக் கூடாது. அப்படி இல்லாமல் நாம் அவர்களை, நம் சகோதரர் களை, வேற்று இனத்தவர்களைச் சேர்ந்த யூதர்கள், போலந்து நாட்டினர், ஜார்ஜியன் மற்றும் மற்றவர்களுடன் சமப் படுத்துகிறோம்.''

அப்படியானால், சுருக்கமாகச் சொன்னால், உக்ரைனியர் கள் ருஷ்யர்களுடைய சகோதரர்கள், ஆனால் யூத மக்கள் வேற்று இனத்தவர்கள் என்ற அடிப்படையில் உக்ரைனியன் பிஷப் நீக்கொனும் மற்றும் அவரைப் பின்பற்றியவர்களும் மஹாருஷ்ய நிலவுடைமையாளர்களிடம் உக்ரைனியர்களுக்கு உரிமைகள் வழங்குமாறு கெஞ்சிக்கேட்டுக் கொண்டு இருக் கிறார்கள். எளிதாகவும், நேரடியாகவும் கூறினால் நீங்கள் எங் களுக்கு சலுகைகள் அளித்தால், யூதர்களும் மற்றவர்களும் வேற்று இனத்தவர்கள் என்பதால் நாம் அவர்களை நசுக்க ஒப்புக்கொள்ளுகிறோம்.

கருப்பு நூற்றுவர் முதல் மிதவாதக் கட்சியினர் வரை முதலாளித்துவ-ஜனநாயகத் தேசியவாதிகள் உட்பட எல்லா முதலாளித்துவ தேசியவாதிகளாலும் பாதுகாக்கப்பட்ட ''தேசிய கலாச்சாரத்தின்'' மிகவும் பழக்கமான ஒரு காட்சி யாகும் இது!

எல்லாவித நசுக்குதலிலிருந்தும் எல்லா மக்களும் விதி விலக்கில்லாமல் பாதுகாக்கப்பட்டால் ஒழிய, தேச வாழ்வி லிருந்து ''வேற்று இனத்தவர்'' என்றக் கருத்தை நீக்கினுல் ஒழிய, எல்லா தேசீய இனங்களுக்கும் பூர்ண சமத்துவ உரி மைகள் வழங்கப்பட்டால் ஒழிய, உக்ரைன் மக்கள் நசுக்கப் படுவதிலிருந்து பாதுகாக்கப்பட முடியாது என்பதனை பிஷப் நீக்கொன் புரிந்து கொள்ள மறுக்கிறுர். மிகப் பரந்த உள் நாட்டு, பிராந்திய சுயாட்சி, அரசின் எல்லாப் பிரச்சினைகளை யும் மக்கள் தொகையின் பெரும்பான்மையினரின் கருத்துக் கேற்ப தீர்பது, என்ற கோட்பாடு (அதாவது உறுதியான ஜனநாயகம் என்ற கோட்பாடு) ஆகியவை தொடர்ந்து நடை முறைப் படுத்தப்பட்டால் ஒழிய தேசிய நசுக்குதலிலிருந்து ஒருவரும் பாதுகாக்கப்பட முடியாது.

உக்ரைனிய மக்களுக்கான ''தேசிய கலாச்சாரம்'' என்ற பிஷப் நீக்கொனின் கோஷம் உக்ரைனிய மொழியில் கருப்பு நூற்றுவர்கள் பரப்பிக் கொண்டிருக்கும் கருத்துக்களைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இது உக்ரைனிய மதக்குருக்களின் கலாச்சார கோஷமாகும்.

மஹா ருஷ்யன், உக்ரைனியன், யூத, போலிஷ், ஜார் ஜியன் அல்லது வேறு எந்தக் கலாச்சாரத்தைப் பொறுத்த தாயினும்,''தேசியக் கலாச்சாரம்'' என்ற கோஷம் மதக்குருக் களின் அல்லது முதலாளி வர்க்கத்தாரின் மோசடி என அர சியல் உணர்வு பெற்ற தொழிலாளர்கள் புரிந்து வைத்துள் ளனர். நூற்றிருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பாக நாடு, முதலாளி வர்க்கத்தினர், பாட்டாளி வர்க்கத்தினர் எனப் பிளவுபடாத பொழுது, நிலப்பிரபுத்துவத்தையும் மதக்குருக் களையும் எதிர்த்துப் போரிட, ஒருமைப்பாட்டை உருவாக்கி கொடுக்கக்கூடிய ஒரே கோஷமாக தேசிய கலாச்சாரம் என்ற கோஷம் இருந்திருக்க முடியும். எப்படி இருப்பினும் அந்தக் காலம் முதல் முதலாளிகளுக்கும், பாட்டாளிகளுக்கும் இடையில் வர்க்கப் போராட்டம் ஒவ்வொரு இடத்திலும் ஆதரவையும் வலிமையையும் பெற்றது. சுரண்டுகிறவர்கள், சுரண்டப்படுகிறவர்கள் என்று ''ஒரு தனி'' தேச இனத்தைப் பிரிப்பது முடிந்த ஒரு விஷயமாகிவிட்டது.

பொதுவாக, மதக்குருக்களும் முதலாளி வர்க்கத்தினர் களும் மட்டுமே தேசிய கலாச்சாரத்தைப் பற்றி பேச முடி

யும். உழைக்கும் மக்கள், உலக தொழிலாளி வர்க்க இயக்கத்தின் சர்வதேசிய கலாச்சாரத்தைப் பற்றிப் பேச முடியும். முழுமையானதும், உண்மையானதும், தேசிய இனங்களிடையே உண்மையான சமத்துவத்தைக் கொண்டதும், தேசிய நசுக்குதல் இல்லாததும் ஜனநாயகத்தினை அமுலப்படுத்துவதுமானது அக்கலாச்சாரம் மட்டுமே. மூலதனத்தை எதிர்த்து எல்லா தொழிலாளி வர்க்க நிறுவனங்களில் உள்ள எல்லா தேசிய இன தொழிலாளர்களின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் மட்டுமே ''தேசிய பிரச்சினையின் தீர்வுக்கு'' இட்டுச் செல்லும்.

பிராவ்தா த்ருதா, இதழ் 3,
செப்டம்பர் 13, 1913

நூல் திரட்டு,
தொகுதி 24,
பக்கங்கள் 8-10

## "கலாசார-தேசிய" சுயாட்சி

"கலாச்சார-தேசிய" சுயாட்சி(அல்லது "தேசிய வளர்ச்சி யின் சுதந்திரத்திற்கு உத்திரவாதமளிக்கும் நிறுவனங்களை நிறுவுறுதல்") என்றழைக்கப்படும் திட்டத்தின் அல்லது வேலைத்திட்டத்தின் சாராம்சம் என்னவெனில் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தனித்தனிப் பள்ளிக்கூடங்கள் என்பதாகும்.

புந்து சங்கம் ஆதரவாளர்கள்[35] உட்பட எல்லாவிதமான அதாவது வெளிப்படையான, மறைமுகமான தேசியவாதி கள் இச்சாராம்சத்தை எவ்வளவுக்கெவ்வளவு விரும்புகிறார் களோ அவ்வளவுக்கவ்வளவு நாம் இதை அதிகமாக வற் புறுத்த வேண்டும்.

ஒவ்வொரு தேச இனமும், அதனுடைய தனித்தனி உறுப் பினர்களும் வாழும் இடத்தைப் பொருட்படுத்தாமல், (தேச எல்லையைப் பற்றி பொருட்படுத்தாமல்: எனவே தான் "தேசிய எல்லைக்கு அப்பாற்பட்ட" சுயாட்சி என்ற சொல்) தேசிய-கலாச்சார விஷயங்களை நடத்தும், அதிகாரப் பூர்வ மாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஐக்கிய சங்கமாகும். இந்த விஷ யங்களில் அதிக முக்கியமானது கல்வி. ஒவ்வொரு பிரஜை யும் எப்பகுதியில் வாழ்ந்தாலும் அவர் எந்த தேசிய சங்கத் தைச் சேர்ந்து இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது சுதந்திரமாக பதிவு செய்ய அனுமதிப்பதன் மூலம் தேசீய இனங்களின் கலவையைத் தீர்மானிப்பதானது தேசிய இனங்

களுக்கு பள்ளிகளைப் பிரிப்பதில் முழுமையான தெளிவையும் முழுமையான உறுதிப் பாட்டையும் ஊர்ஜிதப்படுத்துகிறது.

இப்படிப்பட்ட பிரிவினை கேட்கப்பட்டால் பொதுவாக ஜன நாயகம் என்ற பார்வையிலிருந்தும் குறிப்பாக, பாட்டாளி வர்க்கப் போராட்ட நலன்கள் என்ற பார்வையிலிருந்தும் அனுமதிக்கத்தக்கதா?

''கலாச்சார-தேசிய சுயாட்சி'' வேலைத்திட்டத்தின் சாராம்சத்தின் தெளிவான கிரஹிப்பு இப்பிரச்சினைக்கு தயக்க மில்லாமல் இது முழுக்க முழுக்க அனுமதிக்கத்தக்கதல்ல என்று பதிலளிக்க போதுமானது.

வேறுபட்ட தேசிய இனங்கள் ஒரே அரசின் கீழ் வாழும் பொழுது ஒன்றுக்கொன்று லட்சக்கணக்கான, கோடிக்கணக் கான பொருளாதார, சட்ட, சமூக தளைகளுக்குக் கட்டுப் பட்டவைகளாக இருக்கின்றன. இந்தத் தளைகளில் இருந்து எப்படி கல்வியைப் பிரித்து எடுக்க முடியும்? மிகச் சிறப்பான, வெளிப்படையான, முட்டாள்தனமான புந்து சங்கத்தின் விதியை மேற்கோள் காட்டுவதாயிருந்தால் அதை (கல்வி யை) ''அரசின் எல்லைக்குள் இருந்து வெளியே'' எடுத்துவிட முடியுமா? பல்வேறு தேசிய இனங்கள் ஒரே அரசின் கீழ் வாழ்ந்து கொண்டு இருப்பின் அவை பொருளாதார பிணைப் புகளால் கட்டப்பட்டிருக்கும். பிறகு அவைகளை நிரந்தர மாக ''கலாச்சாரத்தாலும்'' குறிப்பாக, கல்வி விஷயங்களா லும் பிரிக்க எடுக்கும் எந்த முயற்சியும் முட்டாள்தனமான தும் பிற்போக்குத்தன்மையுடையதாகவும் அமையும். அதற்கு மாறாக, தேசிய இனங்களை கல்வி விஷயங்களில் ஒற்றுமைப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் எதார்த்த வாழ்வில் உண்மையில் என்ன செய்யப்பட்டிருக்கிறது என் பதற்கு பள்ளிக்கூடங்கள் ஒரு தயாரிப்பு களங்களாகும். தற் பொழுது வெவ்வேறு தேசிய இனங்கள், அவைகள் பெற்றி ருக்கும் உரிமைகளிலும் வளர்ச்சி மட்டத்திலும் சமமாக இல்லை. இத்தகைய சூழ்நிலைகளில் தேசிய இனங்களுக்குத் தக்கப் பள்ளிக்கூடங்களைப் பிரிப்பது, மிக அதிகமாகப் பின் தங்கி இருக்கும் தேசிய இனங்களின் நிலைகளை உண்மையாக வும் தவிர்க்க முடியாமலும்' அதிமோசமாக்கிவிடும். அமெரிக்கா வின் தென்பகுதியில் முன்னுளைய அடிமை மாநிலங்களில் இன்னமும் நீக்ரோ குழந்தைகள் தனியாகப் பிரிக்கப்பட்டு

தனிப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்படுகின்றனர். அதே நேரத்தில் அமெரிக்காவின் வடபகுதியில் வெள்ளையர்களின் குழந்தைகளும் நீக்ரோக்களின் குழந்தைகளும் ஒரே பள்ளியில் படிக்கின்றனர். ருஷ்யாவில் சமீபத்தில் ''யூதர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களைத் தேசியமயமாக்கும்'' திட்டம் ஒன்று பிரேரிக்கப்பட்டது. அதாவது யூதர் குழந்தைகளை மற்ற தேசிய இனக் குழந்தைகளிலிருந்து பிரித்து தனியாக ஒரு பள்ளியில் அனுமதித்தல். இந்தத் திட்டம் மிகப் பிற்போக்கு வாதிகளான புரிஷ்கேவிச் வட்டாரங்களில் உருவாக்கப் பட்டது என்று சொல்லத் தேவையில்லை.

ஒருவர் ஜனநாயகவாதியாகவும், அதே நேரத்தில் தேசிய இனங்களுக்குத் தக்க பள்ளிக் கூடங்களைப் பிரிக்க வேண்டும் என்ற கொள்கைக்கு வாதிடுகிறவராகவும் இருக்க முடியாது. குறிப்பு: நாம் இப்பொழுது பொதுப்படையான ஜனநாயகம் (அதாவது, முதலாளித்துவ-ஜனநாயகம்) என்ற பார்வையிலிருந்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

தேசிய இனங்களுக்குத் தக்கவாறு பள்ளிக்கூடங்களைப் பிரிக்க வேண்டும் என்பதனை பாட்டாளி வர்க்கப் போராட்டம் என்ற பார்வையில் மிக அழுத்தமாக நாம் எதிர்க்க வேண்டும். தொழிலாளர்கள் எந்த தேசிய இனத்தவர்களாக இருப்பினும் அதைப் பொருட்படுத்தாமல் அவர்களுக்கு எதிராகத் திருப்பப்படும் கூட்டுப் பங்குக் கம்பெனிகள், விலைவாசியை நிர்ணயிக்கும் சபைகள், அறக்கட்டளைகள், உற்பத்தியாளர்களின் சங்கம் இத்தியாதிகளில், ஒரு குறிப்பிட்ட அரசின் கீழ் உள்ள எல்லா தேசிய இன முதலாளிகளும் மிக நெருக்கமாகவும் அந்நியோன்மாகவும் இணைந்துள்ளனர் என்பது யாருக்குத் தெரியாது? மிகப் பெரும் ஆலைகள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள், வியாபார நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து முதலாளித்துவ நிலவுடைமைப் பண்ணைகள் வரை எந்த முதலாளித்துவ நிறுவனங்களிலும் தொழிலாளர்களிடையே எங்கோ ஒரு மூலையில் அமைதியாக தூங்கிக் கொண்டிருக்கும் கிராமங்களில் உள்ள மக்களிடையே உள்ளதைவிட அதிக அளவில் பல்வேறுப்பட்ட தேசீய இனங்களை நாம் எப்பொழுதும் பார்க்கிறோம் என்பது யாருக்குத் தெரியாது?

நகர்புற தொழிலாளர்கள் வளர்ச்சி பெற்ற முதலாளித்

துவத்துடன் நெருங்கிய பழக்கமுடையவர்கள். அவர்கள் வர்க்கப் போராட்டத்தின் உளவியலை நன்கு முழுமையாக உணர்ந்தவர்கள். அவர்களுக்கு அவர்களுடைய முழு வாழ்க்கை இதைக் கற்று கொடுக்கிறது, அல்லது அவர்களுடையத் தாய்ப் பாலிலேயே இதைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இத்தகைய தொழிலாளர்கள் பள்ளிக்கூடங்களை தேசிய இனத்திற்கு ஏற்ப பிரிக்க வேண்டும் என்ற திட்டம் தீங்கு பயப்பது மட்டுமல்ல, அப்பட்டமான, மிக வஞ்சகமான முதலாளிகளின் மோசடித் திட்டமாகும் என்று இயற்கையாகவும் தவிர்க்க முடியாமல் உணர்ந்துள்ளார்கள். தொழிலாளர்கள் இந்தக் கருத்தினை பிரசாரம் செய்வதின் மூலம் பிளவுபடுத்தப்படலாம். பிரிக்கப்படலாம், பலவீனப்படுத்தப்படலாம். மேலும் தேசிய இனங்களுக்கு ஏற்ப சாதாரண மக்கள் இனங்களின் பள்ளிக்கூடங்களைப் பிரிப்பதால் இன்னமும் மோசமாகவும். அதே நேரத்தில் விசேஷமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களைக் கொண்ட வளமான தனிப் பள்ளிகளைப் பெற்ற முதலாளிகளின் குழந்தைகளை எந்தப் பிரிவினையாலும் எந்த விதத்திலும் அச்சுறுத்த முடியாது அல்லது ''கலாச்சார-தேசிய சுயாட்சி'' மூலம் பலவீனப்படுத்தவும் முடியாது.

உண்மையில் ''கலாச்சார-தேசிய சுயாட்சி'', அதாவது முழுமையும் தூய்மையானதும் உறுதியானதுமான தேசிய இனத்திற்கு ஏற்ப பள்ளிகளைப் பிரித்தல் என்பது முதலாளிகளால் கண்டுபிடிக்கப்பட்டது அல்ல (ஏனெனில் அவர்கள் தற்காலிகமாக தொழிலாளர்களைப் பிரிக்க கரடுமுரடான முறைகளிடம் புகல் அடைந்துள்ளனர்). ஆனால் இது ஆஸ்திரிய நாட்டு கிணற்றுத் தவளை மனப்பான்மையுடைய சந்தர்ப்பவாத அறிவாளிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. கலப்பின மக்கள் தொகையைக் கொண்ட எந்த ஒரு மேற்கு ஐரோப்பிய ஜனநாயக நாட்டிலும் இம்மாதிரியான புத்திக்கூர்மையான கிணற்றுத் தவளை மனப்பான்மைக் கருத்தின், புத்திக் கூர்மையான தேசீயவாத கருத்தின் எந்தச் சுவட்டையும் காண முடியாது. நம்பிக்கையற்ற சிறு முதலாளி வர்க்கத்தினர்களின் இந்தக் கருத்து கிழக்கு ஐரோப்பாவில் பிற்போக்கான, நிலப்பிரபுத்துவம், மதக்குருக்கள், அதிகார வர்க்கம் உள்ள ஆஸ்திரியாவில்தான் தோன்ற முடியும். அங்கே எல்லா பொது வாழ்க்கையும் அரசியல் வாழ்க்கையும் மொழிகளைப்

பற்றிய இழிவான, மிக அற்பத்தனமான சண்டைச் சச்சரவால் (இன்னமும் மோசம்: ஏசிகூச்சலிட்டுச் சண்டை போட்டு) தடைபடுத்தப்பட்டுள்ளன. நாயும் பூனையுமாகச் சண்டையிட்டுக் கொண்டிருப்பவர்களால் ஒப்புக்கொள்ள முடியாததானுல் நாம் கல்விக் காரியத்திற்காக எல்லா தேசிய இனங்களேயும் ஒரேயடியாகவும், முழுக்க முழுக்கத் தெளிவாகவும், உறுதியாகவும் ''தேசிய குழுக்களின்'' அடிப்படையில் பிரித்துவிடுவோம்!—இத்தகைய உளவியல்தான் ''கலாச்சார-தேசிய சுயாட்சி'' என்ற முட்டாள்தனமான கருத்தை உருவாக்கியது. பாட்டாளி வர்க்கம் அதனுடைய சர்வதேசியத்தன்மையை உணர்ந்துள்ளது, அதைப் போற்றுகிறது. அது, இந்த நாகரிகமாக்கப்பட்ட தேசீய முட்டாள் தனத்தை ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளாது.

''கலாச்சார-தேசிய சுயாட்சி'' என்ற இந்தக் கருத்து ருஷ்யாவில் எல்லா யூத முதலாளித்துவக் கட்சிகளால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது தற்செயலாக நடந்ததல்ல. அப்பொழுது (1907ல்) இக்கருத்து பல்வேறு தேசிய இனங்களின் குட்டிமுதலாளித்துவ இடதுசாரி-நரோத்னிக்குக் கட்சிகளின் மாநாட்டாலும்[36], இறுதியில் கிட்டத்தட்ட மார்க்சிய குழுவாக உள்ள கிணற்றுத் தவளே மனப்பான்மையுடையவர்களாலும் சந்தர்ப்பவாத சக்திகளாலும், அதாவது புந்துக்காரர்களாலும் கலேப்புவாதிகளாலும்[37] (பின்னுல் கூறப்பட்டவர்கள் அவ்வாறு நேரடியாகவும் உறுதியாகவும் செய்ய முடியாத கோழைகள்) ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேசியவாதத்தால் தாக்குண்ட அரைகலேப்புவாதி திரு. ச்ஹென்கேலியும் குட்டிமுதலாளித்துவ திரு. கேரென்ஸ்கியும் மட்டுமே அரசாங்க டூமாவில் ''கலாச்சார-தேசிய சுயாட்சிக்கு'' ஆதரவாகப் பேசியது தற்செயலாக நடந்ததல்ல.

பொதுவாக இப்பிரச்சினேயைப் பற்றி கலேப்புவாதிகளும், புந்து ஆதரவாளர்களும் ஆஸ்திரியாவைக் குறிப்பிட்டிருப்பதைப் படிக்க வேடிக்கையாகவுள்ளது. முதன்முதலாக, மிகவும் பின்தங்கிய பல்வேறு தேசிய இனங்களே கொண்ட நாட்டை முன்மாதிரியாக ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும்? மிகவும் வளர்ச்சியடைந்த நாட்டை ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது? மிகவும் மோசமான ருஷ்ய மிதவாதி, அதாவது

காடேட்டுக் கட்சியினர்களிடம் இந்தப் பாணி உள்ளது. அவர்கள் அரசியல் சட்டத்தின் முன் மாதிரிக்காக, முக்கியமாக பிரஷ்யா, ஆஸ்திரியா போன்ற பின்தங்கிய நாடுகள் பக்கமே திரும்புகின்றனர். அவர்கள் பிரான்ஸ், சுவிட்சர் லாந்து, அமெரிக்கா போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகள் பக்கம் திரும்புவதில்லை.

இரண்டாவதாக, ஆஸ்திரியாவின் முன்மாதிரியை எடுத்துக்கொண்ட பிறகு ருஷ்ய நாட்டு கிணற்றுத்தவளை மனப்பாங்குடையவர்கள் அதாவது புந்துக்காரர்கள், கலைப்புவாதிகள், இடதுசாரி நரோத்னிக்குகள்[38] மற்றும் இது போன்றவர்கள் அவர்களாகவே இதை விட மோசமாக மாற்றிவிட்டார்கள். நம் நாட்டில் புந்துக்காரர்கள் தான் (அத்துடன் எல்லா யூத முதலாளித்துவக் கட்சிகளும், புந்துக்காரர்கள் அவர்களைப் பின்பற்றுவதை எப்பொழுதும் உணர்ந்து கொள்ளவில்லை) முக்கியமாகவும் முதன்மையாகவும் இத்திட்டத்தை, ''கலாச்சார-தேசிய சுயாட்சிக்காக'' பிரச்சாரத்திலும் கிளர்ச்சியிலும் பயன்படுத்துகிறார்கள். ''கலாச்சார-தேசிய சுயாட்சி'' உருவான நாடாகிய ஆஸ்திரியாவில் அக்கருத்தின் தந்தையான ஓட்டோ பௌவர் அவருடைய புத்தகத்தில் ''கலாச்சார-தேசிய சுயாட்சியை'' யூதர்களுக்குப் பயன்படுத்த முடியாது என்பதை நிரூபிக்க தனி அத்தியாயமே எழுதியுள்ளார்!

ஓட்டோ பௌவர் எவ்வளவு முரணானவர் என்பதனையும் அவருடைய சொந்த கருத்தின் மீதே நம்பிக்கை கொள்ளவில்லை என்பதையும் இது, நீண்ட பேச்சுகளை விட தீர்மானமாக நிரூபிக்கிறது. ஏன் எனில் அவர் ''தன் நாட்டின் எல்லைக்கு அப்பாற்பட்ட'' (தனக்கென சொந்த எல்லைகள் அல்லாத) ஒரே ஒரு தேசிய இனத்தை அவருடைய எல்லைக்கு அப்பாற்பட்ட தேசிய இனங்களின் சுயாட்சிக்கான திட்டத்தில் இருந்து நீக்குகிறார்.

புந்துக்காரர்கள் ஐரோப்பாவின் பழைய மோஸ்தர் திட்டங்களை எவ்வாறு கடனாகப் பெற்று ஐரோப்பிய தவறுகளை பன்மடங்காகப் பெருக்கி, இத்தவறுகளை முட்டாள்தனமாக ''வளர்க்கிறார்கள்'' என்பதனை இது காட்டுகிறது.

உண்மை என்னவெனில்—இது மூன்றாவது விஷயம்—பிரியூன் நகரில் (1899ல்) நடந்த அவர்களுடைய மாநாட்டில்

ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகள் அவர்களுக்கு முன் மொழியப்பட்ட ''கலாச்சார-தேசிய சுயாட்சி'' திட்டத்தை நிராகரித்தார்கள். அவர்கள் நாட்டின் வரையறுக்கப் பட்ட பிராந்தியங்களில் உள்ள தேசிய இனங்களின் யூனியன் ஒன்றிற்கான திட்ட உருவில் ஒரு சமரசத்தை ஏற்றூர்கள். இந்தச் சமரசம் தேசிய எல்லைக்கு அப்பாற்பட் டதாகவோ தேசிய இனத்திற்கு ஏற்ப பள்ளிக்கூடங்களைப் பிரிப்பது என்பதற்கோ வழிவகுக்கவில்லை. இந்தச் சமரசத் தின்படி மிக வளர்ச்சி அடைந்த (முதலாளித்துவ முறையில்) மக்கள் தொகை பெருத்த மையங்கள், நகரங்கள், தொழிற் சாலைகள், சுரங்கங்கள், பெரிய கிராம எஸ்டேட்டுகள் இத் தியாதிகளில் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தனித்தனி யாக பள்ளிக்கூடம் கிடையாது!

ருஷ்ய தொழிலாளி வர்க்கம் இந்தப் பிற்போக்கான, கேடுவிளைவிக்கும், குட்டிமுதலாளித்துவ, தேசியவாத ''கலாச்சார-தேசிய சுயாட்சி'' என்ற கருத்தை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கிறது, அதை தொடர்ந்து செய் யும்.

ஸா பிராவ்து, இதழ் 46,
நவம்பர் 28, 1913

நூல் திரட்டு,
தொகுதி 24,
பக்கங்கள் 174-178

## நம் பள்ளிகளைப் பற்றி

*1911 ஜனவரி 18ல் எடுக்கப்பட்ட அனைத்து ருஷ்ய பள்ளிகளின் கணக்கு—மிக மோசமான முறையில் ஆராயப்பட்ட விவரங்களைக் கொண்டதாக இருப்பினும்—அதிகார வர்க்க ரகசிய முகத்திரையை சிறிது அகற்ற ஒரு வாய்ப்பளிக்கிறது.*

*பீட்டர்ஸ்பர்க் கல்வி மாவட்டத்தைப் பொறுத்தவரை நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் தனித்தனியாகத் தரப்பட்ட விவரங்கள்தான் இதுவரை கிடைத்துள்ளவை. இவ் விவரங்களின் அடிப்படையில் நம்முடைய* மதக்குருக்களின் பள்ளிக்கூடங்கள்[39] *எப்படி உள்ளன என்பதனைப் பார்ப்போம்.*

*நகரங்களில் 329 ஒருவகுப்பு நகர் பள்ளிக்கூடங்களும் 139 மூன்றும் ரக தனியார் பள்ளிக்கூடங்களும், 177 மதக் குருக்களின் ஒரு வகுப்பு பள்ளிக்கூடங்களும் உள்ளன. நாம் பள்ளிக்கூட ஆசிரியைகளின் சராசரி சம்பளங்களை ஒப்பிடுவோம் (பள்ளிக்கூட ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே):—நகர் பள்ளிக்கூடங்களில் வேலைபார்க்கும் ஆசிரியைகளுக்கு ஆண்டு சம்பளம் 924 ரூபிள்கள், தனியார் பள்ளிக்கூட ஆசிரியைகளுக்கு 609 ரூபிள்களும் மதக்குருக்கள் நடத்தும் பள்ளிக்கூட ஆசிரியைகளுக்கு* 302 ரூபிள்களும் *சம்பளமாகும்.*

*பிச்சைக்கார, பட்டினி கிடக்கும் பள்ளிக்கூட ஆசிரியைகள்—இதுதான் நம்முடைய மதக்குருக்களின் பள்ளிகள்.*

உயர்தர மற்றும் செகண்டரி உலகியல் பொதுக் கல்வி கற்ற ஆசிரியர்களின் சதவீதம் என்ன என்பதனை நாம் பார்ப்போம். நகர் பள்ளிக்கூடங்களில் 76 சதவீதம், தனியார் பள்ளிகளில் 67 சதவீதம், மதக்குருக்களின் பள்ளிக்கூடங்களில் 18 சதவீதம்!

கல்வி அறிவற்ற பள்ளிக்கூட ஆசிரியைகள் (நாம் இன்னமும் சமயக் கல்வியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களை பற்றி ஒன்றும் கூறவில்லை)—இதுதான் நம்முடைய மதக்குருக்கள் நடத்தும் பள்ளிக்கூடங்கள்.

கிராமங்களில் 3545 ஸேம்ஸ்துவோவின் ஒரு வகுப்பு பள்ளிக்கூடங்களையும் 2506 மதக்குருக்கள் நடத்தும் ஒரு வகுப்பு பள்ளிக்கூடங்களையும் நாம் பெற்றுள்ளோம். முதலில் கூறப்பட்ட பள்ளிக்கூட ஆசிரியைகளின் சராசரி சம்பளம் ஆண்டு ஒன்றுக்கு 374 ரூபிள்களாகும், பின்னால் கூறப்பட்ட பள்ளிக்கூட ஆசிரியைகள் பெறுவது 301 ரூபிள்கள்.

முன்னால் கூறப்பட்ட பள்ளிக்கூடங்களில் கற்ற ஆசிரியர்களின் (பொதுவாக ஆசிரியர்கள்) எண்ணிக்கை 20 சதவீதம். பின்னால் கூறப்பட்டப் பள்ளிக்கூட ஆசிரியர்களின் எண்ணிக்கை—மீண்டும் சமயக் கல்வி ஆசிரியர்கள் அல்லாமல்—2.5 சதவீதமாகும்.

இந்த விவரங்களிலிருந்து மதக்குருக்களின் பள்ளிக்கூடங்களின் பரிதாபகரமான நிலைமையைப் பார்க்க முடியும்!

இந்த கணக்கெடுப்பு, ஒரு மாணவனுக்கு சராசரியாக எத்தனை சதுர அர்ஷீன்[40] தரை இடமும், எத்தனை கன அளவு அர்ஷீன் காற்றும் தேவை என்ற விவரங்களைச் சேகரித்துள்ளது. அதாவது பள்ளிக்கூடங்களில் உள்ள நெருக்கத்தைக் கணக்கிட்டுள்ளது.

ஸேம்ஸ்துவோப் பள்ளிக்கூடங்கள் 2.6 சதுர அர்ஷீன் தரை இடத்தையும் 10.1 கன அர்ஷீன் காற்றையும், மதக்குருக்களின் பள்ளிக்கூடங்கள் 2.4 சதுர அர்ஷீன் தரை இடத்தையும், 9.6 கன அர்ஷீன் காற்றையும் முறையே பெற்றுள்ளன.

தரை இடமானது வெளிச்சம் தரும், ஜன்னலின் பரப்பைப் போல் ஆறு மடங்குதான் இருக்க வேண்டும். ஆனால் உண்மையில் அது ஒன்பது மடங்கு பெரிதாக உள்ளது. அதாவது அதிக நெருக்கமாக மட்டுமல்ல அதிக இருட்டாகவும் உள்ளது.

இந்த விவரங்கள் எல்லாம் மிகமிக அற்பமானவை. நம்முடைய பள்ளிக்கூடங்களின் பிச்சைக்காரத்தனமான நிலையைப் பற்றிய விரிவான, நுட்பமான முழு விவரங்கள் சேகரிக்கப்படாமல் தடுக்க மிகக் கடுமையாக அமைச்சகம் முயன்றது.

அப்படியிருந்தும் கூட இத்தகைய பூர்த்தி செய்யப் படாத அதிகாரப் பூர்வமாக தடுக்கப்பட்ட, மோசமான முறைகளில் சேகரிக்கப்பட்ட விவரங்களில் பள்ளிக்கூடங் களின் பிச்சைக்காரத் தனமான நிலைமை முனைப்பாகக் காணப்படுகின்றது.

வருகிற பொதுக்கல்வி பற்றிய அகில ருஷ்ய காங்கிரசில் கலந்து கொள்ள இருக்கும் தொழிலாளர்களின் கலாச்சார, கல்வி, தொழிற்சங்க ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளின் முன் வைக்கப்படும் ஜீவாதாரமான வேலைகளில் ஒன்று இந்தப் பிரச்சினையைப் பற்றி பரிபூர்ணமாக சமர்ப்பிப்பதும்; நம் முடைய பள்ளிக்கூடங்கள், ஆசிரியரைப் பற்றிய நிலைமை யைக் கூடுமான வரைத் தெளிவாக்குவதும் ஆகும்.

புரொலித்தார்ஸ்கயா பிராவ்தா,
இதழ் 10,
டிசம்பர் 18, 1913

நூல் திரட்டு,
தொகுதி 24,
பக்கங்கள் 239-240

## தேசிய இனப் பிரச்சினைப் பற்றிய விமர்சனக் குறிப்புகள்

### என்னும் புத்தகத்திலிருந்து

''தேசியக் கலாசாரம்'' என்பது—அந்தப் பதத்தின் வழக்கமான அர்த்தத்தில், அதாவது பள்ளிகளும் இன்ன பிறவும்—தற்போது உலகின் எல்லா நாடுகளிலும் சமயக் குருமார்கள், முதலாளித்துவ தேசியவெறியர்கள் ஆகியோரது ஆதிக்க வலிமை வாய்ந்த செல்வாக்குக்கு உட்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. புந்துக்காரர்கள் ''கலாசார-தேசியச்'' சுயாட்சியை ஆதரித்து வாதாடுகையில், தேசிய இனங்கள் நிறுவப்படுவதானது அவற்றுள் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தை அதற்குப் புறம்பான தாக்கங்கள் எவற்றாலும் களங்கமுறாமல் தூய்மையாய் இருக்கச் செய்யும் என்று கூறுகிறார்கள்—தெளிவாகவே இது நகைக்கத்தக்க குதர்க்கவாதமே ஆகும். எந்த முதலாளித்துவ சமுதாயத்திலும் பிரதானமாய்ப் பொருளாதார, அரசியல் துறையில் தான் முனைப்பான வர்க்கப் போராட்டம் நடைபெறுகின்றது. இதனிடமிருந்து பள்ளிகளின் துறையைப் பிரித்து வைப்பதானது, முதலாவதாக அபத்தமான அளவுக்குக் கற்பனாவாதமாகும், ஏனெனில் பள்ளிகள் (பொதுவாகத் ''தேசியக் கலாசாரம்'' எப்படியோ அதே போல) பொருளாதாரத்திலிருந்தும் அரசியலிலிருந்தும் பிரிக்கப்பட முடியாதவை. இரண்டாவதாக, ஒரு முதலாளித்துவ நாட்டின் பொருளாதார,மற்றும் அரசியல் வாழ்க்கைதான் அபத்தமான, காலங்கடந்து விட்டவையான தேசியத் தடை மதில்களும் தப்பெண்ணங்களும் தகர்த்து நொறுக்கப்படுவதை ஒவ்வொரு தப்

படியிலும் அவசியமாக்குகிறது; ஆனல் பள்ளி அமைப்பையும் ஒத்த பிறவற்றையும் பிரித்து வேறுபடுத்துவதானது ''தூயச்'' சமயக் குருமார்களது அதிகாரத்தையும் ''தூய'' முதலாளித்துவ தேசியவெறியையும் நிரந்தரமாக்கவும் கடுமையாக்கவும் பலப்படுத்தவும் தான் செய்யும்.

பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த முதலாளிகளும் கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் சேர்ந்து அமர்ந்து முழு அளவுக்கு ஒன்றுகலக்கின்றனர். பல்வேறு தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் ஆலைகளில் ஒன்று சேர்ந்து வேலை செய்கிருர்கள். மெய்யாகவே காரியகரமான ஆழ்ந்த அரசியல் பிரச்சினைகள் யாவற்றிலும் வர்க்கங்களின் அடிப்படையில் தரப்புகள் உருவாகின்றனவே அன்றி, தேசிய இனங்களின் அடிப்படையில் அல்ல. பள்ளிகளையும் இன்ன பிறவற்றையும் பற்றிய விவகாரங்களை ''அரசு அதிகாரத்தின் வரம்புகளிலிருந்து விலக்கி'', தேசிய இனங்களது கைக்கு மாற்றிடுவதானது, தேசிய இனங்களை இணைத்திடும் பொருளாதாரத்திலிருந்து சொல்லப் போனல் சமூக வாழ்வின் மிக உயர்ந்த சித்தாந்தத் துறையைத் தேசிய கலாசாரம் அல்லது சமயக் குருமார்களின் அதிகாரம் மற்றும் வெறியின் தேசியப் பயிர் வேறு எங்கையும் விட எளிதாய் வளரும் துறையைப் பிரித்து விலக்குவதற்கான முயற்சியையே குறிப்பதாகும்.

''நிலவரைக்கு உட்படாத'' (வாழும் நிலப்பரப்புக்கு உட்படாத, இந்த அல்லது அந்த தேசிய இனம் வாழுகிற நிலப்பரப்புடன் சம்பந்தப்படாத) அல்லது ''கலாசார-தேசியச்'' சுயாட்சித் திட்டம் என்பதன் நிறைவேற்றம் நடைமுறையில் குறிப்பது ஒன்றே ஒன்றுதான்: **பள்ளிக்கூட விவகாரங்கள் தேசிய இன வாரியாகப் பிரிக்கப்படுதல் என்பது தான்,** அதாவது பள்ளிக்கூட விவகாரங்களில் தேசிய இன ஆட்சி மன்றங்கள் புகுத்தப்படுதல் என்பது தான். பிரபலமான புந்துத் திட்டத்தின் மெய்யான உட்பொருள் குறித்துப்போதிய அளவு சிந்தனை செலுத்திஞல், சோஷலிசத்துக்காக நடைபெறும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் கண்ணேட்டத்திலிருந்து வேண்டாம், ஜனநாயகத்தின் கண்ணேட்டத்திலிருந்து கூட இத்திட்டம் எப்படி முழுக்க முழுக்கப் பிற்போக்கானது என்பதைப் புரிந்து கொண்டு விடலாம்.

பள்ளிக்கூடங்களைத் ''தேசிய மயமாக்குதலுக்கு'' ஒரேயொரு உதாரணத்தையும் ஒரேயொரு திட்டத்தையும் கொடுத்தோமானால்,இந்த அம்சம் அமோகமாய் கண்கூடாகி விடும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் வட அரசுகள், தென் அரசுகள் என்பதான பிரிவினை, வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இது நாள்வரை நடப்பில் இருந்து வரும் ஒன்றாகும். வட அரசுகள் சுதந்திர மரபுகளையும் அடிமை உடைமையாளர்களுக்கு எதிரான போராட்ட மரபுகளையும் அதிகம் பெற்றுள்ளவை. தென் அரசுகள் அடிமையுடைமை மரபுகளையும் நீக்ரோவரை வேட்டையாடுதலின் மீதமிச்சங்களையும் அதிகம் பெற்றுள்ளவை—இங்கே நீக்ரோக்கள் பொருளாதார ஒடுக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கலாசாரத்தில் பிற்பட்ட நிலையில் உள்ளனர் (எழுத்தறியாதோரின் சதவீதம் நீக்ரோவரிடம் 44, வெள்ளையரிடம் 6), இப்படி இன்னும் பலவற்றையும் குறிப்பிடலாம். வட அரசுகளில் நீக்ரோக் குழந்தைகள் வெள்ளையர் குழந்தைகள் செல்லும் அதே பள்ளிக்கூடங்களுக்குச் செல்கிறார்கள். தென் அரசுகளில் நீக்ரோக் குழந்தைகளுக்குத் தனியே ''தேசிய இன'' அல்லது வருண இன—எப்படியும் கொள்ளலாம்—பள்ளிக்கூடங்கள் உள்ளன. பள்ளிக்கூட விவகாரங்கள் ''தேசிய மயம்'' ஆக்கப்படுதலுக்கு இது தான் ஒரேயொரு உதாரணம் என்பதாகத் தெரிகிறது.

பெயிலிஸ் வழக்கைப்[41] போன்ற பலவும் இது நாள் வரை சாத்தியமாய் இருந்து வரும் நாடு ஒன்று கிழக்கு ஐரோப்பாவில் உள்ளது—இங்கே யூதர்கள் நீக்ரோவரைக் காட்டிலும் மோசமான நிலையில் புரிஷ்கேவிச்சுகளால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறார்கள். யூதர்களது பள்ளிக்கூடங்களைத் தேசிய மயமாக்கிடும் திட்டம் ஒன்று இந்நாட்டில் அண்மையில் அமைச்சரகத்தால் கருதப்பட்டு வந்தது. நல்ல வேளையாக இந்தப் பிற்போக்குவாதக் கற்பனாவாதம், ஆஸ்திரியக் குட்டி முதலாளித்துவப் பகுதியோரின் கற்பனாவாதத்தைப் போல் நிறைவேற முடியாது போவது பெரிதும் சாத்தியமாகலாம். ஆஸ்திரியக் குட்டிமுதலாளித்துவப் பகுதியோர் முரணற்ற ஜனநாயகத்தைச் சித்தி பெறச் செய்யவோ, தேசியப் பூசல்களுக்கு முடிவு கட்டவோ முடியும் என்பதில் நம்பிக்கை இழந்தோராகி, பள்ளிக்கூடங்களைப் பகிர்ந்து கொள்வதில்

தேசிய இனங்கள் சண்டைக்கு நிற்காதவாறு செய்யும் பொருட்டு, நாட்டின் பள்ளிக் கல்வி விவகாரங்களில் அவற்றுக்குத் தனிப் பிரிவுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்..., ஆனால் ஒரு ''தேசியக் கலாசாரம்'' இன்னொன்றுக்கு எதிராய் நிரந்தரமாய்ச் சண்டைக்கு நிற்பதற்காகத் தம்மை ''வகுத்தமைத்துக்'' கொண்டுள்ளனர்.

தேசியச் சிறுபான்மையோரது உரிமைகளை உத்தரவாதம் செய்வதானது, முழுநிறைச் சமத்துவக் கோட்பாட்டிலிருந்து பிரிக்க முடியாதவாறு அத்துடன் இணைந்துள்ளது. சேவெர்னயா பிராவ்தாவில்[42] வெளிவந்த எனது கட்டுரையில் இந்தக் கோட்பாடு, அதற்குப் பிற்பாடு வந்த அதிகாரபூர்வமான, அதிக துல்லியம் வாய்ந்த தீர்மானமாகிய மார்க்சியவாதிகளது மாநாட்டுத் தீர்மானத்தில் வெளியிடப்பட்டுள்ளது போல் ஏறத்தாழ அதே விதத்தில் தான் எடுத்துரைக்கப்பட்டது. மார்க்சியவாதிகளது மாநாட்டுத் தீர்மானம், ''எந்த ஒரு தேசிய இனமும் அனுபவித்து வரும் எல்லா விதமான தனியுரிமைகளும், மற்றும் தேசியச் சிறுபான்மையோரது உரிமைகளை மீறுகிற செயல்கள் யாவும் செல்லத்தக்கவை அல்ல என்று அறிவிக்கும் அடிப்படைச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்'' என்று கோருகிறது.

திரு. லீப்மன் இந்த வரையறுப்பைக் கேலி செய்ய முயலுகிறார்: ''தேசியச் சிறுபான்மையோரது உரிமைகள் எவை என்பதை யார் அறிவார்?'' என்று அவர் கேட்கிறார். சிறுபான்மையோர் தேசியப் பள்ளிக்கூடங்களில் ''தமது சொந்தப் பாடத் திட்டத்தைக்'' கைக்கொள்வதற்குள்ள உரிமை இந்த உரிமைகளில் அடங்கியுள்ளதா? என்று தெரிந்து கொள்ள விரும்புகிறார். தேசியச் சிறுபான்மையானது தனது சொந்த நீதிபதிகளையும் அதிகாரிகளையும் தமது தாய்மொழியில் பாட போதனை நடைபெறும் பள்ளிக்கூடங்களையும் பெற உரிமையுடையோராவதற்கு அது எவ்வளவு பெரிதாய் இருக்க வேண்டும்? ''நேர்நிலை'' தேசிய இன வேலைத்திட்டம் இன்றியமையாதது என்பதை இந்தக் கேள்விகளிலிருந்து அனுமானித்துக் கொள்ள வேண்டுமென திரு. லீப்மன் விரும்புகிறார்.

ஏதோ சிறுதிறக் கூறுகளையும் தனிப்பட்ட விவரங்களை

யும் பற்றி விவாதிப்பதாகப் பாவனை செய்து கொண்டு, நமது புந்துக்காரர் எப்படிப்பட்ட பிற்போக்குக் கருத்துக் களைப் புகுத்தப் பார்க்கிறார் என்பதை உண்மையில் இந்தக் கேள்விகள் தெளிவாகக் காட்டுகின்றன.

தமது தேசியப் பள்ளிக்கூடத்தில் ''தமது சொந்தப் பாடத் திட்டம்''!.. அருமைத் தேசியவாத-சோஷலிஸ்டே, மார்க்சியவாதிகள் பொதுவான பள்ளிக்கூட வேலைத்திட்டத் துக்காக நிற்பவர்கள். அவர்களது திட்டம், உதாரணமாய், நிபந்தனை இல்லாத முறையில் சமயச் சார்பற்ற பள்ளிக் கூடங்கள் வேண்டுமெனக் கோருகிறது. மார்க்சியவாதிகளது கண்ணோட்டத்தின்படி ஜனநாயக அரசில் இந்தப் பொது வான திட்டத்திலிருந்து விலகிச் செல்ல எவ்விடத்திலும் எக் காலத்திலும் அனுமதிக்கப்படலாகாது (எந்த ''வட்டாரப்'' பாடங்கள், மொழிகள் முதலானவற்றை இந்தத் திட்டத்தில் புகுத்துவது என்கிற பிரச்சினை அந்தந்த வட்டாரத்து வாசி களால் தீர்மானிக்கப்பட வேண்டும்). ஆனால் பள்ளிக்கூட விவகாரங்களை ''அரசின் அதிகாரத்திலிருந்து விலக்கி'' தேசிய இனங்களிடம் ஒப்படைத்தல் என்ற கோட்பாட்டிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், தொழிலாளர்களாகிய நாம் நமது ஜனநாயக அரசில் ''தேசிய இனங்கள்'' மக்களது பணத்தைச் சமயப் பள்ளிக்கூடங்களுக்காகச் செலவிட அனு மதிக்க வேண்டும் என்பது தான்! திரு. லீப்மன் தம்மை அறி யாமலே ''கலாசார-தேசியச் சுயாட்சியின்'' பிற்போக்குத் தன்மையைத் தெளிவாகவே தெரியப்படுத்தி விடுகிறார்!

''தேசியச் சிறுபான்மையானது எவ்வளவு பெரிதாய் இருக்க வேண்டும்?'' புந்துக்காரர்களுக்குப் பிடித்தமான ஆஸ்திரிய வேலைத்திட்டத்திலுங்கூட இது வரையறுக்கப் படவில்லை: (நம்முடையதைக் காட்டிலும் மேலும் சுருக்க மாகவும் மேலும் குறைவான தெளிவோடும்) அது கூறுவதா வது: ''பேரரசு நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் தனிச் சட்டம் ஒன்றால் தேசியச் சிறுபான்மையோரது உரிமை பாதுகாக்கப்படும்'' (பிரியூன் வேலைத்திட்டத்தின் §4).

ஆஸ்திரிய சமூக-ஜனநாயகவாதிகளிடம் அந்தத் தனிச் சட்டம் என்ன, யார் யார் எல்லாம் தேசியச் சிறுபான்மை யோர், பாதுகாக்கப்படப் போகிற உரிமைகள் எவை என் றெல்லாம் யாரும் கேட்கவில்லையே, ஏன்?

ஏன் கேட்கவில்லை என்ருல், தனிப்பட்ட விவரங்களை வேலைத்திட்டத்தில் வரையறுத்துக் குறிப்பிடுவது பொருத்தமாயிராது, சாத்தியமும் அல்ல என்பது அறிவுள்ளவர்கள் எல்லோருக்கும் புரிகிறது. வேலைத்திட்டமானது அடிப்படைக் கோட்பாடுகளை மட்டும்தான் வரையறுத்திடுகிறது. இந்த உதாரணத்தில் அடிப்படைக் கோட்பாடு ஆஸ்திரியர்களைப் பொறுத்த வரை உட்பொருளாய் அடங்கியிருக்கிறது; ருஷ்ய மார்க்சியவாதிகளது சமீபத்திய மாநாட்டின் தீர்மானத்தில்[43] நேரடியாகவே எடுத்துரைக்கப்படுகிறது. எந்த விதமான தேசிய இனத் தனியுரிமைகளும் இல்லை, தேசிய இனங்களது எந்த விதமான அசமத்துவமும் இல்லை என்பதே அந்தக் கோட்பாடு.

புந்துக்காரருக்குப் பிரச்சினையைத் தெளிவுபடுத்தும் பொருட்டு ஸ்தூலமான உதாரணம் ஒன்றை எடுத்துக் கொள்வோம். 1911 ஜனவரி 18 பள்ளிக்கூடக் கணக்குப் பதிவின்படி பொதுக் "கல்வி" அமைச்சகத்தின் கீழ் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகரிலிருந்த ஆரம்பப் பள்ளிகளில் 48,076 மாணுக்கர்கள் இருந்தனர். இவர்களில் 396 பேர், அதாவது ஒரு சதவீதத்துக்கும் குறைவானேர் யூதர்கள். ஏனையோரது விவரங்களாவன: ருமேனியர்கள்—2, ஜியார்ஜியார்கள்—1, ஆர்மீனியர்கள்—3 இன்ன பிற. பல்வேறுபட்டதாயுள்ள இந்த உறவுகளும் நிலைமைகளும் உள்ளடங்கும்படியான "நேர்முக" தேசிய இன வேலைத்திட்டத்தை வகுத்திடுவது சாத்தியமா? (செயிண்ட் பீட்டர்ஸ்பர்க்கை ருஷ்யாவில் அதிக அளவுக்கும் கலப்படமான நகரவாசிகளைக் கொண்ட நகராய் ஒருபோதும் சொல்ல முடியாது.) புந்துக்காரர்களைப் போல் தேசிய இன "நுட்பங்களில்" விற்பன்னர்களாய் இருப்போருங்கூட இம்மாதிரியான ஒரு வேலைத்திட்டத்தை வகுத்திடுவது முடியாத காரியமாகும்.

ஆனல் எந்த சிறுபான்மையினரது உரிமைகளையும் மீறுவதாய் இருக்கும் எந்த நடவடிக்கையும் செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்கும் அடிப்படைச் சட்டம் ஒன்று நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் அடங்கியிருக்குமாயின், அரசின் செலவில், உதாரணமாய், ஹெப்ரு மொழி, யூதர்களது வரலாறு போன்றவற்றுக்காக விசேஷ ஆசிரியர்கள் அமர்த்தப்படுவதற்கோ—யூத, ஆர்மீனிய அல்லது ருமேனியக்

குழந்தைகளுக்காக, அல்லது ஒரேயொரு ஜார்ஜியக் குழந்தைக்காகக் கூட பாடங்கள் நடத்த அரசின் உடைமையிலுள்ள இட வசதிகள் உபயோகிக்கப்படுவதற்கோ—தடைவிதிக்கும் உத்தரவுகள் ரத்து செய்யப்பட வேண்டுமென எந்தக் குடிமகனும் கோர முடியும். எப்படியும், தேசியச் சிறுபான்மையோரது நியாயமான, அறிவுக்கு கந்த எல்லாக் கோரிக்கைகளையும் சமத்துவத்தின் அடிப்படையில் திருப்தி செய்வது எவ்விதத்திலும் முடியாத காரியமல்ல; சமத்துவத்துக்கான பிரசாரம் தீங்கானதென்று யாரும் சொல்ல மாட்டார்கள். இதற்கு மாறாக, தேசிய இன வழியில் பள்ளிக்கூடங்களைப் பிரித்துப் பாகுபாடு செய்ய வேண்டும் என்கிற பிரசாரம், உதாரணமாகச், செயிண்ட் பீட்டர்ஸ்பர்கிலுள்ள யூதக் குழந்தைகளுக்காக விசேஷப் பள்ளிக்கூடங்கள் வேண்டும் என்கிற பிரசாரம், நிச்சயமாய்த் தீங்கானது—ஒவ்வொரு தேசியச் சிறுபான்மைக்காகவும், ஒன்று, இரண்டு அல்லது மூன்று குழந்தைகளுக்காகத் தேசிய இனப் பள்ளிக்கூடங்கள் அமைத்திடுவது அறவே முடியாத காரியமாகும்.

மேலும், நாடு தழுவிய அளவிலான எந்தச் சட்டத்திலும், விசேஷப் பள்ளிக்கூடங்களுக்கு, அல்லது கூடுதலான பாடங்களுக்காக விசேஷ ஆசிரியர்களை நியமிக்கவும் இன்னபிறவற்றுக்கும் உரிமை பெறுவதற்காகத் தேசியச் சிறு பான்மை எவ்வளவு பெரிதாய் இருக்க வேண்டுமென்று வரையறை செய்வது சாத்தியமன்று.

இவ்வாறன்றி, சமத்துவத்தை நிலைநாட்டும் நாடு தழுவிய அளவிலான சட்டத்தை விவரமாக அமைத்திடவும், விசேஷ விதிமுறைகள் மூலமும் பிராந்திய அவைகள், நகரங்கள், ஸேம்ஸ்துவோக்கள், கிராமச் சமுதாயங்கள் முதலானவற்றின் தீர்மானங்கள் மூலமும் வளர்த்துச் செல்லவும் முடியும்.

*1913 அக்டோபர்-டிசம்பரில் எழுதப்பட்டது*

நூல் திரட்டு,
*தொகுதி 24,*
*பக்கங்கள் 133-135, 140-142*

## அ. ம. கோர்க்கிக்கு

### அ.ம. கோர்க்கிக்காக

மதிப்பிற்குரிய அலெக்சேய் மக்சீமவிச்!

உங்களுக்கு பதிவு செய்யப்பட்ட உறையில் என்னுடைய மனேவியின் **மக்கள் கல்வியும் ஜனநாயகமும்**[44] என்ற சிறு நூலே அனுப்பி உள்ளேன்.

இந்த ஆசிரியர் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நீண்ட நாட்களாகவே கல்விப் பிரச்சனேகளே ஆழ்ந்து கற்றுக் கொண்டு வந்துள்ளார். இந்தச் சிறு நூலில் ஐரோப்பாவின், அமெரிக்காவின் புதிய பள்ளிக்கூடத்தைப் பற்றிய அவரது சொந்த கணிப்புகளும் விவரங்களும் சேகரிக்கப்பட்டுள் ளன. அதன் உள்ளடக்கத்திலிருந்து முதல் பகுதியில் ஜன நாயக கருத்தோட்டங்களில் வரலாற்றுக் குறிப்பும் கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். இது கூட மிக முக்கியம். ஏன் எனில் கடந்தகால பெரிய ஜனநாயகவாதி களின் கருத்துகள் வழக்கமாக மக்களால் தவருக உருவாக்கப் பட்டதானவையாக அல்லது தவருன கண்ணேட்டத்திலி ருந்து உருவாக்கப் பட்டதானவையாக உள்ளன. உங்களால் நேரத்தை ஒதுக்கி இதைப் படிக்கமுடியுமா என்பது எனக்குத் தெரியாது. அல்லது உங்களுக்கு இதில் ஆர்வம் உண்டா என்பதும் தெரியாது. அத்தியாயம் 2ம், 12ம் ஓர் எடுத்துக் காட்டாகப் பணிபுரிய முடியும். சமீப ஆண்டுகளில் கிடைத்த விவரங்களின் அடிப்படையில் சமீபகாலத்தில், ஏகாதிபத்திய வாதிகள் சகாப்தத்தில் ஏற்பட்ட பள்ளி மாற்றங்கள்

*எழுதப்பட்டுள்ளன. மேலும் ருஷ்யாவில் உள்ள ஜனநாயக வாதத்திற்கு இந்த மாற்றங்கள் மிகவும் சுவையான ஒளியைத் தருகின்றன.*

*இந்தச் சிறு புத்தகத்தை வெளியிட உதவுவதன் மூலம் நேரடியாகவோ மறைமுகமாகவோ நீங்கள் எனக்கு ஒரு பெரிய சலுகையைச் செய்கிறீர்கள். இத்துறையில் இலக்கியங்களுக்கான கிராக்கி ருஷ்யாவில் இப்பொழுது அதிக மாக அதிகரிக்கலாம் போலுள்ளது.*

*மதிப்புகளும் வாழ்த்துகளும்.*

**வி. உலியானவ்**

Vl. Ulianow. Seidenweg. 4a, Bern.

*1916 பிப்ரவரி 8க்கு முன் எழுதப் பட்டது.*
*பீட்டர்ஸ்பர்க்கிற்கு அனுப்பப்பட் டது*

*நூல் திரட்டு,*
*தொகுதி 49,*
*பக்கங்கள் 182-183*

## கட்சித் திட்டத்தைத் திருத்துவது பற்றிய

### விவரங்களிலிருந்து

### திருத்தப்பட்டத் திட்ட நகலுக்கு.

### திட்டத்தின் பழைய, புதிய வாசகங்கள்

வாசகருக்கு பழைய, புதிய திட்டத்தின் வாசகங்களை ஒப்பிட்டுப் பார்க்க வசதியாகவும் எளிதாகவும் இருப்பதற் காகக் கீழ்க்கண்ட முறையில் இரு வாசகங்களும், ஒன்றுகவே அச்சிடப்பட்டுள்ளன:

புதிய திட்டத்தில் மாற்றப்படாமல் இருக்கும் பழைய திட்டத்தின் பகுதிகள் சாதாரண எழுத்துகளில் தரப்பட்டுள் ளன;

புதிய திட்டத்திலிருந்து முழுமையாக நீக்கப்பட வேண்டிய பழைய திட்டப் பகுதி கள் சாய்ந்த எழுத்துகளில் கொடுக்கப் பட்டுள்ளன;

**பழைய திட்டத்தில் இல்லாத பகுதிகள் புதிய திட்டத்தில் தடித்த எழுத்துகளில் கொடுக்கப் பட்டுள்ளன.**

*8. அரசு* செலவிலும் *உள்ளூர் சுய அரசாங்கமான ஸ்தல ஸ்தாபனங்களின் செலவிலும்,* **பள்ளிக்கூடங்களில்** *மக்கள் தங்கள்* சொந்த *மொழியில் கல்வியைக் கற்கும் உரிமை நிறுவப்பட வேண்டும்; கூட்டங்களில் தன்னுடைய* சொந்த *மொழியைப் பேச ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமை; எல்லா ஸ்தல சமுதாய, அரசு நிறுவனங்களிலும்* சொந்த *மொழி அரசாங்க பூர்வமான ஆட்சிமொழிக்கு சமமாக அறிமுகப்படுத்தப்பட* **வேண்டும்; கட்டாய அதி காரப் பூர்வமான ஆட்சிமொழி ஒழிக்கப்பட வேண்டும்.**

*13. அரசிலிருந்து சர்ச்சைப் பிரிப்பது, சர்ச்சிலிருந்து*

*பள்ளிக்கூடத்தைப் பிரிப்பது;* பள்ளிக்கூடம் முழுக்க முழுக்க மத சார்பற்றதாக இருத்தல்.

*14. பதினாறு வயது வரையுள்ள எல்லா இரு பால் குழந்தைகளுக்கும் இலவச, கட்டாய பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும்; ஏழை குழந்தைகளுக்கு உணவும் உடையும் பள்ளிக்கூடத் தேவைகளும் அரசு செலவில் அளித்தல்.*

14. பதினாறு வயதுவரையுள்ள எல்லா இரு பால் குழந்தைகளுக்கும் இலவச, கட்டாய பொது கல்வியும் பாலிடெக்னிக் கல்வியும் (எல்லா முக்கிய உற்பத்தி துறைகளின் தத்துவ, நடைமுறை நிலைகளை மாணவர்களுக்குப் பரிச்சயப்படுத்துதல்); குழந்தைகளை சமுதாய-உற்பத்தி வேலையுடன் மிக நெருக்கமாக ஒருங்கிணைக்கும் பயிற்சி அளித்தல்.

15. எல்லா மாணவர்களுக்கும் உணவையும் உடையையும் பள்ளிக்கூட தேவையையும் அரசு செலவில் அளித்தல்.

16. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தல சுய ஸ்தாபனங்களின் கைகளில் மக்கள் கல்வி ஒப்படைக்கப்பட வேண்டும்; பள்ளிக்கூட பாடத்திட்ட ஏற்பாட்டில் அல்லது ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதில் மத்திய அரசாங்கம் தலையிட அனுமதிக்கலாகாது; ஆசிரியர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பின்னால் கூறப்பட்டவர்களுக்கு (மக்களுக்கு) தகுதியற்ற ஆசிரியர்களை நீக்கும் உரிமையும் இருக்க வேண்டும்.

*5. பள்ளி செல்லும் வயதுடைய (பதினாறு வயதுக்கு உட்பட்ட) குழந்தைகளின் உழைப்பைத் தொழில் அதிபர்கள் பயன்படுத்தத் தடைசெய்தல்; காளைப் பருவத்தினரின் (பதினாறு முதல் பதினெட்டு வயது வரை) வேலை நாளை ஆறு மணி நேரத்திற்குக் கட்டுப் படுத்துதல்.*

5. *பள்ளி செல்லும்* வயதுடைய (பதினாறு வயதுக்கு உட்பட்ட) குழந்தைகளின் உழைப்பைத் தொழில் அதிபர்கள் பயன்படுத்தத் தடை செய்தல், காளைப் பருவத்தினரின் (பதினாறு முதல் இருபது வயதுவரை) வேலை நாளை நான்கு மணி நேரத்

**திற்குக் கட்டுப்படுத்துதல், காளைப் பருவத்தினரை ஆரோக்கிய மற்ற தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் இரவில் வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தல்.**

*ஏப்ரல்-மே 1917ல் எழுதப்பட்டது*

நூல் திரட்டு,
*தொகுதி 32,*
*பக்கங்கள் 147, 154ன் பாரா 8,*
*பக்கம் 155ன் பாரா 13-16,*
*பக்கம் 156ன் பாரா 5*

# பெத்ரோகிராதில் பொது நூலகத்தின் பணிகளைப் பற்றி

*புத்திசாலித்தனமாக, விவேகமாக, வெற்றிகரமாக புரட்சியில் பங்குகொள்ள படிப்பது அவசியம்.*

*ஜாரிஸம் பல ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் கல்வியில் பெரிய அழிவை உண்டாக்கிவிட்டது. அதனால் பெத்ரோகிராதில் நூலகப் பணி மகாமோசமாகியுள்ளது.*

*மேற்கத்திய சுதந்திர நாடுகளில் முக்கியமாக சுவிட்ஸர்லாந்திலும் வட அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் நீண்ட நாட்களாக நடை முறைப்படுத்தப்பட்ட கொள்கையின் அடிப்படையில் கீழ்க்கண்ட முக்கிய மாற்றங்களை உடனடியாகவும், சந்தேகத்திற்கு இடமில்லாமலும் செய்வது அவசியமாகும்:*

*1) பொது நூலகம் (முன்னுளைய அரசு நூலகம்) உடனடியாக பெத்ரோகிராதில் (பீட்டர்ஸ்பர்கில்) உள்ள எல்லா அரசு நூலகங்கள், பொது நூலகங்கள், மாநிலங்களில் உள்ள நூலகங்கள் வெளிநாட்டு நூலகங்கள் (பின்லாந்து, சுவீடன் இத்தியாதி) ஆகியவற்றுடன் புத்தகப் பரிவர்த்தனை செய்தலைத் தொடங்க வேண்டும்.*

*2) ஒரு நூலகத்திலிருந்து மற்றொரு நூலகத்திற்குப் புத்தகங்களை அனுப்ப ஆகும் தபால் செலவு இலவசமாக இருக்க வேண்டும் என்று சட்டத்தால் அறிவிக்கப்பட வேண்டும்.*

3) நாகரிகமடைந்த நாடுகளில் பணக்காரர்களுக்காகத் தனியார் நூலகங்களும் வாசக அறைகளும் திறந்து இருக்கும் பழக்கத்தைப் போல்,

திருவிழாக்கள், ஞாயிற்றுக்கிழமைகள் ஆகிய நாட்களைத் தவிர்க்காமல் தினமும் காலை 8 மணி முதல் 11 மணி வரை நூலகத்தின் வாசக அறை திறந்திருக்க வேண்டும்.

4) பத்தில் ஒன்பது பேர் பயனற்ற வேலையில் ஈடுபட்டிருப்பது மட்டுமல்ல, மிக மோசமான தீங்கு பயக்கக்கூடிய வேலையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் கல்வி அமைச்சகத்தின் பல்வேறு அலுவலகங்களிலிருந்து தேவையான ஆட்கள் உடனே பொது நூலகத்துக்கு மாற்றப்பட வேண்டும்.

நவம்பர் 1917ல் எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 132-133

## 1918ம் ஆண்டு, ஆகஸ்டு 28ம் தேதி நடைபெற்ற கல்வியைப் பற்றிய அகில-ருஷ்ய காங்கிரசில் ஆற்றிய உரையிலிருந்து

நாம் இப்பொழுது தொடுத்திருக்கும் போராட்டத்தில் மக்கள் கல்வி ஓர் இணைக்கூறான பகுதியாகும். பாசாங்கு, பொய் ஆகியவற்றை முழுமையான, வெளிப்படையான உண்மையால் நாம் எதிர்க்க முடியும். முதலாளித்துவம் மூடு திரையாகப் பயன்படுத்தும் ''பெரும்பான்மையினரின் மன வுறுதி'' என்பதனை போர்வையாகப் போர்த்திக் கொண்டது. இதை இந்தப் போர் போதுமான அளவு வெளிப்படையாகக் காட்டிவிட்டது. விரல் விட்டு எண்ணக் கூடிய பண ஆதிக்க வாதிகள் தங்களுடைய சொந்த நலன்களுக்காக மக்கள் முழு வதையும் படுகொலைக்கு இழுத்துச் செல்லுகிறார்கள் என் பதை இது காட்டிவிட்டது. முதலாளித்துவ ஜனநாயகம், பெரும்பான்மையினரின் நலன்களுக்குச் சேவை புரிகிறது என்ற நம்பிக்கையை முழுமையாக நம்ப முடியாததாக ஆக்கிவிட்டது. நம்முடைய அரசியல் சட்டமும் நம்முடைய சோவியத்துகளும் ஐரோப்பாவிற்குப் புதியவை. ஆனால் நாம் ஏற்கெனவே அவற்றுடன் 1905ம் ஆண்டு புரட்சியின் அனுபவத்தின் வழி பரிச்சயமாகிவிட்டோம். பொய்யும் பாசாங்குத்தன்மையும் நிறைந்த முதலாளித்துவ ஜனநாயகத் தினை அம்பலப்படுத்த நம் அரசியல் சட்டமும் சோவியத்து களும் மிகச் சிறந்த கிளர்ச்சி மற்றும் பிரசார சாதனங் களாகச் சேவை செய்கின்றன. நாம் உழைக்கும், சுரண்டப் பட்ட மக்களின் ஆட்சியை வெளிப்படையாக அறிவித்து விட்டோம். இதில்தான் நம்முடைய பலம் மற்றும் நம்மை

வெல்ல முடியாதத்தன்மை ஆகியவற்றின் ஊற்றுக்கன் ளுகவும் இருக்கின்றது.

மக்கள் கல்வித் துறையிலும் இதே நிலைமைதான்: பள்ளிக் கூடம் அரசியலுக்கு அப்பால் இருக்க முடியும் என்றும், சமுதாயத்திற்கு முழுமையாக சேவை செய்ய முடியும் என்றும் அறிவித்த போது முதலாளித்துவ அரசு அது எவ்வளவுக் கெவ்வளவு அதிகப் பண்பாடுடையதாக உள்ளதோ அவ் வளவுக்கவ்வளவு அதிக மிகத் தந்திரமாக பொய் சொல்லிற்று.

உண்மையில் பள்ளிக்கூடம் முதலாளித்துவ வர்க்க ஆட்சி யின் கருவியாக முழுமையாக மாற்றப்பட்டதைத் தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லை. அந்தப் பள்ளிக்கூடங்கள், முதலாளித்துவ வகுப்பு மனநிலையால் முழுமையாக ஆழ்த்தப் பட்டு விட்டன. முதலாளிகளுக்குக் கீழ்ப்படிந்த கையாட்களை யும் திறமையான தொழிலாளர்களையும் வழங்குவதுதான் அவற்றின் நோக்கம். நவீன தொழில் நுணுக்க அதிசயங்கள் லட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பூண்டோடு அழிக்கும் சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், போரின் மூலம் செல்வத்தைக் குவிக்கும் முதலாளிகளுக்கு நம்ப முடியாத அளவு இலாபங்களை அவை உருவாக்கித் தருகின்றன என்பதையும் போர் காட்டியுள்ளது. நாம் அவர்களுடைய பொய்யை உண்மையைக் கொண்டு எதிர்த்து அம்பலப்படுத்தியதால் போர் உள்ளூற அரித் தழிக்கப்படுகிறது. பள்ளித் துறையில் நம்முடைய வேலை முதலாளித்துவத்தை தூக்கி எறியும் போராட்டத்தில் ஒரு பகுதியே என நாம் கூறுகிறோம். வாழ்க்கையிலிருந்தும் அர சியலிலிருந்தும் பிரிக்கப்பட்டப் பள்ளி என்பது பொய்யும் பாசாங்கும் ஆகும் என நாம் வெளிப்படையாக கூறுகிறோம். பழைய முதலாளித்துவ கலாசாரத்தின் மிகச் சிறந்த கல்வி யறிவுள்ள பிரதிநிதிகளால் கையாளப்பட்டதான மறைமுக நாச வேலையின் அர்த்தம் என்ன? எந்தக் கிளர்ச்சிக்காரரை யும் விட நன்ருக, நம்முடைய எல்லா பேச்சுக்களையும் விட சிறப்பாக, ஆயிரக்கணக்கான சிறு பிரசுரங்களை விட மேலாக இந்த மறைமுக நாச வேலை, இந்தப் பேர்வழிகள் கல்வியை தமது ஏகபோகம் என்றும் ''சாமான்ய மக்கள்'' என அழைக்கப்படும் மக்களின் மீதான தங்களது ஆட்சியின் கரு வியாக மாற்றியுள்ளனர் என்பதையும் எடுத்துக் காட்டிற்று.

சோஷலிச நிர்மாண வேலையை தடங்கல் செய்ய அவர்கள் தமது கல்வியைப் பயன்படுத்தினர்கள். உழைக்கும் மக்கள் திரளுக்கு எதிராக வெளிப்படையாக அவர்கள் செயல் பட்டனர்.

ருஷ்ய தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் புரட்சிகரமான போராட்டமே அவர்களுடைய இறுதிப் போதனையாக இருந்தது. நம்முடைய அமைப்பு முறை மட்டும்தான் அவர்களுடைய உண்மையான ஆட்சியை உத்தரவாதம் செய்கிறது என்பதை அவர்கள் பார்த்துவிட்டார்கள். குலாக்குகள்,[45] நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகியோரின் எதிர்ப்பை முழுமையாக நசுக்க தொழிலாளர்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் உதவ அரசு அதிகாரம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதில் அவர்களே திட நம்பிக்கை கொள்ள முடிந்திருக்கிறது.

உழைக்கும் மக்கள் அறிவுத் தாகம் கொண்டு இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் வெற்றிபெற அது தேவைப்படுகிறது. உழைக்கும் மக்களில் பத்தில் ஒன்பது பேர், அறிவுதான் அவர்களுடைய விடுதலைப் போராட்டத்தின் ஆயுதம் என்பதையும், அவர்களுடைய தோல்விகள் எல்லாம் அவர்களுடைய கல்விக் குறைவால் நேர்ந்தவை என்பதையும், இப்பொழுது உண்மையிலேயே கல்வி ஒவ்வொருவருக்கும் எளிதில் கிடைக்கும்படி செய்வது தம் கடமை என்பதையும் உணர்ந்து விட்டார்கள். நம்முடைய லட்சியத்திற்கு உத்தரவாதம் கிட்டிவிட்டது. ஏனெனில் மக்கள் திரள் தானே புதிய சோஷலிச ருஷ்யாவைக் கட்டுவதற்கு ஆயத்தமாகி விட்டது. அவர்களுடைய சொந்த அனுபவம், அவர்களுடைய தோல்விகள், தவறுகள் ஆகியவற்றிலிருந்து அவர்கள் படிப்பினை பெறுகிறார்கள். மேலும் அவர்களுடைய போராட்டத்தின் வெற்றிகரமான முடிவிற்குக் கல்வி எவ்வளவு இன்றியமையாதது என்பதனையும் அவர்கள் பார்க்கிறார்கள். அநேக கல்வி நிறுவனங்களின் வெளிப்படையான வீழ்ச்சியும் நாச வேலைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் அறிவுஜீவிகளின் எக்களிப்பும் இருந்த போதிலும் போராட்டத்தில் கிட்டிய அனுபவம் மக்கள் தமது விதியை தம் சொந்தக்கரங்களில் எடுத்துக் கொள்ளும்படி கற்றுக் கொடுத்திருப்பதை நாம் காண்கிறோம். மக்களிடம் உண்மையில் அனுதாபம் காட்டும்

எல்லோரும் எல்லா சிறந்த ஆசிரியர்களும் நம்முடைய உதவிக்கு வருவார்கள். சோஷலிசத்தின் லட்சியம் வெற்றி பெறும் என்பதற்கு அதுவே நிச்சயமான உறுதிமொழி. (கை. யொலி.)

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 76-78

## சர்வதேசியவாத ஆசிரியர்கள் இரண்டாவது அகில-ருஷ்யக் காங்கிரசில்[46] ஆற்றிய உரை

## ஜனவரி 18, 1919

(கோலாகலமான நீண்ட கரகோஷமாக மாறிடும் கைதட்டல்.) தோழர்களே, மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் சார்பில் உங்களுடைய காங்கிரசை வாழ்த்த என்னை அனுமதியுங்கள். தோழர்களே, ஆசிரியர்களை மிக உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் எதிர் நோக்கியுள்ளன. நாம் இப்பொழுது கடந்து சென்று கொண்டிருக்கும் ஆண்டிற்குப் பிறகு, ஓராண்டு காலப் போராட்டத்திற்குப் பிறகு, சர்வதேச விவகாரங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குப் பின்னால், ஆசிரியர்களுக்கு இடையே—ஆரம்பத்திலிருந்தே சோவியத் அரசுக்கு ஆதரவாக நின்று சோஷலிசப் புரட்சிக்காக வேலை செய்வது என்று முடிவெடுத்த ஆசிரியர்களுக்கும், பழைய முறையின் அடிப்படையில் தான் போதனை தொடர முடியும் என்பதாக இது காறும் பழைய முறைக்கு ஆதரவாய், பழைய தப்பெண்ணங்களின் பக்கமாக நின்றவர்களுக்கும் இடையே—நடந்து வரும் போராட்டம் முடிவிற்கு வர வேண்டும், உண்மையில் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்று நான் நம்புகிறேன். தொழிலாளி வர்க்கத்துடனும் உழைக்கும் விவசாயிகளுடனும் நெருக்கமாக நிற்கும் மிகப் பெரும்பான்மையான ஆசிரியர்கள் சோஷலிசப் புரட்சி ஆழமாக வேரூன்றி தவிர்க்க முடியாத வகையில் உலகமெங்கும் பரவிக் கொண்டிருக்கிறது என்பதனை மனமார ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்பதில்

எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. சோஷலிசப் புரட்சிக் கானப் போராட்டத்திலும், பழைய முதலாளித்துவத் தப் பெண்ணங்களையும், பழைய முறைகளையும், பாசாங்குகளை யும் இன்னமும் சார்ந்து நிற்பவர்களும் அந்த முறையில் ஏதே னும் ஒரு பகுதியை அழிவிலிருந்து காப்பாற்றலாம் என்று கற்பனை செய்து கொண்டிருப்பவர்களுமான ஆசிரியர்களுக்கு எதிரான போராட்டத்திலும் மிகப் பெரும்பான்மையான ஆசிரியர்கள் இப்போது முற்றிலும் நேர்மையுடன் உழைக் கும், சுரண்டப்படும் மக்களின் அரசாங்கத்திற்கு ஆதரவாக வருவார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

முதலாளித்துவப் பாசாங்குகளில் ஒன்று என்னவெனில், பள்ளிக்கூடம் அரசியலிலிருந்து விலகித் தனியே நிற்க முடி யும் என்ற நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை எவ்வளவு பொய்யானது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்தக் கொள்கையை ஆதரித்து வாதிட்ட முதலாளித்துவமே அத னுடைய சொந்த முதலாளித்துவ அரசியலை பள்ளிக்கூடக் கல்வி முறையின் முக்கியமான விஷயமாக்கியது. பள்ளிக் கூடத்தை, கீழ்ப்படிதலும் திறமையுமிக்க ஊழியர்களை முத லாளித்துவத்திற்கு உருவாக்கும் பயிற்சிக் கூடமாக்க முயற்சி செய்தது. மேலும் சர்வப் பொதுவான கல்வி என்பதைக் கூட முடி முதல் அடி வரை முதலாளித்துவத்திற்கு ஏற்ற வாறு, அதாவது, மக்களைக் கீழ்ப்படிதலுள்ள, திறமை மிக்க ஊழியர்களாகவும், மூலதனத்தின் அடிமையாகவும் கருவியாக வும் மாற்றக் கூடிய அளவு கல்வியைக் குறைக்க முதலாளித் துவம் முயன்றது. மனித ஆளுமையை வளர்க்கும் சாதன மாக பள்ளிக்கூடத்தை மாற்ற அவர்கள் ஒரு பொழுதும் எண்ணியது இல்லை. இப்பொழுது இதை சோஷலிசப் பள்ளிக் கூடங்களால் மட்டுமே செய்ய முடியும் என்பதை எல் லோரும் தெளிவாக புரிந்து கொள்கின்றனர். இப்பள்ளி எல்லா உழைக்கும், சுரண்டப்பட்ட மக்களுடன் பிரிக்க முடி யாத பந்தங்களையுடையதாக உள்ளது: அது சோவியத் கொள்கையை பயந்து ஆதரிக்காமல் உணர்வு பூர்வமாக ஆதரிக்கிறது.

பள்ளியைப் புனருத்தாரணம் செய்வது என்பது எளிதான விஷயம் இல்லைதான். பள்ளிக்கூடத்துக்கும் அரசியலுக்கும் இடையே இருக்கும் பிணைப்பு என்ற கோட்பாட்டைத் தவ

ருக விளக்கவும் அதற்குக் கொச்சைப் படுத்தித் திரித்துக் கூறும் அர்த்தத்தை வழங்கவும் முயற்சிகள் நடப்பதால், இயல்பாகவே தவறுகள் நடந்துள்ளன, இன்னமும் தவறுகள் செய்யப்பட்டு வருகின்றன. அரசியலே இளம் தலைமுறையின ரின் மனதில் அவர்கள் அதற்குப் போதுமான அளவு தயா ராக இல்லாத பொழுது திணிக்க அருவருப்பான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இந்த அடிப்படைக் கோட்பாட்டை இப்படி முரட்டுத்தனமாகப் பிரயோகப்படுத்துவதை நாம் சந்தேகமில்லாமல் எப்பொழுதும் எதிர்த்துப் போரிட வேண் டும். ஆனுல் இன்று சர்வதேசியத்தையும் சோவியத் ஆட்சி அதிகாரத்தையும் ஆதரிக்கும் ஆசிரியர் வேலை பார்க்கும் உறுப்பினர்களின் முக்கியப் பணி என்னவெனில் விரிவானதும் கூடுமானவரை எல்லா ஆசிரியர்களையும் தழுவியதுமான சங்கத்தை உருவாக்க வேலை செய்வதுதான்.

முதலாளித்துவத் தப்பெண்ணங்களில் ஊறிப்போனவர் களும், புரிந்து கொள்ளும் ஆற்றலற்றவர்கள் என்பதனை வெளிப்படுத்தியவர்களுமான பழைய ஆசிரியர்களுடைய சங்கத்திற்குச் சர்வதேசியவாதிகள் சங்கமாகிய உங்கள் சங்கத்தில் இடமில்லை. இத்தகைய முன்னுரிமைகளை உறுதி யாக ஆதரிக்க இது எல்லாவற்றையும் விடவும் நீண்ட காலமாகப் போரிட்டுக் கொண்டிருக்கிறது. 1917ம் ஆண்டு புரட்சியின் ஆரம்பத்திலேயே உருவான இதர உயர்ந்த சங் கங்களைவிடவும் நீண்ட காலமாகப் போரிட்டுக் கொண்டிருக் கின்றது. நாமும் இப்போராட்டத்தை வாழ்வின் எல்லா துறைகளிலும் நடத்திஞேம். உங்களுடைய சர்வதேசியத் தன்மையுடைய சங்கம் பள்ளிக்கூட ஆசிரியர்களின் தனி ஒரு தொழிற்சங்கமாக மாற வேண்டும் என்பது என் கருத்து. அது எல்லாத் தொழிற் சங்கங்களைப் போல்—இரண்டாவது அகில-ருஷ்யத் தொழிற்சங்க காங்கிரசால்[47] மிகத் தெளி வாக எடுத்துக் காட்டப்பட்டது போல்—சோவியத் அர சாங்கக் கொள்கையுடன் இணைந்து நிற்க வேண்டும். ஆசிரி யர்களை எதிர்நோக்கி இருக்கும் பணி மிகப் பெரியது. கடந்த புரட்சியால் விட்டுச் செல்லப்பட்ட எச்சங்களான பின்ன டைவையும் ஒற்றுமையின்மையையும் எதிர்த்துப் போரிட வேண்டியது அவசியம்.

அடுத்தது பிரசாரம், கிளர்ச்சி ஆகியவற்றைப் பொறுத்

தது. ஆசிரியர் சமூகத்தில் உள்ள முதலாளித்துவப் பகுதியினரின் தப்பெண்ணங்களாலும், நாச வேலை நடவடிக்கையாலும் ஏற்பட்டதான ஆசிரியர்களிடையேயான நம்பிக்கையின்மையை நாம் கருதிப்பார்க்கும் போது பிரசாரம், கல்வி ஆகியவற்றின் ஒவ்வொரு துறையிலும் ஒற்றுமையின்மை இன்னமும் நிலவுவது இயல்பே. இந்த ஆசிரிய சமூகத்தினர் பணக்காரர்கள் மட்டுமே உண்மையான கல்விக்குத் தகுதியுடையவர்கள் என்றும், அதே நேரத்தில் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் வாழ்வின் உண்மையான எஜமானர்களாக அல்லாமல் நல்ல வேலைக்காரர்களாகவும், நல்ல தொழிலாளர்களாகவும் மட்டுமே பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றும் சிந்தித்துப் பழக்கப்பட்டவர்கள். இது ஆசிரியர்களில் ஒரு பகுதியினரைப் போலித்தனமான கல்வி வட்டாரமான ஒரு குறுகிய வட்டத்திற்குள் தள்ளிவிடுகிறது. அது, கல்வித்துறை சார்ந்த சக்திகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து நம்முடன் ஒத்துழைக்க வைத்து தனியொரு பொறியமைவை நாம் சரியாக உருவாக்குவதிலிருந்து நம்மைத் தடுத்துள்ளது. முதலாளித்துவத்தின் பழைய தப்பெண்ணங்களை அறவே அகற்றி எறியும் பொழுதுதான் நாம் வெற்றி பெறுவோம். பரந்துகிடக்கும் ஆசிரியர்திரளினரை உங்கள் அமைப்புக்குள் ஈர்ப்பது, ஆசிரியத் தொழிலையுடைய மிகவும் பின்தங்கிய பகுதியினருக்கு கல்வி புகட்டுவது, அவர்களைப் பொதுப்படையான பாட்டாளி வர்க்கக் கொள்கைக்குள் கொண்டுவந்து அவர்கள் அனைவரையும் ஒரே ஒரு பொது ஸ்தாபனமாக இணைப்பது ஆகியவை தான் இங்கே உங்கள் சங்கம் செய்ய வேண்டிய பணி.

உள்நாட்டு யுத்தம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் மிகத் தெளிவாகி வரும் போதில், நிகழ்ச்சிகளின் தர்க்க இயலால் குட்டி முதலாளித்துவ ஜனநாயக வகைப்பட்ட மக்கள் சோவியத் ஆட்சின் பக்கம் ஆதரவாக நிற்குமாறு கட்டாயப்படுத்தப்படும் போதில், நமது நாட்டில் இன்று நிலவும் இக்கட்டான நிலையில், தொழிற்சங்க அமைப்பு சம்பந்தமாக ஆசிரியர்களின் கரங்களில் மிகப் பெரிய பணி உள்ளது. ஏன் எனில் வேறு எந்தப் பாதையும், அவர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ அவர்களை வெண்காவலர்களையும்[48] சர்வதேசிய ஏகாதிபத்தியத்தையும்

தாங்கி ஆதரிக்கும் திசையில் தள்ளி விடும் என்பதனை அவர்கள் தாங்களாகவே கண்டு கொண்டனர். உலகம் முழுவதும் ஒரே ஒரு முக்கிய பணியை எதிர் நோக்கியுள்ள இன்று நிலைமை இதுதான்: ஒன்று மிகமோசமான பிற்போக்கோ இராணுவ சர்வாதிகாரமோ துப்பாக்கிச் சூடுகளோ—இவை பற்றி பெர்லினிலிருந்து[49] மிகத் தெளிவான எடுத்துக் காட்டுகள் நம்மிடம் உள்ளன—முதலாளித்துவ வர்க்க மிருகங்களிடமிருந்து வரும் இந்த விஷச்சுழலான பிற்போக்குத் தனமோ அல்லது சோஷலிசப் புரட்சியில் உழைக்கும் மக்களின் முழு வெற்றியோ ஆகிய இரண்டில் ஒன்று தான். மிருகத்தனமான முதலாளித்துவ வர்க்கத்தினர் இந்த நான்கு ஆண்டுகளில் நடந்த போருக்காக தண்டனை பெறுமல் தப்பமுடியாது என்பதை உணர்ந்துள்ளனர். எனவே அவர்கள் எந்த அளவுக்கு வேண்டுமாயினும் போகத்தயார். இப்புவியை உழைக்கும் மக்களின் இரத்தத்தில் மூழ்கடிக்கத் தயாராகி விட்டார்கள். இன்று நடுப்பாதை என்பது இருக்க முடியாது. எனவே ஆரம்பத்திலிருந்தே சர்வதேசியத்தின் பக்கம் வந்துவிட்ட ஆசிரியர்களும், அடுத்த முகாமிலுள்ள ஆசிரியர்களிடையேயுள்ள அவர்களுடைய எதிரிகளால் எவ்விதக் கடுமையான எதிர்ப்புக்களையும் உண்டாக்க முடியாது என்பதை தெளிவாகப் புரிந்துகொண்ட ஆசிரியர்களும், மிகப் பரந்து விரிந்த நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டும். உங்களுடைய சங்கம், பெரும் எண்ணிக்கையிலான ஆசிரியர் திரளைத் தழுவிக் கொண்ட ஆசிரியர்களின் விரிவான தொழிற் சங்கமாக இருக்க வேண்டும். சோவியத் கொள்கைக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வாயிலாக சோஷலிசத்திற்கான போராட்டத்திற்கும் ஆதரவாக அது உறுதியாக நிற்க வேண்டும்.

இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இரண்டாவது தொழிற்சங்க காங்கிரசில் நிறை வேற்றப்பட்ட விதிமுறை இதுதான். குறிப்பிட்ட தொழிலில், குறிப்பிட்ட நடவடிக்கை அரங்கில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் ஒரே ஒரு சங்கத்தில் கண்டிப்பாய்ச் சேர வேண்டும் என்று காங்கிரஸ் கோருகிறது. அதே நேரத்தில் மூலதனத்திலிருந்து உழைப்பை விடுவிப்பதற்கானப் போராட்டமான அடிப்படைக் கடமைகளிலிருந்து தொழிற்சங்க இயக்கம் பிரிந்து

நிற்க முடியாது என்றும் அறிவிக்கிறது. அதன் விளைவாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் சோஷலிசத்திற்காக நடத்தப்படும் புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்தை இனம் கண்டுகொள்ளும் சங்கங்கள் மட்டுமே, தொழிற்சங்கங்களின் முழுமையான சம அந்தஸ்துள்ள உறுப்பினராக இருக்க முடியும். உங்களுடைய தொழிற்சங்கம் இவ்வகையானது. அந்த நிலையில் உறுதியாக நிற்பீர்களானால் பெரும் எண்ணிக்கையில் உள்ள ஆசிரியர்களை உங்களுக்கு ஆதரவாகப் பெறுவதில் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். அறிவும் விஞ்ஞானமும் சலுகைகள் பெற்றவர்களுக்கு மட்டுமே என்பது இனி இல்லை. அவை பணக்காரர்கள், சுரண்டலாளர்களின் நிலையை மீண்டும் வலுப்படுத்தப் பயன்படும் சாதனமாக இனி இராது; மாறாக உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் விடுதலைக்கான ஆயுதமாகும் வகையில் ஆவன செய்வதிலும் நீங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள். இத்துறையில் உங்களுக்கு சகல வெற்றிகளும் கிட்ட வாழ்த்துவதற்கு என்னை அனுமதியுங்கள்.

**நூல் திரட்டு,**<br>
*தொகுதி 37,*<br>
*பக்கங்கள் 430-433*

## 1919 ஏப்ரல் 17ல் நடைபெற்ற முதலாவது அனைத்து-ருஷ்ய கம்யூனிஸ்ட் மாணவர்களின் மாநாட்டில் ஆற்றிய உரை

உங்கள் எல்லோரையும் வாழ்த்துவது எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. எத்தனை குபெர்னியாக்கள் பிரதி நிதித்துவப் படுத்தப் பட்டிருக்கின்றன என்றோ நீங்கள் எங் கிருந்து வந்திருக்கிறீர்கள் என்றோ எனக்குத் தெரியாது. முக் கியமான விஷயம் என்னவெனில் இளைஞர்கள், கம்யூனிஸ்ட் இளைஞர்கள் ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்டு வருகிறார் கள்; இளைஞர்கள் எல்லாம் புதுமாதிரியான பள்ளிக்கூடத் தைக் கட்ட ஒன்று சேருகிறார்கள். இப்பொழுது உங்கள் முன்பு புது மாதிரியான பள்ளிக்கூடம் உள்ளது. நீங்கள் விரும் பாததும் மிகவும் வெறுக்கத்தக்கதும் உங்களுடன் எந்த விதப் பிணைப்பும் இல்லாததுமான அதிகார வர்க்கப் பள்ளிக் கூடம் இனிமேல் இருக்காது. நாம் மிக நீண்ட காலத்திற்கு நம்முடைய வேலையைத் திட்டமிட்டுள்ளோம். நாம் முயற்சி செய்துவரும் எதிர்கால சமுதாயமான எல்லோரும் உழைப் பவர்கள் என்று இருக்கும் சமுதாயம், எந்த வர்க்க வேறு பாடுகளும் இல்லாத சமுதாயம் ஒன்றை கட்ட நீண்ட நாட் கள் ஆகும். தற்பொழுது இந்த எதிர்கால சமுதாயத்தின் அடிப்படைகளைத்தான் நிறுவிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் வளரும் போது இதைக் கட்ட வேண்டும். தற்போது உங்களுடைய வலிமை அனுமதிக்கும் அளவிற்கு வேலை செய் யுங்கள். உங்களுக்கு இயலாத அதிகமாக இருக்கும் வேலை களைச் செய்ய எடுத்துக் கொள்ளாதீர்கள், உங்களுடைய

மூத்தவர்களின் வழியில் செல்லுங்கள். மீண்டும் ஒரு முறை இந்த காங்கிரசை வாழ்த்தி உங்கள் விஷயத்திற்கு எல்லா வெற்றிகளும் கிடைக்கட்டும் என உங்களை வாழ்த்துகிறேன்.

நூல் திரட்டு,
தொகுதி 38,
பக்கம் 320

# முதியோர் க்ல்வி பற்றிய முதல் அகில-ருஷ்யக் காங்கிரஸ் 1919, மே 6-19

## 1

### வாழ்த்துரை
### மே 6

தோழர்களே! முதியோர் கல்வி பற்றிய இந்தக் காங்கிரசை வாழ்த்துவது எனக்கு பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த விஷயத்தைப் பற்றி நன்கு தெரிந்தவரும் விசேஷமாக இதைப் பற்றிக் கற்றறிந்த வரும் எனக்கு முன்னுல் பேசிய பேச்சாளருமான தோழர் லுனச்சார்ஸ்கியைப் போல் இந்த விஷயத்தில் ஆழமாக ஆராய்ந்து நான் உரையாற்ற வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள் என்பது நிச்சயம். சில வாழ்த்துச் சொற்களுடனும், மக்கள் கமிசார்களின் கவுன்சிலில்[50] உங்கள் வேலை சம்பந்தமாக கிட்டத்தட்ட நெருக்கமாக ஈடுபட்டிருக்கும் போது செய்த அவதானிப்புகளை, என் மனதில் உதித்த சில சிந்தனைகளை எடுத்துக் கூறுவதுடனும் நான் என் பேச்சைச் சுருக்கிக் கொள்ள அனுமதிக்கவும். கடந்த பதினெட்டு மாதங்களில் முதியோர் கல்வித் துறையில் ஏற்பட்ட இத்தகைய பேரளவான வெற்றிகள் வேறு எந்த சோவியத் நடவடிக்கைத் துறையிலும் ஏற்படவில்லை என்பதை நான் நிச்சயமாய் அறிவேன். இதர துறைகளைவிட இந்தத் துறையில் நாங்களும் நீங்களும் பணியாற்றுவது மிகச் சுலபமாக இருந்தது என்பதில் ஐயமில்லை. இங்கே நாம் பழைய முட்டுக்கட்டைகளையும் பழைய இடைஞ்சல்களையும் அகற்றித் தள்ள வேண்டியிருந்தது. அறிவு வேண்டும், இலவசக் கல்வியும் சுதந்திரமான வளர்ச்சியும் வேண்டும் என்று பெரும்பாலான தொழிலாளர்

களும் விவசாயிகளும் உணர்கிறுர்கள். அவர்களது பிரம்மாண்டமான கோரிக்கையை நிறைவு செய்ய சில பல செய்வது இங்கு மிகவும் எளிதாக இருந்தது. ஏனெனில் மக்கள் திரளினரின் வலிமை மிக்க நிர்ப்பந்தம் அவர்களது பாதையில் குறுக்கே நின்ற புற முட்டுக்கட்டைகளை எளிதாக நீக்க நமக்கு உதவியது. நம்மை ஏகாதிபத்தியப் போருடன் பிணைத்து, அந்தப் போரின் விளைவாக ஏற்பட்ட அளப்பரிய சுமையைத் தாங்கும் கதிக்கு ருஷ்யாவை ஆளாக்கிய, வரலாற்று ரீதியான முதலாளித்துவ அமைப்புக்களைத் தகர்க்க முடிந்தது. இருப்பினும் மக்கள் திரளினருக்கு மறுபோதனை அளிப்பது, ஸ்தாபனங்களை அமைத்து கற்பிக்கும் வேலை, அறிவை பரப்புவது, அறியாமை மரபுகளை, பத்தாம் பசலிப் போக்கை, காட்டுமிராண்டித்தன்மையை, மிருகத்தனத்தை எதிர்த்துப் போரிடுவது ஆகிய பணிகள் எவ்வளவு கடினமானவை என்பதை உண்மையாகவே உணர்ந்திருந்தோம். இத்துறையில் முழுக்க முழுக்க வேறு முறைகளில் போராட்டத்தைத் தொடுக்க வேண்டியிருந்தது. இந்த விஷயத்தில் மக்கள் திரளினரின் முற்போக்கு பகுதியினரின் நீடித்த வெற்றியையும் உறுதியான, முறையான செல்வாக்கையும் மட்டுமே நாம் ஆதாரமாகக் கொள்ள முடியும். மக்கள் திரளினர் இத்தகைய செல்வாக்கை மனமுவந்து ஏற்றுக் கொள்வர். ஆனுல் நாம் தான் நம்மால் எவ்வளவு செய்ய முடியுமோ அதை விடக் குறைவாகச் செய்த குற்றத்துக்கு ஆளாகியுள்ளோம். முதியோர் கல்வியை, பழைய வரம்புகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டதும், வயது வந்த மக்களால் மிகவும் வரவேற்கப்படுவதுமான கல்வியைப் பரப்ப முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது முதன் முதலாக நாம் இரண்டு தடைகளை எதிர்த்து போராட வேண்டியிருந்தது என்று நான் கருதுகிறேன். இந்த இரு தடைகளையும் பழைய முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து நாம் வாரிசாகப் பெற்றிருக்கிறேம். அந்த அமைப்பு இன்று வரை நம்மைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறது, அது ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான இழைகள், பந்தங்கள், சங்கிலிகளால் நம்மைக் கீழே இழுத்துக் கொண்டிருக்கிறது.

முதல் குறை, முதலாளித்துவ அறிவுஜீவிகளின் மிதமிஞ்

சிய எண்ணிக்கையாகும். புது மாதிரியான விவசாயிகளினுடைய, தொழிலாளர்களினுடைய கல்வி நிலையங்களை, தமது தனிப்பட்ட தத்துவஞானம் அல்லது கலாசார ஆதாரமற்ற புனைசுருட்டுகள், ஆகியவற்றை மிக வசதியாக சோதித்துப் பார்க்கும் இடமாக அவர்கள் அடிக்கடி கருதிவந்தார்கள். அவற்றில் மிக அடிக்கடி ஒவ்வொரு இடத்திலும் மிகவும் முட்டாள்தனமான கருத்துக்கள் புதிய கருத்துக்களாகப் போற்றப்பட்டன. இயற்கை கடந்த கற்பனையானதும், பொருத்தமற்றதுமான[51] கருத்துக்கள் பாட்டாளி வர்க்கத்தினரின் கலை, கலாச்சாரம் என வழங்கப்படுகின்றன. (கரகோஷம்.) ஆரம்ப நாட்களில் இது இயற்கையானதும் மன்னிக்கப்படக் கூடியதுமானதாக இருந்தது. ஓர் அகண்ட இயக்கத்தை இதற்காகக் குறை கூறக் கூடாது. இறுதியில் நாம் எல்லாவற்றையும் ஒழித்துக் கட்ட முயன்று அதில் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று நான் நம்புகிறேன்.

இரண்டாவது குறையும் முதலாளித்துவத்தின் பாரம்பரியமே. பெருந்திரளினரான பரந்த குட்டி முதலாளித்துவ வகைப்பட்ட உழைக்கும் மக்கள் அறிவுத்தாகம் உடையவர்கள். பழைய முறையிலிருந்து உடைத்துக் கொண்டு வந்தவர்கள். ஆனால் அவர்களால் எதையும் ஸ்தாபன ரீதியாகச் செய்யவோ, ஸ்தாபனம் அமைக்கவோ, திட்டமிடவோ அறிமுகப்படுத்தவோ முடியவில்லை. எழுதப் படிக்கத் தெரிந்த நபர்களையும் நூல் நிலைய இலாக்காவினரையும் திரட்டி ஆயத்தப்படுத்துவது சம்பந்தமாக மக்கள் கமிசார்களின் கவுன்சில் விவாதிக்கும் பொழுது இதைக் கவனிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இந்தக் குறுகிய அவதானிப்புகளில் இருந்து இந்தத் துறையில் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்ற என்னுடைய முடிவிற்கு வந்தேன். வாழ்த்துக் கூறிப் பேசும் போது மோசமான எதையும் குறிப்பிடுவது வழக்கமல்ல என்பது உண்மையே. இத்தகைய சம்பிரதாயங்களிலிருந்து நீங்கள் விடுபட்டவர்கள் என்றும், நான் உங்களுக்கு வருத்தம் தரும் என்னுடைய சில அபிப்பிராயங்களைக் கூறுவதால் நீங்கள் மனவருத்தப்பட மாட்டீர்கள் என்றும் நம்புகிறேன். எழுதப் படிக்கத் தெரிந்த நபர்களை திரட்டி ஆயத்தம் செய்ய வேண்டிய பிரச்சினையை நாம் எழுப்பியபோது நம் கவனத்தை ஈர்த்த விஷயம் என்ன

வெனில், முதலாளித்துவ புரட்சியின் வரம்புகளிலிருந்து உடனடியாக கிளம்பாமலே, நம்முடைய புரட்சி அடைந்த மிக உன்னத வெற்றியாகும். அப்போதிருந்த சக்திகளின் வளர்ச்சிக்கு இப்புரட்சி சுதந்திரம் அளித்தது. ஆனால் அப்போதிருந்த இந்தச் சக்திகள் குட்டி முதலாளித்துவ சக்திகளே. அவர்களுடைய குறிக்கோள், கோஷம் பழமையான—''ஒவ்வொருவரும் தனக்காக, கடவுள் எல்லோருக்குமாக''—என்னும் கோஷமே. இது கல்ச்சாக்கை, முதலாளித்துவ வர்க்கத்தை ஆட்சியில் மீட்டமைப்பதைத் தவிர வேறு எதற்கும் இட்டுச் செல்லாத அதே சாபக்கேடான முதலாளித்துவ கோஷமே தவிர வேறு எதுவும் அல்ல. எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்குக் கல்வி போதிக்க நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதைப் பரிசீலனை செய்தால் நாம் மிகச் சிறிதளவே செய்திருக்கிறோம் என்ற முடிவிற்குத்தான் வருவோம் என்று நினைக்கிறேன். இந்தத் துறையில் நம்முடைய கடமை என்னவெனில், பாட்டாளி வர்க்க சக்திகளை ஸ்தாபன ரீதியாகத் திரட்டுவது அவசியம் என்பதை நாம் உணர்வதாகும். இது காகித அளவில் நின்றுவிடக் கூடிய கேலிக்குரிய சொற்றொடர்களைப் பற்றிய விவகாரம் அல்ல, ஆனால் மக்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் நடவடிக்கைகளைக் கொண்டுவருவதும் படிக்கத் தெரிந்த ஒவ்வொருவனும் எழுதப் படிக்கத் தெரியாத சிலருக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியது தன்னுடைய கடமை என கருதும்படி கட்டாயப் படுத்துவதும் ஆகும். இதுதான் நம்முடைய அரசாணை கூறுவது[52] ஆனால் இந்தத் துறையில் கிட்டத்தட்ட எதுவுமே செய்யப் படவில்லை.

மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் அடுத்த பிரச்சினையான நூலகங்களைப் பற்றிய பிரச்சினை வந்தபொழுது, நம்முடைய தொழில் துறையில் நாம் பின் தங்கியுள்ள நிலைமை மீது பழி சாட்டப் படுவதை நாம் இடைவிடாது கேட்டுக் கொண்டிருக்கிறோம் எனவும், நம்மிடம் மிகக் குறைவான புத்தகங்களே உள்ளன, நம்மால் போதுமான அளவு புத்தகங்களைத் தயாரிக்க முடியவில்லை என்று குறை கூறப்படுகிறது என்றும் கூறினேன். இத்தகையப் புகார்கள் நியாயமானவை. இது உண்மைதான் என எனக்கு நானே கூறிக்கொண்டேன். சந்தேகமின்றி, நம்மிடம் எரி பொருள் இல்லை. நம்முடைய

ஆலைகள் எல்லாம் செயலற்றுக் கிடக்கின்றன. நம்மிடம் காகிதம் மிகக் குறைவாக உள்ளது, நம்மால் புத்தகங்களை வெளியிட முடியாது. இவை எல்லாம் உண்மை. ஆனால் கிடைக்கக் கூடிய புத்தகங்களையும் நாம் திரட்டிப் பெற முடியாது என்பதும் உண்மையே. இங்கே நாம் விவசாயியின் பாமரத் தன்மையால் விவசாயியின் ஏலாத தன்மையால் தொடர்ந்து கஷ்டப்படுகிறோம். கிராம, நிலப்பிரபுவின் நூலகத்தை விவசாயி வாரிக் கொள்ளையடிக்கும் பொழுது அவனிடமிருந்து புத்தகத்தை யாரேனும் பிடுங்கிக் கொள்வார்களோ என்று பயந்து வீட்டிற்கு ஓடுகிறான். ஏனெனில் நியாயமான வினியோகம் என்பதையும் அரசாங்க சொத்து வெறுக்கத்தக்கதல்ல, ஆனால் அது தொழிலாளர்களுடையது, பொதுவாக உழைக்கும் மக்களின் சொத்து என்பதையும் அவனால் கற்பனை செய்து பார்க்க முடியாது. இதற்காக கல்வி அறிவு இல்லாத விவசாயத் திரளினரைக் குறை கூற இயலாது. புரட்சியின் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் இது முழுக்க சட்ட பூர்வமானது. இது தவிர்க்க முடியாத கட்டம். ஒரு விவசாயி நூலகத்திலுள்ள நூல்களை மறைமுகமாக எடுத்து ஒளித்து வைக்கிறான் என்றால் அவன் அதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில் ருஷ்யாவிலுள்ள எல்லா நூலகங்களையும் ஒன்றாக்கிப் படிக்கக் கூடியவர்களுக்குப் போதுமான புத்தகங்களையும் படிக்க முடியாதவர்களுக்கு கற்பிக்கப் போதுமான நூல்களையும் கொடுக்க முடியும் என்பதை அவன் அறிந்திருக்க முடியாது. தற்பொழுது நிலவி வரும் ஸ்தாபனக்குலைவின் குழப்பம், மீதமிச்சங்கள் கேலிக்குரிய இலாக்காவினரின் கோபாவேசமான தாக்குதல் ஆகியவைகளை எதிர்த்து நாம் போராட வேண்டும். இது நம்முடைய முக்கிய வேலையாக இருக்க வேண்டும். எழுத்தறிவின்மையை எதிர்த்துப் போரிட எழுதப்படிக்கத் தெரிந்தவர்களைத் திரட்டி ஆயத்தம் செய்ய எளியதும் அவசரமானதுமான பணியை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். கிடைக்கக் கூடியப் புத்தகங்களை நாம் பயன்படுத்த வேண்டும். கிடைக்கக் கூடிய ஒவ்வொரு புத்தகமும் மக்களுக்குக் கிடைக்கும்படி உதவக் கூடிய நூலகங்களை நாடு முழுவதும் இணைக்கும் வேலையைத் தொடங்க வேண்டும். இதற்கு போட்டியான வேறு ஸ்தாபனங்களை நாம் உருவாக்கக் கூடாது. ஆனால்

ஒரே திட்டமிட்ட சீரான ஸ்தாபனம் ஒன்றை மட்டுமே உருவாக்க வேண்டும். இந்தச் சிறிய விஷயம் நம்முடைய புரட்சியின் அடிப்படை கடமைகளில் ஒன்றை பிரதிபலிக்கிறது. அது இந்த கடமையை நிறைவேற்றத் தவறினுல், நம்முடைய ருஷ்யா குழப்பம், திறமையின்மை ஆகியவற்றின் இடத்தில் உண்மையாக முறையானதும் சீரானதுமான ஸ்தாபனத்தை உருவாக்கும் முயற்சியில் தோற்ருல், பிறகு இந்தப் புரட்சி முதலாளித்துவ புரட்சியாகத்தான் இருக்கும். ஏன் எனில் கம்யூனிசத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முக்கியமான பிரத்தியேக அம்சம் இந்த ஸ்தாபனம் தான். ஏன் எனில் முதலாளித்துவ வர்க்கத்தினர் அனைவரும் விரும்பியது என்னவெனில் பழைய முறையை நொறுக்கி விவசாய பண்ணையின் வளர்ச்சிக்கு சுதந்திரம் அனுமதிப்பது என்பதாகும். இது இதற்கு முன் நடைபெற்ற புரட்சிகளில் நடந்ததைப் போல் மீண்டும் அதே முதலாளித்துவத்தைப் புதுப்பிக்கும் ஒன்ருகும்.

நம்மை நாம் கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைத்துக் கொள்வதால், இப்பொழுதுதான் நாம் வெளி தடைகளை நீக்கிவிட்டோம் என்பதையும் பழைய அமைப்புகளைத் தகர்த்து விட்டோம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். மகத்துவம் மிக்கதான உண்மையான பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முதற் கடமையான, ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்களை ஸ்தாபன ரீதியாகத் திரட்டும் முக்கிய வேலையில் நேருக்கு நேர் ஈடுபட்டுள்ளோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பதினெட்டு மாத அனுபவத்திற்குப் பிறகு இந்தத் துறையில் நாம் எல்லோரும் சேகரித்த அறிவைக் கொண்டு இவ்வளவு நாளும் நம்மை வாட்டி வந்த கலாசாரமின்மை, அறியாமை, அநாகரிகம் ஆகியவற்றின் மீது வெற்றி கொள்ள இட்டுச் செல்லும் சரியான பாதையை நாம் தேர்ந்து எடுப்போம். (பலத்த கரகோஷம்.)

நூல் திரட்டு,
தொகுதி 38,
பக்கங்கள் 329-332

## கல்வி, சோஷலிஸ்ட் கலாசார ஊழியர்களின் முதலாவது அகில-ருஷ்யக் காங்கிரசில் (1919, ஜூலை 31) ஆற்றிய உரையிலிருந்து

தோழர்களே, மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் பெயரில் உங்களுடைய காங்கிரசை வாழ்த்திப் பேசுவது எனக்கு பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

சோவியத் ஆட்சி அதிகாரம் தன்னுடைய வேலைத் துறைகள் மற்றும் அமைப்புத் துறைகள் அனைத்திலும் எதை எதிர்த்துப் போராட வேண்டியுள்ளதோ அதே இடர்ப்பாடுகளை எதிர்த்து நீண்ட நாட்களாக நாம் கல்வித் துறையிலும் போராட வேண்டி இருக்கும். முதலாளித்துவ தப்பெண்ணங்களின் செல்வாக்கின் கீழ் நீண்ட காலமாக இருந்து வந்த மக்களால் ஆரம்பத்திலிருந்தே தலைமை தாங்கப்பட்ட ஸ்தாபனங்கள் மட்டுமே மக்கள் திரளினரின் ஸ்தாபனங்களாகக் கருதப்பட்டு வந்ததை நாம் கண்டோம். 1917 அக்டோபரில் சோவியத் அரசின் தொடக்க நாட்களில், பெத்ரோகிராதில் (பீட்டர்ஸ்பர்க்) இராணுவம், அது சோவியத் அரசை அங்கீகரிக்கவில்லை என்று பொருள்படும் பிரகடனங்கள் மூலம் நம்மை எப்படி அமிழ்த்தி மூழ்கடித்தது என்பதையும் எப்படி பெத்ரோகிராதுக்கு எதிராகப் போரிடப் போவதாக பயமுறுத்தியது என்பதையும், முதலாளித்துவ அரசாங்கங்களுடன் ஒருமைப்பாட்டை வெளியிட்டது என்பதையுங்கூட நாம் பார்த்தோம். இந்தப் பிரகடனங்கள் இத்தகைய ஸ்தாபனங்களின் மேலிடத் தலைவர்களிடமிருந்தும் அந்த நேரத்தில் இருந்த ராணுவ கமிட்டியிலிருந்தும் வந்தன என்பதை நாம் நீண்ட நாட்களாக நிச்சயமாக அறிவோம். இந்த ராணுவ கமிட்டியில் இருந்தவர்கள் நம்முடைய ராணுவத்தின் மன

நிலே, உறுதியான நம்பிக்கைகள், கருத்துக்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் கடந்த காலத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தியவர்கள். இதன் பின்னுல் இதே நிலைமை ரயில்வே பாட்டாளிகள், விஷயத்திலும் தபால், தந்தி ஊழியர்கள் விஷயத்திலும் எல்லா மக்கள் ஸ்தாபனங்களிலும் திரும்பத் திரும்ப ஏற்பட்டது. கடந்த காலம் அதனுடைய ஆற்றலையும் செல்வாக்கையும் மக்கள் ஸ்தாபனங்களின் மீது நீடித்து வைத்திருக்கிறது என்பதை நாம் எப்பொழுதும் கவனித்துவந்துள்ளோம். எனவேதான் நாம் ஸ்தாபன ரீதியாகத் திரளாத ஆசிரியர்களிடையே நீண்ட நாட்களாக பிடிவாதமாக நடைபெற்ற உறுதியான போராட்டத்தைக் கண்டு வியப்படையவில்லே. அவர்களில் எல்லோரும் இல்லாவிடினும் பெரும்பாலானேர், ஆரம்ப முதல் சோவியத் ஆட்சிக்கு விரோதமான ஒரு நிலேயை மேற்கொண்டனர். முதலாளித்துவ தப்பெண்ணங்களே நாம் எப்படிச் சிறுகச் சிறுக வெற்றி கொள்ள முடிந்தது என்றும், தொழிலாளர்களுடனும் உழைக்கும் விவசாயிகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்ட இந்தப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் முன்னுளைய முதலாளித்துவ அமைப்பு முறைக்கு எதிராக தங்களுடைய உரிமைகளேத் தாங்களே பெறவும், இந்தப் பழைய முறைக்கு எதிராகப் போராடி உழைக்கும் மக்கள் திரளினருடன் உண்மையான நெருங்கிய உறவு கொள்வதற்கு உரிய பாதையை அமைக்கவும் நடந்துகொண்டு இருந்த சோஷலிஸ்ட் புரட்சியின் தன்மையை மெய்ப்படப் புரிந்து கொள்ளவும்; எப்படிப் போராட வேண்டியிருந்தது என்பதையும் நாம் பார்த்தோம். இதுவரை நீங்கள், வேறு எவரையும் விட அதிகமாக முதலாளித்துவ அறிவுஜீவிகளின் பழைய தப்பெண்ணங்கள், அவர்களுடைய வழக்கமான முறைகள், வாதங்கள், பூர்ஷுவா அல்லது முதலாளித்துவ சமுதாயத்தினேத் தாங்கி ஆதரிக்கும் அவர்களுடைய பான்மை, வழக்கமாக நேரடியாக இல்லாமல், முதலாளித்துவத்தை ஒரு வழி இல்லாவிடில் இன்னெரு வழியில் தாங்கி ஆதரிக்க முன்வைக்கப்படும், வெளிப் பார்வைக்குக் கவர்ச்சிகரமான கோஷங்களின் மறைவில் நடத்தப்பெறும் அவர்களுடைய போராட்டம் ஆகியவற்றைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

தோழர்களே, ஒரு தொழிலாளி நவீன முதலாளித்துவ

ஆலைக்குள் நுழைந்த விதத்தை மார்க்ஸ் எப்படி வர்ணிக்கிறார், கட்டுப்பாடான, பண்பாடான ''சுதந்திர'' முதலாளித்துவ சமுதாயத்தில் தொழிலாளி அடிமைப்படுத்தப்பட்டதை அவர் எப்படி ஆய்வு செய்தார், மூலதனத்தால் உழைப்பு நசுக்கப்பட்டதன் காரணங்களை எப்படி ஆராய்ந்தார், உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளின் அடிப்படைகளை அவர் எப்படி அணுகினார், முதலாளித்துவ ஆலையில் ஒரு தொழிலாளி நுழைந்ததை அவர் எப்படி விவரிக்கிறார், அந்த முதலாளித்துவ ஆலை, உபரி-மதிப்பைத் திருடும் இடமாகவும் முதலாளித்துவ சுரண்டலுக்கு அஸ்திவாரம் போடும் இடமாகவும், ஒரு சிலரை பணக்காரர்களாகவும் பெரும்பான்மையினரைத் தாழ்ந்த நிலையில் வைக்கக் கூடிய முதலாளித்துவ சமுதாயம் கட்டப்படும் இடமாகவும், இருக்கிறது என்பதனை எப்படி அவர் விவரிக்கிறார் என்பதனை நீங்கள் நினைவில் வைத்திருக்கலாம். அவருடைய நூலில்-முதலாளித்துவ சுரண்டலைப் பற்றி ஆராயும்—இந்த மிக முக்கியமான மிகவும் அடிப்படையான கட்டத்தை அவர் அடைந்த போது இந்த ஆய்வின் முன்னுரையில் வஞ்சப் புகழ்ச்சியாக, மார்க்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ''நான் வாசகர்களை அழைத்துச் செல்லும் இடம், முதலாளிகளால் இலாபம் பிழிந்தெடுக்கப்படும் இடம், சுதந்திரம், சமத்துவம், மற்றும் பென்தாமின் கொள்கைகள் அரசாண்ட இடமாகும்.''[53] இதைச் சொல்வது மூலம் மார்க்ஸ் முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளித்துவ வர்க்கத்தால் ஆதரிக்கப்பட்ட சித்தாந்தம் இது என்று அழுத்திக் கூறுகிறார். இதனை முதலாளித்துவ வர்க்கம் ஆதரிக்கும். ஏனென்றால் அதன் நோக்கு நிலையில் இருந்து நிலப்பிரபுக்களை எதிர்த்துப்போராடி வெற்றி பெற்ற முதலாளித்துவ வர்க்கத்தின் பார்வையில் முதலாளித்துவ சமுதாயத்தில் ''சுதந்திரம், சமத்துவம், மற்றும் பென்தாம்'' தான் ஆட்சி செலுத்தின. இந்த முதலாளித்துவ சமுதாயம், பணத்தின் ஆட்சி மீது, மூலதனத்தின் ஆட்சி மீது, உழைக்கும் மக்களை சுரண்டுவதன் மீது அமைக்கப்பட்டது. அவர்கள் சுதந்திரம் என்றழைப்பது லாபம் சம்பாதிக்கும் சுதந்திரத்தை, மிகச் சிலர் பணக்காரர்களாகும் சுதந்திரத்தை, வாணிக, விற்பனைப் புரள்வுக்கான சுதந்திரத்தை; அவர்கள் சமத்துவம் என்று அழைப்பது முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடை

யிலிருக்கும் சமத்துவத்தை; பென்தாமின் ஆட்சி என்பது சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றைப் பற்றிய குட்டி முதலாளி வர்க்கத்தினரின் தப்பெண்ணங்களின் ஆட்சியாகும்.

நம்மைச் சுற்றி நாம் பார்த்தால், நமக்கு எதிராக நடந்தப் போராட்டத்தில் நேற்று பயன்படுத்தப்பட்டதும், இன்று பழைய ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்களால் பயன்படுத்தப்படுவதும், தங்களை சோஷலிஸ்ட் (சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்[54], மென்ஷிவிக்குகள்[55]) என்று அழைத்துக் கொள்ளும் நம்முடைய கொள்கை விரோதிகளிடையே நாம் இன்னமும் எதிரிடுவதுமான வாதங்களைப் பார்த்தால், சோஷலிசத்தின் முக்கியத்துவத்தை இன்னும் புரிந்து கொள்ளாத விவசாய மக்கள் திரளினருடன் அவ்வளவு உணர்வுபூர்வமில்லாத, வடிவில் நம்முடைய அன்றாட பேச்சில் எதிரிடும் வாதங்களைப் பார்த்தால்—இந்த வாதங்களுக்கான சித்தாந்த ரீதியான அர்த்தத்தை எடுத்து சற்றுசிந்தித்துப் பார்த்தால், மார்க்ஸ் மூலதனத்தில் அழுத்திக் கூறிய அதே முதலாளித்துவத்தின் முனைப்பை நீங்கள் காண்பீர்கள். இந்த மக்கள் அனைவரும் சுதந்திரம், சமத்துவம், பென்தாம் ஆட்சி எனும் முதலாளித்துவ சமுதாயத்தில் ஆதிக்கம் வகிக்கும் இந்தக் கவர்ச்சி வாசகங்களை திரும்பத் திரும்ப உறுதிப்படுத்தினார்கள். இந்தக் கருத்து நிலையில் இருந்து நமக்கு எதிராக எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்ட பொழுது, நாம், போல்ஷிவிக்குகளும், சோவியத் ஆட்சி அதிகாரமும் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் மீறுகிறவர்களாக இருக்கிறோம் என்று கூறப்பட்ட பொழுது அவ்வாறு சொன்னவர்களை நாம் அரசியல் பொருளாதாரக் கூறுகளையும் மார்க்சின் அடிப்படைப் போதனைகளையும் பார்க்கும்படி சொல்லுகிறோம். போல்ஷிவிக்குகள் மறுப்பதாக நீங்கள் குற்றம் சாட்டும் சுதந்திரம், என்பது மூலதனத்தின் சுதந்திரம். வெளிச் சந்தையில் தானியத்தை வைத்திருப்பவர்கள் அதை விற்பதற்குரிய சுதந்திரம் அதாவது, தானியத்தை உபரியாக வைத்திருக்கும் சிலருக்கு இலாபம் சம்பாதிக்கும் சுதந்திரம் என நாங்கள் கருதுகிறோம். போல்ஷிவிக்குகள் மீது தொடர்ந்து சாட்டப்படும் குற்றமானது அவர்கள் பத்திரிக்கை சுதந்திரத்தை மீறிவிட்டார்கள் என்பது. ஒரு முதலாளித்துவ சமு

தாயத்தில் பத்திரிகை சுதந்திரம் என்பது என்ன? நம்முடைய ''சுதந்திர'' ருஷ்யாவில் பத்திரிக்கைகளின் நிலே என்ன என்று ஒவ்வொருவராலும் பார்க்க முடியும். முதலாளித்துவ நாடுகளில் உள்ள பத்திரிகை விவகாரங்கள் பற்றி பரிச்சயமுள்ளவர்களும் மிக நெருக்கமாக கவனித்தவர்களும் அல்லது அவ்விவகாரத்தில் செயல்தொடர்பு கொண்டவர்களும் இன்னும் அதிக அளவில் இதைப் பார்த்திருக்க முடியும். முதலாளித்துவ சமுதாயத்தில் பத்திரிகை சுதந்திரம் என்பது, பிரசுரங்களின் மீதும் அவை, பொது மக்களின் மேல் செலுத்தும் செல்வாக்கின் மீதுமான வாணிக சுதந்திரம் என்பதாகும். பத்திரிகை சுதந்திரம் என்பது பொது மக்களிடம் செல்வாக்குச் செலுத்துவதற்கான சக்திவாய்ந்த கருவியான பத்திரிகைகள் முதலாளிகளின் செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதேயாகும். போல்ஷிவிக்குகள் அழித்ததாகக் கூறப்படும் பத்திரிகைச் சுதந்திரம், இத்தகையதே. முதலாளிகள் இல்லாத முதல் பத்திரிகை ஒன்றை வெளியிட்டதற்காகவும், முதல் தடவையாக மாபெரும் நாடு ஒன்றில், விரல்விட்டு எண்ணக் கூடிய பணக்காரர்களேயும், லட்சாதிபதிகளேயும் சார்ந்திராத ஒரு பத்திரிகையை, சர்வபரித்தியாகம் செய்து நடத்த வேண்டிய போராட்டமான மூலதனத்தை எதிர்த்த போராட்டத்திற்கு, தன்னே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட ஒரு பத்திரிகையை, ஆரம்பித்துவிட்டார்கள் என்பதற்காகவும் போல்ஷிவிக்குகள் பெருமையடைகிருர்கள். வர்க்க—உணர்வு பெற்றிராத விவசாயி மக்களுக்கு தலேமை தாங்கி வழிநடத்திச் செல்ல ஆலே தொழில் பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே முடியும். இந்தப் போராட்டத்தில் உழைக்கும் மக்களின் முன்னணிப் படையினர் அவர்களே.

சோஷலிசப் புரட்சியின் கட்டியங்காரன் பங்கினே வரலாறு ருஷ்யாவிற்கு ஒதுக்கியுள்ளது. அதனுலேயே இவ்வளவு அதிகமான போராட்டமும் துன்பமும் நம் மேல் சுமந்துள்ளன. மற்ற நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகளும் முதலாளிகளும் ருஷ்யா ஆயுதபாணியாகிவிட்டது என்பதையும் ருஷ்ய மூலதனத்தின் எதிர்காலம் மட்டுமல்ல, சர்வதேசிய மூலதனத்தின் எதிர்காலமும் ருஷ்யாவில்தான் தீர்மானிக்கப்படுகிறது என்பதையும் உணர்ந்துள்ளார்கள். அதனுல்தான் அவர்

களுடைய எல்லாப் பத்திரிக்கைகளிலும்—அவர்களுடைய இலட்சக்கணக்கான பணத்தால் லஞ்சம் கொடுத்து வாங்கப் பட்ட எல்லா முதலாளித்துவ உலகப் பத்திரிக்கைகளிலும் —அவர்கள் போல்ஷிவிக்குகளைப் பற்றி நம்ப முடியாத அவதூறுகளைப் பரப்புகிறார்கள்.

''சுதந்திரம், சமத்துவம், பென்தாம்'' என்ற அதே கொள்கைகளின் பெயரால் அவர்கள் ருஷ்யாவைத் தாக்குகிறார்கள். சுதந்திரம், சமத்துவம் ஆகியவை போல்ஷிவிக்குகளால் அவமதிக்கப்படுவதாக ஒருவன் பேசும்பொழுது அவன் முழுமையான சுதந்திரத்திற்காகப் போராடுவதாக எண்ணுகிறான். பொதுவாக ஜனநாயகக் கோட்பாடுகளுக்காகப் போராடுவதாக எண்ணுகிறான். அத்தகையவர்களை இந்த நாட்டில் நீங்கள் சந்தித்தால் அவர்களை ஐரோப்பிய முதலாளித்துவப் பத்திரிக்கையை ஒரு பார்வை பார்க்கும்படி கேளுங்கள். தெனீக்கின், கல்ச்சாக் ஆகியோர்களால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் திரை என்ன? ஐரோப்பிய மூலதனமும் முதலாளித்துவமும் ருஷ்யாவை நசுக்கும் அவர்களுடைய முயற்சியில் பயன்படுத்திக் கொண்டிருக்கும் திரை என்ன? சுதந்திரம், சமத்துவம்—இவைதான் அவர்கள் பேசக் கூடியதெல்லாம்! அமெரிக்கர்கள், பிரிட்டிஷார்கள், பிரெஞ்சுக் காரர்கள் அர்ஹான்கெல்ஸ்கைக் கைப்பற்றிய போதும் தெற்கே அவர்கள் அவர்களுடைய ராணுவத்தை அனுப்பிய போதும், அவர்கள் சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றைப் பாதுகாக்கவே அவ்வாறு செய்தார்கள். அம்மாதிரியான கோஷத்தை அவர்கள் எதிரிகளிடமிருந்து மறைக்கும் திரையாகப் பயன்படுத்துகிறார்கள். எனவேதான் ருஷ்ய பாட்டாளி வர்க்கம் உலக மூலதனத்திற்கு எதிராக இந்த மூர்க்கமான போராட்டத்தில் கிளர்ந்தெழுந்துள்ளது. முதலாளி வர்க்கத்தின் எல்லா பிரதிநிதிகளும் மக்களை ஏமாற்ற இந்தக் கோஷங்களான சுதந்திரம், சமத்துவம் என்ற கோஷங்களைப் பயன்படுத்துகிறார்கள். இந்தக் கோஷங்களின் நோக்கம் இதுவே. இந்தக் கோஷங்களை முழுமையாக அழிப்பது தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர்களின் பக்கம் நிற்கும் அறிவுஜீவிகளின் தலை விதியாகும்.

நூல் திரட்டு,<br>
தொகுதி 39,<br>
பக்கங்கள் 131-135,<br>
137

# குபெர்னியா மக்கள் கல்வி இலாக்காக்களின் முதியோர் கல்விப் பிரிவுகளது நிர்வாகிகளின் மூன்ருவது அனைத்து-ருஷ்ய மாநாட்டு (பிப்ரவரி 25, 1920) சொற்பொழி விலிருந்து

உங்களிடமிருந்தும் முதியோர் கல்வித்துறையிலான உங்களுடைய நடவடிக்கையிலிருந்தும் நாங்கள் நிறைய எதிர் பார்க்கிரும். பள்ளிக் கல்வியை மேலும் நல்ல அஸ்திவாரத் தில் நிறுவுவதற்கு அநேக பொருளாயத மாற்றங்கள் செய்ய வேண்டுவது அவசியம். அதாவது பள்ளிக்கூடங்களைக் கட்டு தலிலும் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தலிலும் ஆசிரியர் களின் தொகுதியை ஒழுங்கமைத்தலிலும் தேர்ந்தெடுத்தலி லும் உள்சீர்த்திருத்தங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இவைகளுக்கு எல்லாம் நீண்ட தயாரிப்பு தேவை. முதியோர் கல்வித் துறையில் இந்த நீண்ட தயாரிப்பால் நீங்கள் இடருக்கு உள்ளாக்கப்படவில்லை. ஒழுங்கான பள்ளிக்கூட முறைக்கு வெளியே கல்வி தேவை எனக்கோரும் மக்களும், இந்தத் துறைக்கான ஊழியர்களின் தேவையும் மிக அதிக மாக அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. பொது உதவிகளுடனும், நம்முடைய பொது முயற்சிகளாலும் இதுவரை செய்ததை விட அதிகம் செய்யப்படும் என்று நாங்கள் உறுதியாகவுள்ளோம்.

முடிவில் நான் முதியோர் கல்வியின் தன்மையைப் பற்றி கூறுவேன். இந்தக் கல்வி பிரசாரத்துடனும் கிளர்ச்சியுடனும் தொடர்புடையது. முதலாளித்துவ உலகில் உள்ள கல்வி அமைப்பின் அடிப்படைக் குறைகளில் ஒன்று—இக்கல்வி உழைப்பை ஒழுங்கமைத்தலின் அடிப்படையான நோக்கத்

திலிருந்து தன்னை அன்னியப்படுத்திக் கொண்டது. ஏனெனில் முதலாளி கீழ்ப்படிதலும் ஒழுங்குக் கட்டுப்பாடுமுள்ள தொழிலாளர்களைப் பயிற்றுவித்து போதனை தர வேண்டி இருந்தது. முதலாளித்துவ சமுதாயத்தில் சமுதாய உழைப்பினை ஒழுங்கமைத்தலின் உண்மையான பணிகளுக்கும் போதனைக்கும் எவ்வித சம்பந்தமும் இருந்ததில்லை. வழக்கொழிந்த, சமய சித்தாந்த பாணி, மாறு நடைமுறையிலான மதக்குருவின் செல்வாக்கால் கெடுக்கப்பட்டதான கல்வி போதனை இருந்தது. இது எல்லா இடங்களிலும் ஆகஜனநாயகமான குடியரசுகளிலும் கூட, புதியதும் ஆரோக்கியமானதுமான சகலத்தையும் விலக்கிக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தும் விதத்தில் செயல்பட்டது. நேரடியான, ஜீவாதாரமான வேலை கடினமாக்கப்பட்டது. ஏனெனில், அரசாட்சி இயந்திரம் இன்றியோ, பொருள்வகை, நிதி உதவி இன்றியோ பரந்த கல்வி சாத்தியமல்ல. நம்முடைய முழு சோவியத் வாழ்க்கையையும் இராணுவ பயிற்சி, மற்றும் தற்காப்பு எனும் பாதையிலிருந்து அமைதியான வளர்ச்சிப் பாதைக்கு மாற்றிக் கொள்ள நாம் தயார் செய்து கொள்ள முடியும், தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதால் முதியோர் கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களே, நீங்கள் இந்த மாற்றத்தை கவனத்தில் கொள்ள வேண்டுவது அவசியம். உங்களுடைய பிரச்சார வேலையும் அதனுடைய நோக்கங்களும் வேலைத் திட்டமும் இந்த மாற்றத்திற்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

சோவியத் குடியரசின் மாறிக் கொண்டிருந்த வேலைகளுக்கிணங்க, கல்வி, கற்பித்தல், பயிற்சியளித்தல் மற்றும் பயிற்றி வளர்த்தலின் கடமைகளையும் முழு குணும்சத்தையும் நான் எப்படிப் புரிந்து கொண்டேன் என்று உங்களுக்கு காட்ட, கடந்த அகில-ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் நாட்டை மின்சார மயமாக்கல் பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். அநேகமாக நீங்கள் எல்லோரும் அதை அறிந்திருப்பீர்கள். இரண்டு மாதங்களில் (அச்சிடப்பட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையில் இரு வாரங்கள் எனக் கூறப்பட்டிருந்தது, ஆனல் இது தவறு) குறைந்த பட்சம் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள், அதிகப் பட்சம் பத்தாண்டுகள் காலப் பகுதியை உள்ளடக்கிய

நாட்டை மின்மயமாக்கும் திட்டம் ஒன்று தீட்டப்படும் என்று சில தினங்களுக்கு முன் செய்தித்தாள்களில் அறிவிப்பு வந்தது. நம்முடைய முழு பிரசாரத்தின் குணும்சமும் முழு மையான கட்சிப் பிரச்சாரத்தின் குணும்சமும் பள்ளிப் போதனை முதியோர் கல்வி குணும்சமும் மாற வேண்டும். கற்பித்தலின் அடிப்படைகளும், பொது நோக்கமுமே மாற்றப் பட வேண்டும் என்ற பொருளில் அல்ல. ஆனல் நாட்டின் தொழில் துறை மற்றும் பொருளாதார புனருத்தாரணத்திற் கான விரிவான திட்டத்துடன் கூடிய அமைதியான வளர்ச்சி யை நோக்கி மாறிச் செல்வதற்குத் தகவமைந்ததாக அந்த பணியின் தன்மை இருக்க வேண்டும் என்ற பொருளில் இது நிகழ வேண்டும். ஏன் எனில், பொதுவான பொருளாதாரச் சங்கடமும் பொதுவான கடமையும் நாட்டின் பொருளாதார சக்திகளை புனர் நிர்மாணம் செய்வதுதான். அப்படிச் செய் தால்தான் பாட்டாளி வர்க்கப் புரட்சி, சிறு விவசாய பொரு ளாதாரத்துடனே நெருங்கி பொருளாதார வாழ்வின் புது அடிப்படைகளை உருவாக்க முடியும். இதுவரை விவசாயி, தொழிலாளர் அரசிற்கு தானியத்தைக் கடனுகக் கொடுக் கும்படி கட்டாயப்படுத்தப்பட்டான். ஆனல் தானியத் திற்குப் பதிலாகப் பணம் என்ற பெயரில் பெற்ற வர்ணக் கடுதாசித் துண்டுகள் விவசாயியைத் திருப்திப்படுத்த முடியாது. இந்தக் காகிதப் பணத்தால் அதிருப்தி அடைந்த விவசாயி அவனுடைய நியாயமான உரிமையைக் கோரு கிறன். அதாவது, அவனுடைய தானியத்திற்குப் பரிவர்த் தனையாக அவன் ஆலையில் உற்பத்தியாகும் பொருட்களைப் பெற விரும்புகிறன். பொருளாதாரத்தை புனர்நிர்மாணம் செய்யும்வரை அவனுக்கு நாம் இப்பொருட்களைக் கொடுக்க முடியாது. புனர்நிர்மாணம் அதுதான் முக்கியமான வேலை. ஆனல் பழைய பொருளாதார, தொழில் நுணுக்க அடிப் படையில் நாம் புனர்நிர்மாணம் செய்ய முடியாது. இது தொழில் நுணுக்க ரீதியில் சாத்தியமாகக் கூடியதல்ல. இது கட்டுக்கு மீறியதாகவும் இருக்கும். ஒரு புதிய அடித் தளத்தைக் காண வேண்டும். மின்சாரமயமாக்கும் திட்டம் தான் இந்தப் புதிய அடிப்படை.

மேலும் உயர்ந்த கலாசார நிலை, தொழிற்நுணுக்கக் கல்வி ஆகியவற்றுக்கான புதிய மாற்றம் சோவியத் வளர்சித்

திட்டம் அனைத்தின் வெற்றிக்கும் தேவை என்பதனைக் காட்டி, நாம் விவசாயிகளிடம், அதாவது, குறைவான வளர்ச்சி பெற்ற மக்கள் திரளினரிடம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, பொருளாதாரத்தைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமாகும். போரினால் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டுள்ளது; அதைப் புதுப்பிக்காமல் வறுமையை வெற்றி கொள்ள முடியாது; தானியத்திற்கு மாற்றாக தேவையான பொருள்களைப் பெறுவது முடியாது என்பவற்றை மிக அதிக பேதைமையான விவசாயி கூடப் புரிந்து கொள்வான். நம்முடைய அன்றாட வாழ்க்கையின் மிக அவசரத் தேவைகளிலிருந்து தனிமைப்படுத்தப் படாமல் இருக்க, பிரசார துறையில் நம்முடைய எல்லா வேலையும், பள்ளிப்படிப்பும், முதியோர் கல்வியும் விவசாயிகளுடைய நேரடியானதும், உடனடியானதுமான தேவையுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட வேண்டும். இந்தப் பிரசாரம் அவர்களுடைய வளர்ச்சியிலிருந்து தோன்றி விவசாயி புரிந்து கொள்ளும் வகையில் எடுத்து விளக்கப்பட வேண்டும். தொழில் துறையைப் புனர்நிர்மாணம் செய்வதன் மூலம் தான் இப்போதைய நிலையை மாற்ற முடியும் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். ஆனால் பழைய அடிப்படையில் தொழில் துறையைப் புனர்நிர்மாணம் செய்ய முடியாது. அது நவீன தொழில் நுணுக்க அடிப்படையில் புதுப்பிக்கப்பட வேண்டும். தொழில்துறையை மின்மயப் படுத்துதல், ஓர் உயர்ந்த கலாசாரத்தை நிறுவுதல் என்பதே அதன் பொருள். மின்சாரமயமாக்கல் என்பது ஏறக்குறைய பத்து ஆண்டுகள் வேலை. ஆனால் இந்த வேலை மிகவும் உயர்ந்த கலாச்சார, அரசியல் மட்டத்திலான வேலையாகும்.

நாம் ஒரு விரிவான வேலைத் திட்டத்தை பரப்புவோம். அது விவசாயிகளின் வெகுஜன கருத்தில் மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்ட நடைமுறைப்படுத்தக் கூடிய குறிக்கோளைக் கொண்டதாக இருக்க வேண்டும். இதைச் சில மாதங்களில் செய்து முடிக்க முடியாது. குறைந்த பட்சத் திட்டம் மூன்றாண்டுகளுக்குக் குறையாத செயல் எல்லை கொண்டதாக இருக்க வேண்டும். பத்து ஆண்டு காலத்தில் ருஷ்யா முழுவதையும் மின்சார நிலையங்களின் வலையமைவு கொண்டதாக்கி, நவீனத் தொழில் நுணுக்க தேவைகளைச் சந்திக்கக் கூடிய, மின்சாரத்தை அடிப்படையாக்கிய

தொழில் துறைக்கு மாறிச்சென்று, பழைய விவசாய பாணி பயிர்த்தொழிலுக்கு நாம் முடிவு கட்ட முடியும் என்று கற்பனையுலகத்திற்குள் நழுவாமல் கூறலாம். இதைச் சாதனையாக்க அதிக உயர்மட்ட கலாச்சாரமும் கல்வியும் தேவை.

போக்குவரத்தைப் புதுப்பித்தலும், உணவுப் பொருளைக் கொண்டு போதலும் ஆகிய இப்போதைய நேரடியான நடைமுறை வேலையை இன்றைய நிலையிலுள்ள உற்பத்தித் திறனுடன் நம்மால் எவ்வித விரிவான நடவடிக்கைகளையும் செயல்படுத்த முடியாது என்பதுமான உண்மைகளை நம்மிடமிருந்து நாம் மறைக்கலாகாது. இருப்பினும் நீங்கள் இவற்றை மனதில் நிறுத்தி, பிரசாரம், கல்வி ஆகிய துறைகளில் கலாசார, தொழில் நுணுக்கத் தேவைகளுக்கு ஏற்ற அடிப்படையில் முழு புனர்நிர்மாண வேலையைச் செய்து நிறைவேற்ற வேண்டும். பழைய பிரசார முறைகள் செல்லாக்காசாகிவிட்டன. இது வரை வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய பொதுவான சொற்றொடர்களுடனேயே விவசாயி அணுகப்பட்டான். அம்முறைகள் எல்லாவித முட்டாள்தனம் பாட்டாளி வர்க்க கலாச்சாரம் இத்தியாதிகளின் கண்டுபிடிப்பிற்கு அடித்தளமாகப் பணியாற்றின. பெருமளவு இளம்பிள்ளைக் கோளாறு போல் தோன்றும் இந்த மடைமை அனைத்தையும் நாமே வெகு விரைவில் அகற்றிவிடுவோம். பிரசாரம், கிளர்ச்சி, பள்ளிக் கல்வி, முதியோர் கல்வி ஆகிய நடவடிக்கைகளில் இந்தப் பிரச்சினையை சோவியத் ஆட்சிக்குட்பட்ட மக்களின் தகுதிக்கு ஏற்ற காரியார்த்தமான முறையோடும், மிகுந்த நிதானத்தோடும், முன்வைப்போம். சோவியத் ஆட்சிக்குட்பட்ட மக்கள் இரண்டு ஆண்டு காலத்தில் ஏதோ கொஞ்சம் கற்றுக்கொண்டனர். அவர்கள் எல்லா தொழில்களையும் புனர்நிர்மாணிப்பதற்கான நடைமுறை சாத்தியமான காரியார்த்தமான, தெளிவான திட்டம் ஒன்றுடன் விவசாயியிடம் செல்வார்கள். தற்போதைய கல்வித் தரத்தைக் கொண்டு விவசாயியும், தொழிலாளியும் இந்தப் பணியை நிறைவேற்ற முடியாது என்றும், அவர்கள் அசுத்தம், வறுமை, நச்சுக் காய்ச்சல், நோய்கள் ஆகியவற்றிலிருந்து தப்ப முடியாது என்றும் விளக்குவார்கள். இந்த நடைமுறைப் பணி கலாசார, கல்வி அபிவிருத்தியுடன் தெளிவாக இணைக்கப்பட்டு மையமான அம்சமாக விளங்க வேண்டும்.

அதைச் சுற்றி நாம் நம்முடைய கட்சியின் பிரசாரம் மற்றும் நடவடிக்கைகள் அனைத்தையும், நம்முடைய பள்ளிபோதனை, கல்வி நிலையங்களுக்குப் புறம்பான போதனை ஆகியவற்றை யும் இணைக்க வேண்டும். மக்கள் திரளினரின் மிக அவசர அவசியமான நலன்களின் மேல் ஒரு சரியான பிடிப்பை உண் டாக்க இந்தப் பணி உதவும். மேலும் இது கலாசாரம், அறிவு ஆகியவற்றில் ஏற்பட்ட பொதுவான அபிவிருத்தியை முக் கியமான பொருளாதாரத் தேவைகளுடன், பெருமளவுக்கு இணைப்பதன் விளைவாக கல்வி பெறுவதற்கான உழைக்கும் மக்களின் கோரிக்கையை நாம் நூறு மடங்கு உயர்த்து வோம். இரண்டு ஆண்டுகளில் மிக கஷ்டமான இராணுவப் பிரச்சினையைத் தீர்த்து விட்டோமானால், இதைவிட அதிகக் கஷ்டமான பிரச்சினையான கலாசார, கல்விப் பிரச்சினையை ஐந்து முதல் பத்து ஆண்டுகளில் தீர்த்து விடுவோம் என்பது பரம நிச்சயம்.

இதுவே நான் உங்களிடம் வெளியிட விரும்பிய கருத்து. (கரகோஷம்.)

நூல் திரட்டு,
தொகுதி 40,
பக்கங்கள் 161-165

# இளைஞர் கழகங்களின் பணிகள்

ருஷ்யாவின் இளங் கம்யூனிஸ்டுகள் கழகத்தினது மூன்ருவது அனைத்து-ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை
1920, அக்டோபர் 2

(காங்கிரஸ் பெருத்த மகிழ்ச்சி ஆரவாரத்துடன் லெனினை வரவேற்றது.) தோழர்களே, கம்யூனிஸ்டு இளைஞர் கழகத்தின் முக்கியப் பணிகள் யாவை என்பதையும் இதன் தொடர்பாக மொத்தத்தில் சோஷலிசக் குடியரசில் இளைஞர் நிறுவனங்கள் எத்தகையவையாக இருக்க வேண்டும் என்பதையும் பற்றி இன்று உரையாட விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினை குறித்துச் சிந்திப்பது இன்ஞெரு காரணத்தால் மேலும் அதிக அவசியம் ஆகிறது. அதாவது, கம்யூனிச சமூகத்தை நிறுவும் எதார்த்தப் பணி இளைஞர்கள் மீதே சார்ந்திருக்கிறது. ஏனெனில், முதலாளித்துவ சமூகத்தில் பயிற்றி வளர்க்கப்பட்ட ஊழியர்களின் தலைமுறை, அதிகமாய்ப் போனுல் சுரண்டலின் அடிப்படையில் அமைந்த பழைய முதலாளித்துவ வாழ்க்கை முறையின் அஸ்திவாரங்களைத் தகர்க்கும் பணியையே நிறைவேற்ற முடியும் என்பது தெளிவு. அதிகமாய்ப் போனுல், ஆட்சி அதிகாரத்தை தங்கள் கைகளில் வைத்துக் கொள்ளவும் நிலையான அஸ்திவாரம் அமைக்கவும் பாட்டாளி வர்க்கத்துக்கும் உழைக்கும் வர்க்கங்களுக்கும் உதவக் கூடிய சமூக அமைப்பை நிறுவும் பணியை இந்தத் தலைமுறை நிறைவேற்றலாம். இந்த அஸ்திவாரத்தின் மீது கட்டுமானம் நடத்துவது புதிய நிலைமைகளில், மனிதர்களுக்கு இடையே சுரண்டுவோர் உறவுகள்

இல்லாத சூழ்நிலையில், வேலை தொடங்கும் தலைமுறைக்குத் தான் இயலும்.

இந்த நோக்கு நிலையிலிருந்து இளைஞர்களின் பணிகள் குறித்த பிரச்சினையை அணுகும் போது, பொதுவாக இளைஞர்களதும் சிறப்பாகக் கம்யூனிஸ்டு இளைஞர் கழகங்களதும் வேறு எல்லா வித இளைஞர் நிறுவனங்களதும் இந்தப் பணிகளை ஒரே சொல்லில் வெளியிட முடியும் என்று நான் கூறிவிட வேண்டும்: கற்பது என்பதே அந்தப் பணி.

இது ''ஒரு சொல்'' மட்டுமே என்பது புரியக் கூடியதே. எதைக் கற்பது, எப்படிக் கற்பது என்னும் முதன்மையான, யாவற்றிலும் முக்கியமான கேள்விகளுக்கு இது விடை தரவில்லை. இதில் விஷயம் எல்லாம் என்னவென்ருல், பழைய முதலாளித்துவ சமூகத்தை மாற்றி அமைப்பதோடு கூடவே, கம்யூனிச சமூகத்தை நிறுவப்போகிற தலைமுறையின் போதனையும் பயிற்சியும் கல்வியும் பழையவையாக இருக்க முடியாது. இளைஞர்களின் போதனையும் பயிற்சியும் கல்வியும் பழைய சமூகம் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் மெய் விவரங்களிலிருந்தே தொடங்க வேண்டும். பழைய சமூகத்திலிருந்து நமக்குக் கிடைத்துள்ள அறிவு, நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றின் தொகுப்பிலிருந்தே, மனித சக்திகளதும் சாதனங்களினதும் அந்தச் சேமிப்பிலிருந்தே நாம் கம்யூனிசத்தைக் கட்டி அமைக்க முடியும். இளைஞர்களின் போதனை, ஒழுங்கமைப்பு, பயிற்சி ஆகிய செயல்களை அடிப்படையில் மாற்றி அமைப்பதன் வாயிலாகவே, இளைஞர்களது முயற்சிகளின் விளைவு பழைய சமூகத்தை ஒத்திராத சமூகம், அதாவது கம்யூனிஸ சமூகம் நிறுவப்படுவதாக இருக்க நம்மால் வகை செய்ய முடியும். எனவே, இளைஞர்கள் கம்யூனிஸ்டு இளைஞர்கள் என்ற பட்டத்தை மெயப்பிக்க உண்மையாகவே விரும்பினுல் அவர்களுக்கு நாம் எதைக் கற்பிக்க வேண்டும், இளைஞர்கள் எப்படிக் கற்க வேண்டும், நாம் தொடங்கியதைக் கட்டி முடிக்கவும் பணியை நிறைவேற்றவும் வல்லவர்கள் ஆவதற்கு அவர்களை எப்படிப் பயிற்ற வேண்டும் என்ற பிரச்சினையை விவரமாக ஆராய்வது நமக்கு இன்றியமையாதது ஆகும்.

இளைஞர்கள் கழகமும் மொத்தத்தில் கம்யூனிசத்துக்கு மாற விரும்பும் எல்லா இளைஞர்களுமே கம்யூனிசத்தைக்

கற்க வேண்டும் என்பது இந்தக் கேள்விக்கு முதலாவதும் மிக இயல்பானதும் ஆகிய விடையாகத் தோன்றலாம் என்று நான் சொல்லிவிட வேண்டும்.

ஆனல் ''கம்யூனிசத்தைக் கற்க வேண்டும்'' என்னும் இந்த விடை மிகவும் பொதுப்படையானது. கம்யூனிசத்தை நன்கு கற்பதற்கு நமக்கு என்ன வேண்டும்? கம்யூனிஸம் பற்றிய அறிவைப் பெறுவதற்குப் பொது அறிவுக் களஞ்சியத்திலிருந்து எதை நாம் சிறப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும்? இங்கே நமக்கு எத்தனை எத்தனையோ ஆபத்துக்கள் எதிர்ப்படுகின்றன. கம்யூனிசத்தைக் கற்பது என்ற பணி சரியற்ற முறையில் முன் வைக்கப்படும் போது, அல்லது அது மட்டுமீறி ஒருதலைச்சார்பாகப் புரிந்து கொள்ளப் படும் போது இந்த ஆபத்துக்கள் மிக அடிக்கடி வெளிப்படு கின்றன.

கம்யூனிசத்தைக் கற்பது என்ருல், கம்யூனிஸ்டுப் பாட நூல்களிலும் சிற்றேடுகளிலும் ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும் விவரிக்கப்பட்டுள்ள அறிவியல்களின் தொகுப்பைப் புரிந்து கொள்வது என்று அர்த்தம் என்னும் எண்ணம் முதல் பார்வையில் மனத்தில் எழுவது இயல்பே. ஆனல் கம்யூனிசத்தைப் பயில்வது பற்றிய இந்த விளக்கம் அளவு கடந்து பாங்கற்றது, போதாதது. கம்யூனிஸ்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும் நூல்களிலும் சிற்றேடுகளிலும் விவரிக்கப்பட்டுள்ளதைப் பயில்வது மட்டும் கம்யூனிசத்தைக் கற்பது என்று இருந்தால் கம்யூனிஸ்டு வறட்டுச் சூத்திரவாதிகளும் தற்பெருமையாளர்களும் நம்மிடையே மிக எளிதாகத் தோன்றி விடக் கூடும். இது அடிக்கடி நமக்குத் தீங்கும் இழப்பும் விளைவிக்கும். ஏனெனில் கம்யூனிஸ்டு நூல்களிலும் சிற்றேடுகளிலும் விவரிக்கப்பட்டுள்ளவற்றைக் கற்றும் தெவிட்டத் தெவிட்டப் படித்தும் தீர்த்துவிட்ட இவர்கள் கற்றறிந்த இந்த எல்லா விஷயங்களையும் ஒன்று இணைக்கத் திறன் அற்றவர்களாக இருப்பார்கள். உண்மையில் கம்யூனிசம் கோரும் வகையில் செயலாற்ற இவர்களால் முடியாது.

பழைய முதலாளித்துவ சமூகத்திடமிருந்து நமக்கு எஞ்சியுள்ள மிகப் பெரிய தீமைகளிலும் விபத்துக்களிலும் ஒன்று நடைமுறை வாழ்க்கையிலிருந்து நூல்கள் அறவே துணிக்கப் பட்டிருப்பது ஆகும். ஏனெனில் நமக்குக் கிடைத்த நூல்

களில் எல்லா விஷயங்களும் மிக மிகச் சிறந்தவையாகச் சித்திரிக்கப்பட்டிருந்தன. இந்த நூல்களில் பெரும் பாலானவை, முதலாளித்துவ சமூகத்தை நமக்குப் பொய்யாகச் சித்திரித்த மிக மிக அருவருப்பூட்டும் பாசாங்கு நிறைந்த பொய்யாக இருந்தன.

அதனால், கம்யூனிசத்தைப் பற்றிய நூல்களில் கூறப்பட்டிருப்பதை வெறுமே ஏட்டளவில் கற்பது மிக மிகச் சரியற்றது ஆகும். இப்போது நம்முடைய சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும் கம்யூனிசத்தைப் பற்றி முன்பு கூறப்பட்டவை வெறுமே திருப்பிச் சொல்லப் படுவதில்லை, ஏனென்றால் நம்முடைய சொற்பொழிவுகளும் கட்டுரைகளும் அன்றாட,பல் துறை வேலையுடன் இணைந்தவை. வேலை இல்லாமல், போராட்டம் இல்லாமல் கம்யூனிஸ்டுச் சிற்றேடுகளிலும் வெளியீடுகளிலுமிருந்து பெறப்படும் நூலறிவு கால் காசு பெறாது, ஏனெனில் சித்தாந்தத்துக்கும் நடைமுறைக்கும் இடையே நிலவிய பழைய பிளவை, பழைய பூர்ஷ்வா சமூகம் யாவற்றிலும் அருவருப்பூட்டும் அம்சமாக விளங்கிய அதே பழைய பிளவை அது தொடரும்.

நாம் கம்யூனிஸ்டு கோஷங்களை மட்டுமே கையாளத் தொடங்கினால் அது இன்னும் அதிக ஆபத்தானதாக இருக்கும். நாம் தக்க நேரத்தில் இந்த ஆபத்தைப் புரிந்து கொள்ளாவிட்டால், இந்த ஆபத்தை அகற்றும் விதத்தில் நாம் நமது வேலை அனைத்தையும் நடத்திச் செல்லாவிட்டால், கம்யூனிசம் பற்றிய இத்தகைய பயிற்சிக்குப் பின்னர் தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்ளப் போகிற ஐந்து லட்சம் அல்லது பத்து லட்சம் இளைஞர்களும் யுவதிகளும், இருப்பது கம்யூனிசக் குறிக்கோளுக்கு மிகப் பெருத்த சேதமே ஏற்படுத்தும்.

கம்யூனிஸத்தைப் பயிற்றுவதற்கு இவை எல்லாவற்றையும் நாம் எப்படி ஒருங்கிணைக்க வேண்டும் என்ற கேள்வி இங்கே நமக்கு முன் எழுகிறது. பழைய பள்ளியிலிருந்து, பழைய விஞ்ஞானத்திலிருந்து நாம் எதை எடுத்துக் கொள்ள வேண்டும்? எல்லாத் துறைகளிலும் கல்வித் தேர்ச்சி பெற்ற மனிதனை உருவாக்கத் தான் விரும்புவதாகவும் பொதுவாக அறிவியல்களைப் போதிப்பதாகவும் பழைய பள்ளி அறிவித்தது. இது உள்ளும் புறமும் பொய்யானது என்பதை நாம்

அறிவோம். ஏனெனில், சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் என்னும் வர்க்கங்களாக மக்களைப் பிரிவுபடுத்தியதன் அடிப் படையிலேயே சமூகம் முழுவதும் அமைக்கப்பட்டிருந்தது, இயங்கி வந்தது. வர்க்க உணர்வால் முற்றிலும் நிறைந் திருந்த பழைய பள்ளிமுறை அனைத்தும் பூர்ஷ்வா வர்க்கக் குழந்தைகளுக்கு மட்டுமே அறிவியல்களைப் போதித்தது இயல்பே. அதன் ஒவ்வொரு சொல்லும் பூர்ஷ்வா வர்க்கத் தின் நலன்களுக்காகப் போலியாக உருவாக்கப்பட்டது. தொழிலாளர்கள், விவசாயிகளின் இளந் தலைமுறைக்கு இந்தப் பள்ளிகளில் முறையான பயிற்சி அளிக்கப்படவில்லை, அதே முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்காக அது இழுத்துவரப்பட்டது. இந்தத் தலைமுறையினருக்கு அளிக்கப் பட்ட பயிற்சியின் நோக்கம் முதலாளித்துவ வர்க்கத்துக்கு லாபம் தர வல்லவர்களும் அதே சமயம் அதன் அமைதியை யும் சோம்பேறித்தனத்தையும் குலைக்காதவர்களுமான பயனுள்ள ஏவலர்களாக அவர்களை உருவாக்குவதே. எனவே நாம் பழைய பள்ளி முறையை நிராகரித்து விட்டு, உண்மை யான கம்யூனிசக் கல்வி அளிப்பதற்கு நமக்கு இன்றியமை யாதவற்றை மட்டும் அதிலிருந்து எடுத்துக் கொள்வதை நோக்கமாக வைத்துக் கொண்டோம்.

இடையறாமல் நாம் கேட்க வேண்டியிருக்கிற, பழைய பள்ளி பற்றிய கண்டனங்களையும் குற்றச்சாட்டுகளையும் இங்கே நான் அணுகுகிறேன். இவை அடிக்கடி முற்றிலும் சரியற்ற விளக்கத்துக்கு இட்டுச் செல்கின்றன. பழைய பள்ளி பாடப் பயிற்சிப் பள்ளியாகவும் கவாத்துப் பள்ளி யாகவும் உருவேற்றும் பள்ளியாகவும் இருந்தது என்று கூறப் படுகிறது. இது உண்மைதான். ஆனால் பழைய பள்ளியில் எது நமக்குக் கெடுதலாக இருந்தது, எது பயனுள்ளதாக இருந்தது என்று வேறுபடுத்திக் காண நாம் திறன் பெற்றி ருக்க வேண்டும். கம்யூனிசத்துக்கு இன்றியமையாததைப் பழைய பள்ளியிலிருந்து தெரிந்தெடுத்துக் கொள்ள நாம் வல்லவர்களாய் இருக்க வேண்டும்.

பழைய பள்ளி பாடப் பயிற்சிப் பள்ளியாக இருந்தது. தேவையற்ற, பயனற்ற, உயிரற்ற அறிவியல் திரள்களைக் கற்கும்படி அது மாணவர்களைக் கட்டாயப்படுத்தியது. இவை மூளையில் வலுவாகத் திணிக்கப்பட்டன. இளந் தலைமுறை

யினரைப் பொது அச்சில் வார்க்கப்பட்ட அலுவலர்களாக இவை மாற்றின. ஆனால் மனித அறிவியல்களில் சேமிக்கப்பட்டுள்ளவற்றைக் கற்றுத் தேராமல் கம்யூனிஸ்டு ஆகிவிட முடியும் என்று முடிவு செய்ய நீங்கள் முயன்றால் மிகப் பெரிய தவறு செய்வீர்கள். எந்த அறிவியல்களின் விளைவாகக் கம்யூனிசம் தோன்றியுள்ளதோ அவற்றின் தொகுப்பைக் கற்றுத் தேர்ச்சி பெறாமல் கம்யூனிஸ்டு கோஷங்களையும் கம்யூனிச விஞ்ஞானங்களின் முடிவுகளையும் கற்றுத் தெரிந்து கொண்டால் போதும் என்று நினைப்பது தவறு ஆகும். மனித அறிவியல்களின் தொகுப்பிலிருந்து கம்யூனிசம் தோன்றியதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது மார்க்சியம்.

முதன்மையாக மார்க்சினால் உருவாக்கப்பட்ட கம்யூனிச சித்தாந்தம், கம்யூனிச விஞ்ஞானம், இந்த மார்க்சிய போதனை, பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சோஷலிஸ்டின்—அவர் எவ்வளவுதான் மேதை வாய்ந்தவர் என்றாலும்—படைப்பாக இருந்து விடவில்லை என்பதையும், முதலாளித்துவத்துக்கு எதிரான தங்கள் போராட்டத்தில் இந்த போதனையைக் கையாண்ட, உலகனைத்திலும் உள்ள லட்சோபலட்சம், கோடானுகோடிப் பாட்டாளி மக்களின் போதனை ஆகி விட்டது என்பதையும் நீங்கள் படித்தும் கேட்டும் இருப்பீர்கள். யாவற்றிலும் புரட்சிகரமான வர்க்கத்தைச் சேர்ந்த லட்சோபலட்சம், கோடானுகோடி இதயங்களை ஆட்கொள்ள மார்க்சின் போதனையால் எப்படி முடிந்தது என்ற கேள்வியை நீங்கள் எழுப்பினால் அதற்கு நீங்கள் ஒரே விடையைத்தான் பெற முடியும்: இவ்வாறு நிகழ்ந்ததற்குக் காரணம், முதலாளித்துவத்தின் போது திரட்டப்பட்ட மனித அறிவியல்களின் நிலையான அடித்தளத்தை மார்க்ஸ் ஆதாரமாகக் கொண்டிருந்ததாகும். மனித சமூக வளர்ச்சி விதிகளைக் கற்றுத் தேர்ந்த மார்க்ஸ் முதலாளித்துவத்தின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது என்பதையும் அது கம்யூனிஸத்துக்கு இட்டுச் செல்லும் என்பதையும் புரிந்து கொண்டார். முக்கியமானது என்னவென்றால், இந்த முதலாளித்துவ சமூகத்தின் மிக மிகத் துல்லியமான, மிக மிக விவரமான, மிக மிக ஆழ்ந்த ஆராய்ச்சியின் அடிப்படையிலேயே இதை எல்லாம் அவர் நிரூபித்தார். முந்திய விஞ்ஞானம் தந்தவை யாவற்றையும் முழுமையாகக் கற்றது இவ்வாறு

செய்ய அவருக்கு உதவியது என்பதே. மனித சமூகத்தால் உருவாக்கப் பட்டிருந்தவை அனைத்தையும், ஒரு விவரத்தைக் கூடக் கவனிக்காது விடாமல், அவர் விமர்சன நோக்குடன் மாற்றி அமைத்தார். மனித சிந்தனையால் உருவாக்கப்பட்டிருந்தவை எல்லாவற்றையும் அவர் புரிந்து தெளிந்தார், விமர்சனத்துக்கு உள்ளாக்கினார், தொழிலாளர் இயக்க அனுபவத்தைக் கொண்டு சரிபார்த்தார். முதலாளித்துவ வரம்புச் சட்டங்களால் குறுக்கப்பட்டிருந்த, முதலாளித்துவக் காழ்ப்புக்களுடன் இணைந்திருந்த மனிதர்கள் செய்திருக்க முடியாத முடிவுகளைச் செய்தார்.

நாம், உதாரணமாக பாட்டாளி வர்க்கப் பண்பாடு பற்றி உரையாடும் போது இந்த விஷயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். மனித குலத்தின் வளர்ச்சி அனைத்தினாலும் உருவாக்கப்பட்ட பண்பாட்டை சரியாகத் தெரிந்து கொள்வதன் வாயிலாகவே, அதை மாற்றி அமைப்பதன் வாயிலாகவே பாட்டாளி வர்க்கப் பண்பாட்டை நிறுவ முடியும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல், இத்தகைய புரிவு இல்லாமல் நம்மால் இந்தப் பணியை நிறைவேற்ற இயலாது. பாட்டாளி வர்க்கப் பண்பாடு என்பது எங்கிருந்தோ திடீரென்று வந்து குதித்துவிடவில்லை. பாட்டாளி வர்க்கப் பண்பாட்டு விஷயத்தில் தனித் தேர்ச்சி பெற்றவர்கள் என்று தங்களைக் கூறிக் கொள்ளும் மனிதர்களின் கற்பனை அல்ல இது. இத்தகையவர்கள் சொல்லுவது வெறும் வெட்டிப் பேச்சு. முதலாளித்துவ, சமூகம், நிலப்பிரபுத்துவ சமூகம், அதிகார வர்க்க சமூகம் ஆகியவற்றின் ஒடுக்குமுறையில் மனித குலம் திரட்டிச் சேர்த்த அறிவியல்களின் சேமிப்புக்களது விதிமுறைக்கு ஒத்த வளர்ச்சியாக விளங்க வேண்டும் பாட்டாளி வர்க்கப் பண்பாடு. இந்த எல்லாப் பாதைகளும் வழிகளும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுக்கு இட்டுச் சென்றன, இட்டுச் செல்கின்றன, தொடர்ந்து இட்டுச் செல்லும். மார்க்சினால் செப்பம் செய்யப்பட்ட அரசியல் பொருளாதாரம் மனித சமுதாயம் எதற்கு வந்து சேர வேண்டும் என்று எப்படிக் காட்டியதோ, வர்க்கப் போராட்டத்துக்கு, பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பரிணமிப்பை எப்படிச் சுட்டிக் காட்டியதோ அப்படியேதான் இதுவும்.

இளைஞர் பிரதிநிதிகள் இடையிலும் புதிய கல்விமுறை

யின் சில காப்பாளர்கள் இடையிலும் பழைய பள்ளி முறை பற்றிய தாக்குதல்களை, அது உருவேற்றும் பள்ளி முறை என்ற குற்றச்சாட்டை, நாம் அடிக்கடி கேட்கிறோம். பழைய பள்ளி முறையில் இருந்த நல்ல அம்சங்களை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அப்போது நாம் அவர்களிடம் சொல்லுகிறோம். பழைய பள்ளியில் சிறுவனின் மூளையில் அளவற்ற எண்ணிக்கையில் அறிவியல்கள் சுமத்தப்பட்டன. இவற்றில் பத்தில் ஒன்பது தேவை அற்றவை. பத்தில் ஒன்று திரிக்கப்பட்டவை. இந்த அம்சத்தைப் பழைய பள்ளியிலிருந்து நாம் எடுத்துக் கொள்ள வேண்டாம். ஆனால் நாம் கம்யூனிச முடிவுகளுடன் நிறுத்திக் கொள்ளலாம் என்றோ கம்யூனிஸ்டு கோஷங்களை மட்டும் மனப்பாடம் செய்யலாம் என்றோ இதற்கு அர்த்தம் அல்ல. இவற்றைக் கொண்டு கம்யூனிசத்தை அமைக்க முடியாது. மனிதகுலம் உருவாக்கியுள்ள அறிவுச் செல்வம் அனைத்தினாலும் நம் மனத்தை வளப்படுத்திக் கொள்ளும் போது தான் நாம் கம்யூனிஸ்டு ஆக முடியும்.

உருவேற்றுவது நமக்குத் தேவையில்லை. ஆனால் கல்வி பயிலும் ஒவ்வொருவனது நினைவு ஆற்றலையும் அடிப்படை மெய் விவரங்களின் அறிவால் வளர்ப்பதும் செவ்வைப்படுத்துவதும் நமக்கு வேண்டும். ஏனெனில், பெறப்பட்ட எல்லா அறிவியல்களும் கம்யூனிஸ்டின் உணர்வால் தனதாக்கிக் கொள்ளப்படா விட்டால், கம்யூனிசம் வெற்றுச் சொல் ஆகி விடும், பொருளற்ற குறிப்பலகை ஆகி விடும், கம்யூனிஸ்டு வெறும் தற்பெருமைக்காரன் ஆகி விடுவான். நீங்கள் இந்த அறிவியல்களைப் புரிந்து கொண்டால் மட்டும் போதாது. அவற்றை விமர்சன நோக்குடன் அணுகும் வகையில் புரிந்து கொள்ள வேண்டும். தேவையற்ற கூளங்களை மனத்தில் அடைத்துக் கொள்ளாமல், எந்த மெய் விவரங்கள் இல்லாமல் தற்காலத்தில் ஒருவன் கற்றவன் ஆக முடியாதோ அவை எல்லாவற்றையும் பற்றிய அறிவால் மனத்தை வளப்படுத்திக் கொள்ளும் வகையில் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு கம்யூனிஸ்டு ஆழ்ந்த, மிகக் கடினமான, பெரிய வேலை செய்யாமல், எந்த மெய் விவரங்களை விமர்சன நோக்குடன் அணுக அவன் கடமைப்பட்டவனோ அவற்றை ஆய்ந்து தெளிந்து கொள்ளாமல், தனக்குக் கிடைத்த தயாரான முடிவுகளின் அடிப்படையில் கம்யூனிசத்தைப் பற்றிப் பெருமை அடித்துக்

கொள்ள நினைத்தால், அத்தகைய கம்யூனிஸ்டு பெரிதும் இரங்கத்தக்கவன். இம்மாதிரி மேலோட்டமான பார்வை நிச்சயமாக அழிவு விளைப்பதாகும். நான் அறிந்திருப்பது சொற்பம் என்று நான் அறிந்து கொண்டால் நிறையத் தெரிந்து கொள்ள முயல்வேன். ஆனால், தான் கம்யூனிஸ்டு என்றும் வேறு விஷயம் எதையும் ஆழ்ந்து அறிவது தனக்குத் தேவை இல்லை என்றும் ஒருவன் சொன்னால், அவன் கம்யூனிஸ்டை எவ்வகையிலும் ஒத்தவன் ஆக மாட்டான்.

பழைய பள்ளி முதலாளிகளுக்குத் தேவையாய் இருந்த ஏவலர்களைப் பயிற்றுவித்தது. பழைய பள்ளி விஞ்ஞானிகளை முதலாளிகளுக்கு உவப்பான வகையில் எழுதவும் பேசவும் கடமைப்பட்டவர்கள் ஆக்கியது. எனவே அதை நாம் ஒழித்துக் கட்ட வேண்டும் என்று ஆகிறது. ஆனால், நாம் அதை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றால், நாம் அழிக்க வேண்டும் என்றால், மனித குலத்தால் திரட்டிச் சேர்க்கப் பட்டவையும் மனிதர்களுக்கு வேண்டியவையுமான எல்லா வற்றையும் நாம் அதிலிருந்து எடுத்துக் கொள்ளக் கூடாது என்று இதற்கு அர்த்தமா? முதலாளித்துவத்துக்குத் தேவை யாய் இருந்தவற்றைக் கம்யூனிசத்துக்குத் தேவையாய் இருப் பவற்றிலிருந்து பிரித்து அறிய நாம் திறன் கொண்டிருக்கக் கூடாது என்று இதற்கு அர்த்தமா?

பெரும்பான்மையினரின் விருப்பத்துக்கு எதிராக முத லாளித்துவ சமூகத்தில் நடத்தப்பட்ட பழைய கவாத்தின் இடத்தில் தொழிலாளர்கள், விவசாயிகளின் உணர்வுபூர்வ மான கட்டுப்பாட்டை நாம் வைப்போம். அவர்கள் பழைய சமூகத்தின் பால் வெறுப்பையும் இந்தப் போராட்டத்துக் காகச் சக்திகளை ஒன்று திரட்டி ஒழுங்கமைப்பதற்கான உறு தியையும் திறமையையும் விருப்பத்தையும் ஒருங்கே கொண் டிருப்பார்கள். ஒருவரோடு ஒருவர் தொடர்பற்ற, துண்டு களாகப் பிரிந்த, பிரம்மாண்டமான நாட்டின் பரப்பில் சிதறிக் கிடக்கிற பல லட்சக்கணக்கும் பல கோடிக்கணக்குமான மக் களின் விருப்பத்தைக் கொண்டு ஒன்றித்த சித்த சக்தியை உருவாக்க அவர்கள் உறுதியும் திறமையும் விருப்பமும் கொண்டிருப்பார்கள். ஏனெனில் இத்தகைய ஒன்றித்த சித்த சக்தி இல்லாவிட்டால் நாம் கட்டாயமாக நொறுக்கப்பட்டு விடுவோம். இந்த ஒற்றுமை இல்லாவிட்டால், தொழிலாளர்

கள், விவசாயிகளின் இந்த உணர்வுபூர்வமான கட்டுப்பாடு இல்லாவிட்டால், நம் காரியம் நம்பிக்கைக்கு இடமற்றது ஆகிவிடும். இது இல்லாவிட்டால் உலகு அனைத்திலும் உள்ள முதலாளிகளையும் நிலப்பிரபுக்களையும் நம்மால் வெற்றி கொள்ள முடியாது. நம்மால் அஸ்திவாரத்தைக் கூட வலுப் படுத்த முடியாது. இந்த அஸ்திவாரத்தின் மேல் புதிய, கம் யூனிச சமூகத்தை நிறுவுவது பற்றிய பேச்சுக்கோ இடமே இராது. இவ்வாறே பழைய பள்ளி முறையை நிராகரித்து, இந்தப் பழைய பள்ளி முறை மீது முற்றிலும் நியாயமான, அவசியமான வெறுப்புக் கொண்டு, பழைய பள்ளி முறை யைத் தகர்த்து விடும் விருப்பத்தை மதிக்கும் அதே சமயத் தில், பழைய பாடப் பயிற்சி, பழைய உருவேற்றல், பழைய கவாத்து ஆகியவற்றின் இடத்தில் மனித அறிவியல்களின் தொகுப்பு அனைத்தையும் எடுத்துக் கொள்ளும் திறனை நாம் வைக்க வேண்டும். நம்முடைய கம்யூனிசம் நெட்டுருச் செய் தது போன்றதாக இல்லாமல் நாமாகவே சிந்தனை செய்து உருவாக்கியதாக, தற்காலக் கல்வியின் நோக்கு நிலையில் தவிர்க்க முடியாதவையாக விளங்கும் முடிவுகளைக் கொண்ட தாக இருக்கும் விதத்தில் அறிவியல்களை எடுத்துக் கொள்ள நாம் திறன் பெற வேண்டும்.

கம்யூனிசத்தைக் கற்பது என்னும் பணியைப் பற்றிப் பேசும் போது முக்கியப் பணிகளை நாம் இவ்வாறு முன்வைக்க வேண்டும்.

இதை உங்களுக்கு விளக்கும் பொருட்டும் அதே சமயம் எவ்வாறு கற்க வேண்டும் என்னும் பிரச்சினையை அணுகு வதற்காகவும் ஒரு நடைமுறை உதாரணத்தை எடுத்துக் கொள்கிறேன். இராணுவப் பணிகளுக்கும் குடியரசைக் காக் கும் பணிகளுக்கும் அடுத்தபடியாக பொருளாதாரப் பணி இப்போது நமக்கு எதிர்ப்படும் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இயந்திரத் தொழிலையும் விவசாயத்தையும் மீட்டமைக்காமல் கம்யூனிச சமூகத்தை நிறுவ முடியாது என்பதை நாம் அறிவோம். அதிலும் அவற்றைப் பழைய முறையில் மீட்டமைத்தால் போதாது. அவற்றை நவீன மான, விஞ்ஞானத்தின் புத்தம் புதிய சாதனைகளின் படி அமைந்த அஸ்திவாரத்தின் மீது மீட்டமைக்க வேண்டும். இத்தகைய அஸ்திவாரமாக இருப்பது மின் ஆற்றல் என்பதை

நீங்கள் அறிவீர்கள். நாடு முழுவதும், தொழில், விவசாயத் துறைகள் அனைத்தும் மின்சாரமயம் ஆக்கப்படும்போது தான், இந்தப் பணியை நிறைவேற்றும் போதுதான், பழைய தலைமுறையால் நிறுவப்பட முடியாத கம்யூனிஸ சமூகத்தை உங்களால் நிறுவ முடியும். நாடு முழுவதனுடையவும் பொருளாதார மறு மலர்ச்சிப் பணி, நவீன விஞ்ஞானத்தையும் இயந்திரங்களையும் மின் ஆற்றலையும் சார்ந்த நவீனத் தொழில்நுட்ப அடிப்படையில் விவசாயத்தையும் தொழில் துறையையும் மாற்றியமைத்து மீண்டும் நிறுவும் பணி நமக்கு எதிர்ப்பட்டிருக்கிறது. எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு மின்சாரமயமாக்குவது இயலாது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். தவிர, இதற்கு வெறும் எழுத்தறிவு மட்டும் போதாது. மின் ஆற்றல் என்பது என்ன என்று புரிந்து கொள்வது மட்டும் இதற்குப் போதாது. தொழில் துறைக்கும் விவசாயத்துக்கும், தனித்தனித் தொழில், விவசாயக் கிளைகளுக்கும் அதைத் தொழில் நுட்ப ரீதியாகப் பயன்படுத்துவது எப்படி என்பதும் தெரிந்திருக்க வேண்டும். இதை நாமும் கற்க வேண்டும், உழைப்பாளி இளந் தலைமுறையினர் அனைவருக்கும் கற்பிக்க வேண்டும். உணர்வுள்ள எல்லா விதக் கம்யூனிஸ்டுகளுக்கும் முன் நிற்கும் பணி இது. தான் கம்யூனிஸ்டு என்று நினைப்பவனும், இளங் கம்யூனிஸ்டுகள் கழகத்தில் சேர்ந்தபோது கம்யூனிசத்தை நிறுவுவதில் கட்சிக்கு உதவுவதாகவும் கம்யூனிச சமூகத்தை அமைப்பதில் இளந் தலை முறையினர் அனைவருக்கும் உதவுவதாகவும் தான் பொறுப்பு ஏற்றுக் கொண்டதை உணர்பவனும் ஆகிய ஒவ்வொரு இளைஞனுக்கும் முன் நிற்கும் பணி இது. நவீனக் கல்வியின் அடிப்படையிலேயே இதை நிறுவ முடியும் என்பதையும் அவன் இந்தக் கல்வியில் தேர்ச்சி பெறாவிட்டால் கம்யூனிசம் வெறும் பகற் கனவாகவே இருந்து விடும் என்பதையும் அவன் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலாளித்துவ வர்க்கத்தை ஆட்சியிலிருந்து அகற்றுவது முந்திய தலைமுறையின் பணியாக இருந்தது. முதலாளித்துவ வர்க்கத்தைத் தாக்கி விமர்சிப்பதும் வெகுஜனங்களிடையே அதன்பால் வெறுப்பை வளர்ப்பதும் வர்க்க உணர்வை வளர்ப்பதும் தங்கள் சக்திகளை ஒன்று திரட்டத் திறன் பெற்றிருப்பதும் முக்கியப் பணிகளாக இருந்தன. புதிய தலை

முறைக்கு முன் இருப்பது அதிகச் சிக்கலான பணி. இதோடு, முதலாளிகளின் படையெடுப்புக்கு எதிராகத் தொழிலாளர்-விவசாயிகள் ஆட்சியைக் காக்கும் பொருட்டு உங்கள் சக்திகள் அனைத்தையும் நீங்கள் ஒன்றிணைக்க வேண்டும். நீங்கள் இவ்வாறு செய்தாக வேண்டும். இதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். கம்யூனிஸ்டு இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார். ஆனால் இது போதாது. நீங்கள் கம்யூனிச சமூகத்தை நிறுவ வேண்டும். வேலையின் முதல் பாதி பல அம்சங்களில் செய்து முடிக்கப்பட்டு விட்டது. பழையது அழிக்கப்பட்டு விட்டது, அதை அவ்வாறு அழிப்பது அவசியமாக இருந்தது. அது இடிபாடுகளின் குவியல் ஆகி விட்டது. அது இடிபாடுகளின் குவியலாக மாறுவது அவசியமாய் இருந்தது. அதற்கான களம் துப்புரவாக்கப்பட்டு விட்டது. இந்தக் களத்தில் இளம் கம்யூனிஸ்டு தலைமுறை கம்யூனிச சமூகத்தைக் கட்டி அமைக்க வேண்டும். உங்களுக்கு முன் நிற்பது கட்டுமானப் பணி. நவீன அறிவியல்கள் அனைத்திலும் தேர்ச்சி பெற்று, முன்னமேயே அமைக்கப்பட்டு நெட்டுருச் செய்யப்பட்ட சூத்திரங்களிலும் யோசனைகளிலும் பரிகாரங்களிலும் மாற்றுகளிலும் செயல் திட்டங்களிலுமிருந்து உங்கள் நேரடி வேலையை ஒன்றிணைக்கும் உயிரோட்டமுள்ள ஒன்றாகக் கம்யூனிஸத்தை மாற்ற நீங்கள் வல்லவர்களானால் தான், கம்யூனிசத்தை உங்கள் நடைமுறை வேலைக்கு வழிகாட்டியாக மாற்ற நீங்கள் வல்லவர்களானால் தான் இந்தப் பணியை உங்களால் நிறைவேற்ற முடியும்.

இதுவே உங்கள் பணி. இளந் தலைமுறையின் கல்வி, போதனை, ஏற்றம் ஆகியவற்றில் நீங்கள் இதை வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு இளைஞனும் ஒவ்வொரு யுவதியும் கம்யூனிஸ சமூகத்தைக் கட்டி அமைப்பவர்களாக இருக்க வேண்டும். அத்தகைய லட்சோப லட்சம் நிர்மாணகர்த்தர்களில் நீங்கள் முதல்வர்களாக இருக்க வேண்டும். தொழிலாளி, விவசாயி இளைஞர்களின் பெருந்திரள் அனைத்தையும் கம்யூனிச நிர்மாணத்தின் இந்தச் செயலில் ஈடுபடுத்தாமல் கம்யூனிச சமூகத்தை உங்களால் நிறுவ முடியாது.

கம்யூனிசத்தை நாம் எவ்வாறு கற்பிக்க வேண்டும், நமது முறைகளின் சிறப்பு இயல்பு எதுவாக இருக்க வேண்டும்

என்னும் பிரச்சினையை இங்கே நான் இயல்பாக அணுகு கிறேன்.

எல்லாவற்றுக்கும் முன்னால் கம்யூனிச ஒழுக்க நெறி பற்றிய பிரச்சினையை எடுத்துக் கொள்கிறேன்.

நீங்கள் உங்களைக் கம்யூனிஸ்டுகளாகப் போதித்து வளர்த் துக் கொள்ள வேண்டும். இளைஞர் கழகத்தின் பணி, கல்வி பயில்கையிலும் ஒழுங்கமைத்துக் கொள்கையிலும், ஒன்று இணைகையிலும் இந்த இளைஞர்கள் தங்களையும் தங்களைத் தலைவராக மதிப்பவர்கள் அனைவரையும் போதித்துப் பயிற் றும் வகையில், கம்யூனிஸ்டுகளாகப் போதித்துப் பயிற்றும் வகையில் தனது நடைமுறைச் செயலை அமைத்துக் கொள்வ தாகும். தற்கால இளைஞர்களின் போதனை, கல்வி, பயிற்சி யாவும் அவர்களுக்குக் கம்யூனிச ஒழுக்க நெறியைப் பயிற்று பவையாக இருக்க வேண்டும்.

ஆனால் கம்யூனிச ஒழுக்கநெறி நிலவுகிறதா? கம்யூனிச நீதி நெறி நிலவுகிறதா? சந்தேகமின்றி நிலவுகிறது. நம்மிடம் சொந்த ஒழுக்க நெறி இல்லை என்று அடிக்கடி புனைந்து உரைக்கப்படுகிறது. கம்யூனிஸ்டுகளாகிய நாம் எல்லாவித ஒழுக்க நெறியையும் மறுக்கிறோம் என்று முதலாளித்துவ வர்க்கம் நம் மீது மிக அடிக்கடி குற்றம் சாட்டுகிறது. இது கருதுகோள்களில் மாறாட்டம் செய்யும் யுக்தி, தொழிலாளர் கள், விவசாயிகளின் கண்களில் மண் தூவும் தந்திரம்.

எந்த அர்த்தத்தில் நாம் ஒழுக்கநெறியை மறுக்கிறோம், நீதிநெறியை மறுக்கிறோம்?

இந்த நீதிநெறி கடவுளின் ஆணையால் ஏற்பட்டது என்று முதலாளித்துவ வர்க்கம் பிரசாரம் செய்து வந்தது. அந்த அர்த்தத்தில் நாம் அதை மறுக்கிறோம். இந்த வகையில் நாங் கள் கடவுளை நம்பவில்லை என்று நாம் சந்தேகமின்றிச் சொல் கிறோம். மத குருக்களும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் தங்கள் சுரண்டும் நலன்களைப் பெறுவதற்காகக் கடவுளின் பெயரால் பேசி வந்தார்கள் என்பதை நாம் மிக நன்றாக அறி வோம்; அல்லது இந்த ஒழுக்க நெறியை நீதிநெறி விதிகள் என்றோ கடவுளின் கட்டளைகள் என்றோ கூறுவதற்குப் பதில் கருத்துமுதல்வாத, அல்லது அரைக் கருத்துமுதல்வாதச் சொற்றொடர்களின் அடிப்படையில் இதை அவர்கள் எடுத் துரைத்தார்கள். கடவுளின் கட்டளைகள் என்னும் கருத்தை

மிகவும் ஒத்த அர்த்தத்தையே இந்தச் சொற்ருெடர்கள் எப்போதும் கொடுத்தன.

மனிதாபிமானத்துக்குப் புறம்பான, வர்க்கத்துக்குப் புறம்பான கருதுகோளிலிருந்து பெறப்பட்ட இத்தகைய எல்லாவித நீதிநெறியையும் நாம் மறுக்கிருேம். இது ஏமாற்று என்று நாம் கூறுகிருேம். இது வஞ்சகம் என்றும் நிலப்பிரபுக்களதும் முதலாளிகளதும் நலன்களுக்காகத் தொழிலாளர்கள், விவசாயிகளின் மூளைகளைக் குழப்புவது இது என்றும் நாம் சொல்லுகிருேம்.

நமது நீதிநெறி பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்ட நலன்களுக்கு முற்றிலும் அடிப்பட்டது என்று நாம் கூறுகிருேம். நமது நீதிநெறி பாட்டாளி வர்க்கப் போராட்ட நலன்களிலிருந்து பெறப்படுகிறது.

பழைய சமூகம் எல்லாத் தொழிலாளர்களும் விவசாயிகளும் நிலப்பிரபுக்களாலும் முதலாளிகளாலும் சுரண்டப் படுவதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதைத் தகர்ப்பது நமக்கு அவசியமாய் இருந்தது, நாம் இவர்களை வீழ்த்த வேண்டி இருந்தது. ஆனுல் இவ்வாறு செய்வதற்கு ஒன்றிணைவு ஏற்படுத்துவது தேவைப்பட்டது. கடவுள் இத்தகைய ஒன்றிப்பை ஏற்படுத்தப் போவதில்லை.

தொழிற்சாலைகளும் ஆலைகளும் மட்டுமே, பழைய உறக்கத்திலிருந்து விழிப்பூட்டப் பெற்று, பயிற்சி பெற்ற பாட்டாளி வர்க்கம் மட்டுமே இத்தகைய ஒன்றிப்பைத் தர முடிந்தது. இந்த வர்க்கம் உருவான போது தான் வெகுஜன இயக்கம் தொடங்கியது. இதன் விளைவாக நாம் இப்போது காண்பது, அதாவது யாவற்றிலும் பலவீனமான நாடு ஒன்றில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றியை உலகு அனைத்தினதும் முதலாளித்துவ வர்க்கத்தின் தாக்குதலை மூன்று ஆண்டுகள் எதிர்த்துப் போராடித் தன்னைக் காத்துக் கொண்டது இந்தப் பாட்டாளி வர்க்கம். பாட்டாளி வர்க்கப் புரட்சி உலகு அனைத்திலும் எவ்வாறு வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதை நாம் காண்கிருேம். பாட்டாளி வர்க்கம் மட்டுமே ஒன்று சேர்ந்த சக்தியை உருவாக்க முடியும், துண்டுகளாகப் பிரிந்து சிதறிய விவசாயிகள் சமூகம் இந்தச் சக்தியைப் பின்பற்றும், சுரண்டுவோரின் எல்லாத் தாக்குதல்களையும் இந்தச் சக்தி எதிர்த்து உறுதியாக நின்றது என்று அனு

பவத்தின் அடிப்படையில் நாம் இப்போது கூறுகிறோம். இந்த வர்க்கம்தான் உழைப்பாளி வெகுஜனங்களுக்கு ஒன்று சேரவும், ஒற்றுமைப்படவும் கம்யூனிச சமூகத்தை இறுதியாகக் காத்து, இறுதியாக வலுப்படுத்தி, அதை முற்றாகக் கட்டி முடிக்கவும் உதவ முடியும்.

மனித சமூகத்துக்கு வெளியே இருந்து எடுக்கப்பட்ட நீதிநெறி எங்களிடம் நிலவவில்லை, இது ஏமாற்று என்று இதனால் தான் நாம் சொல்லுகிறோம். எங்களுடைய நீதிநெறி பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்கு அடிப்பட்டது.

இந்த வர்க்கப் போராட்டம் எதில் அடங்கி இருக்கிறது? ஜாரை ஆட்சியிலிருந்து அகற்றுவது, முதலாளிகளை ஆட்சியிலிருந்து அகற்றுவது, முதலாளிகளின் வர்க்கத்தை அழிப்பது இந்தப் போராட்டத்தின் நோக்கம்.

பொதுவாகவே வர்க்கங்கள் என்பவை எவை? சமூகத்தின் ஒரு பகுதி மறு பகுதியின் உழைப்பைத் தனக்கு உரித்தாக்கிக் கொள்ள உதவுபவை இவை. சமூகத்தின் ஒரு பகுதி நிலம் அனைத்தையும் தனக்கு உரித்தாக்கிக் கொண்டால், நிலப் பிரபுக்கள், விவசாயிகள் என்னும் வர்க்கங்கள் தோன்றுகின்றன. சமூகத்தின் ஒரு பகுதி தொழிற்சாலைகளையும் ஆலைகளையும் சொந்தமாகக் கொண்டு, பங்குப் பத்திரங்களையும் மூலதனங்களையும் உடைமையாகக் கொண்டிருந்து, மறு பகுதி இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்தால், முதலாளிகள், பாட்டாளிகள் என்ற வர்க்கங்கள் ஏற்படுகின்றன.

ஜாரை விரட்டி அடிப்பது கடினமாய் இல்லை. இதற்குச் சில நாட்களே தேவைப்பட்டன. நிலப்பிரபுக்களை விரட்டி அடிப்பதும் மிகக் கடினமாய் இல்லை. இதைச் சில மாதங்களில் செய்ய முடிந்தது. முதலாளிகளையும் விரட்டி அடிப்பது மிகக் கடினமாய் இல்லை. ஆனால் வர்க்கங்களை ஒழிப்பது ஒப்பிட முடியாத அளவு அதிகக் கடினமானது. தொழிலாளர்கள், விவசாயிகள் என்ற பிரிவு இன்னமும் எஞ்சி இருக்கிறது. விவசாயி தனிப்பட்ட துண்டு நிலத்தில் அமர்ந்து கொண்டு அதிகப்படி தானியத்தை, அதாவது தனக்கோ தன் கால்நடைகளுக்கோ தேவை இல்லாத தானியத்தைக் கைப்பற்றிக் கொண்டால், மற்றவர்கள் எல்லோரும் தானியம் இல்லாதிருந்து விட்டால், அப்போது விவசாயி சுரண்டு பவனாக

மாறிவிடுகிருன். அவன் தனக்கு எவ்வளவு அதிக தானியம் வைத்துக் கொள்கிருனே, அவனுக்கு அவ்வளவு லாபம். மற்ற வர்கள் பட்டினி கிடந்தால் கிடக்கட்டும்: ''இவர்கள் எவ்வளவு அதிகம் பட்டினி கிடப்பார்களோ அவ்வளவு அதிக விலைக்கு இந்த தானியத்தை விற்பேன்'' என்று அவன் எண்ணுவான். எல்லோரும் பொது நிலத்திலும் பொதுத் தொழிற் சாலைகளிலும் ஆலைகளிலும் ஒரே பொதுத் திட்டப்படி, பொது ஒழுங்கு முறைக்கு இணங்க வேலை செய்ய வேண்டும். இவ்வாறு செய்வது எளிதா? ஜாரையும் நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் விரட்டுவது போன்று எளிதாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது முடியாது என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். இதற்குப் பாட்டாளி வர்க்கம் விவசாயிகளின் ஒரு பகுதியினருக்கு மறு பயிற்சி அளிக்க வேண்டும், புதிதாகக் கற்பிக்க வேண்டும். உழைப்பாளி விவசாயிகளாய் இருப்பவர்களைத் தயார்படுத்தி, பணக்காரர்களும் மற்றவர்களின் தேவைகளைப் பயன்படுத்தி லாபம் திரட்டுபவர்களுமான விவசாயிகளின் எதிர்ப்பை முறிக்க வேண்டும். ஆகவே, நாம் ஜாரைக் கவிழ்த்து விட்டோம், நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் அகற்றி விட்டோம் என்பதால் நமது பணி நிறைவேறிவிடவில்லை. ஆனுல் நாம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என அழைக்கும் அமைப்பின் பணி இதிலேயே அடங்கி இருக்கிறது.

வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடந்து வருகிறது. அது தன் வடிவங்களை மட்டுமே மாற்றிக் கொண்டிருக்கிறது. பழைய சுரண்டுவோர் திரும்பி வந்து விடக் கூடாது, அரசியல் அறிவற்றுத் துண்டுகளாகச் சிதறி இருக்கும் விவசாயிகள் ஒரே கூட்டாக ஒன்றுபட வேண்டும் என்பதற்காக நடக்கிறது பாட்டாளிகளின் இந்த வர்க்கப் போராட்டம். வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடக்கிறது. எல்லா நலன்களையும் இந்தப் போராட்டத்துக்கு அடிப்படுத்துவது நம் பணி. நமது கம்யூனிஸ்டு நீதிநெறியையும் நாம் இந்தப் பணிக்கே அடிப்படுத்துகிருேம். நாம் சொல்லுகிருேம்: பழைய சுரண்டுவோர் சமூகத்தை அழிக்கவும், கம்யூனிஸ்டுகளின் புதிய சமூகத்தை அமைத்துவரும் பாட்டாளி வர்க்கத்தை மையமாகக் கொண்டு எல்லா உழைப்பாளிகளையும் ஒன்று திரட்டவும் உதவுவதே இந்த நீதிநெறி.

இந்தப் போராட்டத்தில் எது பயன்படுகிறதோ, எல்லா வகையான சுரண்டலுக்கும் எதிராகவும் எல்லா வகையான சிறு உடைமைக்கும் எதிராகவும் உழைப்பாளிகளை எது ஒன்று சேர்க்கிறதோ அதுவே கம்யூனிஸ்டு நீதிநெறி. ஏனெனில் சமூகம் அனைத்தினதும் உழைப்பினுல் உருவாக்கப் பட்டதைச் சிறு உடைமை ஒரு நபரின் கைகளில் கொடுக்கிறது. நமது சமூகத்தில் நிலம் பொது உடைமையாகக் கருதப்படுகிறது.

இந்தப் பொது உடைமையிலிருந்து ஒரு குறித்த துண்டை நான் எடுத்துக் கொண்டு எனக்குத் தேவையானதைப் போல இரு மடங்கு அதிக தானியத்தை அதில் விளைவித்து, உபரி தானியத்தைக் கொண்டு கள்ள வியாபாரம் செய்கிறேன் என்ருல்? பசித்தவர்கள் எத்தனை அதிகமோ அத்தனை அதிக விலை தருவார்கள் என்று நான் கணக்கிட்டால்? அப்போது நான் கம்யூனிஸ்டாக நடந்து கொள்கிறேனு என்ன? இல்லை, சுரண்டுபவனுக, தனி உடைமையாளனுக நான் நடந்து கொள்கிறேன். இதை எதிர்த்துப் போராட வேண்டும். இதை இப்படியே இருக்க விட்டால், முந்திய புரட்சிகளில் பல முறை நடந்தது போல எல்லாம் பின்னுக்கு, முதலாளிகளின் ஆட்சிக்கு, முதலாளி வர்க்கத்தின் ஆட்சிக்குச் செல்லும். முதலாளிகளினதும் முதலாளித்துவ வர்க்கத்தினதும் ஆட்சி மீண்டும் நிலைபெற விடாது தடுப்பதற்குச் சில்லறை வர்த்தகத்துக்கு இடம் தரக் கூடாது, தனி நபர்கள் மற்றவர்களைச் சுரண்டி லாபம் சம்பாதிக்காதிருப்பது இதற்கு அவசியம். உழைப்பாளிகள் பாட்டாளி வர்க்கத்துடன் ஒன்றிணைந்து கம்யூனிஸ்டு சமூகமாக அமைவது இதற்குத் தேவை. கம்யூனிஸ்டு இளைஞர்களின் ஐக்கியத்தினதும் நிறுவனத்தினதும் முக்கியப் பணியாக விளங்கும் முதன்மையான தனிச்சிறப்பு இதுவே ஆகும்.

ஒன்ரு நீ மற்றவனைக் கொள்ளை அடிப்பாய், இல்லாவிட்டால் மற்றவன் உன்னைக் கொள்ளை அடிப்பான், ஒன்ரு நீ மற்றவனுக்காக வேலை செய்வாய், இல்லா விட்டால் அவன் உனக்காக வேலை செய்வான், ஒன்ரு நீ அடிமைச் சொந்தக்காரன், இல்லா விட்டால் நீ அடிமை என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் பழைய சமூகம் அமைந்திருந்தது. அந்த சமூகத்தில் போதித்துப் பயிற்றப்பட்டவர்கள், ஒரு வகையில் சொன்னுல் தாய்ப்பாலுடனேயே உளப்பாங்குகளையும்

வழக்கத்தையும் கருதுகோளேயும்—ஒன்று அடிமைச் சொந்தக்காரன், இல்லாவிட்டால் அடிமை, அல்லது சிறு உடைமையாளன், சிறு பணியாளன், சிறு அலுவலன், அறிவுஜீவி என்ற கருதுகோளேயும்—கிரகித்துக் கொள்கிருர்கள். சுருங்கக் கூறின் தனக்கு வேண்டியதைப் பெறுவதில் மட்டுமே அக்கறை கொள்பவஞக, மற்றவர்கள் என்ன ஆனுலும் பரவாயில்லே என்று நினைப்பவஞக ஒவ்வொருவனும் பயிற்றப்படுகிருன்.

நான் இந்த நிலப் பகுதியில் மணியம் செய்கிறேன் என்ருல் வேறு பகுதி பற்றி அக்கறை இல்லே. மற்றவன் பட்டினி கிடப்பான் என்ருல் இன்னும் நல்லது. நான் என் தானியத்தை அதிக விலேக்கு விற்பேன். நான் மருத்துவன், பொறியாளன், பள்ளி ஆசிரியன், அலுவலன் என்ற முறையில் எனக்கு உரிய இடத்தைப் பெற்றிருக்கிறேன் என்ருல் மற்றவனேப் பற்றி எனக்குக் கவலே இல்லே. உடைமையாளர்களின் ஆட்சிக்கு ஒத்துப் போவதஞல், அவர்களுக்கு இணக்கமாக நடந்து கொள்வதால் நான் என் இடத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியலாம். ஒரு வேளே நான் முன்னேறவும் முதலாளி ஆகவுங்கூட முடியலாம். இத்தகைய மனப்பாங்கும் இத்தகைய மனநிலேயும் கம்யூனிஸ்டினிடம் இருக்க முடியாது. நாம் சொந்த பலம் கொண்டு நம்மைக் காத்துக் கொள்ளவும் புதிய சமூகத்தைக் கட்டி அமைக்கவும் வல்லவர்கள் என்று தொழிலாளர்களும் விவசாயிகளும் நிரூபித்த போது புதிய கம்யூனிசப் பயிற்சி அக்கணமே தொடங்கி விட்டது. இது சுரண்டுவோருக்கு எதிரான போராட்டத்தில் பயிற்சி, தன்னலமிகளுக்கும் சிறு உடைமையாளர்களுக்கும் எதிராக, ''நான் என் சொந்த லாபத்தை முயன்று பெறுகிறேன், மற்ற விஷயங்களில் எனக்கு எவ்வித அக்கறையும் கிடையாது'' என்று சொல்லும் மனப்பாங்குக்கும் வழக்கங்களுக்கும் எதிராகப் பாட்டாளி வர்க்கத்துடன் கூட்டு ஏற்படுத்துவதற்கான பயிற்சி.

வளர்ந்து வரும் இளம் தலேமுறை கம்யூனிசத்தை எப்படிக் கற்க வேண்டும் என்ற கேள்விக்கு விடை இதில் அடங்கி இருக்கிறது.

தனது போதனேயின், பயிற்சியின், கல்வியின் ஒவ்வோர் அடியையும் பழைய சுரண்டுவோர் சமூகத்துக்கு எதிராகப்

பாட்டாளிகளதும் உழைப்பாளிகளதும் இடையருத போராட்டத்துடன் இணைப்பதன் வாயிலாக மட்டுமே இந்தத் தலைமுறை கம்யூனிசத்தைக் கற்க முடியும். நீதிநெறி பற்றி நம்மிடம் கூறப்படும்போது நாம் பின்வருமாறு சொல்லுகிறோம்: கம்யூனிஸ்டுக்கு நீதிநெறி முழுவதும் இந்த ஒன்றிணைந்த, ஒருமைப்பாடு உள்ள கட்டுப்பாட்டிலும் சுரண்டுவோருக்கு எதிராக உணர்வுபூர்வமான வெகுஜனப் போராட்டத்திலுமே இருக்கிறது. நிலையான நீதிநெறியில் நமக்கு நம்பிக்கை கிடையாது. நீதிநெறி பற்றிய எல்லா வகைக் கதைகளிலும் உள்ள வஞ்சகத்தை நாம் அம்பலப்படுத்துகிறோம். மனித சமூகத்தை உயர்த்தவும் உழைப்பைச் சுரண்டலிலிருந்து விடுவிக்கவுமே நீதிநெறி பயன்படுகிறது.

இதைச் செயல்படுத்துவதற்கு, முதலாளித்துவ வர்க்கத்துடன் கட்டுப்பட்டுள்ள துணிந்த போராட்டத்தின் சூழ்நிலையில் அரசியல் உணர்வு பெற்றவர்களாக மாறத் தொடங்கிய இளைஞர்களின் தலைமுறை தேவை. இந்தப் போராட்டத்தில் அது உண்மைக் கம்யூனிஸ்டுகளைப் பயிற்றும். அது தனது போதனையிலும் கல்வியிலும் பயிற்சியிலும் ஒவ்வோர் அடியையும் இந்தப் போராட்டத்துக்கு அடிப்படுத்தவும் இதனுடன் இணைக்கவும் வேண்டும். கம்யூனிஸ்டு இளைஞர்களின் பயிற்சி நீதிநெறி பற்றிய எல்லா வகையான இனிப்பூட்டும் பேச்சுக்களையும் விதிகளையும் அவர்களுக்கு முன் வைப்பதில் அடங்கி இருக்கக் கூடாது. பயிற்சி இதில் அடங்கி இருக்கவில்லை. தங்கள் தாய் தந்தையர் நிலப்பிரபுக்களதும் முதலாளிகளதும் ஒடுக்குமுறையின் கீழ் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை மக்கள் கண்டபோது, சுரண்டுவோருக்கு எதிராகப் போராட்டம் தொடங்கியவர்கள் மீது பொழிந்த சித்திரவதைகளை மக்கள் தாங்களே அனுபவித்தபோது, வென்றவற்றைக் காப்பாற்றி வைத்துக் கொள்வதற்காக இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு எத்தகைய தியாகங்கள் புரிய வேண்டி இருந்தது என்பதையும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் எத்தகைய வெறி கொண்ட பகைவர்கள் என்பதையும் அவர்கள் கண்ட போது, இந்த மனிதர்கள் இந்தச் சூழ்நிலையில் கம்யூனிஸ்டுகளாகப் பயிற்சி பெற்றூர்கள். கம்யூனிசத்தை உறுதிப்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்குமான போராட்டம் கம்யூனிச நீதிநெறியின் அடிப்

படையாக விளங்குகிறது. கம்யூனிசப் பயிற்சி, கல்வி, போதனை ஆகியவற்றின் ஆதாரமும் இதுவே. கம்யூனிசத்தை எப்படிக் கற்க வேண்டும் என்ற கேள்விக்கு விடை இதில் தான் அடங்கி இருக்கிறது.

போதனையும் பயிற்சியும் கல்வியும் பள்ளியில் மட்டுமே புகட்டப்பெற்று, கொந்தளிப்புள்ள வாழ்க்கையிலிருந்து துணிக்கப் பெற்றிருந்தால் நாம் அதை நம்ப மாட்டோம். தொழிலாளர்களும் விவசாயிகளும் நிலப்பிரபுக்களாலும் முதலாளிகளாலும் ஒடுக்கப்பட்டுவரும் வரையில், பள்ளிக் கூடங்கள் நிலப்பிரபுக்களுடையவும் முதலாளிகளுடையவும் கைகளில் இருந்துவரும் வரையில் இளைஞர் தலைமுறை குருடாகவும் இருளில் ஆழ்ந்ததாகவும் இருந்துவரும். ஆனால் நமது பள்ளி இளைஞர்களுக்கு அறிவியல்களின் அடிப்படைகளையும் கம்யூனிசக் கருத்தோட்டங்களைத் தாமே செவ்வைப் படுத்திக் கொள்ளும் திறனையும் அளிக்க வேண்டும். அவர்களைக் கல்வித் தேர்ச்சி பெற்றவர்கள் ஆக்க வேண்டும். மனிதர்கள் கல்வி பயிலும் காலத்தில் நமது பள்ளி அவர்களைச் சுரண்டுவோரிடமிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டத்தில் பங்காற்றுபவர்கள் ஆக்க வேண்டும். கம்யூனிஸ்டு இளைஞர் கழகம் தனது போதனை, பயிற்சி, கல்வி ஆகியவற்றின் ஒவ்வோர் அடியையும் சுரண்டுவோருக்கு எதிராக எல்லா உழைப்பாளிகளுடையவும் பொதுப் போராட்டத்தில் பங்கு கொள்வதுடன் இணைத்தால்தான் அது தன் பெயரை, தான் கம்யூனிஸ்டு இளம் தலைமுறையினரின் கழகம் என்பதை மெய்ப்பிக்கும். ஏனெனில் ஒரு விஷயத்தை நீங்கள் நன்கு அறிவீர்கள். அதாவது, ருஷ்யா தன்னந்தனித் தொழிலாளர் குடியரசாக இருக்க, எஞ்சிய உலகு அனைத்திலும் பழைய முதலாளித்துவ அமைப்பு முறை நிலவும் வரை நாம் அவற்றைவிட பலம் குறைந்தவர்கள். ஒவ்வொரு தடவையும் புதிய தாக்குதல் நடக்கும் அபாயம் நமக்கு எதிர்ப்படும். நாம் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கொள்ளக் கற்றால்தான் அடுத்துவரும் போராட்டத்தில் நாம் வெல்வோம். இவ்வாறு உரமேற்றிக் கொண்ட பின் உண்மையிலேயே பிறரால் வெல்ல முடியாதவர்கள் ஆகிவிடுவோம். எனவே, கம்யூனிஸ்டாக இருப்பது என்றால் இளம் தலைமுறையினர் எல்லோரையும் ஒழுங்கமைத்து ஒன்று சேர்ப்பதும் இந்தப் போராட்டத்

தில் பயிற்சிக்கும் கட்டுப்பாட்டுக்கும் உதாரணம் காட்டுவதும் ஆகும். அப்போது நீங்கள் கம்யூனிச சமூகம் என்னும் கட்டிடத்தின் கட்டுமானத்தைத் தொடங்கவும் முடிவுவரை நடத்திச் செல்லவும் வல்லவர் ஆவீர்கள்.

இந்த விஷயத்தை உங்களுக்கு இன்னும் தெளிவுபடுத்தும் பொருட்டு ஓர் உதாரணம் காட்டுகிறேன். நாம் நம்மைக் கம்யூனிஸ்டுகள் என்று அழைத்துக் கொள்கிறோம். கம்யூனிஸ்டு என்பவன் யார்? கம்யூனிஸ்டு என்பது லத்தீன் சொல். கம்யூனிசம் என்றால் பொதுவான என்று அர்த்தம். கம்யூனிச சமூகம் என்றால், நிலம் தொழிற்சாலைகள் எல்லாம் பொதுவானவை, உழைப்பு பொதுவானது என்று பொருள். இதுதான் கம்யூனிசம்.

ஒவ்வொருவரும் தனித் துண்டு நிலத்தில் தன் விவசாயத்தை நடத்தினால் உழைப்பு பொதுவானதாக இருக்க முடியுமா? பொது உழைப்பை எடுத்த எடுப்பில் உண்டாக்கி விட முடியாது. இது நடக்காத காரியம். இது ஆகாயத்திலிருந்து விழுந்து விடாது. இதற்கு முயற்சி செய்ய வேண்டும், பாடுபட வேண்டும், இதை உருவாக்க வேண்டும். போராட்டத்தின் போக்கில் இது உருவாகும். இது பழைய புத்தகம் அல்ல—புத்தகத்தை எவனும் நம்ப மாட்டான். இது சொந்த வாழ்க்கை அனுபவம். கல்ச்சாக்கும் தெனீக்கினும் சைபீரியாவிலிருந்தும் தெற்கிலிருந்தும் படை எடுத்து வந்த போது விவசாயிகள் அவர்கள் தரப்பில் இருந்தார்கள். போல்ஷிவிசம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை, ஏனென்றால் போல்ஷிவிக்குகள் நிலையான விலைக்கு தானியத்தை வாங்கிக்கொள்கிறார்கள். ஆனால் சைபீரியாவிலும் உக்ரைனிலும் கல்ச்சாக்கினதும் தெனீக்கினதும் ஆட்சியை விவசாயிகள் அனுபவித்ததும் விவசாயிக்கு இரண்டில் ஒன்று தவிரத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேறு எதுவும் இல்லை என்பதை அவர்கள் தெரிந்து கொண்டார்கள்: ஒன்று அவன் முதலாளியின் தரப்பில் சேர வேண்டும். முதலாளி அவனை நிலப்பிரபுவிடம் அடிமையாக ஒப்படைப்பான். இல்லாவிட்டால் தொழிலாளியை ஆதரிக்க வேண்டும். தொழிலாளி தேனும் பாலாறும் பெருகும் என்று ஆசை காட்டுவதில்லை. எஃகுக் கட்டுப்பாட்டையும் கடினமான போராட்டத்தில் உறுதியையும் அவன் கோருகிறான். ஆனால் முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் அடிமையா

யிருக்கும் நிலையிலிருந்து அவன் விவசாயியை விடுவித்துவிடுவான். அரசியல் அறிவற்ற விவசாயிகள் கூடச் சொந்த அனுபவத்தின் மூலம் இதைப் புரிந்துகொண்டு நேரில் கண்டதும் அவர்கள் துன்பகரமான படிப்பினை வாயிலாக அரசியல் உணர்வு பெற்று, கம்யூனிசத்தின் ஆதரவாளர்கள் ஆனார்கள். கம்யூனிஸ்டு இளைஞர் கழகம் இத்தகைய அனுபவத்தையே தன் எல்லாச் செயல்களுக்கும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

நான் என்ன கற்க வேண்டும், பழைய பள்ளியிலிருந்தும் பழைய விஞ்ஞானத்திலிருந்தும் நாம் எதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கேள்விகளுக்கு நான் விடை அளித்தேன். இதை எப்படிக் கற்க வேண்டும் என்னும் கேள்விக்கும் பதில் சொல்ல முயல்கிறேன். பள்ளி நடவடிக்கையின் ஒவ்வோர் அடியையும், பயிற்சிக்கும் கல்விக்கும் போதனைக்கும் உரிய ஒவ்வோர் அடியையும் சுரண்டுவோருக்கு எதிராக எல்லா உழைப்பாளிகளுடையவும் போராட்டத்துடன் பிரிக்க முடியாதவாறு இணைப்பதன் மூலமே கற்க வேண்டும்.

இந்தக் கம்யூனிசப் பயிற்சி எப்படி நடக்க வேண்டும் என்பதை ஏதேனும் ஓர் இளைஞர் நிறுவனத்தின் அனுபவத்திலிருந்து எடுத்த உதாரணங்களைக் கொண்டு உங்களுக்குக் கண்கூடாகக் காட்டுகிறேன். எழுத்தறிவின்மையை அகற்றுவது பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். எழுத்தறிவு இல்லாத நாட்டில் கம்யூனிஸத்தைக் கட்டி அமைப்பது முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள். சோவியத் ஆட்சி உத்தரவு இடுவதோ, கட்சி குறித்த கோஷத்தைக் கிளப்புவதோ, சிறந்த ஊழியர்களின் ஒரு பகுதியை இந்த வேலையில் ஈடுபடுத்துவதோ போதாது. இளைஞர் கழக உறுப்பினர்களான நபர்கள், யுவ யுவதியர், இது நம் காரியம், நாம் ஒன்று சேர்ந்து நாட்டுப்புறம் செல்வோம், எழுத்தறிவின்மையை அகற்றுவோம், நமது வளரும் தலைமுறையில் எழுத்தறிவு அற்றவர்கள் இல்லாதவாறு செய்வோம் என்று சொல்லும்படி செய்வதே கம்யூனிசம் ஆகும். வளரும் இளைஞர்களின் செயல்கள் இந்தக் காரியத்தில் ஈடுபடுத்தப் படுவதற்கு நாம் முயல்கிறோம். ருஷ்யாவை இருண்ட, எழுத்தறிவு இல்லாத நாட்டிலிருந்து எழுத்தறிவு பெற்ற நாடாக விரைவில் மாற்றுவது முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால்

இளைஞர் கழகம் இந்த வேலையை மேற்கொண்டால், இளைஞர்கள் அனைவரும் எல்லோருடைய நன்மைக்காகவும் பாடுபட்டால் 4,00,000 யுவர் யுவதியரை உறுப்பினர்களாகக் கொண்ட இந்தக் கழகம் கம்யூனிஸ்டு இளைஞர் கழகம் என்று அழைக்கப்பட உரிமை உள்ளதாகும். குறித்த அறிவியல்களில் தேர்ச்சி பெற்ற பின், எழுத்தறிவின்மை இருளிலிருந்து தாமே விடுதலை பெற முடியாத இளைஞர்களுக்கு உதவுவதும் கழகத்தின் பணி ஆகும். இளைஞர் கழக உறுப்பினராய் இருப்பதன் அர்த்தம், தனது வேலையையும் தன் சக்திகளையும் பொது நோக்கத்துக்கு வழங்கும் வகையில் காரியங்களை நடத்துவது ஆகும். கம்யூனிசப் பயிற்சி இதில்தான் அடங்கி இருக்கிறது. இம்மாதிரி வேலையில் தான் இளைஞன் அல்லது இளம் பெண் உண்மையான கம்யூனிஸ்டாக மாறுவர். இந்த வேலையால் அவர்கள் நடைமுறை வெற்றிகள் பெற முடிந்தால்தான் அவர்கள் கம்யூனிஸ்டுகள் ஆவார்கள்.

உதாரணத்துக்கு நகர்ப்புறக் காய்கறித் தோட்ட வேலையை எடுத்துக் கொள்ளுங்கள். இது காரியம் இல்லையா என்ன? இது கம்யூனிஸ்டு இளைஞர் கழகத்தின் பணிகளில் ஒன்று. மக்கள் பட்டினி கிடக்கிறார்கள், தொழிற்சாலைகளிலும் ஆலைகளிலும் பட்டினி. பஞ்சத்திலிருந்து தப்புவதற்குக் காய்கறித் தோட்டங்களை விரிவாக்க வேண்டும். ஆனால் விவசாயம் பழைய முறையில் செய்யப்படுகிறது. அதிக உணர்வுள்ள நபர்கள் இந்த வேலையில் ஈடுபடுவது அவசியம். அப்போது காய்கறித் தோட்டங்கள் பெருகுவதையும் அவற்றின் பரப்பு விரிவடைவதையும் பலன்கள் மேம்படுவதையும் நீங்கள் காண்பீர்கள். இந்தக் காரியத்தில் கம்யூனிஸ்டு இளைஞர் கழகம் ஊக்கத்துடன் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கழகமும் அல்லது கழகத்தின் ஒவ்வொரு மையக் குழுவும் இந்தக் காரியத்தைத் தங்கள் காரியமாக எண்ண வேண்டும்.

கம்யூனிஸ்டு இளைஞர் கழகம் எல்லா வித வேலையிலும் உதவி அளிப்பதும் தனது முன்முயற்சியைக் காட்டுவதுமான முன்னணிக் குழுவாக இருக்க வேண்டும். எந்தத் தொழிலாளியும் கழகத்தைச் சேர்ந்தவர்களின் போதனையை ஒருக்கால் புரிந்து கொள்ளாவிட்டாலும், அவர்களுடைய போதனையை உடனே ஒருவேளை நம்பாவிட்டாலும், அவர்களுடைய நேரடி வேலையில், அவர்களுடைய நடவடிக்கைகளில், தனக்கு

சரியான வழி காட்டுபவர்கள் இவர்களே என்பதை அவன் காணும்படியாகக் கழகம் இருக்க வேண்டும்.

கம்யூனிஸ்டு இளைஞர் கழகம் எல்லாத் துறைகளிலும் தன் வேலையை இம்மாதிரி அமைத்துக்கொள்ள முடியாவிட்டால் அது பழைய, முதலாளித்துவ வழியில் தடுமாறுகிறது என்று அர்த்தமாகும். கம்யூனிச போதனையிலிருந்து பெறப்படும் பணிகளை நிறைவேற்றுவதில் உழைப்பாளிகளுக்கு உதவும் பொருட்டு நமது பயிற்சி சுரண்டுவோருக்கு எதிராக உழைப்பாளிகளின் போராட்டத்துடன் இணைய வேண்டும்.

கழக உறுப்பினர்கள் தங்கள் ஒழிவு நேரத்தின் ஒவ்வொரு மணியையும் காய்கறித் தோட்டத்தைச் சீர்படுத்துவதில் செலவிட வேண்டும், அல்லது ஏதேனும் தொழிற்சாலையிலோ ஆலையிலோ இளைஞர்களுக்குப் போதனை அளிப்பது முதலியவற்றை ஒழுங்கமைக்க வேண்டும். வறுமையும் தாழ்வும் உள்ள நாடாக இருப்பதிலிருந்து ருஷ்யாவைச் செல்வ வளம் மிக்க நாடாக மாற்ற நாம் விரும்புகிறோம். கம்யூனிஸ்டு இளைஞர் கழகம் தனது கல்வியையும் தனது போதனையையும் தனது பயிற்சியையும் தொழிலாளர், விவசாயிகளின் உழைப்புடன் இணைக்க வேண்டும். அது தன் பள்ளியில் அடைபட்டு இருக்கக் கூடாது. கம்யூனிச நூல்களையும் சிற்றேடுகளையும் படிப்பதோடு அது நின்றுவிடக் கூடாது. தொழிலாளர்களோடும் விவசாயிகளோடும் சேர்ந்து உழைப்பதனுல் தான் உண்மைக் கம்யூனிஸ்டு ஆக முடியும். இளைஞர் கழகத்தில் சேர்ந்தவன் ஒவ்வொருவனும் எழுத்தறிவு பெற்றவன், அதோடு உழைக்கவும் வல்லவன் என்பதை எல்லோரும் காண வேண்டும். நாம் பழைய பள்ளியிலிருந்து பழைய கவாத்தை அகற்றிவிட்டு அதன் இடத்தில் உணர்வுபூர்வமான கட்டுப்பாட்டைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதையும் ஒவ்வொரு இளைஞனும் சுப்போத்னிக்கில்[56] பங்கு கொள்வதையும் மக்களுக்கு உதவும் பொருட்டு இளைஞர்கள் ஒவ்வொரு நகர்ப்புறப் பண்ணையையும் எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் எல்லோரும் காணும் போது மக்கள் உழைப்பை முன்பு பார்த்தது போல் இன்றி வேறு விதமாகப் பார்ப்பார்கள்.

கம்யூனிஸ்டு இளைஞர் கழகத்தின் பணி கிராமத்திலோ அல்லது தன் வட்டாரத்திலோ—ஒரு சிறு உதாரணத்தை எடுத்துக் கொள்கிறேன்—துப்புரவுக்கு வகை செய்வதில்

அல்லது உணவுப் பண்டங்களை வினியோகிப்பதில் உதவிக்கு ஏற்பாடு செய்வதாகும். பழைய முதலாளித்துவ சமூகத்தில் இது எவ்வாறு செய்யப்பட்டது? ஒவ்வொருவனும் தனக்காக மட்டுமே வேலை செய்தான். அங்கே முதியவர்களும் நோயாளிகளும் இருக்கிறார்களா என்பதை எவனும் கவனிக்கவில்லை. அல்லது எல்லா வேலையும் மாதர்களின் தோள்கள் மீது சுமத்தப்பட்டது. இந்தக் காரணத்தால் மாதர்கள் நசுக்கவும் அடிமையாக்கவும் பட்ட நிலைமையில் இருந்தார்கள். இதற்கு எதிராக யார் போராட வேண்டும்? இளைஞர் கழகங்கள்தாம். அவை பின்வருமாறு கூற வேண்டும்: நாங்கள் இதை மாற்றுவோம், நாங்கள் இளைஞர் பிரிவுகளை ஒழுங்கமைப்போம். இவை துப்புரவுக்கு வகை செய்வதிலும் உணவு பண்டங்களை வினியோகிப்பதிலும் உதவும். முறையாக வீடுகளைச் சுற்றிவரும். சமூகம் முழுவதன் நன்மைக்காகவும் இவை ஒழுங்கமைந்த முறையில் செயலாற்றும். சக்திகளைச் சரியாகப் பயன்படுத்துவதன் வாயிலாக, உழைப்பு ஒழுங்கமைந்த உழைப்பாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டும்.

இப்போது கிட்டத்தட்ட ஐம்பது வயது ஆகிற தலைமுறை கம்யூனிச சமூகத்தைக் காணலாம் என்று எண்ண முடியாது. அதற்குள் இந்தத் தலைமுறை மடிந்துவிடும். இப்போது பதினைந்து வயதான தலைமுறை கம்யூனிச சமூகத்தைக் காணும், தானே அதைக் கட்டி அமைக்கும். தன் வாழ்க்கைப் பணி அனைத்தும் இந்த சமூகத்தை நிறுவுவது தான் என்று இந்தத் தலைமுறையும் தெரிந்து கொள்ள வேண்டும். பழைய சமூகத்தில் உழைப்பு தனிக் குடும்பத்தால் நடத்தப்பட்டது. திரளான வெகுஜனங்களைச் சுரண்டிவந்த நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் தவிர வேறு எவரும் உழைப்பை ஒன்றுபடுத்தவில்லை. எல்லா வகையான உழைப்பையும், அது எவ்வளவுதான் அழுக்கும் சிரமமும் உள்ளதாய் இருந்தாலும், ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் தன்னைப் பற்றிப் பின்வருமாறு எண்ணும் வகையில் நாம் அமைக்க வேண்டும்: ''நான் கட்டற்ற உழைப்பின் மாபெரும் சேனையின் பகுதி ஆவேன், நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் இல்லாமல் என் வாழ்க்கையை நானே நிறுவ வல்லவன். கம்யூனிஸ ஒழுங்கு முறையை நிலைநாட்ட என்றால் முடியும்.'' கம்யூனிஸ்டு இளைஞர் கழகம் உணர்வுபூர்வமான,

ஒழுங்கமைந்த உழைப்புக்கு எல்லோரையும் இளம் பருவம்* முதலே பயிற்ற வேண்டும். இவ்வாறு செய்தால்தான் தற்போது எதிர் நிற்கும் பணிகள் நிறைவேற்றப்படும் என்று நம்மால் நம்ப முடியும். நாட்டை மின்சாரமயம் ஆக்குவதற்கும் நமது வறுமைப்பட்ட நிலம் தொழில் நுட்பத்தின் நவீன சாதனைகளின்படி பண்படுத்தப்படுவதற்கு வகை செய்வதற்கும் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத காலம் தேவை என்று நாம் கணக்கிட வேண்டும். ஆகவே, தற்போது பதினைந்து வயதை எட்டியிருக்கும் தலைமுறை, இன்னும் 10—20 ஆண்டுகளில் கம்யூனிச சமூகத்தில் வாழப்போகிற தலைமுறை, ஒவ்வொரு நாளும் எந்த கிராமத்திலும் எந்த நகரத்திலும் இளைஞர்கள் பொது உழைப்பின் ஏதேனும் ஒரு பணியை, அது யாவற்றிலும் சிறியதானாலும் சரி, யாவற்றிலும் எளியதானாலும் சரி, நடைமுறையில் நிறைவேற்றும் வகையில் தனது போதனைப் பணிகள் அனைத்தையும் முறைப்படுத்த வேண்டும். எந்த அளவுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் இது நிகழுமோ, எந்த அளவுக்குக் கம்யூனிஸ முறைப் போட்டி வளர்ச்சி அடையுமோ, தங்களால் தங்கள் உழைப்பை ஒன்றிணைக்க முடியும் என்பதை இளைஞர்கள் எந்த அளவுக்கு நிரூபிப்பார்களோ, அந்த அளவுக்குக் கம்யூனிச நிர்மாணத்தின் வெற்றி உறுதிப்படும். தன் ஒவ்வோர் அடி வைப்பையும் இந்தக் கட்டுமானத்தின் நோக்கு நிலையிலிருந்து பார்வையிடுவதன் மூலமே, ஒன்றிணைந்த உணர்வுபூர்வமான உழைப்பாளிகளாய் இருப்பதற்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்து விட்டோமா என்று தன்னைக் கேட்டுக் கொள்வதன் மூலமே கம்யூனிஸ்டு இளைஞர் கழகம் தன் ஐந்து லட்சம் உறுப்பினர்களை ஒரே உழைப்புச் சைனியமாக ஒன்றிணைக்கும், தன்னை எல்லோரும் மதிக்குமாறு செய்யும். (இடி முழக்கம் போன்ற கைதட்டல்கள்.)

**பிராவ்தா,** இதழ்கள் 221, 222, 223;
1920, அக்டோபர் 5, 6, 7

**நூல் திரட்டு,**
தொகுதி 41,
பக்கங்கள் 298-318

---

* 1920ம் ஆண்டு, அக்டோபர் 7ந் தேதி வெளியான **பிராவ்தா,** இதழ் 223ல் ''இளம் பருவம் முதலே'' என்ற சொற்களின் இடத்தில் ''பன்னிரண்டு வயது முதலே'' என்ற சொற்கள் தரப்பட்டுள்ளன.—**ப-ர்.**

# பாட்டாளி வர்க்கக் கலாசாரம் குறித்து
## என்னும் கட்டுரையிலிருந்து

நகல் தீர்மானம்:

*1. தொழிலாளர்கள்-விவசாயிகளது சோவியத் குடியரசில் கல்வித் துறைப் பணிகள் யாவும், பொதுவாய் அரசியல் கல்வித் துறையிலும் குறிப்பாய் கலைத் துறையிலுமான இப் பணிகள் யாவும், பாட்டாளி வர்க்கமானது தனது சர்வாதிகாரத்தின் நோக்கங்களை, அதாவது முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்திடல், வர்க்கங்களை ஒழித்தல், மனிதனை மனிதன் சுரண்டுவதன் எல்லா வடிவங்களையும் அகற்றுதல் என்பனவற்றை வெற்றிகரமாய்ச் சித்தி பெறச் செய்வதற்காக நடத்தி வரும் வர்க்கப் போராட்டத்தின் மனப்பான்மையில் தோய்ந்தனவாய் இருத்தல் வேண்டும்.*

*2. எனவே பாட்டாளி வர்க்கம், அதன் முன்னணிப் படையின்—கம்யூனிஸ்டுக் கட்சியின்—மூலமாகவும், மற்றும் பொதுவில் பல வகையான பாட்டாளி வர்க்க நிறுவனங்களின் மூலமாகவும், பொதுக் கல்வித் துறையின் எல்லாப் பணிகளிலும் ஆகப் பெரிய அளவில் செயல்பட்டு, தலைமையான பங்கு ஆற்ற வேண்டும்.*

*3. நவீன கால வரலாற்றின் அனுபவம் அனைத்தும், மற்றும் குறிப்பாய்,* கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை *வெளிவந்தது முதலாய் எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினுடைய அரை நூற்றாண்டுக்கும் மேலான புரட்சிப் போராட்டத்தின் அனுபவம் அனைத்தும், மார்க்சிய உலகக் கண்ணோட்டம் ஒன்று மட்டுமே புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களையும் கருத்தோட்டத்தையும் கலாசாரத்தை*

யும் மெய்யாக வெளியிடுகிறது என்பதை ஐயமறத் தெளிவு படுத்தியிருக்கின்றன.

4. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தமாய் மார்க்சியம், வரலாற்றுச் சிறப்புடைத்த தனது முக்கியத்து வத்தைப் பெற்று வாகை சூடியுள்ளது எப்படியெனில், முத லாளித்துவச் சகாப்தத்தின் மதிப்புமிக்க சாதனைகளை நிரா கரித்துவிடாமல், இதற்கு நேர் மாறாய் இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்டதான மனித சிந்தனையின், கலா சாரத்தின் வளர்ச்சியில் கிட்டிய மதிப்புடைத்த ஒவ்வொன் றையும் அது கிரகித்து, திருத்தியமைத்துக் கொண்டதால் தான். இந்த அடிப்படையிலும், இந்தத் திசையிலும், சுரண் டலின் ஒவ்வொரு வடிவத்துக்கும் எதிரான போராட்டத்தின் இறுதிக் கட்டமாகிய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் நடைமுறை அனுபவத்தால் ஆதர்சமூட்டப் பெற்று, தொடர்ந்து மேலும் பணி புரிந்து செல்லுதல் மட்டுமே மெய்யான பாட்டாளி வர்க்கக் கலாசாரத்தின் வளர்ச்சியாய் ஏற்கப்பட முடியும்.

5. இம்மியும் பிறழாமல் இந்தக் கோட்பாட்டு நிலை யினைப் பற்றியொழுகி, அனைத்து ருஷ்யாவின் புரொலெட் குல்ட் காங்கிரஸ், தனக்கே உரித்தான தனிப்பட்ட கலாசார ரகத்தைக் கண்டுபிடிப்பதற்கும், தன்னிறைவான நிறுவனங் களில் தனிமைப்பட்டிருப்பதற்கும், கல்வித் துறை மக்கள் கமிசாரகத்திற்கும் புரொலெட்குல்ட்டுக்குமான பணி அரங் கைப் பிரிவினை செய்யும் கோடு ஒன்றை வகுத்துக் கொள் வதற்கும், கல்வித்துறை மக்கள் கமிசாரகத்தின் கீழுள்ள நிலையங்களினுள் புரொலெட்குல்ட் ''சுயாட்சியை'' நிறுவிக் கொள்வதற்கும், இன்ன பலவற்றுக்குமான எல்லா முயற்சி களையும் தத்துவார்த்த முறையில் தவறானவையாகவும், நடை முறையில் தீயனவாகவும் மிகவும் உறுதியாய் நிராகரிக் கின்றது. இம்முயற்சிகளுக்கு நேர் மாறாய், புரொலெட்குல்ட் நிறுவனங்கள் யாவும் கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் கீழுள்ள நிலையங்களது பின்னலமைப்பின் துணை அங்கங் களாய்ச் செயல்படுவது தமக்குரிய கடமையாகுமென்று முழு அளவுக்குக் கருதும்படியும், இவை தமது பணிகளை சோவியத் ஆட்சியதிகார அங்கங்களின் (குறிப்பாய், கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின்), மற்றும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக்

கட்சியின் பொதுவான வழிகாட்டுதலின் கீழ், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் பணிகளின் ஒரு பிரிவாய்க் கொண்டு, செய்து முடிக்கும்படியும் இந்தக் காங்கிரஸ் இவற்றைப் பணிக்கின்றது.

*1920, அக்டோபர் 8ல் எழுதப்பெற்றது*

நூல் திரட்டு,
தொகுதி 41,
பக்கங்கள் 336-337

# குபெர்னியா, உயெஸ்து கல்வி இலாகாக்களின் அரசியல் கல்விப் பணித்துறையாளர்களது அனைத்து-ருஷ்ய மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவு
## 1920, நவம்பர் 3

தோழர்களே, சில கருத்துக்கள் குறித்துப் பேசுவதற்கு அனுமதியுங்கள். இக்கருத்துக்களில் சில, அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி நிறுவப்பட்டது சம்பந்தமாய் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியாலும் மக்கள் கமிசார் அவையாலும் எடுத்துரைக்கப்பட்டவை; வேறு சில மக்கள் கமிசார் அவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நகல் சம்பந்தமாய் எனக்குத் தோன்றியவை. இந்த நகல் ஓர் அடிப்படையாய் நேற்று ஏற்கப்பட்டது; இதன் விவரங்கள் இனிமேல்தான் விவாதிக்கப்பட்டாக[57] வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை உங்கள் நிலையத்தின் பெயரில் எந்த மாற்றமும் செய்யப்படுவது எனக்கு முதலில் சிறிதும் பிடிக்கவில்லை என்பதை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய அபிப்பிராயத்தில், கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் பணி மக்கள் கற்றறிந்து கொள்வதற்கும் ஏனையோருக்குப் போதனை செய்வதற்கும் துணை புரிவதாகும். பெயர்களைச் சிறுபிள்ளைத்தனமான வேடிக்கைகளாய்க் கருத எனது சோவியத் அனுபவம் எனக்குக் கற்றுத் தந்துள்ளது. எப்படியும் எந்தப் பெயரும் அதற்குரிய வழியில் ஒரு வேடிக்கையேதான். அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி என்று மற்றொரு பெயர் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விவகாரம் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டதால், இதை நீங்கள் தனிப்பட்ட சொந்த முறையிலான

ஒரு கருத்துரை என்பதற்கு மேலாய் எடுத்துக் கொள்ளக் கூடாது. வெறும் பெயர்க் குறிப்பிலான மாற்றத்துடன் இந்த விவகாரம் முடிவுற்றுவிடுவதாய் இருப்பின் அது வர வேற்கப் பட வேண்டியதுதான்.

கலாசார, கல்விப் பணித் துறையில் புதிதாய்ப் பலரை யும் ஈர்த்துக் கொள்வதில் நாம் வெற்றி பெற்ருல், அது வெறும் பெயர் மாற்றமாய் இராது; அப்பொழுது ஒவ்வொரு புதிய முயற்சிக்கும் ஒவ்வொரு புதிய நிலையத்துக்கும் ஒரு பெயர்க் குறிப்பை ஒட்டிவைக்கும் ''சோவியத்'' பலவீனத் தைப் பொறுத்துக் கொண்டுவிடலாம். நாம் வெற்றி பெற் ருல் என்றையும்விடக் கூடுதலாய் ஒன்றை சாதித்துக் கொண்ட வர்கள் ஆகிவிடுவோம்.

கல்வித் துறைக்கும் நமது கொள்கைக்குமுள்ள இணைப்பு தான், நமது கலாசார, கல்விப் பணித் துறையில் நம்முடன் பலரையும் வந்து சேர்ந்து கொள்ளச் செய்வதற்குரிய பிர தான தூண்டுதலாய் இருத்தல் வேண்டும். பெயரானது, அது தேவையாய் இருப்பின், ஏதேனும் ஒன்றை எடுத்துரைக்கலாம். கல்வியானது அரசியல் சார்பில்லாதது என்ற பழைய நோக்கு நிலையை நமது கல்விப் பணித் துறையின் நெடுகிலும் நாம் விட்டொழித்தாக வேண்டும்; அரசியலிலிருந்து தனிமைப் பட்டு, கல்விப் பணியை நாம் நடத்திச் செல்வது முடியாத காரியம்.

முதலாளித்துவச் சமுதாயத்தில் அந்தக் கருத்து எப் பொழுதுமே ஆதிக்கத்தில் இருந்து வந்துள்ளது. ''அரசியல் நாட்டமில்லா'' அல்லது ''அரசியல் சார்பில்லா'' கல்வி என்னும் தொடர் முதலாளித்துவக் கபடமே ஆகும்; 99 சதவீதத்தினர் மதச்சபை, தனியார் சொத்துரிமை முதலான வற்றின் ஆட்சியால் இழிவுபடுத்தப்பட்டும் கேவலப்படுத்தப் பட்டும் வருகிருர்கள், இவ்வெகுஜனங்களை வஞ்சிப்பதற் கான ஏமாற்றே அன்றி வேறு எதுவும் அல்ல இது. எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் இன்னமும் ஆதிக்கத்தில் இருந்து வரும் முதலாளித்துவ வர்க்கம் வெகுஜனங்களை இப்படித்தான் ஏமாற்றி வருகின்றது.

இத்தகைய நாடுகளில் அரசியல் பொறியமைவு எவ்வள வுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது மூலதனத்திடமிருந்தும் மூல

தனத்தின் கொள்கையிடமிருந்தும் குறைவான அளவுக்கு சுயேச்சையுடையதாய் இருக்கின்றது.

முதலாளித்துவ அரசுகள் யாவற்றிலும் அரசியல் பொறியமைவுக்கும் கல்விக்குமுள்ள இணைப்பு வலுமிக்கதாகவே இருக்கிறது, ஆனால் முதலாளித்துவச் சமுதாயத்தால் ஒளிவு மறைவின்றி இதை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. ஆயினும் இந்தச் சமுதாயம் மதச்சபை மூலமும் தனியார் சொத்துரிமை அமைப்பின் மூலமும் வெகுஜனங்களுக்கு நெறி புகட்டிப் போதமளித்தே வருகின்றது.

நம்முடைய உண்மையினை முதலாளித்துவத்துக்குரிய ''உண்மைக்கு'' எதிராய் முன்வைத்து நமது உண்மைக்கு அங்கீகாரம் கிடைக்கச்செய்வது நம்முடைய அடிப்படைப் பணிகளில் ஒன்றாகும்.

முதலாளித்துவச் சமுதாயத்திலிருந்து பாட்டாளி வர்க்கக் கொள்கைக்கு மாறிச்செல்வது மிகவும் கடினமானது, முதலாளித்துவ வர்க்கம் தனது கிளர்ச்சி, பிரசார சாதனங்கள் அனைத்தையும் கொண்டு ஓயாது ஒழியாது நம்மை அவதூறு செய்வதால் இது மேலும் கடினமாகிவிடுகிறது. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்திற்குரிய இதனிலும் முக்கியமான பணித்திட்டமான அதன் கல்விப் பணித் திட்டத்தை இந்த முதலாளித்துவ வர்க்கம் இழித்தும் பழித்தும் கூற முழு முயற்சி செய்கிறது. தேச மக்களில் பாட்டாளி வர்க்கம் சிறுபான்மையாய் இருக்கும் ருஷ்யாவுக்கு இப்பணித்திட்டம் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தது. ருஷ்யாவில் கல்விப் பணிக்கு முதன்மை இடம் அளிக்க வேண்டும், ஏனெனில் சோஷலிசத்தைக் கட்டியமைக்க நாம் வெகுஜனங்களைத் தயார் செய்தாக வேண்டும். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் கூர்மையான வர்க்க உணர்வையும் கண்டிப்பான கட்டுப்பாட்டையும் ஆழ்ந்த பற்றுறுதியையும்—வேறு விதமாய்க் கூறுவதெனில் அதன் பழம்பெரும் பகையான முதலாளித்துவ வர்க்கத்தின் மீது முழுநிறை வெற்றி பெறப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தேவையான எல்லாப் பண்புகளையும்—வளர்த்திராவிடில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் சிறிதும் சாத்தியமற்றதாய்ப் போயிருந்திருக்கும்.

உழைக்கும் வெகுஜனங்கள் சோஷலிச சமுதாயத்துக்குத்

தயாராகிவிட்டனர் என்ற கற்பனுவாதக் கருத்தினை நாம் கொண்டிருக்கவில்லை. இக்கருத்து உண்மையல்ல, சோஷலிசத்துக்கான தயார்நிலை பெருவீதத் தொழில் துறையாலும் வேலைநிறுத்தப் போராட்டத்தாலும் அரசியல் நிறுவன ஒழுங்கமைப்பாலும் மட்டுமே உண்டாக்கப்படுகிறது என்பதைத் தொழிலாளி வர்க்க சோஷலிசத்தின் வரலாறு அனைத்தும் அளித்திடும் துல்லியமான உண்மைகளிலிருந்து நாம் அறிவோம். வெற்றி வாகை சூடி சோஷலிசப் புரட்சியைச் சாதிப்பதற்கு, பாட்டாளி வர்க்கம் ஒன்றுபட்டுச் செயல்படக் கூடியதாய் இருத்தல் வேண்டும், சுரண்டலாளர்களை வீழ்த்தும் திறனுடையதாய் இருத்தல் வேண்டும். தேவையான இந்தப் பண்புகள் யாவற்றையும் அது பெற்றுக் கொண்டுவிட்டது, ஆட்சியதிகாரம் வென்றபோது தனது இப்பண்புகளை அது செயலரங்கில் நிரூபித்துக் காட்டிற்று என்பதை இப்பொழுது நாம் காண்கிறோம்.

கல்வித் துறைப் பணியாளர்களும் இப்போராட்டத்தில் முன்னணிப் படையாகிய கம்யூனிஸ்டுக் கட்சியும் தொழிலாளி வெகுஜனங்கள் பழைய அமைப்பிலிருந்து மரபுரிமையாய் நாம் பெற்றுக் கொண்ட பழைய வழிமுறைகளையும், பழக்கப்பட்டு இறுகிப் போன மாருத மாமூல் நடைமுறைகளையும், வெகுஜனங்கள் முழுக்க முழுக்க மூழ்கி ஊறிவிட்ட தனியார் சொத்துரிமைப் பழக்கங்களையும் உதறியெறியும் பொருட்டு அவர்கள் அறிவொளி பெற உதவுவதும் அவர்களுக்குப் போதம் அளிப்பதும் தமது அடிப்படை கடமையாகுமெனக் கருத வேண்டும். சோஷலிசப் புரட்சி அனைத்துக்குமுள்ள இந்த அடிப்படை கடமையானது, கட்சியின் மத்தியக் கமிட்டியும் மக்கள் கமிசாரவையும் இவ்வளவு அதிகமாய் கவனம் செலுத்தும்படியாகியுள்ள தனிப்பட்ட பிரச்சினைகளின் பரிசீலனையின்போது கணமும் மறக்கப்படலாகாது. அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி எவ்வகை அமைப்புடையதாய் இருக்க வேண்டும்? பிற நிறுவன அமைப்புகளுடன் எப்படி அது இணைக்கப்பட்டிருக்க வேண்டும்? மத்திய அமைப்புடன் மட்டுமின்றி, ஸ்தல அமைப்புகளுடன் எப்படி அது இணைக்கப்பட்டிருக்க வேண்டும்? இந்த விவகாரத்தில் அதிகத் தகுதியுடையோராகிய தோழர்கள், ஏற்கெனவே கணிச அளவு அனுபவம் பெற்றுள்ளவர்களும் இந்த

விவகாரத்தைத் தனிப்பட ஆராய்ந்தறிந்துள்ளவர்களுமான இவர்கள் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பார்கள். இங்கு உள்ளடங்கிய பிரதான கோட்பாடுகளை மட்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். விவகாரத்தை நாம் ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்து, பழைய பொய்மைகளை எல்லாம் மீறிச் சென்று, கல்வியானது அரசியலுடன் இணைப்பின்றி இருக்க முடியாது என்பதைப் பகிரங்கமாய் வற்புறுத்தியாக வேண்டும்.

உலக முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். இந்த முதலாளித்துவ வர்க்கம் நம்மைக் காட்டிலும் மிகுந்த பலமுடையது. போராட்டத்தின் இந்தக் கட்டத்தில் நாம் புரட்சியின் வளர்ச்சியைப் பாதுகாத்துக் கொண்டாக வேண்டும், முதலாளித்துவ வர்க்கத்தை நாம் இராணுவ அர்த்தத்திலும் இன்னும் அதிகமாய் நமது சித்தாந்தத்தின் மூலமாகவும், கல்வி மூலமாகவும் போராடியாக வேண்டும். தொழிலாளி வர்க்கம் அரசியல் சுதந்திரத்துக்காகப் பல பத்தாண்டுகளாய் நடத்திய போராட்டத்தின் வாயிலாகப் பெற்றுக் கொண்ட பழக்கங்களும் மரபுகளும் உறுதியான கருத்துக்களும்—இந்தப் பழக்கங்கள், மரபுகள், கருத்துக்களின் ஒட்டுமொத்தத் தொகுதி—உழைப்பாளி மக்கள் அனைவரது கல்வி போதத்துக்குமான ஓர் உபகரணமாய்ப் பயன்பட வேண்டும். உழைப்பாளி மக்களுக்கு எப்படிப் போதமளிப்பது என்பது குறித்துத் தீர்மானிக்க வேண்டியது பாட்டாளி வர்க்கத்துக்குள்ள பொறுப்பாகும். உலகில் மேலும் மேலும் எல்லா முதலாளித்துவ நாடுகளுக்கும் தற்போது பரவி வரும் பாட்டாளி வர்க்கப் போராட்டத்திலிருந்து விலகி நிற்பது, சர்வதேச அரசியலிலிருந்து விலகி நிற்பது முடியாத காரியமாகும், இது மன்னிக்க முடியாத ஒன்றாகும் என்கிற உணர்வை நாம் உழைப்பாளி மக்களுக்கு ஊட்டியாக வேண்டும். சோவியத் ருஷ்யாவுக்கு எதிராய் உலகின் வலிமை மிக்க எல்லா முதலாளித்துவ நாடுகளின் கூட்டணி—இதுவே இன்றைய சர்வதேச அரசியலின் மெய்யான அடிப்படை. முதலாளித்துவ நாடுகளின் கோடானு கோடியான தொழிலாளி மக்களுடைய கதி இதையே பொறுத்திருக்கிறது என்பதை எப்படியும் உணர்ந்து

கொண்டு விடலாம். முதலாளித்துவ நாடுகளது ஒரு சிறு கோஷ்டியின் பிடிக்குள் இல்லாத மூலைமுடுக்கு எதுவும் தற்போது உலகில் இல்லை என்பதை அறிவோம். இவ்வாறு இரண்டில் ஒரு வழியே எவரையும் எதிர்நோக்கும்படியான விதத்தில் சூழ்நிலை உருவாகி வருகின்றது: தற்போது நடைபெறும் போராட்டத்திலிருந்து விலகி ஒதுங்கி நின்று, இதன் மூலம் கிஞ்சித்தும் தாம் அரசியல் உணர்வில்லாதவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவது, அதாவது, புரட்சியிலிருந்தும் யுத்தத்திலிருந்தும் ஒதுங்கி நின்றுள்ளவர்களையும் முதலாளித்துவ வர்க்கம் அப்பட்டமாய் வெகுஜனங்களை ஏமாற்றுவதையும் வேண்டுமென்றே இவ்வர்க்கம் திட்டமிட்டு வெகுஜனங்களை அறியாமை இருளில் இருத்தி வைப்பதையும் காணத் தவறுகிறவர்களையும் போல, இருளில் வதைபடும் இந்தக் கபோதிகளைப் போல, தமது அரசியல் உணர்வின்மையை நிரூபித்துக் காட்டுவது; இல்லையேல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கான போராட்டத்தில் சேர்ந்து கொள்வது.

பாட்டாளி வர்க்கத்தின் இந்தப் போராட்டம் குறித்து நாம் ஒளிவுமறைவின்றி முற்றிலும் பட்டவர்த்தனமாகவே பேசுகின்றோம். ஒன்று நம் பக்கம் அல்லது எதிர்ப் பக்கம்—இரண்டில் எதனுடன் சேர்ந்து கொள்வதென்பதை ஒவ்வொருவரும் தெரிந்தெடுத்துக் கொண்டாக வேண்டும். இந்தப் போராட்டத்தில் எப்பக்கத்திலும் சேராதிருக்கலாம் என்ற முயற்சி எதுவும் படுதோல்வியாகவே முடிவுறும்.

யுதேனிச்சுகளாலும் கல்ச்சாக்குகளாலும் பெத்லியூராக்களாலும் மஹ்னேக்களாலும் ஏனையோராலும் பிரதிநிதித்துவம் செய்யப்படும் கேரென்ஸ்கி கும்பல், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர், சமூக-ஜனநாயகவாதிகள் ஆகியோரின் பல மீதமிச்சங்களைக் கவனிக்கையில், ருஷ்யாவின் பல்வேறு பகுதிகளிலும் செயல்படும் எதிர்ப்புரட்சியின் பல்வேறு பட்ட வடிவங்களும் சாயல்களும் நமக்குத் தெளிவாய் விளங்குகின்றன; இந்நிலைமையில் நாம் ஏனைய எவரையும் விட அதிகமாய்ப் போராட்டத்தில் புடமிடப்பட்டு உருக்கு உறுதி பெற்றுள்ளவர்களாய் நம்மைக் கருதிக் கொள்ள நியாயம் இருக்கிறது. மேலைய ஐரோப்பாவின் பக்கம் பார்வையைத் திருப்புவோமாயின், நம் நாட்டில் நடைபெறுவதே அங்கும் நடைபெறுவதை—நமது வரலாறே திரும்பவும் அங்கு நடந்தேறு

வதை—காண்கிறோம். அனேகமாய் ஒவ்வோர் இடத்திலும் முதலாளித்துவ வர்க்கத்தாருடன் கூடவே கேரென்ஸ்கி கும்பலை ஒத்தக் கூறுகள் இருக்கக் காண்கிறோம். பல நாடுகளில், முக்கியமாய் ஜெர்மனியில் இவை ஆதிக்க நிலையில் இருந்து வருகின்றன. எங்கும் அதே உண்மையைக் காண முடிகிறது— இடைப்பட்டதான ஒரு நிலையை ஏற்பது சாத்தியமற்றதாய் இருத்தலையும், ஒன்று வெள்ளைப் படையினரது சர்வாதிகாரம் (மேலைய ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ வர்க்கம் நம்மை எதிர்க்கப் படைபலம் திரட்டுவதன் மூலம் இதற்குத்தான் தயார் செய்து வருகிறது), இல்லையேல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம், இரண்டில் ஒன்றே இருக்க முடியுமென்ற தெளிவான உணர்வு ஏற்படுதலையும்தான் காண்கிறோம். இதை நாம் மிகவும் கூர்மையாகவும் ஆழமாகவும் அனுபவித்திருப்பதால், நான் ருஷ்யக் கம்யூனிஸ்டுகளைப் பற்றி அதிகமாய்ப் பேசத் தேவையில்லை. எனவே ஒரேயொரு முடிவு மட்டுமே சாத்தியம், அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி குறித்த எல்லா வாக்குவாதங்களுக்கும் தத்துவங்களுக்கும் அடிநிலையாய் அமைய வேண்டிய முடிவு இது: கம்யூனிஸ்டுக் கட்சிக் கொள்கையின் முதன்மை நிலை இந்தக் கமிட்டியின் பணித்துறையில் ஒளிவுமறைவின்றி அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதே இந்த முடிவு. வழிகாட்டுதலுக்கான வேறு எந்த வடிவத்தையும் நாம் அறியோம், எந்த நாட்டிலும் வேறு எதுவும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. கட்சி அதன் வர்க்கத்தினுடைய நலன்களை ஓரளவுக்கே பிரதிபலிப்பதாய் இருக்கலாம்; அது மாற்றங்களுக்கோ திருத்தங்களுக்கோ உள்ளாகலாம்; ஆனல் கட்சியைக் காட்டிலும் சிறப்பான ஒரு வடிவத்தை இதுகாறும் நாம் அறிந்ததில்லை. உலக ஏகாதிபத்தியத்தின் தாக்குதலை மூன்று ஆண்டுகளாய் எதிர்த்து நின்று சமாளித்திருக்கும் சோவியத் ருஷ்யாவின் போராட்டத்தின் போக்கு அனைத்துமே, பாட்டாளி வர்க்கம் போதகனுகவும் ஒழுங்கமைப்பாளனுகவும் தலைவனுகவும் தான் ஆற்ற வேண்டிய பணியை—இப்பணி ஆற்றப்படாமல் முதலாளித்துவத்தின் வீழ்ச்சி சாத்தியமன்று— ஆற்றுவதற்கு அதற்கு உதவி புரிவதற்காகக் கட்சியானது உணர்வுபூர்வமாய் முன்வந்து பாடுபட்டதென்னும் உண்மையுடன் இணைந்திருக்கிறது. உழைப்பாளி வெகுஜனங்கள், விவ

சாயிகளும் தொழிலாளர்களுமான வெகுஜனங்கள், பழைய அறிவுத்துறைவாதப் பழக்க வழக்கங்களை விட்டொழித்தாக வேண்டும், கம்யூனிசத்தைக் கட்டியமைத்திடும் பணிக்காக மறுகல்வி பெற்று தம்மைப் பயிற்றுவித்துக் கொண்டாக வேண்டும். இல்லையேல் கட்டுமானப் பணியை மேற்கொள்வது முடியாத காரியம். இது மிகவும் கடினமான விவகாரம் என்பதை நமது அனுபவம் அனைத்துமே தெளிவுபடுத்துகின்றது. ஆகவே நாம் கட்சியின் முதன்மை நிலைக்குத் தலையாய முக்கியத்துவம் அளித்திட வேண்டும், நமது செயற்பாடுகளையும் நமது நிறுவன ஒழுங்கமைப்பின் வளர்ச்சியையும் பற்றி விவாதிக்கையில் ஒருபோதும் இதை மறக்கலாகாது. இதை எப்படிச் செய்ய வேண்டுமென்பது இனிமேல்தான் விவரமாய் விவாதிக்கப்பட்டாக வேண்டும். கட்சியின் மத்தியக் கமிட்டியிலும் மக்கள் கமிசாரவையிலும் இது விவாதிக்கப்பட்டாக வேண்டும். நேற்று அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி சம்பந்தமான அடிப்படைகளை வகுத்தளிக்கிறது; ஆனால் இன்னும் இது மக்கள் கமிசாரவையில் எல்லாக் கட்டங்களையும் கடந்து வந்தாகவில்லை. இந்த அரசாணை வருகிற சில நாட்களுக்குள் வெளியிடப்படும், இறுதி வடிவில் இது வெளியானதும் கட்சியுடனான உறவுகள் குறித்து இதில் நேரடியாய் எதுவும் கூறப்படவில்லை என்பதைக் காண்பீர்கள்.

ஆயினும், சட்டப்படியும் நடைமுறையிலும் சோவியத் குடியரசின் அரசியலமைப்புக்கு அடிப்படையாய் இருக்கும் கொள்கை வழியை நாம் அறிந்திருக்க வேண்டும், நினைவில் கொண்டிருக்க வேண்டும். பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்த கம்யூனிஸ்டுக் கூறுகளைத் தமது மனப்பான்மையைப் பாட்டாளி வர்க்கத்தினுள் ஊடுருவிச் சென்று நிரம்பும்படியும், தம்மை அது பற்றியொழுகும்படியும், இவ்வளவு காலமாய் நாம் ஒழித்துக் கட்ட முயன்று வரும் முதலாளித்துவ ஏமாற்றைக் காணுமாறு அதை விழிப்புறும்படியும் செய்வதென்ற ஒரே கோட்பாட்டிற்கு ஏற்ப கட்சியானது பிழை நீக்கி ஒழுங்கு செய்தும் விதிமுறை வகுத்தும் கட்டியெழுப்பியும் செல்கிறது என்பதே இந்த அடிப்படைக் கொள்கைவழி. கல்வித் துறை மக்கள் கமிசாரகம் நீண்ட நெடும் போராட்டம் நடத்தி முன்னேறி வந்திருக்கிறது. ஆசிரியர்களுடைய

நிறுவனம் நெடுங் காலம் வரை சோஷலிசப் புரட்சியை எதிர்த்து வந்தது. ஆசிரியர்களிடையே முதலாளித்துவத்தப் பெண்ணங்கள் ஆழமாய் வேர்விட்டிருந்தன. நேரடியான சீர்குலேவின் வடிவிலும், விடாப்பிடியான முதலாளித்துவத் தப்பெண்ணங்களின் வடிவிலும் நீண்ட போராட்டம் நடை பெற்றிருக்கிறது. கம்யூனிஸ்டு நிலேக்காக நாம் சிறுகச் சிறுகவும் படிப்படியாகவும் போராடி இவற்றைக் கைவரப் பெறச் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி கல்விக்கூடத்துக்குப் புறத்தமைந்த கல்வியில், வெகுஜனங்களுக்குக் கல்வியும் அறிவொளியும் அளிக்கும் பணியில் கருத்து செலுத்துகின்றது. இக்கமிட்டி, ஐந்து லட்சம் பேரைக் கொண்ட இந்த ஆசிரியர் படைவரிசையை, இப்பொழுது தொழிலாளர்களுக்காகச் சேவை புரிந்திடும் இந்தப் பெரிய நிறுவன அமைப்பை, தன்னேப் பற்றியொழுகச் செய்து, தனது மனப்பான்மையினே இதற்கு ஊட்டி, தனது முன்முயற்சியை அளித்து இதை உயிர்த்திறன் பெற வைக்கும் முயற்சியுடன் கட்சியின் தலேமைப் பாத்திரத்தை இணேத்து ஒன்றுபடச் செய்வதென்னும் தெளிவான பணியை எதிர்நோக்குகிறது. கல்விப் பணித்துறையாளர்கள்—ஆசிரியர்கள்—முதலாளித்துவத் தப்பெண்ணங்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் மனப்பாங்கில், பாட்டாளி வர்க்கத்துக்குப் பகைமையான மனப்பாங்கில் பயிற்றுவிக்கப்பட்டவர்கள். பாட்டாளி வர்க்கத்துடன் இவர்கள் பிணேப்புக்கள் இல்லாதோராய் இருந்துள்ளவர்கள். கட்சியுடனும் அதன் கருத்துக்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு, கட்சியின் மனப்பான்மையிலே தோய்ந்தோராயும், தொழிலாளி வெகுஜனங்களே ஈர்த்து, கம்யூனிச மனப்பான்மையை அவர்களுக்கு ஊட்டி, கம்யூனிஸ்டுகள் செய்து வரும் காரியங்களில் அவர்களுக்கு அக்கறை உண்டாக்கக் கூடியோராயும் இருக்கும் ஆசிரியர்கள், பயிற்சியாளர்களது புதிய படைவரிசை ஒன்றை இப்பொழுது நாம் பயிற்றுவித்தாக வேண்டும்.

பழைய பழக்கங்களும் வழக்கங்களும் கருத்துக்களும் விட்டொழிக்கப்பட வேண்டுமாதலால், அரசியல் கல்வித் தலேமைக் கமிட்டியின் முன்பும், அதன் ஊழியர்கள் முன்பும் மிகவும் முக்கியமான ஒரு பணி எழுகின்றது. இதை அவர்

கள் தம் மனத்தில் யாவற்றுக்கும் முன்னணியில் கொண்டிருக்க வேண்டும். இங்கே இக்கட்டான ஒரு நிலைமை நம்மை எதிர் நோக்குகிறது: மிகப் பெரும் பகுதியோர் பழைய மரபினராயிருக்கும் ஆசிரியர்களுக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும், அதாவது கம்யூனிஸ்டுகளுக்கும் எப்படி நாம் ஒரு பிணைப்பை உண்டாக்குவது? இது மிகவும் கடினமான ஒரு பிரச்சினை, கணிச அளவில் சிந்தனை தேவைப்படும் ஒரு பிரச்சினை.

இப்படி வேறுபடுகிறவர்களிடையே நிறுவனப் பிணைப்புக்களை ஏற்படுத்தும் வழி குறித்துப் பரிசீலிப்போம். கம்யூனிஸ்டுக் கட்சியின் முதன்மை நிலை அவசியமென்பது குறித்து, கோட்பாட்டு அளவில் நமக்குக் கணமும் ஐயப்பாடு எழ முடியாது. ஆகவே, அரசியல் கலாசாரத்தின், அரசியல் கல்வி போதனையின் நோக்கம், பொய்மையையும் தப்பெண்ணங்களையும் ஒழித்துக் கட்டக் கூடியோரும், பழைய அமைப்பைத் தோற்கடித்து, முதலாளிகள் இல்லாத, சுரண்டலாளர்கள் இல்லாத, நிலப்பிரபுக்கள் இல்லாத ஓர் அரசை அமைத்திட வெகுஜனங்களுக்குத் துணை புரியக் கூடியோருமாகிய மெய்யான கம்யூனிஸ்டுகளைப் பயிற்றுவிப்பதே ஆகும். இதைச் செய்வது எப்படி? முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து மரபுரிமையாய் இந்த ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட அறிவின் முழுமொத்தத்தையும் கிரகித்துக் கொள்வது ஒன்று தான் இதற்குரிய வழி. இதைச் செய்யவில்லையானல் கம்யூனிசம் தொழில்நுட்பச் சாதனைகள் காண்பது சாத்தியமன்று, இந்தச் சாதனைகள் கிட்டுமென்ற நம்பிக்கைகள் யாவும் வெறும் பகற் கனவுகளாகிவிடும். ஆகவே இக்கேள்வி எழுகின்றது: தமது வேலையில் அரசியலை, முக்கியமாய் நமக்கு அனுகூலமான அரசியலை, அதாவது கம்யூனிசத்துக்கு அவசியமான அரசியலை, கொண்டு வந்து பழக்கப்படாத இவர்களை எப்படி நாம் ஒழுங்கமையச் செய்வது? ஏற்கெனவே நான் கூறியது போல் இது மிகவும் கடினமான பிரச்சினையாகும். இந்த விவகாரத்தை நாங்கள் மத்தியக் கமிட்டியில் விவாதித்திருக்கிறோம்; இதை விவாதிக்கையில் நாங்கள் அனுபவத்தின் படிப்பினைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள முயன்றிருக்கிறோம். இன்று நான் உரை நிகழ்த்தும் இந்தக் காங்கிரசை ஒத்த ஒன்று, உங்களுடைய இந்த மாநாட்டைப் போன்ற ஒன்று, இத்துறையில் மிகவும் பயனுடையதாயிருக்கும். கட்சிக் கமிட்டி

ஒவ்வொன்றும் இப்பொழுது ஒவ்வொரு பிரசாரகரையும் ஒரு புதிய கோணத்திலிருந்து பார்த்தாக வேண்டும்; முன் பெல்லாம் இவர் குறிப்பிட்ட குழு, குறிப்பிட்ட நிறுவனத் தைச் சேர்ந்தவராக மட்டுமே கருதப்பட்டு வந்தார். இந்தப் பிரசாரகர் ஒவ்வொருவரும் அரசு அனைத்தையும், முத லாளித்துவ அமைப்புக்கு எதிரான சோவியத் ருஷ்யாவின் உலகப் போராட்டத்தையும் நெறியாண்மை புரியும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவராவார். போராடும் வர்க்கம் ஒன்றின், பிரம்மாண்ட அரசுப் பொறியமைவு ஒன்றை நடத்தும், நடத் தவே வேண்டியுள்ள ஒரு கட்சியின் பிரதிநிதி அவர். பல கம்யூனிஸ்டுகள், தலைமறைவான பணித்துறையின் உன்னதப் பள்ளியில் பயின்றுள்ளோரும், போராட்டத்தில் சோதிக்கப் பெற்றும் புடமிடப்பட்டுமுள்ளோருமாகிய இவர்கள், கிளர்ச் சியாளரையும் பிரசாரகரையும் கிளர்ச்சியாளர்களது தலை வராய், பிரம்மாண்டமான அரசியல் நிறுவன ஒழுங்கமைப் பில் ஒரு தலைவராய் ஆக்கிவிடும் இந்த மாற்றத்தின், இந்த வளர்ச்சிப் போக்கின் முழு முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள விரும்பாதோராய், அல்லது புரிந்து கொள்ள முடி யாதோராய் இருக்கின்றனர். இவருக்கு இடப்படும் பட்டப் பெயர், பொதுப் பள்ளிகளின் மேலாளர் என்பது போன்ற சங்கடமான பெயருங்கூட, முக்கியமானதல்ல; திரளான ஆசிரியர்களுக்கு இவர் தலைமை தாங்கக் கூடியவராய் இருக்க வேண்டியதுதான் முக்கியமானது.

லட்சக் கணக்காயுள்ள ஆசிரியர்கள் இந்தப் பணித் துறையை இயங்கச் செய்து, சிந்தனையைத் தூண்டிவிட்டு, இது நாள் வரை வெகுஜனங்களிடம் தொடர்ந்து நிலவும் தப்பெண்ணங்களை எதிர்த்துப் போராடும் ஓர் அமைப்பு ஆவர் என்பதைக் கூறியாக வேண்டும். முதலாளித்துவக் கலாசாரத் தின் பாரம்பரியம், பெருந் திரளான ஆசிரியர்கள் இதன் குறைபாடுகளிலே ஊறியோராய் இருக்கிறார்கள், இவர்கள் கம்யூனிஸ்டுகளாக முடியாதபடி இவை தடுக்கின்றன என்னும் இந்த உண்மை, இந்த ஆசிரியர்களை நாம் அரசியல் கல்விப் பணித்துறையாளர்களின் அணிகளில் சேர்த்துக் கொள் வதற்குத் தடையாகிவிடக் கூடாது. ஏனெனில் இந்த ஆசிரியர் கள் அறிவின் உடைமையாளர்களாய் இருக்கின்றனர், இவர்

களுடைய இந்த அறிவு இல்லையேல் நம்முடைய குறிக்கோளை நாம் சித்திப் பெறச் செய்ய முடியாது.

பயனுள்ளோரை லட்சக் கணக்கில் கம்யூனிசக் கல்விப் பணித்துறையில் நாம் ஈடுபடச் செய்ய வேண்டும். போர் முனையில் நமது செஞ்சேனையில் இப்பணி செய்யப்பட்டது; பழைய சேனையின் பிரதிநிதிகள் பத்தாயிரக் கணக்கில் செஞ் சேனையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மறுகல்வி பெறு தல் என்னும் நீண்ட நிகழ்ச்சிப் போக்கின் மூலம் இவர்கள் செஞ்சேனையில் இரண்டறக் கலந்து கொண்டனர், இதனை இவர்கள் தமது வெற்றிகளின் வாயிலாய் முடிவாய் நிரு பித்துக் காட்டினர். நமது கலாசார, கல்விப் பணித்துறையில் நாம் பின்பற்ற வேண்டிய ஓர் உதாரணமாகும் இது. இந்தப் பணி அவ்வளவு கோலாகலமானதாய் இல்லை என்பது மெய் தான், ஆனால் இது அதனிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த தாகும். ஒவ்வொரு கிளர்ச்சியாளரும் பிரசாரகரும் நமக்குத் தேவைப்படுகின்றார். இவர் கண்டிப்பான கட்சி மனப் பான்மையுடன் வேலை செய்வாராயின், தமது பணியை நிறை வேற்றுகிறவராவார்; ஆனால் அதேபோது இவர் கட்சிப் பணியின் வரம்புக்குள் தம்மை இருத்திக் கொண்டுவிடாமல் இருக்க வேண்டும்; லட்சக் கணக்கான ஆசிரியர்களுக்குத் தலைமை தாங்கிச் செயலாற்றுவதும், அவர்களுடைய கருத்தையும் ஆவலையும் கிளர்த்திவிடுவதும், அவர்களுடைய பழைய முதலாளித்துவத் தப்பெண்ணங்களை வென்று சமா ளித்துச் செல்வதும், நாம் ஆற்றி வரும் பணியில் அவர்களை அணி திரளச் செய்வதும், நமது பணி எவ்வளவு பிரம்மாண் டமானது என்பதை அவர்களை உணரச்செய்வதும் தமது கடமை யாகுமென்பதை இவர் நினைவில் கொண்டிருக்க வேண் டும். இந்தப் பணியைச் சமாளிப்பதன் மூலமே பெருந் திரளின ரான இந்த ஆசிரியர்களை, முதலாளித்துவத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டு நம்மிடமிருந்து விலக்கப்பட்ட இவர்களை, நாம் சரியான பாதைக்கு அழைத்து வர முடியும்.

இவைதாம் கல்விக்கூடத்துக்குப் புறத்தமைந்த கல்வித் துறையில் பணியாற்றும் ஒவ்வொரு கிளர்ச்சியாளரும் பிர சாரகரும் பின்பற்ற வேண்டிய, இடையறாது கருத்தில் கொண்டிருக்க வேண்டிய குறிக்கோள்கள். இந்தப் பணியின் போது மிகப் பல நடைமுறைச் சிக்கல்கள் எதிர்ப்படும். நீங்

கள் கட்சிக் குழுவுக்கு மட்டுமின்றி, தற்போது தொழிலாளி வர்க்கத்தின் கைக்குரியதாகிவிட்ட அரசு நிர்வாகம் அனைத்தின் பிரதிநிதிகளும் தலைவர்களும் ஆகி கம்யூனிச இலட்சியத்துக்குத் துணை புரிய வேண்டும்.

முதலாளிகளுடைய எதிர்ப்பை அதன் எல்லா வடிவங்களிலும் நாம் வெற்றி கொண்டாக வேண்டும்—இராணுவ, அரசியல் துறைகளிலான எதிர்ப்பை மட்டுமின்றி, மிகவும் ஆழ்ந்தமைந்ததும் வலுமிக்கதுமான சித்தாந்தத் துறை எதிர்ப்பையும் வெற்றி கொண்டாக வேண்டும். வெகுஜனங்களுக்கு மறு கல்வி போதமளித்திடும் பணியினைச் செய்து முடிப்பது நமது கல்விப் பணித்துறையினரின் கடமையாகும். இந்த வெகுஜனங்களிடத்தே காணக்கூடிய கருத்தும், கல்வியும் கம்யூனிசத்தைப் பற்றிய அறிவும் பெற வேண்டுமென்ற தாகமும் இந்தத் துறையிலும் நாம் வெற்றி ஈட்டுவோம் என்பதற்கு உத்தரவாதமாகும். எனினும், போர் முனையிலே கிட்டியதைப் போல் இவ்வெற்றி அவ்வளவு விரைவாய்க் கிடைக்காததாய் இருக்கலாம்; மிகப் பெரும் இன்னல்களுக்குப் பிற்பாடே, சில சமயம் பின்னடைவுகளுக்குங்கூட பிற்பாடே கிடைப்பதாய் இருக்கலாம். இருப்பினும் இறுதியில் நாம் வெற்றி பெறவே செய்வோம்.

முடிவில், மேலும் ஒரு விவரம் குறித்துப் பேச விரும்புகிறேன். அரசியல் கல்வித் தலைமைக் கமிட்டி என்னும் பெயர் ஒருவேளை சரிவரப் புரிந்து கொள்ளப்படாத ஒன்றாய் இருக்கலாம். அரசியல் என்னும் கருத்தை இது குறிப்பிடுவதால், இங்கே அரசியலே பிரதான விவகாரமாகும்.

ஆனால் அரசியல் என்பதை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும்? அரசியலை அதன் பழைய அர்த்தத்தில் புரிந்து கொள்வோமாயின், கடுமையான, ஆழ்ந்த தவறிழைக்கும்படி நேரும். அரசியல் என்பது வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டத்தைக் குறிக்கிறது; உலக முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்துத் தனது விடுதலைக்காகத் தான் நடத்தும் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் உறவுகளைக் குறிக்கிறது. ஆயினும் நமது போராட்டத்தில் இந்த விவகாரத்தின் இரு அம்சங்கள் எடுப்பாய் முன்னிலைக்கு வருகின்றன: ஒரு புறத்தில், முதலாளித்துவ அமைப்பின் பாரம்பரியத்தை அழித்திடும் பணி, சோவியத் அரசை நசுக்கிவிட வேண்டு

மென்று முதலாளித்துவ வர்க்கம் அனைத்தும் மீண்டும் மீண்டும் செய்து வரும் முயற்சிகளை முறியடிக்கும் பணி இருக்கின்றது. இதுகாறும் நமது பெரும் பகுதி கவனத்தை இந்தப் பணி ஈர்த்து வந்திருக்கிறது, மற்றொரு பணியாகிய கட்டுமானப் பணியில் முனைய முடியாதபடி நம்மைத் தடுத்து வந்திருக்கிறது. முதலாளித்துவ உலகக் கண்ணோட்டத்தின்படி, அரசியலானது பொருளியலிலிருந்து துண்டித்து விலக்கப்பட்டிருந்தது. முதலாளித்துவ வர்க்கத்தினர் இப்படித்தான் கூறி வந்தனர்: விவசாயிகளே, நீங்கள் உங்கள் பிழைப்புக்காக வேலை செய்யுங்கள்; தொழிலாளர்களே, நீங்கள் உங்கள் பிழைப்புச் சாதனங்களைச் சந்தையின் மூலம் பெற்றுக்கொள்வதற்காக வேலை செய்யுங்கள்; பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்த மட்டில், அது உங்களுடைய எஜமானர்களுக்குரிய வேலை. ஆனால் அவர்கள் கூறியது உண்மையல்ல; அரசியலானது மக்களுக்குரிய வேலையாகவே இருக்க வேண்டும், பாட்டாளி வர்க்கத்துக்குரிய வேலையாகவே இருக்க வேண்டும். நமது செயலின் நேரத்தில் பத்தில் ஒன்பது பங்கு முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதை இங்கு நாம் வலியுறுத்த வேண்டும். விராங்கெல் மீதான வெற்றிகள்— நேற்று இவை குறித்துக் படித்தோம், நாளைக்கும், ஒருவேளை நாளை மறுநாளும் நீங்கள் இவை குறித்துப் படிப்பீர்கள்— போராட்டத்தின் ஒரு கட்டம் முடிவுற்று வருவதையும் மேலைய நாடுகளில் பலவற்றுடன் நமக்குச் சமாதானம் கைவரப் பெற்றுள்ளதையும் காட்டுகின்றன. போர் முனையில் கிட்டும் ஒவ்வொரு வெற்றியும் உள்துறைப் போராட்டத்துக்கு, அரசு நிறுவன ஒழுங்கமைப்பின் அரசியலுக்கு நமது கரங்களை விடுவிக்கின்றன. வெள்ளைப்படையினர் மீதான வெற்றிக்கு நம்மை நெருங்கி வரச் செய்யும் ஒவ்வோர் அடியும் படிப்படியாய்ப் போராட்டத்தின் குவிமையத்தைப் பொருளாதாரக் கொள்கைக்கு இடம் பெயரச் செய்கிறது. பழைய ரகப்பிரசாரம் கம்யூனிசம் என்றால் என்னவென்பதை விவரிக்கிறது, தெளிவுபடக் காட்டுகிறது. இவ்வகைப் பிரசாரம் இப்பொழுது நமக்குப் பயனற்றதாகும், ஏனென்றால் சோஷலிசத்தை எப்படிக் கட்டியமைத்திட வேண்டுமென்று நடைமுறையில் நாம் காட்ட வேண்டியிருக்கிறது. நமது பிர

சாரம் அனைத்தும் பொருளாதாரக் கட்டுமானத்தின் அரசியல் அனுபவத்தை அடிப்படையாய்க் கொண்டிருக்க வேண்டும். அதுவே நமது தலையாய பணி; பழைய அர்த்தத்தில் இதற்கு விளக்கம் தருகிறவர் எவரும் தாம் பின்னோக்கிச் செல்கிறவர், விவசாயிகள், தொழிலாளர் வெகுஜனங்களிடையே பிரசாரப் பணியாற்றும் திறனற்றவர் என்பதைத் தான் காட்டிக் கொள்வார். அரசைப் பொருளாதார வழியில் வளரச் செய்வதே, இவ்விதம் அதிகமான பூடுகள்[58] தானியம் அறுவடை செய்வதும் அதிகமான பூடுகள் நிலக்கரி வெட்டியெடுப்பதும், இந்த அதிக பூடுகள் தானியத்தையும் நிலக்கரியையும் திறம்பட பயன்படுத்திப் பட்டினியைத் தவிர்த்துக் கொள்வது எப்படி என்பது குறித்துத் தீர்மானிப்பதுமே இப்பொழுது நமது பிரதான கொள்கையாய் இருக்க வேண்டும். இதுவே நமது கொள்கை. இந்தக் குறிக்கோளின் மீதுதான் நமது கிளர்ச்சி, பிரசாரம் அனைத்தும் மையப்படுத்தப்பட வேண்டும். நேர்த்தியான பேச்சு குறைய வேண்டும், ஏனெனில் நேர்த்தியான சொற்களைக் கொண்டு உழைப்பாளி மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்திலிருந்து, விராங்கலுக்கும் வெள்ளைப்படையினருக்கும் எதிரான போராட்டத்திலிருந்து குவிமையத்தை இடம் பெயரச் செய்வதற்கு யுத்தம் நமக்கு இடமளித்ததும், நாம் பொருளாதாரக் கொள்கை பக்கம் கவனத்தைத் திருப்புவோம். அப்பொழுது கிளர்ச்சியும் பிரசாரமும் பிரமாதமான, மேலும் மேலும் கூடுதலான முக்கியத்துவம் வாய்ந்த பங்காற்றும்.

கிளர்ச்சியாளர் ஒவ்வொருவரும் ஓர் அரசுத் தலைவராய், பொருளாதார வளர்ச்சிப் பணித்துறையில் விவசாயிகள், தொழிலாளர்கள் அனைவரின் ஒரு தலைவராய் இருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியவற்றை, கம்யூனிஸ்டு ஆகும் பொருட்டு ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய பிரசுரங்களும் புத்தகங்களும் எவை என்பதை அவர் கூற வேண்டும். இதுவே நமது பொருளாதார வாழ்வை மேம்படச் செய்வதற்கான, அதை மேலும் உறுதியானதாய், மேலும் சமூகத்தன்மையதாய் ஆக்குவதற்கான வழி; இதுவே உற்பத்தியைப் பெருகச் செய்வதற்கான வழி; உணவு நிலைமையையும் உற்பத்திச் செய்யப்படும் பண்டங்களின் வினி

யோகத்தையும் மேம்படச் செய்வதற்கும், நிலக்கரி உற்பத் தியை அதிகமாக்கி முதலாளித்துவம் இல்லாமலும் முதலா ளித்துவ மனப்பான்மை இல்லாமலும் தொழில் துறையை மீட்டமைப்பதற்குமான வழி.

கம்யூனிசம் எதில் அடங்கியுள்ளது? கம்யூனிசப் பிரசாரம் அனைத்தும் அரசின் வளர்ச்சிக்கு நடைமுறையில் வழிகாட் டும்படியான முறையில் நடத்தப்பட வேண்டும். தொழிலாளி வெகுஜனங்கள் கம்யூனிசத்தைத் தமது சொந்த இலட்சிய மாய்க் கருதும் பொருட்டு, அது அவர்களுக்குப் புரியும்படி யானதாக்கப்பட வேண்டும். இந்தப் பணி சரிவர செய்யப் படவில்லை, ஆயிரக் கணக்கில் தவறுகள் புரியப்படுகின்றன. இவ்வுண்மையை நாம் வெளியே தெரியாத இரகசியமாய் மறைத்து வைக்கவில்லை. ஆயினும் நமது உதவியைக் கொண்டு—இது திடமற்றதாகவும் பற்றுக்குறையாகவும் இருந்த போதிலும்—தொழிலாளர்களும் விவசாயிகளும் தாமே முயற்சி எடுத்து நமது பொறியமைவைக் கட்டி யமைத்தும் மேம்படச் செய்தும் கொள்ள வேண்டும். இனி நமக்கு இது ஒரு வேலைத்திட்டமாகவோ, ஒரு தத்துவ மாகவோ, செய்யப்பட வேண்டிய ஒரு பணியாகவோ இருக்க வில்லை; மெய்யான நடைமுறை வளர்ச்சியின் விவகாரமாகி விட்டது. நமது யுத்தத்தில் நமக்குக் கடுமையான பின்னடைவு கள் சில ஏற்பட்டன என்றாலுங்கூட, எப்படியும் இந்தப் பின்னடைவுகளிலிருந்து பாடம் பயின்று கொண்டு, முழு நிறை வெற்றி பெற்றிருக்கிறோம். இப்பொழுதுங்கூட நாம் ஒவ்வொரு தோல்வியிலிருந்தும் பாடம் பயின்று கொண்டாக வேண்டும்; ஏற்கெனவே செய்து முடிக்கப் பெற்றுள்ள பணி யை ஒரு முன்னுதாரணமாய்க் கொண்டு தொழிலாளர்கள், விவசாயிகள் போதிக்கப்பட வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மோசமாய் நடைபெற்றுள்ள வேலையை, வருங்காலத்தில் இதைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு, நாம் சுட்டிக் காட்டியாக வேண்டும்.

கட்டுமான வேலையை ஒரு முன்னுதாரணமாய்க் கொள் வதன் மூலமும், மீண்டும் மீண்டும் அதைச் செய்வதன் மூல மும், நாம் திறனில்லாத கம்யூனிஸ்டு நிர்வாகிகளை மெய் யான கட்டுமானிகளாய், முதலாவதாக நமது பொருளாதார வாழ்வின் கட்டுமானிகளாய் மாற்றுவதில் வெற்றி பெறு

வோம். நாம் நமது இலக்குகளை ஈடேறச் செய்வோம்; பழைய அமைப்பிலிருந்து மரபுரிமையாய் நாம் பெற்றுக்கொண்டவையும், ஒரே அடியில் அகற்றப்பட முடியாதவையுமான முட்டுக்கட்டைகள் யாவற்றையும் நாம் வென்று முன்னேறிச் செல்வோம். வெகுஜனங்களுக்கு நாம் மறுகல்வி அளித்திடுவோம்; கிளர்ச்சி, பிரசாரம் இவற்றின் மூலமே வெகுஜனங்களுக்கு மறுகல்வி அளித்திட முடியும். முதலாவதாக, பொருளாதார வாழ்வு அனைத்தையும் கட்டியமைத்திடும் பணியில் வெகுஜனங்கள் ஈடுபடும்படி ஈர்க்கப்பட்டாக வேண்டும். இதுதான் ஒவ்வொரு கிளர்ச்சியாளர், பிரசாரகரது பணியின் தலையானதும் அடிப்படையானதுமாகிய நோக்கமாய் இருத்தல் வேண்டும். இதை அவர் உணருவாராயின், அவருடைய பணி வெற்றி பெறுவது உறுதியாகிவிடும். (பலத்த கையொலி முழக்கம்.)

நூல் திரட்டு,
தொகுதி 41,
பக்கங்கள் 398-408

# பாலிடெக்னிகல் கல்வி பற்றி

## நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவின்[59] ஆய்வுரைகளைப் பற்றிய குறிப்புகள்

(தனிப்பட்டது. செர்னியாக். பொது மக்களுக்காக வெளியிடக் கூடாது. மீண்டும் ஒரு முறை, இரு முறை நான் இதை சிந்திப்பேன்).

பாலிடெக்னிகல் கல்வியைப் பற்றி இப்படி எழுத முடியாது; வெகுகாலத்திற்கு அப்பாலுள்ள எதிர்காலத்திற்கு அது தெளிவற்றதாக சூட்சுமமாகவே உள்ளது. நடப்புக் காலத்திய, இப்போதைய, வருந்தத்தக்க எதார்த்தம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இது அவசியமானது

மார்க்சின் படி

நம்முடைய ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி திட்டத்தின்படி

1) கோட்பாட்டளவில் பாலிடெக்னிகல் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி ஒன்று அல்லது இரண்டு ஆய்வுரைகளைச் சேர்ப்பது.

2) எக்காரணம் கொண்டும் இந்தக் கோட்பாட்டைக் கைவிட முடியாது என்றும் கல்வியை, பிரத்தியேகமாக பாலிடெக்னிகல் துறை சம்பந்தமான கல்வியை எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் அதை நடைமுறைப்படுத்துவது என்றும் தெளிவாக சொல்வது.

17வது ஆய்வுரை ரத்து செய்ய வேண்டும்.

செகண்டரி கல்வியைப் (12—17) பற்றி கூறுவது:

குடியரசின் அதீத சிக்கலான பொருளாதார நிலைமை இப்போது மறுக்க முடியாத முறையிலும் உடனடியாயும் தேவைப்படுவது,

செகண்டரிப் பள்ளிகளையும் தொழில் பள்ளிகளையும் ஒன்ருக இணைப்பது*,

செகண்டரிப் பள்ளிகளைத் தொழிற் பள்ளிகளாக மாற்றியமைப்பது*, ஆனுல் அதே நேரத்தில் கைத்தொழில் பள்ளிக்கூடங்களாக மாற்றுவதை தவிர்ப்பது, ஆகியவற்றில் கீழ்க்கண்ட சரியான விதிகள் வேண்டும்:

1) தொடக்கத்திலேயே குறிப்பிட்ட துறையில் தனித்துறைப் பயிற்சி பெறுதலைத் தவிர்த்தல்; இதைப் பற்றிய ஒரு செயல்முறை தயாரிக்கப்பட வேண்டும்.

2) பொதுக்கல்விப் பாடங்கள் எல்லா தொழிற் பள்ளிகளிலும் அதிகரிக்கப்பட வேண்டும்.

தீட்டப்பட வேண்டிய வருடாந்திர திட்டம்:

| | | |
|---|---|---|
| (இப்படிப்பட்டத் திட்டங்கள் இது வரை இல்லை எனில் லுனச்சார்ஸ்கி தூக்கிலிடப்பட வேண்டும்) | கம்யூனிஸம், வரலாறு, பொதுவாக, புரட்சிகளைப் பற்றிய வரலாறு இத்தியாதி, 1917ம் ஆண்டு புரட்சியைப் பற்றிய வரலாறு | புவியியல், இலக்கியம் முதலியன |

3) பாலிடெக்னிகல் கல்விக்கான மாற்றத்தை உடனடியாகச் செய்தல் அல்லது சரியாகச் சொன்ஞல், கீழ்க்கண்டவற்றைப் போன்ற தற்சமயம் சாத்தியப்படக் கூடிய அதிக நுட்பமானதும், உடனடியாக நடைமுறைப்படுத்தக் கூடியதுமான பாலிடெக்னிகல் கல்விக்கான பல நடவடிக்கைகள் எடுத்தல் என்பது கட்டாயமாகச் செய்யப்பட வேண்டிய வேலை, அதாவது:

---

* (திருத்துக: எல்லா செகண்டரிப் பள்ளிகளையும் இணைப்பதல்ல, ஆனுல் கல்வியாளர்களின் கட்டளை, தீர்மானம் ஆகியவற்றின் படி 13-14 வயது முதல் உள்ள செகண்டரிப் பள்ளிகளை இணைப்பதாகும்.)

| |
|---|
| கோஎல்ரோ<br>வுடன்[60]<br>கூட்டாக |

அ) மிக அருகில் உள்ள மின்சார நிலையத்திற்குப் போவது, அங்கே சோதனைகளுடன் கூடிய பல சொற்பொழிவுகளைக் கேட்பது; மின்சாரத்துடன் செய்யக்கூடிய பல நடைமுறை வேலைகள் செய்வது ஆகியவற்றிற்கு விரிவான திட்டங்களை உடனடியாகத் தயார்செய்ய வேண்டும்:

(ஒரு வருகைக்கு;

5, 10 விரிவுரைகள் கொண்ட பாடத் திட்டம்;

1 அல்லது 2 மாதங்களுக்குள் இத்தியாதி),

ஆ) கண்ணியமான முறையில் நிர்வாகிக்கப்படும் ஒவ்வொரு அரசாங்கப் பண்ணைக்கும் அதே திட்டம்,

இ) கண்ணியமான முறையில் நிர்வாகிக்கப்படும் ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் அதே திட்டம்,

| |
|---|
| கோஎல்ரோ<br>வுடன்<br>கூட்டாக |

ஈ) (மின்சாரத்தைப் பற்றியும் பாலிடெக்னிகல் கல்வியைப் பற்றியும் விரிவுரையாற்றவும் நடைமுறைப் பயிற்சி, உல்லாசப் பயணம் ஆகியவற்றைப் பொறுப்பேற்கவும்) எல்லா பொறியியலாளர்களையும், விவசாய நிபுணர்களையும், பல்கலைக்கழகத்தில் இயற்பியல் — கணிதத் துறையிலிருந்து எல்லா பட்டதாரிகளையும் அணிதிரட்டுதல்,

உ) பாலிடெக்னிகல் கல்வி பற்றிய சிறிய காட்சிசாலைகளை, ரயில்களிலும் கப்பல்களிலும் அமைத்தல், இத்தியாதி).

இது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. நாம் பிச்சைக்காரர்கள். நமக்கு மரத்தச்சர்கள், பிட்டர்கள் உடனடியாகத்

தேவை. நிச்சயமாக. எல்லோரும் மரத்தச்சர் களாகவும் பிட்டர்களாகவும் இத்தியாதியாகவும் ஆக வேண் டும். ஆனால் இதனுடன் பொதுக் கல்வியும் குறைந்த பட்ச பாலிடெக்னிகல் அறிவும் சேர்ந்திருக்க வேண்டும்.

செகண்டரிப் பள்ளியின் வேலை (மிகச் சரியாகச் சொன் னல்: 12—17 வயதுப் பிரிவைச் சேர்ந்த செகண்டரிப் பள்ளி உயர் வகுப்புகள்):

ஒரு மரத்தச்சனை
ஒரு தச்சனை

ஒரு கடைசல் தொழிலாளியை இது போன்றவர்களை உருவாக்குவதாகும். அவன் தன்னுடைய வேலையை நன்ருகத் தெரிந்த திறமை மிக்க ஆளாக மாறக்கூடியவனுகவும், நடைமுறையில் இத்தகையப் பயிற்சி யளிக்கப்பட்டவனுகவும், ஆனல் இந்த அறிவுடன் கூடிய ''கைத்தொழிலாளியாக'' அகன்ற பொது அறிவு பெற்றவனுக வும் இருக்க வேண்டும் (அவனுக்கு minimum திட்டமான அடிப்படைகள் தெரிய வேண்டும் என்பது சரியாகக் காட்டப் பட வேண்டும்);

ஒரு கம்யூனிஸ்டாக இருக்க வேண்டும் (அவருக்கு என்ன தெரிய வேண்டும் என்று சரியாக குறிப்பிடுக);

பாலிடெக்னிகல் பார்வை வேண்டும், பாலி டெக்னிகல் கல்வியைப் பற்றிய அடிப்படைகள் (ஆரம்ப பாடங்கள்),

அதாவது:

(அஅ) மின்சாரத்தைப் பற்றிய அடிப்படைக் கருத் துக்கள் (அது எவை என சுருக்கமாக வரை யறைக),

(ஆஆ) இயந்திரத் தொழிலுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துதல்,

(இஇ) இரசாயனத் தொழிலுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துதல்,

(ஈஈ) ரு.சோ.கூ.சோ. குடியரசின் மின்மயமாக்கும் திட்டத்தின் அடிப்படை கருத்து,

(உஉ) மின்சார நிலையம், ஒரு தொழிற்சாலை, ஓர் அரசாங்கப் பண்ணை ஆகியவற்றிற்குக்

குறைந்தது ஒன்று முதல், மூன்று முறைகள் சென்று பார்வையிடுதல்,

(ஊஊ) இன்ன இன்ன விவசாய விஞ்ஞானத்தின் அடிப்படைகள் இத்தியாதி.

குறைந்தபட்ச அறிவுகளைப் பற்றிய விரிவான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

(கிரின்கோ, பாலிடெக்னிகல் கல்வியை மறுத்து இது முட்டாள்தனமானது என்று கூறுமளவிற்கு வெளிப்படையாக மிகைப்பட இதை செய்து விட்டார். (ஒ. யூ. ஷ்மீத் கூட பகுதியளவு செய்திருக்கலாம்).[61] இதை திருத்துக.)

1920 முடிவில் எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 42,
பக்கங்கள் 228-230

## கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தில் வேலை செய்யும் கம்யூனிஸ்டுகளுக்கு மத்தியக் கமிட்டியின் நெறிமுறைகள்

1. பாலிடெக்னிகல் (மக்கள் கல்வியைப் பற்றி விவரிக்கும் பகுதியான 1ஐயும் 8ஐயும் குறிப்பாக பார்க்கவும்) கல்வியைப் பொறுத்தமட்டில் ரு.க.க. (ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின்) திட்டத்தால் வரையறுக்கப்பட்ட நிலைமையை மட்டு மழுப்பல் இன்றி அனுசரிக்கும் கட்சியானது, வயது வரம்பை பொது, மற்றும் பாலிடெக்னிகல் கல்விக்காக பதினேழு வயதிலிருந்து பதினைந்து வயதிற்குக் குறைப்பதை ஒரு நடைமுறை உசிதமான வழி முறையாக மட்டுமே கருத வேண்டும். இது அன்டான்ட்[62] நாடுகளால் நம்மீது திணிக்கப்பட்டப் போர்களால் விளைந்த நாட்டின் வறுமை மற்றும் இடிபாடுகளால் தவிர்க்க முடியாதபடி ஏற்பட்டது.

நாடு முழுவதும் எங்கெல்லாம் தொழிற் பயிற்சியை கொண்டுவர மிகச் சிறிதளவு வாய்ப்பேனும் இருக்கிறதோ அங்கெல்லாம் பதினைந்து வயதும் அதற்கு மேற்பட்ட பிராயமும் உள்ளவர்களுக்கு தொழிற் பயிற்சியை ''பொது பாலிடெக்னிகல் கல்வியுடன்'' (§8 மேலே கூறப்பட்டுள்ளது) ''இணைத்து'' முழுக்க முழுக்க கட்டாயமாக்க வேண்டும்.

2. கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் முக்கிய குறை என்னவெனில் அதன் செய்முறைத் திறமைக் குறைவு, நடைமுறை அனுபவத்தை சரி பார்ப்பதிலும் அதைப் பதிவு செய்வதிலும் அக்கறை குறைவு, அதனுடையப் படிப்பினைகளை முறையாகப் பயன்படுத்துவதில் உள்ள குறை, மற்றும் எங்கும் பொதுவான வாக்கு வாதங்களும் தெளிவற்ற கோஷங்களும் நிலவுவதும் ஆகும். மக்கள் கமிசாரும் கூட்டு நிர்வாகக் குழுவும் இத்தகைய குறைபாடுகளை எதிர்ப்பதில் ஒரு முனைப்பட வேண்டும்.

3. தனித்திறமைப் பெற்றவர்களின் பட்டியல் அதாவது ஏட்டறிவும் நீண்ட நடைமுறை அனுபவம் பெற்ற ஆசிரியர்கள், தொழில் (விவசாய விஞ்ஞானம் உட்பட) நுணுக்கத்திலும், மத்தியில் வேலைக்கான தொழிற் பயிற்சியிலும் இதைப் போன்று அனுபவமுள்ள நபர்கள் ஆகியவர்களின் பட்டியல் பொதுவாக கல்வித் துறை மக்கள் கமிசாரகத்திலும் குறிப்பாக கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் தொழில் பயிற்சி, பல் துறைத் தொழில் நுட்பப் பள்ளிகள், மேற்கல்வி நிலையங்களது தலைமை நிர்வாகத்திலும் சரியாக ஒழுங்கமைக்கப் படவில்லை.

இத்தகைய ஊழியர்களைப் பதிந்து வைத்தல், அவர்களுடைய அனுபவத்தை ஆராய்வது, அவர்களுடைய வேலையின் விளைவுகளை சரிபார்த்தல், மேலும் உள்ளூர் மற்றும் சிறப்பாக மையத்தின் வேலைகளில் பொறுப்பான பதவிகளில் முறையாக ஈடுபடுத்தல் ஆகியவை உடனடியாக செய்யப்பட வேண்டும். இத்தகைய தனித்திறமைப் பெற்றவர்களின் கருத்தை நாடாமலும் அவர்களுடைய தொடர்ச்சியான ஒத்துழைப்பைப் பெறுமலும் எந்த ஒரு முக்கியமான நடவடிக்கையும் நிறைவேற்றப்படக் கூடாது.

கீழ்க்கண்ட இன்றியமையாத இரண்டு நிபந்தனைகளின் கீழ்தான் தனித்திறமையாளர்களைத் திரட்டி ஈடுபடுத்தும் பணி நிறைவேற்றப்பட வேண்டும் என்பது சொல்லாமலே தெரியும்: முதலில் கம்யூனிஸ்டல்லாத தனித்திறமையாளர் கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டின் கீழ் வேலை செய்ய வேண்டும்; இரண்டாவதாக, பொதுவான கல்வித்துறை பாடங்கள் குறிப்பாக தத்துவஞானம், சமூக விஞ்ஞானங்கள், கம்யூனிஸ்ட் கல்வி ஆகியவை பற்றிய பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தைக் கம்யூனிஸ்டுகள் மட்டுமே தீர்மானிக்க வேண்டும்.

4. முக்கிய கல்வி நிறுவனங்களுக்கு, பயிற்சி தொடர்களுக்கு, விரிவுரைகளுக்கு, விளக்கமுறைகளுக்கு உரையாடலுக்கு நடைமுறைப் பயிற்சி பாடவேளைகளுக்கு உரிய பாடத்திட்டம் மக்கள் கமிசாரகத்தாலும் கூட்டு நிர்வாகக் குழுவாலும் தயாரிக்கப்பட்டு, ஊர்ஜிதப்படுத்தப்பட வேண்டும்.

5. தரமிக்க தொழிலாளர் பள்ளி இலாக்காவும் குறிப்பாக கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் தொழில் பயிற்சி,

பல் துறைத் தொழில் நுட்பப் பள்ளிகள், மேற்கல்வி நிலையங்களது தலைமை நிர்வாகமும் தொழில் நுணுக்கக் கல்வி, தொழில் கல்வி, பாலிடெக்னிகல் கல்வி ஆகியவற்றின் அபிவிருத்திக்காகவும், ஓரளவுக்கு நல்ல முறையில் அமைக்கப் பட்ட ஒவ்வொரு தொழில், விவசாய நிறுவனத்திலும் (அரசாங்கப் பண்ணை, விவசாய சோதனை நிலையம், நன்கு அமைக்கப்பட்டப் பண்ணை இத்தியாதி மின்சார நிலையங்கள் இத்தியாதி) அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தவும், எல்லாப் பொருத்தமான தொழில் நுணுக்க, விவசாய விஞ்ஞான சக்திகளை மேலும் விரிவாகவும் மிகவும் முறையாகவும், திரட்டி ஈடுபடுத்துவதில் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும்.

மாமூல் வேலைகள் சீர்குலைக்கப்படுவதைத் தவிர்க்க, எவ்வகை அமைப்பு, முறையின் படி பொருளாதார துறைகளும் நிறுவனங்களும் பாலிடெக்னிகல் கல்விக்காகப் பயன்படுத்தப் பட வேண்டும் என்பதனை சம்பந்தப்பட்ட பொருளாதார முகமைகளுடன் [Agencies] செய்துகொள்ளும் ஒப்பந்தம் மூலம் தீர்மானிக்க வேண்டும்.

6. வேலைகளின் விளைவுகளை சரிபார்க்கவும், வேலைகளின் அளவுகளை மதிப்பிடவும் இயல்வதான, தெளிவான, சுருக்கமான யதார்த்த வடிவிலான அறிக்கையை வகுக்க வேண்டும். கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தில் இந்த வேலையின் ஒழுங்கமைப்பு மிகவும் திருப்தியற்றதாக உள்ளது.

7. நூல் நிலையங்கள், பள்ளிக் கூடங்களிலும் பிற இடங்களிலும் உள்ள வாசக சாலைகள், ஆகியவற்றிற்குச் செய்தித் தாள்கள், சிறு பிரசுரங்கள், சஞ்சிகைகள், புத்தகங்கள் ஆகியவற்றின் வினியோகம் மிகவும் திருப்தியற்றதாக உள்ளது. இதன் விளைவு என்னவெனில் சோவியத் அலுவலக ஊழியர்களின் ஒரு சிறு பகுதிக்கும் மிகச் சில ஆலைத் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் மட்டுமே பத்திரிகைகளும் புத்தகங்களும் போய் சேருகின்றன. இந்த முறை முழுவதும் முடி முதல் அடி வரை மறு அமைப்புச் செய்யப்பட வேண்டும்.

பிராவ்தா, இதழ் 25,
1921, பிப்ரவரி 5

நூல் திரட்டு,
தொகுதி 42,
பக்கங்கள் 319-321

## அ. வ. லுனச்சார்ஸ்கி, மி. நி. பக்ரோவ்ஸ்கி, எ. அ. லித்கென்ஸ் ஆகியோருக்கு

*ஏப்ரல் 8, 1921*

லுனச்சார்ஸ்கி, பக்ரோவ்ஸ்கி, லித்கென்ஸ் ஆகிய தோழர்களுக்கு

*மத்தியக் கமிட்டியின் வழிகாட்டல்களுக்குப் பின்னும்*, கல்வித் துறை மக்கள் கமிசாரகம் மறு அமைப்பு செய்யப் பட்ட பொழுது மத்தியக் கமிட்டியால் கொடுக்கப்பட்ட விசேஷ நெறிமுறைகளுக்குப் பின்னும், முறையான திட்ட மிட்ட வேலையைப் பொறுத்தமட்டில் கல்வித் துறை மக்கள் கமிசாரக விவகாரங்கள் விருத்தி அடையவில்லை என்பதற் கான அறிகுறிகள் அதிகரித்து வருகின்றன.*

*எப்பொழுது வேலையின் முக்கியத் திட்டம் வகுக்கப்படும்? என்ன பிரச்சினைகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படும்? பாடப் புத்தகங்கள் எழுதுவது, நூல் நிலையத்தின் வலையமைப்பு அதன் பயன்மாதிரி பள்ளிக்கூடங்கள்— ஆசிரியர்கள் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு-பயிற்சி வகுப்பு விரிவுரைகள், பள்ளிகளில் வகுப்புகள் ஆகியவற் றைப் பற்றிய திட்டங்கள், திட்டங்களையும் வகுப்புப் பாடங் களின் முன்னேற்றத்தையும் திறம்படப் பூர்த்தி செய்தலின் அளவை கண்காணித்தல் ஆகிய இது போன்ற பிரச்சினைகள் சேர்க்கப்பட்டுள்ளனவா?*

*அல்லது வேறு பிரச்சினைகளா? எவை?*

*எந்தப் பிரச்சினைகள், மிக முக்கியமானதும், அவசர மானதும் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளன?*

---

* *முந்திய கட்டுரையைப் பார்க்கவும்.*—**ப-ர்.**

இது பற்றி முடிவுகள் உள்ளனவா? அவற்றின் நிறைவேற்றத்தை முறையாக மேற்பார்வை செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

சுருக்கமானப் பதிலை நான் கோருகிறேன்.

**வி.உலியானவ் (லெனின்),**
*மக்கள் கமிசார்களின்*
*கவுன்சிலின் தலைவர்*

**நூல் திரட்டு,**
*தொகுதி 52,*
*பக்கங்கள் 133-134*

# புதிய பொருளாதாரக் கொள்கையும் அரசியல் கல்வி இலாக்காக்களின் பணிகளும்

**அரசியல் கல்வி இலாக்காக்களின் இரண்டாவது அகில-ருஷ்ய காங்கிரஸ் அறிக்கையிலிருந்து அக்டோபர் 17, 1921**

## வழக்கொழிந்த முறைகள்

*ஒரு காலத்தில் இந்தப் பிரகடனங்கள், அறிவிப்புகள், கொள்கை அறிக்கைகள், அரசாணைகள் தேவைப்பட்டன. நம்மிடம் அவை போதுமான அளவு இருந்தன. ஒரு காலத்தில், எதை, எப்படி, கட்டவிரும்பினோம், என்ன புதிய, அற்புதமான காரியங்களுக்காக நாம் பாடுபட்டுக் கொண்டிருந்தோம் என்பதை மக்களுக்குச் சுட்டிக் காட்ட அவை நமக்குத் தேவைப்பட்டன. ஆனால் நாம் என்ன கட்ட விரும்புகிறோம் என்பதனை மக்களுக்குச் சுட்டிக் காட்டிக் கொண்டே இருக்க முடியுமா? முடியாது! மிக சாதாரண தொழிலாளிகூட நம்மை நையாண்டி செய்து கிண்டல் செய்ய ஆரம்பிப்பான். ''நீ எதைக் கட்ட விரும்புகிறாய் என்பதைச் சுட்டிக் காட்டிக் கொண்டே இருப்பதில் என்ன பிரயோஜனம்? எப்படிக் கட்ட முடியும் என்பதனை எனக்கு காட்டு, உன்னால் கட்ட முடியாவிடில் நான் உன்னோடு இல்லை. நீ எப்படியோ ஒழிந்து போ!'' என்றும் கூறுவான். அவன் சொல்வது சரியே.*

*மகத்தான பணிகளைப் பற்றிய அரசியல் சித்திரங்களை வரைய வேண்டிய அவசியம் இருந்த காலம் போய்விட்டது. இன்று இத்தகைய பணிகள் நடைமுறையில் நிறைவேற்றப்பட வேண்டும். நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நடைமுறைப்படுத்தக்கூடிய அந்த அரசியல் அனுபவத்தை இணைக்கும், கலாசாரப் பணிகள் நம்மை எதிர்நோக்கியுள்ளன. சோவியத் அரசின் அரசியல் ஆதாயங்களுக்கு நாம் ஒரு*

பொருளாதார அடித்தளத்தை நிறுவ வேண்டும். இல்லையேல் அவை அனைத்தையும் நாம் இழப்போம். இந்த அடிப்படை இன்னமும் நிறுவப்படவில்லை. அதுதான் நாம் செய்ய வேண்டிய வேலையாகும்.

கலாசார மட்டத்தை உயர்த்தும் பணி நம்மை எதிர் நோக்கி இருக்கும் மிக அவசரமான பணிகளில் ஒன்ருகும். அரசியல் கல்வி இலாக்காக்கள் கட்டாயம் செய்ய வேண்டிய வேலை அது. அவை தமது உரிமை என ஏற்றுக் கொண்ட ''அரசியல் கல்வியின்'' லட்சியத்துக்குச் சேவை புரியும் ஆற்றல் இருக்குமாளுல் அவை செய்ய வேண்டிய பணி அது. ஓர் தலைப்பை மேற்கொள்வது என்பது சுலபமானது. ஆனுல் அதற்குத் தகுந்தபடி செயல்படுவது எப்படி? இந்தக் காங்கிரசுக்குப் பிறகு இதைப் பற்றிய துல்லியமான தகவல்களைப் பெறுவோம் என நம்புவோம். நம்மால் ஜூலை 19, 1920ல் கல்லாமை ஒழிப்புக்காக ஒரு கமிஷன் போடப்பட்டது. இந்தக் காங்கிரசுக்கு வருவதற்கு முன் முன்கருதலோடு நான் அந்தக் கமிஷனை நியமித்த அரசாணையைப் படித்துவிட்டு வந்தேன். அது கூறுகிறது: கல்லாமை ஒழிப்புக்கான அகில-ருஷ்ய கமிஷன்... அதை விட கல்லாமை ஒழிப்புக்கான அசாதாரண கமிஷன். இந்தக் காங்கிரசுக்குப் பின் இந்தத் துறையில் என்ன செய்யப்பட்டிருக்கிறது, எத்தனை குபேர்னியாக்களில் என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பது பற்றி நமக்கு செய்திகள் கிட்டும் என்றும் அந்த அறிக்கை ஸ்தூலமானதாக இருக்கும் என்றும் நம்புவோம். ஆனுல் நாம் (இதைவிட மென்மையான வேறு எந்தப் பதத்தை என்னுல் பயன்படுத்த முடியும்?) அரை—காட்டுமிராண்டிகள் போல உள்ளோம் என்பதைக் கல்லாமை ஒழிப்புக்கான அசாதாரணக் கமிஷன் ஒன்றை அமைக்க வேண்டிய அசல் அவசியம் காட்டுகிறது. ஏன் எனில் அரை—காட்டுமிராண்டித்தனமாக இல்லாத ஒரு நாட்டில் கல்லாமை ஒழிப்புக்கான அசாதாரணக் கமிஷன் அமைப்பது என்பது ஓர் அவமானமாகக் கருதப்படும். அத்தகைய நாடுகளில் பள்ளிகளில் கல்லாமை ஒழிக்கப்பட்டு வருகிறது. மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் நடுத்தரமான நல்ல பள்ளிக்கூடங்கள் அங்கே உள்ளன. அவர்களுக்கு என்ன கற்றுத் தரப்படுகிறது? முதன் முதலில் அவர்களுக்கு எழுதவும், படிக்கவும் கற்றுத்தரப்படுகின்றன. இந்த ஆரம்ப

பிரச்சினையைக் கூட தீர்க்கவில்லை எனில் ஒரு புதிய பொருளாதாரக் கொள்கையைப் பற்றிப் பேசுவது கேலிக்கூத்தாகும்.

## எல்லாவற்றையும் விட மகத்தான அதிசயம்

ஒரு புதிய கொள்கையைப் பற்றி வேறு என்ன பேச முடியும்? நாம் கல்லாமையை ஒழிக்க அசாதாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப் போக வேண்டியிருப்பின், நம் பழைய கொள்கையிலேயே ஒட்டிக் கொண்டிருக்கக் கடவுள் அருளுகிறார் என்பதாகும். அது வெளிப்படை. ஆனால் நாம் இராணுவத் துறையிலும் மற்ற துறைகளிலும் அதிசயங்கள் புரிந்துள்ளோம் என்பது இதைவிட இன்னமும் அதிக வெளிப்படையானதாகும். கல்லாமையை ஒழிப்பதற்கான அசாதாரணக் கமிஷன் முழுமையாக ஒழிக்கப்படுமேயானால், மேலும் இங்கே நான் கேள்விப்பட்டதைப் போல் கல்வித் துறை மக்கள் கமிசாரகத்திடமிருந்து அதைப் பிரிப்பதற்கான எவ்விதத் திட்டங்களும் செய்யப்படாமல் இருக்குமானால் அதுவே என்னுடைய கருத்துப்படி எல்லாவற்றையும் விட மகத்தான அதிசயமாக இருக்கும். அது உண்மையானால், நீங்கள் அதைச் சிறிது சிந்தனையில் கொண்டால் சில மோசமான திட்டங்களை ஒழிக்க ஓர் அசாதாரண கமிஷனை நிறுவ வேண்டும் என்பதனை நீங்களும் என்னுடன் சேர்ந்து ஒத்துக் கொள்வீர்கள்.

இதற்கும் மேலாக, கல்லாமையை ஒழிப்பது மட்டும் போதாது. சோவியத் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும் அவசியம் அதற்கு எழுதப்படிக்கத் தெரிந்ததை வைத்து மட்டும் நாம் வெகுவாக முன்னேறிவிட முடியாது. நாம் கலாசாரத்தை இன்னும் அதிக உயர்ந்த தரத்துக்கு உயர்த்த வேண்டும். ஒரு மனிதன் தன்னுடைய எழுதப்படிக்கத் தெரிந்த திறமையைப் பயன்படுத்த வேண்டும். அவனுக்குப் படிக்க ஏதாவது இருக்க வேண்டும். அவன் செய்தித்தாட்கள், பிரசார சிறு பிரசுரங்கள் ஆகியவற்றை வைத்திருக்க வேண்டும். அவைகள் சரியான முறையில் வினியோகிக்கப்பட்டு மக்களுக்குக் கிடைக்க வேண்டும். இப்பொழுது நடப்

பதைப் போல் ஓரிடமிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும் போது காணுமல் போய் விடுவதும் அவற்றில் பாதிகூடப் படிப்பதற்கு இல்லாது போவதும், மீதி அலுவலகங் களில் ஏதாவது சில காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படு வதும் கூடாது. இவற்றில் நாலில் ஒரு பங்கு கூட மக்களுக்குக் கிடைப்பதில்லை எனலாம். நம் வசத்தில் இருக்கும் மிகச் சொற்பமான வசதி வளங்களை முழுவதுமாகப் பயன்படுத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதனுல்தான் புதிய பொருளாதாரக் கொள்கை[63] சம் பந்தமாக, எப்பாடுபட்டும் கலாசார தரத்தை உயர்த்து வதற்காக அரசியல் கல்வி பாடுபடுகிறது என்ற கருத்தை இடை யருது நாம் பிரசாரம் செய்ய வேண்டும். கலாசாரத்தை உயர்த்தும் நோக்கத்திற்காக எழுதப்படிக்கத் தெரிந்த திறமையைப் பயன்படுத்த வேண்டும். விவசாயிகள் தமது எழுதப்படிக்கத் தெரிந்த திறமையைத் தமது பண்ணைகளை யும், தமது அரசையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

சோவியத் சட்டங்கள் மிகவும் நல்ல சட்டங்கள், காரணம் அதிகாரவர்க்கப் போக்கு, சிவப்பு நாடாபாணி ஆகிய வற்றை எதிர்த்துப் போராட ஒவ்வொருவருக்கும் இச்சட் டங்கள் வாய்ப்பளிக்கின்றன. எந்த முதலாளித்துவ நாட்டி லும் தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் இத்தகைய வாய்ப்பு கிடையாது. ஆனுல் யாராவது இவற்றைப் பயன் படுத்துகிருர்களா? ஏறக்குறைய ஒருவரும் இல்லை! விவசாயி கள் மட்டுமல்ல கம்யூனிஸ்டுகளில் மிகப்பெரும் சதவீதத் தினர் கூட சிவப்பு நாடாபாணியையும் அதிகாரவர்க்கப் போக் கையும் அல்லது மெய்யான ருஷ்யப் புலப்பாடான கையூட் டினையும் எதிர்த்துப் போராடுவதற்கு சோவியத் சட்டங்களை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரியாது. இதை எதிர்த்துப் போரிட எது தடையாக உள்ளது? நம்முடைய சட்டங்களா? நம்முடைய பிரசாரமா? அதற்கு மாருக! எண்ணற்றச் சட்டங்கள் நம் வசம் உள்ளன! பின் ஏன் இந்தப் போராட் டத்தில் நாம் வெற்றி அடையவில்லை? காரணம், பிரசாரத் திஞல் மட்டும் இப்போராட்டத்தை நடத்த முடியாது. மக் கள் திரளினர் ஒத்துழைத்தால்தான் இதை நடத்த முடியும். இந்தப் போராட்டத்திற்குத் தடங்கலாக இருப்பவர்களைப்

பற்றிக் கூறுவது ஒரு புறமிருக்க நம்முடைய கம்யூனிஸ்டு களில் பாதிப்பேருக்கு மேல் போராட இயலாதவர்கள். உங் களில் தொண்ணூற்று ஒன்பது சதவீதத்தினர் கம்யூனிஸ்டு கள் என்பது உண்மை. பின்னுல் கூறப்பட்ட கம்யூனிஸ்டுகள் மீதுதான் நாம் ஓர் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக் கிறேம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த அறுவை சிகிச்சை கட்சியில் களையெடுக்கும் கமிஷனுல் நடத்தப்பட்டு வருகிறது. சுமார் ஒரு லட்சம் பேர்களை நம்முடையக் கட்சியிலிருந்து நீக்குவோம் என்று நாம் எதிர்பார்க்கிறேம். இரண்டு லட்சம் பேர் என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்படிக் கூறுகிறவர் களை நான் மிகவும் விரும்புகிறேன்.

கட்சியில் நெருக்கமாக இருந்து கொண்டே, அலுவல் சிவப்பு நாடாபாணியையும் கையூட்டினையும் எதிர்த்துப் போரிட முடியாமல் இருப்பது மட்டுமல்லாமல், இந்தப் போராட்டத்திற்கு இடைஞ்சலாகவும் கூட இருக்கும் ஒரு லட்சம் கம்யூனிஸ்டுகளையோ இரண்டு லட்சம் கம்யூனிஸ்டு களையோ நாம் நீக்குவது திண்ணம் என்று நான் மிகவும் நம்புகிறேன்.

## அரசியல் கல்வியாளர்களின் பணிகள்

இரண்டு லட்சம் பேர்களை நாம் கட்சியிலிருந்து களை யெடுப்புச் செய்தோமானுல் அது பயனுள்ளதாக இருக்கும். ஆனுல் அது நாம் என்ன செய்ய வேண்டுமோ அதில் மிகச் சிறியதோர் பகுதி மட்டுமே ஆகும். அரசியல் கல்வி இலாக் காக்கள் தங்களுடைய எல்லா நடவடிக்கைகளையும் இந்த நோக்கத்திற்காக மாற்ற வேண்டும். கல்லாமையை எதிர்த்துப் போராட வேண்டும். ஆனுல் எழுதப்படிக்கும் திறமை மட்டுமே போதுமானது அல்ல. சிவப்பு நாடாபாணியையும் கையூட்டினையும் எதிர்த்துப் போராட நமக்குக் கற்றுக் கொடுக்கக் கூடிய கலாசாரமும் நமக்குத் தேவை. அது ஒரு புரையோடிய புண். இராணுவ வெற்றிகளோ அரசியல் சீர் திருத்தங்களோ அதைக் குணப்படுத்த முடியாது. இதன் மெய் யான இயல்பு காரணமாக அதை ராணுவ வெற்றிகளாலும், அரசியல் சீர்திருத்தங்களாலும் குணப்படுத்த முடியாது,

ஆனால் கலாசார மட்டத்தை உயர்த்துவதால் மட்டுமே குணப்படுத்த முடியும். அது அரசியல் கல்வி இலாக்காக் களிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய வேலையாகும்.

உத்தியோகஸ்தர் பாணி வேலையைப் போல் அரசியல் கல்வியாளர்கள் தங்களுடைய வேலையைப் புரிந்து கொள்ளக் கூடாது. குபேர்னியா அரசியல் கல்வி இலாக்காக்களின் பிரதி நிதி குபேர்னியா பொருளாதார மாநாடுகளுக்கு (குபே கோஸோ)[64] நியமிக்கப்படலாமா கூடாதா என்று மக்கள் விவாதிக்கும் பொழுது அடிக்கடி இந்த நிலை உண்டாகிறது. அப்படிச் சொல்வதற்காக என்னை மன்னியுங்கள். ஆனால் நீங் கள் எந்தப் பதவிக்கும் நியமிக்கப்படலாம் என்று நான் எண்ணவில்லை. சாதாரண குடிமக்களைப் போல் உங்களுடைய வேலைகளை நீங்கள் செய்ய வேண்டும். ஏதேனும் ஒரு பதவிக்கு நியமிக்கப்படும் போது நீங்கள் அதிகாரவர்க்கத்தினர் ஆகி விடுகிறீர்கள். ஆனால் நீங்கள் மக்களுடன் பழகி வேலை செய்து, அவர்களை அரசியல் ரீதியாக வளர்ச்சியடையச் செய் தால், அரசியல் விழிப்படைந்த மக்களிடையே கையூட்டு என்பது இருக்காது என்பதனை அனுபவம் உங்களுக்குப் புலப் படுத்தும். தற்பொழுது கையூட்டு நம்மை எல்லா பக்கங் களிலும் சூழ்ந்து கொண்டிருக்கிறது. கையூட்டினை ஒழிக்க வும், நிர்வாகக் கமிட்டியில் உள்ள இன்னின்னாரை கையூட்டு வாங்குவதிலிருந்து தடுக்கவும் என்ன செய்யலாம் என்று உங் களிடம் கேட்கப் படலாம். இதற்கு எப்படி ஒரு முடிவு கொண்டுவருவது என்பதை மக்களுக்குக் கற்பிக்கும்படி உங் களிடம் கேட்கப்படலாம். இது தன்னுடைய இலாக்காவின் வேலைக்குள் வராது என்றோ, இந்த விஷயம் பற்றிய சிற்றேடு கள் வெளியிடப்பட்டுள்ளன, பிரகடனங்கள் செய்யப்பட்டுள் ளன என்றோ ஓர் அரசியல் கல்வியாளர்கள் பதில் அளிப்பார் களானால் மக்கள் ''நீங்கள் மோசமான கட்சி உறுப்பினர் கள்'' என்று கூறுவார்கள். ''உங்களுடைய இலாக்காக்களின் வேலைக்குள் இது வராது என்பது உண்மையே. இதற்காகத் தொழிலாளி-விவசாயிகளது தணிக்கையை (ரப்கிரீன்)[65] நாம் வைத்துள்ளோம். ஆனால் நீங்கள் கட்சி உறுப்பினர்கள் அல்லவா?'' அரசியல் கல்வியாளர்கள் என்றப் பட்டத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இந்தப் பட் டத்தை ஏற்கும் பொழுது இத்தகைய பகட்டான பட்டத்

தைத் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்றும் அதைவிட அடக்க மான வேறு ஒன்றைத் தேர்ந்து எடுக்கும்படியும் எச்சரிக்கப் பட்டீர்கள். ஆனால் நீங்கள் விரும்பியது அரசியல் கல்வியாளர் என்ற பட்டம், அந்தப் பட்டம் மிகப் பலவற்றை உணர்த்து கிறது. நீங்கள் பொதுக்கல்வியாளர்கள் என்ற பட்டத்தை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அரசியல் கல்வியாளர்கள் என்றபட்டத்தை எடுத்துக் கொண்டீர்கள். ''மக்களுக்கு எழுதவும், படிக்கவும், பொருளாதார இயக்கத்தை நடத்த வும் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அது நல்ல காரியம். ஆனால் இது அரசியல் கல்வி அல்ல. ஏன் எனில் அரசியல் கல்வி என்பது எல்லாம் சேர்ந்த ஒட்டு மொத்த மான ஒன்று'' என்று உங்களுக்குச் சொல்லப் படலாம்.

அநாகரிகத்தை எதிர்த்தும் கையூட்டு போன்ற புரை யோடிய புண்களை எதிர்த்தும் நாங்கள் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறோம். நீங்களும் இதையே தான் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் அர சியல் கல்வி என்பது இந்தப் பிரசாரத்தை விட எவ்வளவோ மேலானது. அரசியல் கல்வி எனில் நடைமுறைப் பலன்கள் என்று பொருளாகும். இந்தப் பலன்களை எப்படி அடைவது என்று மக்களுக்குக் கற்றுக் கொடுப்பது என்று பொருளாகும், மற்றவர்களுக்கு முன் உதாரணமாக இருப்பது என்று பொரு ளாகும். நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர் என்ற முறையில் அல்ல மாறாக அரசியல் ரீதியாக மேலும் சிறந்த போதனை பெற்ற ஒரு சாதாரண குடிமகன் போல் இருப்பது, நம்மத் தியில் பரவலாக செயல்பட்டுவரும் சிவப்பு நாடாபாணியின் மீது கண்டனக் கணை தொடுப்பது மட்டுமல்லாமல், அந்த கேட்டினை எப்படி உண்மையிலேயே அகற்றி வெற்றி கொள்ள முடியும் என்பதனைக் காட்டக் கூடிய திறமையுள்ளவர்களாக வும் இருக்க வேண்டும். இது மிகப் பெரிய கடினமான கலை யாகும். கலாசாரத்தின் பொது தரம் உயர்த்தப்படும் வரை யில் தொழிலாளர் விவசாயிகள் மக்கள் திரளினரின் கலா சாரத் தரம் இப்பொழுது உள்ளதை விட அதிகம் உயர்த்தப் படும் வரையில் இக்கலையை நடைமுறைப்படுத்த முடியாது! முக்கிய அரசுக் கல்வி நிறுவனத்தின் மத்திய அரசியல் கல்வி இலாக்காவின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

நான் சொன்ன எல்லாவற்றையும் தொகுத்துக் கூற

விரும்புகிறேன். குபேர்னியா அரசியல் கல்வி இலாக்காக்களை எதிர் நோக்கி உள்ள பிரச்சினைகளுக்கு நடைமுறை தீர்வு களைக் கூற விரும்புகிறேன்.

## மூன்று முக்கிய விரோதிகள்

ஒருவருக்கு, அவருடைய இலாக்கா சம்பந்தப்பட்ட பணி கள் தவிர இப்போது அவரை மூன்று முக்கிய விரோதிகள் எதிரிடுகின்றனர் என்பது என் கருத்து. இந்த பணிகள் அர சியல் கல்வியாளரை அவர் கம்யூனிஸ்டாக இருக்கும் பட்சத் தில் எதிர்நோக்கியுள்ளன — அரசியல் கல்வியாளர்களில் பெரும்பாலோர் கம்யூனிஸ்டுகளே. அவரை எதிர் நோக்கி இருக்கும் மூன்று முக்கிய விரோதிகள் பின்வருவன: முதல் விரோதி—கம்யூனிஸ்ட் செருக்கு, இரண்டாவது—கல்லா மை, மூன்ருவது—கையூட்டு.

### முதல் விரோதி—கம்யூனிஸ்ட் செருக்கு

தன்னுடைய எல்லாப் பிரச்சினைகளையும் கம்யூனிஸ கட்ட ளைகள் மூலம் தீர்த்துவிட முடியும் என்று கற்பனை செய்து கொண்டு இருப்பவரும், இன்னமும் வெளியே தள்ளப்படாத வருமான ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், கம்யூனிஸ்ட் தற்செருக்குடையவராவார். ஆளும் கட்சியின் உறுப்பினராக அவர் இன்னமும் இருப்பதாலும், ஏதாவது ஓர் அரசாங்க அலுவலகத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டதாலும், அர சியல் கல்வியின் விளைவுகளைப் பற்றிப் பேச அவருக்கு இது உரிமை அளிப்பதாக அவர் கற்பனை செய்கிருர். அப்படி ஒன்றும் கிடையாது! அது கம்யூனிஸ்ட் செருக்கு மட்டுமே. அரசியல் அறிவைக் கற்றுக் கொள்வதும் கற்றுக் கொடுப் பதும் தான் முக்கியமானது. ஆனல் அதை நாம் இன்னமும் கற்றுக் கொள்ளவில்லை. அந்த விஷயத்தைச் சரியாக எப்படி அணுகுவது என்பதை இன்னமும் நாம் கற்றுக் கொள்ள வில்லை.

## இரண்டாவது விரோதி—கல்லாமை

இரண்டாவது விரோதியான கல்லாமையைப் பொறுத்த மட்டில் நம் நாட்டில் கல்லாமை போன்ற விஷயம் இருக்கும் வரை அரசியல் கல்வியைப் பற்றிப் பேசுவது மிகையான தாகும் என்று நான் சொல்ல முடியும். இது ஓர் அரசியல் பிரச்சினை அல்ல. இது ஒரு நிபந்தனை, இந்த நிபந்தனை இன்றி அரசியலைப் பற்றிப் பேசுவது பயனற்றது. கல்வியறிவு இல்லா நபர் ஒருவர் அரசியலுக்கு வெளியே நிற்கிறார். முதலில் அவர் தமது அரிச்சுவடியைக் கற்க வேண்டும். அது இல்லாமல் ஓர் அரசியலும் இருக்க முடியாது. அது இல்லை எனில் வெறும் வதந்திகள், வெட்டி அரட்டை, கட்டுக்கதைகள், தப்பெண்ணங்கள் மட்டுமே இருக்கும். ஆனால் அரசியல் இருக்காது.

## மூன்றாவது விரோதி—கையூட்டு

இறுதியாக கையூட்டு போன்ற காரியம் சாத்தியமாக இருக்குமானால் அரசியலைப் பற்றிப் பேசுவது பயனற்றது. இங்கே அரசியலை அணுகும் முறை கூட நம்மிடம் இல்லை. இங்கே அரசியலை நடத்துவது முடியாதது. ஏன் எனில் எல்லா நடவடிக்கைகளும் செயல்படாமல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் மேலும் அறவே எவ்விதப் பலன்களையும் உண்டாக்காது. பரவலான கையூட்டை அனுமதிக்கும் நிலைமைகளில், பிரயோகிக்கப்படும் ஒரு சட்டம் காரியங்களை இன்னமும் மோசமாக்கும். இத்தகைய சூழ்நிலைமைகளில் எந்த அரசியலையும் தொடர முடியாது. அரசியலில் ஈடுபடக் கூடிய அடிப்படை சூழ்நிலைமை இல்லை. நம்முடைய அரசியல் பணிகளை உருவரை செய்து மக்கள் ''முன்வைக்கவும் எத்தகைய காரியங்களுக்காக நாம் பாடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும்'' என்று மக்களுக்குக் கூறவும் (இதுதான் நாம் செய்துகொண்டிருக்க வேண்டியது!) இயல வேண்டுமானால் அதற்குத் தேவையானது மக்கள் திரளினரின் உயர் தரத்திலான கலாசாரமே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கலாசாரத் தரத்தை அடைவது அவசியமாகிறது. இல்லாவிடில் நம்முடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது உண்மையிலேயே சாத்தியமல்ல.

## இராணுவ, கலாசாரப் பணிகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகள்

அரசியல், ராணுவப் பிரச்சினைகளைப் போல் ஒரு கலாச்சாரப் பிரச்சினையை அவ்வளவு விரைவில் தீர்த்துவிட முடியாது. மேற்கொண்டு முன்னேறுவதற்கு முன்பு இருந்ததைப் போல் இப்பொழுது நிலைமைகள் இல்லை என்பதனை அறிந்து கொள்ள வேண்டும். நெருக்கடிகள் கடுமையாகியுள்ள ஒரு காலப்பகுதியில் ஒரு சில வாரங்களுக்குள் அரசியல் வெற்றி பெறுவது சாத்தியம். போரில் ஒரு சில மாதங்களுக்குள் வெற்றியடைந்து விட முடியும். ஆனால் இத்தகைய குறுகிய காலத்தில் ஒரு கலாசார வெற்றியை அடைய முடியாது. அதனுடைய இயல்பான தன்மைப்படியே அதற்கு அதிக காலம் தேவை. இந்த நீண்ட காலத்தை அனுசரித்து அதற்குத் தக்கபடி நம்முடைய வேலையைத் திட்டமிட வேண்டும். உச்சபட்ச விடா முயற்சி உறுதி, ஒழுங்கு முறை ஆகியவற்றை நாம் காட்ட வேண்டும். இத்தகைய குணங்கள் இல்லாமல் அரசியல் கல்விவேலையைத் தொடங்குவது கூட முடியாது. அரசியல் கல்வியின் பலன்களைத் தொழில் துறை மற்றும் பொருளாதாரத்திலான மேம்பாட்டினால்தான் அளவிட முடியும். நாம் கல்லாமையையும், கல்லாமை என்ற மண்ணில் பிடிவாதமாகப் பற்றி நிற்கும் கையூட்டினையும் ஒழிப்பது மட்டுமல்லாமல், மக்கள் உள்ளபடியே நமது பிரசாரம் நம்முடைய வழிகாட்டுதல், மற்றும் நம் சிற்றேடுகளை ஏற்றுக் கொள்ளும்படி செய்ய வேண்டும். அதன் விளைவாக தேசப் பொருளாதாரத்தில் ஒரு மேம்பாடு ஏற்பட முடியும்.

நம்முடைய புதிய பொருளாதாரக் கொள்கையின் அரசியல் சம்பந்தப்பட்ட அளவில் இவை தான் அரசியல் கல்வி இலாக்காக்களின் பணிகளாகும். இந்தத் துறையில் ஆகப் பெரிய வெற்றியை அடைவதற்கு இந்தக் காங்கிரஸ் நமக்குத் துணைசெய்யும் என நம்ப விரும்புகிறேன்.

நூல் திரட்டு,<br>
தொகுதி *44*,<br>
பக்கங்கள் ***169-175***

# சோவியத்துகளின் ஒன்பதாவது அகில-ருஷ்யக் காங்கிரஸ் டிசம்பர் 23—28, 1921

## 2

### பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய பிரச்சினைகளைக் குறித்து சோவியத்துகளின் ஒன்பதாவது அகில-ருஷ்யக் காங்கிரசின் (டிசம்பர் 28, 1921) நெறிமுறைகள் என்பதிலிருந்து

முடிந்த அளவு மிகக் குறுகிய காலத்தில் எல்லா துறைகளிலும் தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியிலிருந்து நிபுணர்களை உருவாக்க பயிற்சியளிப்பதுதான் இந்தப் புதிய கால கட்டத்தில் கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் பணி என்று ஒன்பதாவது காங்கிரஸ் கருதுகிறது. மேலும் பள்ளிக் கூடக் கல்வி, முதியோர் கல்வி ஆகியவற்றின் கல்வி வேலை குடியரசு முழுமைக்கும், குறிப்பிட்டப் பிராந்தியத்திற்கும் வட்டாரத்துக்கும் உரிய நடப்பு பொருளாதாரப் பணிகளுடன் மிக நெருக்கமாக இணைக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிடுகிறது. குறிப்பாக, ருஷ்யாவை மின்சாரமயமாக்கும் திட்டத்தைப் பிரபலப்படுத்த வேண்டும் என்ற எட்டாவது காங்கிரசின் முடிவை, நிறைவேற்றுவதற்குப் போதுமான அளவு வேலைகள் செய்யப்படவில்லை என்று ஒன்பதாவது காங்கிரஸ் தீர்மானம் செய்கிறது. மேலும் அது ஒவ்வொரு மின்சார நிலையமும் எல்லா தகுதிவாய்ந்த சக்திகளையும், அணி திரட்டி, மின்சாரத்தின் முக்கியத்துவம், மின்சாரமயமாக்குவதற்கான திட்டம் ஆகியவற்றைத் தொழிலாளர்விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி விளக்க முறையான பேச்சுகள், விரிவுரைகள், நடைமுறை ஆராய்ச்சிகளை நடத்த வேண்டும் என்றும் காங்கிரஸ் கோருகிறது. இன்னமும் ஒரே ஒரு மின்சார நிலையமும் இல்லாத உயெஸ்துகளில் சிறிய மின்சார நிலையங்களையாவது, எவ்வளவு விரைவில் கட்ட முடியுமோ

அவ்வளவு விரைவில் கட்ட வேண்டும். அவைப் பிரசாரம், கல்வி மற்றும் இந்தத் துறையில் ஒவ்வொரு முன் முயற்சியை யும் ஊக்குவிக்கும் வட்டார மையங்களாகப் பயன்படுத்தப் பட வேண்டும்.

*1921, டிசம்பர் 25ல் எழுதப்பட்டது*

நூல் திரட்டு,
*தொகுதி 44,*
*பக்கங்கள் 337-338*

## போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் முக்கியத்துவம் குறித்து

### என்னும் கட்டுரையிலிருந்து

பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியினது போர்க்குணம் கொண்ட நாத்திக இலக்கியத்தை மக்களிடையே பெரு வீத அளவில் வினியோகித்துப் பரப்புவதற்காக மொழி பெயர்த்திடும்படி நெடுங் காலத்துக்கு முன்பு எங்கெல்ஸ் அக்காலத்தியப் பாட்டாளி வர்க்கத் தலைவர்களுக்கு ஆலோசனை கூறினர்[66]. இது நாள்வரை நாம் இதைச் செய்தாக வில்லை, நாம் வெட்கித் தலை குனியும் வண்ணம் இதைச் சொல்லியே ஆக வேண்டும் (புரட்சிகர சகாப்தத்தில் ஆட்சியதிகாரம் கைப்பற்றுவது கடினமல்ல, ஆனல் இந்த ஆட்சியதிகாரத்தைச் சரியாகப் பயன்படுத்துவது எப்படி என்று அறிந்து கொள்வது மெத்தக் கடினம் என்பதற்குரிய எண்ணற்ற நிரூபணங்களில் ஒன்றுகும் இது). நமது அசட்டைக்கும் செயலின்மைக்கும் திறனின்மைக்கும் சால்ஜாப்பு கூறும் பொருட்டு எல்லா வகையான ''உன்னத'' காரணங்களும் எடுத்துரைக்கப்படுகின்றன; உதாரணமாய், பதினெட்டாம் நூற்றுண்டின் பழைய நாத்திக இலக்கியம் பழமைப்பட்டு விட்டது, விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததாகவும் சிறுபிள்ளைத் தனமானதும் ஆகிவிட்டது என்றெல்லாம் காரணம் கூறப்படுகிறது. இத்தகைய போலியான விஞ்ஞானக் குதர்க்கத்தைக் காட்டிலும் மோசமானது எதுவும் இல்லை; பகட்டுப் புலமையை அல்லது மார்க்சியத்தைப் பற்றிய அறவே தவறுன உணர்

வை மூடிமறைக்கவே இந்தக் குதர்க்கம் பயன்படுகிறது. பதினெட்டாம் நூற்றுண்டின் புரட்சியாளர்களுடைய நாத்திக நூல்களில் விஞ்ஞானத்துக்கு ஒவ்வாததும் சிறுபிள்ளைத்தனமானதும் நிறைய இருப்பது மெய்தான். ஆனால் இந்நூல்களின் பதிப்பாளர்கள் இவற்றைச் சுருக்கி வெளியிடுவதையும், பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதிக்குப் பிற்பாடு மதங்களைப் பற்றிய விஞ்ஞான விமர்சனத்தில் மனித குலம் கண்டிருக்கும் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டியும், இப்பொருள் குறித்து அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள புத்தகங்களைக் குறிப்பிட்டும், இன்ன பிற விவரங்களைக் கூறியும் சுருக்கமான பின்னுரைகளை இந்நூல்களுக்கு அளிப்பதையும் யாரும் தடுத்து நிறுத்தவில்லை. கோடிக்கணக்கான மக்கள் (முக்கியமாய், விவசாயிகளும் கைத்தொழிலாளர்களும்), நவீன காலச் சமுதாயம் அனைத்தாலும் இருளிலும் அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் வதையும்படி இருத்தப்பட்டிருக்கும் இவர்கள் கலப்பற்ற தூய மார்க்சியப் போதமெனும் நேரான பாதையிலேதான் இந்த இருளிலிருந்து விடுபட்டு வெளியே வர முடியுமென நினைப்பது, மார்க்சியவாதி ஒருவர் புரியக்கூடிய மிகப் பெரிய, மிகக் கடுந் தவறுகிவிடும். இந்த வெகுஜனங்களை நாட்டங்கொள்ளும்படிச் செய்வதற்காகவும், மதத்தால் மயக்குண்ட நிலையிலிருந்து இவர்களை விழித்தெழச் செய்வதற்காகவும், மிகப் பல்வேறுபட்ட கோணங்களிலிருந்தும் மிகப் பல்வேறுபட்ட வழிகளிலும் இவர்களை உசுப்பிவிடுவதற்காகவும், இன்ன பிறவற்றுக்காகவும், இவர்களுக்கு நாம் மிகப் பல்வேறுபட்ட நாத்திகப் பிரசார வெளியீடுகளும் கிடைக்கச் செய்ய வேண்டும்; வாழ்க்கையின் மிகப் பல்வேறுபட்ட துறைகளிலிருந்தும் உண்மைகளை இவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்; சாத்தியமான எல்லா வழிகளிலும் இவர்களை அணுகியாக வேண்டும்.

பழைய, பதினெட்டாம் நூற்றுண்டு நாத்திகர்களது தீட்சண்யமான, உயிர்த்துடிப்புள்ள, அறிவாற்றல் மிகுந்த இலக்கியங்கள், ஆதிக்கத்திலிருந்த சமய சித்தாந்தத்தைக் கிண்டலும் கேலியுமாகவும், மற்றும் பகிரங்கமாகவும் தாக்கின. மதத்தால் மயக்குண்ட நிலையிலிருந்து மக்களைத் தட்டியெழுப்புவதற்கு மிகப் பல சந்தர்ப்பங்களிலும் இவை, மார்க்சியத்தின் உப்புச்சப்பில்லாத, சலிப்பூட்டும் பொழிப்

புரைகளைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு கூடுதலாய் ஏற்றவையாய் இருக்கும். திறம்படத் தெரிந்தெடுக்கப்பட்ட உண்மைகளைக் கொண்டமைந்த எடுத்துக்காட்டுகள் வாயிலான விளக்கங்கள் அனேகமாய் எவையுமில்லாத இப்படிப்பட்ட பொழிப்புரைகள்தான் நமது வெளியீடுகளில் மிகவும் மலிந்திருக்கின்றன, இவையும் (இவ்வுண்மையை மறைத்துப் பயனில்லை) அடிக்கடி மார்க்சியத்தைத் திரித்துப் புரட்டுவனவாகவே இருக்கின்றன. மார்க்ஸ், எங்கெல்சின் பிரதான நூல்கள் யாவற்றின் மொழிபெயர்ப்புகளும் நம்மிடம் இருக்கின்றன; ஆகவே பழைய நாத்திகமும், பழைய பொருள்முதல்வாதமும், மார்க்சும் எங்கெல்சும் அவற்றில் புகுத்திய திருத்தங்களால் சரிசெய்யப்பட்டுச் செம்மையாக்கப்படாமல் இருந்து விடுமென்று அஞ்சக் காரணம் சிறிதும் இல்லை. மிகவும் முக்கியமானது என்னவெனில், இன்னமும் வளர்ச்சியின்றி இருந்து வரும் வெகுஜனங்களிடத்தே மதப் பிரச்சினைகள்பால் அறிவு வழிப்பட்ட விமர்சனத்தையும் கிளர்த்திவிடத் தெரிந்து கொள்வது தான்—இதைத்தான் நமது கம்யூனிஸ்டுகளில் மார்க்சியவாதிகளாய்க் கருதப்படுவோர், ஆனால் உண்மையில் மார்க்சியத்தை உருக்குலைப்போராய் இருப்போர் கவனியாது அடிக்கடி புறக்கணித்து விடுகிறார்கள்.

மறுபுறத்தில், மதங்களைப் பற்றிய நவீன விஞ்ஞான விமர்சகர்களைச் சற்று உற்று நோக்குங்கள். கல்வியறிவுடைய இந்த முதலாளித்துவ எழுத்தாளர்கள், மத மூட நம்பிக்கைகளைப் பற்றிய தமது மறுப்புரைகளுடன் கூட, தாம் முதலாளி வர்க்கத்தின் சித்தாந்த அடிமைகளே, ''சமய சித்தாந்தத்தின் பட்டம் பெற்ற அடிவருடிகளே'' என்பதை உடனே அம்பலமாக்கிக் காட்டும் வாதங்களையும் அனேகமாய் எப்பொழுதும் ''அனுபந்தமாய்ச்'' சேர்த்தளிக்கின்றனர்.

இரண்டே இரண்டு எடுத்துக்காட்டுகள். பேராசிரியர் ரோ. யூ. வீப்பர் **கிறிஸ்துவத்தின் தோற்றம்** என்னும் தலைப்பில் (''ஃபரோஸ்'' பதிப்பகம், மாஸ்கோ) 1918ல் இரு சிறு புத்தகத்தை வெளியிட்டார். நவீன விஞ்ஞானத்தின் பிரதான விளைவுகளைப் பற்றிய தமது உரையில் இவ்வாசிரியர், மதச் சபையானது ஓர் அரசியல் நிறுவனம் என்ற முறையில் அதற்குரிய ஆயுதங்களாய்க் கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளையும் ஏமாற்றையும் எதிர்த்துப் போராடுவதைத்

தவிர்த்துக் கொள்வதோடல்லாமல், இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக்கழிப்பதோடல்லாமல், கருத்துமுதல்வாதம், பொருள் முதல்வாதம் ஆகிய இரு ''கடை கோடி நிலைகளுக்கும்'' தாம் மேம்பட்டவர் என்பதாய் நகைக்கத்தக்கதான, மிகவும் பிற்போக்கான முறையில் உரிமை கொண்டாடுகிறார். உழைப்பாளி மக்களைக் கசக்கிப் பிழிந்து பெறப்பட்ட லாபங்களிலிருந்து மதத்தின் ஆதரவுக்காக உலகெங்கும் கோடானு கோடியான ரூபிள்களைச் செலவிடும் ஆளும் முதலாளி வர்க்கத்துக்குத் தொண்டூழியம் புரிவதே ஆகும் இது.

பெயர் பெற்ற ஜெர்மன் விஞ்ஞானி ஆர்தர் டிரேவ்ஸ் *Die Christus Mythe* (கிறிஸ்துப் பற்றிய கற்பனை) என்னும் தமது புத்தகத்தில் மத மூடநம்பிக்கைகளுக்கும் புராணக் கதைகளுக்கும் மறுப்பு கூறுகிறார், கிறிஸ்து இருக்கவே இல்லை என்று விளக்குகிறார், அதே போதில் இப்புத்தகத்தின் முடிவில் மதத்தை ஆதரித்துப் பேசுகின்றார்—ஆனால் இது புத்துரு கொண்ட, சுத்தமாக்கப்பட்ட, நுண்ணயம் வாய்ந்த மதமாயிருக்கும், ''நாளுக்கு நாள் பெருகி வளரும் இயற்கைவாத வெள்ளப் பெருக்கினைச்'' சமாளிக்க வல்லதாய் இருக்கும் என்கிறார் (நான்காவது ஜெர்மன் பதிப்பு, 1910, பக்கம் 238). ஒளிவு மறைவில்லாத திட்ட மிட்டுச் செயல்படுகிற பிற்போக்காளரை, அழுகலாகிவிட்ட பழைய மத மூடநம்பிக்கைகளுக்குப் பதிலாய்ப் புதிய, மேலும் வெறுக்கத்தக்கதான, இழிவான மூடநம்பிக்கைகளை விதைப்பதற்குச் சுரண்டலாளர்களுக்குப் பகிரங்கமாகவே துணைபுரிகிறவரை இங்கு நாம் காண்கிறோம்.

டிரேவ்சை மொழிபெயர்க்கக் கூடாது என்பதல்ல இதற்கு அர்த்தம். முதலாளி வர்க்கத்தின் முற்போக்குப் பிரிவினருடன் ஓரளவுக்குக் கூட்டணி கொண்டு செயல்படும் அதேபோதில் கம்யூனிஸ்டுகளும் முரணற்ற பொருள்முதல் வாதிகள் எல்லோரும் அப்பிரிவினர் பிற்போக்கில் ஈடுபடும் குற்றமிழைக்கும் போது சிறிதும் தயங்காமல் அவர்களை அம்பலம் செய்ய வேண்டும் என்பதே இதன் அர்த்தம். பதினெட்டாம் நூற்றாண்டின், அதாவது முதலாளி வர்க்கம் புரட்சிகரமானதாய் இருந்த அந்தச் காலத்தின் முதலாளி வர்க்கப் பிரதிநிதிகளுடன் கூட்டணி கொள்ளாமல் விலகி ஓடுவது மார்க்சியத்துக்கும் பொருள்முதல்வாதத்துக்கும் துரோக

மிழைப்பதாகும் என்பதே இதன் அர்த்தம்; ஏனெனில், ஏதேனும் ஒரு வடிவில், ஏதேனும் ஓர் அளவுக்கு, டிரேவ்ஸ்களுடன் ''கூட்டணி கொள்வது'', ஆதிக்கம் புரிந்து வரும் மத மௌடீகவாதிகளுக்கு எதிரான நமது போராட்டத்துக்கு அவசியமாகும்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாதத்தின் ஏடாய்ச் செயல்பட முற்படும் **பத் ஸ்ஞமினெம் மார்க்சிஸ்மா**[67], நாத்திகப் பிரசாரத்துக்காகவும், இப்பொருள் பற்றிய வெளியீடுகளின் மதிப்புரைக்காகவும், இத்துறையில் நமது அரசாங்கம் ஆற்றி வரும் பணியிலுள்ள மிகப் பெரும் குறைபாடுகளைத் திருத்துவதற்காகவும் தனது பக்கங்களில் ஒரு பெரும் பகுதியை ஒதுக்க வேண்டும். இக்காலத்து முதலாளி வர்க்கத்தின் வர்க்க நலன்களும் வர்க்க நிறுவனங்களும் மத நிறுவனங்களுடனும் மதப் பிரசார நிறுவனங்களுடனும் எப்படி இணைந்திருக்கின்றன என்பதைக் காட்டும் ஸ்தூலமான பல உண்மைகளும் ஒப்பீடுகளும் அடங்கியுள்ள புத்தகங்களையும் பிரசுரங்களையும் பயன்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

மதத்துக்கும் மூலதனத்துக்கும் அதிகாரபூர்வமான, அரசு வழியிலான இணைப்பு அவ்வளவு வெளிப்படையாய்த் தெரியாத அமெரிக்க ஐக்கிய நாடு பற்றிய எல்லா விவரப் பொருள்களும் மிக மிக முக்கியமானவை. ஆனால் மறுபுறத்தில், ''நவீன ஜனநாயகம்'' எனப்படுவது (மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும், ஓரளவுக்கு அராஜகவாதிகளும், ஏனையோரும் சிறிதும் நியாயமின்றி இதைப் பூசிக்கின்றனர்), முதலாளி வர்க்கத்துக்கு எதெல்லாம் அனுகூலமாய் இருக்கிறதோ அதை, அதாவது மிகவும் பிற்போக்கான கருத்துக்களையும் மதத்தையும் மௌடீகத்தையும் சுரண்டலாளர்களைப் பேணிக் காப்பதையும் பிறவற்றையும் உபதேசிப்பதற்கான சுதந்திரமே ஆகும்.

போர்க்குணம் கொண்ட பொருள்முதல்வாத ஏடாய்ச் செயல்பட முற்படும் ஒரு சஞ்சிகை நமது வாசகப் பெருமக்களுக்கு நாத்திக இலக்கியத்தைப் பற்றிய விமர்சன மதிப்புரைகளை வழங்குமென்றும், குறிப்பிட்ட வெளியீடு எந்த வாசகர் குழுவுக்கு ஏற்றது, எவ்விதத்தில் ஏற்றது என்பதைச் சுட்டிக்காட்டுமென்றும், நாம் வெளியிட்டிருக்கும் புத்

தகங்கள் எவை (தகுதியுடைய மொழிபெயர்ப்புகளை மட்டும்தான் குறிப்பிடப்பட வேண்டும், இவை அதிகமில்லை), இனி வெளியிடப் போகிறவை எவை என்பதைக் குறிப்பிடுமென்றும் நம்புகிறோம்.

---

பத் ஸ்னமெனெம் மார்க்சிஸ்மா, *1922, மார்ச், இதழ் 3ல் அச்சிடப்பட்டது*

நூல் திரட்டு, *தொகுதி 45, பக்கங்கள் 25-29*

## "ரு. சோ. கூ. சோ. குடியரசை மின்சாரமயமாக்கலும் உலகப் பொருளாதாரத்தின் இடை மாற்றக்கட்டமும்" எனும் இ. இ. ஸ்தெபான்வினுடைய நூலுக்கு முகவுரை

தோழர் ஸ்தெபானவின் இந்தப் புத்தகத்தை எல்லா கம்யூனிஸ்டுகளின் கவனத்திற்கும் மனப்பூர்வமாக பரிந்துரை செய்கிறேன்.

மிகவும் கடினமானதும் முக்கியமானதுமான பிரச்சினைகளை மிகத் திறமையாக விளக்குவதில் இந்தப் புத்தக ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளார். அறிவாளிகளுக்கு என்று ஒரு புத்தகத்தை எழுதாத நல்ல காரியத்தை அவர் செய்துள்ளார் (நம்மில் அநேகரிடம் முதலாளித்துவ எழுத்தாளர்களின் மிக மட்டமான தன்மைகளைக் காப்பி அடிக்கும் பழக்கம் இருப்பது போல்). ஆனால் உழைக்கும் மக்களுக்கு, உண்மையான மக்கள் திரளினருக்கு சாதாரணத் தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் எழுதினார். அதில் உள்ள சில பகுதிகளை மேற்கொண்டு விளக்கம் இல்லாமல் புரிந்து கொள்ளச் சங்கடப்படுவோருக்கும், இந்தக் கருப்பொருள் மீது ருஷ்யாவிலும், வெளிநாட்டிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள இந்தப் பொருளைப் பற்றிய பிரதான நூல்களைக் கலந்தாலோசிக்க விரும்புவோரின் நலனுக்காகவும், கூடுதல் தகவல் பெற அதிகப்படியாகப் படிப்பதற்கும் தோழர் ஸ்தெபானவ் தன்னுடைய புத்தகத்தின் இறுதியில் மேற்கோள் நூல்கள் பட்டியல் ஒன்றினை இணைத்துள்ளார். ஆறுவது அத்தியாயத்தின் ஆரம்பத்தைச் சிறப்பாக குறிப்பிட வேண்டும். அதில் ஆசிரியர் புதிய பொருளாதாரக் கொள்கையின் முக்கியத்துவத்தை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார். மகத்தான முறையில், மின் மயமாக்கும் சாத்தியக்கூறு பற்றி சில பகுதிகளில் வெளியிடப்பட்ட "ஆதாரமற்ற" நம்பிக்கையின்மையைத் தவறென நிரூபிக்கிறார். இந்த நம்பிக்கையின்மை இந்தப்

பொருளைப் பற்றிய ஆழமான சிந்தனையின்மையை வழக்கமாக மறைக்கும் ஒரு திரையாக உள்ளது. (அதாவது எல்லா சோவியத் நிர்மாணப் பணிகளுக்கும் எதிரான வெண்காவலர், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், மென்ஷிவிக் பகைமையை மறைக்கும் திரையாக அது இல்லையெனில் உண்மையில் சில சமயங்களில் அத்தகைய விரோதத்தை மறைக்கும் திரையாகத்தான் அது உள்ளது).

உண்மையான (சோம்பேறித்தனமான அதிகார வர்க்கக் கல்வியல்ல) மக்கள் கல்வி முறைக்கு நமக்குப் பற்றுக் குறையாக இருப்பது இதைப் போன்ற தெளிவானப் ''பள்ளிக் கையேடுகள்'' (முழுக்க முழுக்க எல்லா பள்ளிகளுக்கும்) ஆகும். நம்முடைய எல்லா மார்க்சிய எழுத்தாளர்களும் அவர்களுடைய முயற்சிகளை, செய்தித்தாள்களிலும் சஞ்சிகைகளிலுமான அரசியல் வெத்து வேட்டுகளில் வீணுக்கி எல்லோரும் இவற்றை வெறுத்துச் சலிப்படையச் செய்வதற்குப் பதிலாக விதிவிலக்கு இல்லாமல் எல்லா சமுதாயப் பிரச்சினைகளைப் பற்றியும் இத்தகைய கையேடுகள் அல்லது பாடப் புத்தகங்கள் எழுத உட்கார்ந்திருப்பார்களேயானுல், பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் ஆகிய பின்னும் பாட்டாளி வர்க்கத்தின் அரசு பள்ளிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் முதலாளித்துவ குப்பையைப் பயன்படுத்தி பழைய முதலாளித்துவ விஞ்ஞானங்களைக் கற்பிக்கும் (அல்லது உண்மையில் கெடுக்கும்) தற்போதைய அவமானகரமான நிலைமை நமக்கு வந்திருக்காது.

சோவியத்துகளின் எட்டாவது காங்கிரஸ் விதிவிலக்கில்லாமல் ரு.சோ.கூ.சோ. குடியரசில்[68] உள்ள எல்லா கல்வி நிலையங்களிலும் மின்சாரமயமாக்கல் திட்டம் பற்றிக் கட்டாயம் போதிக்கப்பட வேண்டும் என்று அரசாணை போட்டது. இந்த அரசாணையும் இதர பலவற்றைப் போல் நடைமுறைப்படுத்தப்படாத சட்டமாகத் தங்கிவிட்டது. காரணம் நம்முடைய (நமது, போல்ஷிவிக்குகளின்) கலாசாரக் குறைபாடே. இப்பொழுது தோழர் ஸ்தெபானவின் இந்த ''பள்ளிகளுக்கான கையேடு'' வெளிவந்துள்ளதால், ஒவ்வொரு உயெஸ்து[69] நூல் நிலையமும் (பின்னுல் ஒவ்வொரு வோலொஸ்து நூல் நிலையமும்) இந்தக் ''கையேட்டின்'' பல

படிகளை வாங்கி வைக்கும்படியும்—இதை நாம் அவசியம் செய்வோம்—ருஷ்யாவிலுள்ள ஒவ்வொரு மின்சார நிலைய மும் (800க்கு மேற்பட்டவை உள்ளன) இப்புத்தகத்தின் படி களை வைத்திருப்பதோடல்லாமல் மின்சாரத்தைப் பற்றியும் ரு.சோ.கூ.சோ. குடியரசின் மின்சாரமயமாக்கல் பற்றியும் தொழில் நுணுக்கம் பற்றிய பொதுவாகவும் ஜன ரஞ்சக சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யும் படியும் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மக்கள் ஆசிரிய ரும் இந்தக் ''கையேட்டை'' படித்து கிரகித்துக் கொள்ளும் படியும் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். (இந்த வேலையில் அவருக்கு உதவ பொறியாளர்கள் மற்றும் இயற்பியல் ஆசிரி யர்களைக் கொண்ட ஒரு வட்டம் அல்லது குழுவை ஒவ்வொரு உயேஸ்திலும் அமைக்க வேண்டும்). மேலும் அதை அவர் தானே படித்துப் புரிந்து கிரகித்துக் கொள்வதோடல்லாமல் அதில் என்ன இருக்கிறது என்பதை அவருடைய மாணவர் களுக்கும் பொதுவாக இளம் விவசாயிகளுக்கும் சாதாரண கெட்டிக் காரத்தனமான வழியில் சொல்லவும் முடிய வேண் டும்.

இதைச் செய்வதற்கு அளவற்ற முயற்சி தேவை. நாம் பிச்சைக்காரர்கள் கலாச்சாரமற்றவர்கள். ஆனால் நம் முடைய மக்கள் தாம் கண்டிப்பாகப் படிக்க வேண்டும் என்று உணரும் வரை, படிக்க விரும்பும் வரை தொழிலாளியும் விவசாயியும், இப்பொழுது அவர்கள் நிலப்பிரபுகளுக்கும், முதலாளிகளுக்கும் ''நன்மை'' செய்யவோ இலாபத்தை உற்பத்தி செய்யவோ தாம் படிக்க வேண்டுவதில்லை. ஆனால் தங்களுடைய சொந்த வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்திக் கொள்ளவே படித்தாக வேண்டும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வரை இது ஒரு பொருட் டல்ல—

இந்த அறிவும் விருப்பமும் நம்மிடம் உள்ளன. எனவே நாம் நிச்சயம் படிக்கத் தொடங்குவோம், நாம் நிச்சயமாகக் கற்றறிந்து கொள்வோம்.

*1922, மார்ச்சு, 18* — நி. லெனின்

பிராவ்தா, இதழ் 64,
*1922, மார்ச்சு 21*

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 51-52

## கல்வி போதிக்கும் ஊழியர்களின் மாநாட்டிற்கு[70]

தோழர்களே! உங்களுடைய வாழ்த்துகளுக்கு நன்றி! உங்கள் முன்னுலிருக்கும் மகத்தானதும், பொறுப்புள்ளது மான ஒரு பணியை அதாவது ஓர் இளம் தலைமுறையைப் புதிய வாழ்க்கையைக் கட்டுவதற்குத்தயார்படுத்தும் பணியை சமாளித்து வெற்றி பெற வாழ்த்துகிறேன்!

**லெனின்**

*1922, நவம்பர் 26ல் எழுதப்பட்டது*

நூல் திரட்டு, தொகுதி 45, பக்கம் 314

# நாட்குறிப்பிலிருந்து சில பக்கங்கள்

ருஷ்யாவின் மக்களிடத்தான எழுத்தறிவு பற்றிய விவர அறிக்கை, 1920ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாய்க் கொண்டது, அண்மையில் வெளிவந்திருப்பதானது (ருஷ்யாவில் எழுத்தறிவு, மாஸ்கோ, 1922, மத்தியப் புள்ளிவிவர வாரியத்தின் பொதுக்கல்விப் பிரிவால் வெளியிடப்பட்டது) மிகவும் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும்.

1897ஆம் ஆண்டிலும் 1920ஆம் ஆண்டிலும் ருஷ்யாவின் மக்களிடத்தான எழுத்தறிவு நிலை பற்றிய ஓர் அட்டவணையை இந்த விவர அறிக்கையிலிருந்து எடுத்து அடியில் தருகிறேன் (ப. 203 பார்க்கவும்):

பாட்டாளி வர்க்கக் கலாசாரம் குறித்தும் அதற்கும் முதலாளித்துவக் கலாசாரத்திற்கும் இடையே இருக்கும் உறவு குறித்தும் நாம் பொழிந்து தள்ளி கொண்டிருக்கும் ஒரு நேரத்தில், உண்மைகளும் புள்ளிவிவரங்களும் நாம் முதலாளித்துவக் கலாசாரம் பொறுத்த அளவிலுங்கூட மிகவும் மோசமான பின்னிலையில் இருக்கிறோம் என்பதைப் புலப்படுத்துகின்றன. எதிர்பார்க்கக் கூடியது போலவே நாம் அனைத்து மக்கள் எழுத்தறிவு நிலையை அடைவதிலிருந்து இன்னும் நெடுந் தொலைவிலே இருக்கிறோம் என்றும், ஜார் காலத்துடன் (1897) ஒப்பிடுகையிலுங்கூட நமது முன்னேற்றம் மிகமிக மெதுவாகவே இருக்கிறது என்றும் தெரிகிறது. ''பாட்டாளி வர்க்கக் கலாசாரத்தின்'' வானுச்சியில் கற்

| | ஆயிரம் ஆடவர்களில் எழுத்தறிந்தோர் | | ஆயிரம் பெண்களில் எழுத்தறிந்தோர் | | மக்களில் ஆயிரம் பேரில் எழுத்தறிந்தோர் | |
|---|---|---|---|---|---|---|
| | 1897 | 1920 | 1897 | 1920 | 1897 | 1920 |
| 1. ஐரோப்பிய ருஷ்யா | 326 | 422 | 136 | 255 | 229 | 330 |
| 2. வட காக்கசஸ் ....... | 241 | 357 | 56 | 215 | 150 | 281 |
| 3. சைபீரியா (மேற்கு) | 170 | 307 | 46 | 134 | 108 | 218 |
| ஒட்டுமொத்த சராசரி | 318 | 409 | 131 | 244 | 223 | 319 |

பனைச் சிறகடித்துப் பறப்போருக்கு இது ஒரு கடும் எச்சரிக்கையாகவும் கண்டனமாகவும் அமைதல் வேண்டும். சாதாரண மேற்கு ஐரோப்பிய நாகரிக நாட்டின் தரத்தை வந்தடைவதற்குக்கூட இன்னும் நாம் எவ்வளவு பிரம்மாண்ட அளவில் அவசரத் தயாரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை இது காட்டுகிறது. நாம் வென்றிருக்கும் பாட்டாளி வர்க்க ஆதாயங்களின் அடிப்படையிலே மெய்யான கலாசாரத் தரம் என்பதாய்க் கூறக் கூடிய ஒரு தரத்தை அடைய இன்று நாம் எவ்வளவு பெரிய அளவில் வேலை செய்தாக வேண்டும் என்பதையும் இது காட்டுகிறது.

மறுக்க முடியாததாயினும், பெரிதும் தத்துவார்த்த முறையிலே அமைந்த இந்த முடிவின் வரம்புக்குள் நாம் நின்று விடக் கூடாது. நமது காலாண்டுப் பட்ஜெட்டை நாம் திருத்தியமைக்கும் அடுத்த சந்தர்ப்பத்திலேயே, இந்த விவகாரத்தை நடைமுறை வழியிலும் கருதியாக வேண்டும். முதலாவதாக, கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தைத் தவிர ஏனைய அரசாங்க இலாக்காக்களின் செலவுகளைக் குறைத்து, இவ்வாறு கிடைக்கப் பெறும் தொகைகளை முன்னதன் தேவைகளுக்காக ஒதுக்க வேண்டுமென்பது தெளிவு. பண்ட வழங்

கீடு ஒப்பளவில் நல்லபடியாய் இருக்கும் இவ்வாண்டைப் போன்ற ஓர் ஆண்டில் பள்ளி ஆசிரியர்களுக்கு ரொட்டிப் பங்கீட்டை அதிகமாக்குவதில் நாம் தயக்கம் காட்டக் கூடாது.

பொதுவாய்ப் பேசுமிடத்து, பொதுக் கல்வித் துறையில் தற்போது செய்யப்பட்டு வரும் வேலை மிகக் குறுகலாய் இருப்பதாய்ச் சொல்வதற்கில்லை. பழங் காலத்திய ஆசிரியர்களை அவர்களுக்குப் பழக்கப்பட்டுப் போன அந்த மாருத பாதையிலிருந்து வெளிப்படுத்தி விலகி வரச் செய்யவும், புதிய பிரச்சினைகளில் அவர்களைக் கருத்துக் கொள்ளும்படி ஈர்க்கவும், புதிய கல்வி முறைகளிலும் மதத்தைப் போன்ற பிரச்சினைகளிலும் அவர்களுடைய அக்கறையைத் தூண்டவும் நிறைய முயற்சிகள் எடுத்து வரப்படுகின்றன.

ஆனால் பிரதான காரியத்தை நாம் செய்தாகவில்லை. எந்த விதமான கலாசாரமும்—பாட்டாளி வர்க்கத்தினுடையதோ, அல்லது முதலாளித்துவ வர்க்கத்தினுடையதோ ஆயினுங்கூட—பெற விரும்புவோமாயின், அதற்கு இன்றியமையாத தக்க நிலைக்குப் பள்ளியாசிரியரை உயர்த்த நாம் ஏதும் செய்யவில்லை, அல்லது தேவையானதிலிருந்து மிக மிகக் குறைவாகவே செய்து வருகிறோம். இன்னமும் நாம் நம்மை விடுவித்துக் கொண்டுவிடாத அரை-ஆசிய அறியாமை இருளை நினைவில் கொண்டிருக்க வேண்டும். அரும் பெரும் முயற்சிகள் இல்லாமல் நாம் நம்மை இதிலிருந்து விடுவித்துக் கொண்டுவிட முடியாது. ஆயினும் இப்படி விடுவித்துக் கொள்வதற்கு நாம் எல்லா வாய்ப்புகளையும் பெற்றிருக்கிறோம். எப்படியெனில், பெருந்திரளினரான மக்கள் நம் நாட்டில் இருப்பதைப் போல் வேறு எங்கும் மெய்யான கலாசாரத்தில் இவ்வளவு அக்கறை கொண்டோராய் இருக்கவில்லை; இந்தக் கலாசாரத்தின் பிரச்சினைகள் நம் நாட்டைப் போல் வேறு எங்கும் இவ்வளவு தீர்க்கமாகவும் முரணின்றியும் சமாளிக்கப்படவில்லை. வேறு எந்த நாட்டிலும் அரசு அதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைகளில் இருக்கவில்லை, இந்தத் தொழிலாளி வர்க்கத்தின் பெருந்திரளினர், தமது கலாசார நிலையின் குறைபாடுகளைப் பற்றி என்று சொல்லமாட்டேன், ஆனால் தமது எழுத்தறிவு நிலையின் குறைபாடுகளை முழு அளவுக்கு உணர்ந்திருக்கின்றனர்; நம் நாட்டில் போல் வேறு எங்கும் தொழிலாளி வர்க்கம் இத்துறையில் தனது நிலையை

மேம்படுத்திக் கொள்ள இப்படித் தியாகங்கள் புரிய இந்த அளவுக்குத் தயாராய் இருக்கவும் இல்லே, வேறு எங்கும் மெய்யாகவே இப்படி தியாகங்கள் புரிந்து வரவும் இல்லே.

ஆரம்பப் பொதுக் கல்வியின் தேவைகளேப் பூர்த்தி செய்வதற்கு, முதல் நடவடிக்கையாய், நமது அரசு பட்ஜெட்டைத் திருத்தியமைக்க இன்னமும் நாம் மிகச் சொற்பமாகவே, மிகமிகச் சொற்பமாகவே முயற்சிகள் எடுத்து வருகிருேம். நமது கல்வித் துறை மக்கள் கமிசாரகத்திலுங்கூட அரசுப் பதிப்பகம் ஏதேனும் ஒன்றில் வெட்க கரமான அளவுக்கு எல்லே மீறி பெரிய எண்ணிக்கையிலான அலுவலர்கள் இருப்பதை அடிக்கடி காண்கிருேம். அரசு முதலாவதாய்க் கவலேப்பட வேண்டியது பதிப்பகங்களேப் பற்றியல்ல, படிக்கத் தெரிந்த மக்கள் இருக்க வேண்டுமென்பது பற்றியே யாவற்றுக்கும் முதலாய்க் கவலேப்பட வேண்டும். படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தாக வேண்டும், அப்பொழுதுதான் புத்தக வெளியீட்டுக்கு வருங்கால ருஷ்யாவில் விரிந்த அரசியல் அரங்கு கிடைக்கும் என்னும் கருத்துக்கு நேர் முரணுன ஒரு நிலேமை இது. பழைய (மற்றும் மோசமான) பழக்கம் காரணமாய் இன்னமும் நாம், மக்களிடையிலான எழுத்தறிவு என்னும் பொது அரசியல் பிரச்சினேயைக் காட்டிலும் புத்தக வெளியீட்டுப் பிரச்சினே போன்ற நுட்பவியல் பிரச்சினேகளில் தான் மிகவும் அதிக நேரமும் முயற்சியும் செலவிட்டு வருகிருேம்.

மத்தியத் தொழிற் பயிற்சிக் கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் தொழில் பயிற்சி, பல்துறைத் தொழில் நுட்பப் பள்ளிகள், மேற்கல்வி நிலேயங்களது மெய் நிர்வாகத்தை எடுத்துக்கொள்வோமாளுல், அங்கும் இலாக்கா நலன்களே முன்னிட்டு வேண்டாத அளவுக்கு ஊதிப் பெருத்து உபரியாகி விட்டவை பலவும், விரிவான பொதுக் கல்வியின் தேவைகளுக்கு உகந்தவாறு அமையாத பலவும் நிறைய இருக்கின்றன என்று நிச்சயமாய்க் கூறலாம். இந்த நிர்வாகத்தில் நாம் காண்பவற்றுள் பலவும் நியாயமுடைத்தவையே, முதற்கண் நமது இளம் ஆலேத் தொழிலாளர்களுடைய கல்வியை மேம்படச் செய்ய வேண்டும், அதை நடைமுறை சார்ந்த போக்குடையதாக்க வேண்டும் என்னும் நேர்மையான விருப்பத்துக்கு இணங்க அமைந்தவையே என்பதாய்க் கூற முடியாது. மத்

தியத் தொழிற் பயிற்சிக் கல்வி வாரியத்தின் அலுவலர் தொகுதியைக் கவனமாய்ப் பரிசீலித்தால், ஊதிப்பெருத்து உபரியாகிவிட்டதும், இந்த விதத்தில் கற்பனையானதும், கழித்துக் கட்டப்பட வேண்டியதும் ஆகியவை நிறைய இருக்க காண்போம். மக்களிடையே எழுத்தறிவை ஓங்கச் செய்யும் பொருட்டு, பாட்டாளி வர்க்க, விவசாயிகளது அரசில் செலவுச் சிக்கனத்துக்காகச் செய்யப்படக் கூடியவையும் செய்யப்பட வேண்டியவையும் இன்னமும் நிறையவே இருக்கின்றன. பாதியளவுக்கு பிரபுக்குலத்து ரகத்தைச் சேர்ந்த விளையாட்டு நிலையங்களானவற்றை, அல்லது இன்னமும் நமக்குத் தேவையில்லாத, இவை இல்லாமலே நம்மால் இருக்க முடியும்படியான, புள்ளிவிவரங்கள் புலப்படுத்துவது போல மக்களிடையிலே நிலவும் எழுத்தறிவின் நிலையைக் கருதுகையில் நீண்ட காலத்துக்கு இவை இல்லாமலே நாம் சாமாளிக்க வேண்டியவையான நிலையங்களை மூடுவதன் மூலம் நாம் செலவுச் சிக்கனம் செய்ய முடியும்.

நமது பள்ளியாசிரியர், முதலாளித்துவச் சமுதாயத்தில் எந்நாளும் அவர் அடைந்திராத, அடையவும் முடியாத ஒரு தரநிலைக்கு உயர்த்தப்பட்டாக வேண்டும். இது யாவரும் அறிந்ததே, இதற்கு நிரூபணம் தேவையில்லை. ஆசிரியரை ஓர் உயர்ந்த கலாசார நிலைக்கு உயர்த்தவும், மெய்யாகவே உன்னதமான அவரது பணித்துறைக்கு ஏற்றவாறு அவருக்கு முழு அளவில் பயிற்சி அளிக்கவும், மற்றும்—பிரதானமாய், மிகவும் பிரதானமாய், மிக மிகப் பிரதானமாய்— அவருடைய நிலையைப் பொருளாயத வழியில் மேம் படுத்தவும் இடைவிடாமலும் முறையாகவும் விடாமுயற்சியோடும் பாடுபட்டு இப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்க வேண்டும்.

பள்ளியாசிரியர்கள் விதிவிலக்கின்றி எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் இன்னமும் முதலாளித்துவ அமைப்பின் ஆதாரத் தூண்களாகவே இருந்து வரும் நிலையிலிருந்து அவர்களை மாற்றி, சோவியத் அமைப்பின் ஆதாரத் தூண்களாக்குவதற்காக, இவ்விதம் அவர்களுடைய பணியின் மூலமாய் விவசாயிகளை முதலாளித்துவ வர்க்கத்தாருடனான கூட்டணியை விட்டு விலகிப் பாட்டாளி வர்க்கத்துடனான கூட்டணிக்கு வந்து சேரச் செய்வதற்காக, பள்ளி ஆசிரியர்களை ஒழுங்

கமைத்திடுவதற்கான நமது முயற்சிகளை நாம் முறையாய் மும் முரமாக்கிச் செல்ல வேண்டும்.

இத்துறையில், கிராமங்களுக்கு முறைபடச் சென்று செயலாற்றுவோரின் விஜயங்களுக்குள்ள தனி முக்கியத்து வத்தைச் சுருக்கமாய்க் குறிப்பிட்டு வலியுறுத்த விரும்பு கிறேன். இத்தகைய விஜயங்கள் ஏற்கெனவே நடைபெற்று வருவது மெய்தான். இவை முறைபட ஊக்குவிக்கப்பட வேண்டும். கிராமங்களுக்கான இந்த விஜயங்களைப் போன்ற நடவடிக்கைகளுக்காக நாம் பணம் செலவிடத் தயங்கக் கூடாது—அரசு இயந்திரத்துக்காக, அனேகமாய் முழு அள வில் வரலாற்றின் கடந்த சகாப்தத்தின் விளைவாகிய இந்த இயந்திரத்துக்காகத் தாராளமாய் நாம் விரயம் செய்யும் பணத்தை இந்நடவடிக்கைகளுக்காகச் செலவிடத் தயங்கக் கூடாது.

கிராமங்களின் காப்பு ஆதரவாளர்களாய் நகரத் தொழி லாளர்கள் ஆற்றும் பணிகள் குறித்து, 1922 டிசம்பரில் சோவியத்துகளின் காங்கிரசில் நான் நிகழ்த்துவதாயிருந்த சொற்பொழிவுக்காகப் புள்ளிவிவரங்கள் சேகரித்தேன். இந்தப் புள்ளிவிவரங்களில் ஒரு பகுதி தோழர் ஹதரோவ்ஸ்கி எனக்காகத் திரட்டியது. இந்த விவகாரத்தை எடுத்துரைத்து, காங்கிரசின் மூலம் இதை விளம்பரப் படுத்த முடியாமற் போய்விட்டதால், இப்பொழுது விவாதத்துக்காகத் தோழர் களுக்கு இதைச் சமர்ப்பிக்கிறேன்.

இங்கு நம் முன்னே இருப்பது ஓர் அடிப்படை அரசியல் பிரச்சினை—நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான உறவுகளைப் பற்றிய பிரச்சினை. நமது புரட்சி அனைத்துக்கும் தீர்மானகரமான முக்கியத்துவமுடைய பிரச்சினை இது. முத லாளித்துவ அரசு நகரத் தொழிலாளர்களை மயக்கி ஏமாற்று வதற்காகத் தனது முயற்சிகளைத் திட்டமிட்டு ஒன்றுகுவியச் செய்கிறது. இதன் பொருட்டு அரசாங்கச் செலவிலும் ஜாரிஸ்டு கட்சிகள், முதலாளித்துவக் கட்சிகளின் செலவி லும் வெளியிடப்படும் எல்லா வெளியீடுகளையும் ஒழுங்கு செய்து கொள்கிறது. ஆனால் நாம் நகரத் தொழிலாளியைக் கம்யூனிசக் கருத்துக்களை கிராமத்துப் பாட்டாளி வர்க்கத் திடம் எடுத்துச் செல்லும் பயனுள்ள தூதுவனுக்குவதற்காக

நமது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும், பயன் படுத்தவும் வேண்டும்.

''கம்யூனிசக் கருத்துக்கள்'' என்று சொன்னேன்; இத ஞல் தப்பான அபிப்பிராயம் ஏற்பட்டு விடலாம், அல்லது சொல்லின் நேர்பொருளில் அப்படியே அர்த்தப்படுத்தப் பட்டுவிடலாம் என்று அஞ்சி அவசரமாய் நிபந்தனை வரம் பிடுகிறேன். கலப்பற்ற, கருரான கம்யூனிசக் கருத்துக்களை உடனடியாகவே நாம் கிராமப் புறங்களில் பரப்ப வேண்டும் என்பதாய் எந்நிலைமையிலும் இதை அர்த்தப்படுத்திவிடக் கூடாது. கம்யூனிசத்துக்குத் தேவையான பொருளாயத அடித்தளம் நமது கிராமப்புறங்களில் இல்லாதவரை, இதைச் செய்வது கம்யூனிசத்துக்குத் தீங்கிழைப்பதாகவே இருக்கும், உண்மையில் பேராபத்து விளைவிப்பதாகவே இருக்கும் என்றே கூற வேண்டும்.

அதுதான் உண்மை. கிராமப் பகுதிகளில் கம்யூனிசத் தைப் புகுத்துவதென்று முன்கூட்டியே புனைந்தமைந்த நோக் கம் இல்லாமலே, நகரத்துக்கும் கிராமத்துக்குமிடையே நாம் தொடர்புகளை அமைத்திட முற்பட்டாக வேண்டும். கம்யூனிசத்தைப் புகுத்துவதென்ற நோக்கம் தற்போது சாதிக்கப்படக் கூடியதல்ல. இது காலத்துக்கு உகந்ததல்ல. இது போன்ற ஒரு நோக்கத்தைத் தற்போது ஏற்பது இலட் சியத்துக்குச் சேவை புரிவதற்குப் பதிலாய்த் தீங்கே இழைக்கும்.

ஆனல் நகரத் தொழிலாளர்களுக்கும் கிராமத் தொழி லாளி மக்களுக்குமிடையே தொடர்புகளை நிறுவுதல், அவர் களிடையே ஒரு வகைத் தோழமையுறவை நிறுவுதல் நமது கடமையாகும். இந்தத் தோழமையுறவை எளிதில் ஏற் படுத்த முடியும். ஆட்சியதிகாரம் வகிக்கும் தொழிலாளி வர்க் கத்தின் முன்னுள்ள அடிப்படைப் பணிகளில் ஒன்று இது. இதை நிறைவேற்ற ஆலைத் தொழிலாளர்களது கழகங்கள் பலவற்றையும் (கட்சி, தொழிற் சங்க, மற்றும் தனியார் கழகங்களை) நாம் நிறுவ வேண்டும்; கிராமங்கள் கலாசார வளர்ச்சி பெற அவற்றுக்கு முறைபட தொண்டாற்றுவதற்கு இக்கழகங்கள் தம்மைப் பணித்துக் கொள்ள வேண்டும்.

எல்லா நகரக் குழுக்களையும் கிராமக் குழுக்களுடன் ''இணைத்து'', இதன் மூலம் தொழிலாளி வர்க்கக் குழு ஒவ்

வொன்றும் அது ''இணைக்கப்பட்டிருக்கும்'' கிராமக் குழுவின் கலாசாரத் தேவைகளுக்குப் பணி புரிவதற்கான ஒவ்வொரு வாய்ப்பையும், ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் முறையாய்ப் பயன்படுத்திக் கொள்ளும்படி செய்ய முடியுமா? அல்லது தொடர்புகளுக்கான இதர முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமா? இங்கு நான் இக்கேள்வியைக் குறிப்பிடுவதுடன் நிறுத்திக் கொள்கிறேன். இதைத் தோழர்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதும், மேற்கு சைபீரியாவிலிருந்து கிடைத் திருக்கும் அனுபவத்தை (தோழர் ஹதரோவ்ஸ்கி இதை என் கவனத்துக்குக் கொண்டுவந்தார்) சுட்டிக் காட்டுவதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரம்மாண்ட கலாசாரப் பணியை அதன் முழுப் பரிமாணத்திலும் எடுத் துரைப்பதும் தான் எனது நோக்கம்.

கிராமப் பகுதிகளுக்காக நமது அரசாங்கப் பட்ஜெட்டுக்கு வெளியே, அல்லது அரசாங்க மார்க்கங்களுக்கு வெளியே அனேகமாய் எதுவுமே நாம் செய்யவில்லை. நமது நாட்டில் நகருக்கும் கிராமத்துக்கும் இடையிலான கலாசார உறவு களின் தன்மையானது தாமாகவே, தவிர்க்க முடியாத வழி யில் மாறிவருவது மெய்தான். முதலாளித்துவத்தில் நகர மானது அரசியல், பொருளாதார, ஒழுக்க நெறி, பௌதிக, இன்ன பிற முறைகளிலான ஊழலைக் கிராமப் புறத்தில் புகுத் திற்று. நம்முடைய விவகாரத்தில், இவற்றுக்கு நேர்மாறான வற்றை நகரங்கள் கிராமப் புறத்தில் புகுத்துவதற்குத் தாமா கவே முற்பட்டிருக்கின்றன. ஆனால் இவையாவும் தாமாகவே, தன்முனைப்பாகவே நடைபெற்று வருகின்றன என்பதைத் திரும்பவும் குறிப்படுகிறேன். உணர்வு பூர்வமாகவும், திட்ட வழியிலும், முறையாகவும் இப்பணியைச் செய்வதன் மூலம் இவற்றை மேம்படச் செய்ய முடியும் (பிற்பாடு நூறு மடங்கு கூடுதலாக்கவும் முடியும்).

இந்தப் பிரச்சினையை நாம் ஆராய்வோமாயின், இந்தப் பிரச்சினையைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவும், இதை விவாதிக்கவும், காரியங்களைச் செய்து முடிக்கவும் எல்லா வகையான தொழிலாளர் நிறுவனங்களையும் அமைத்துக் கொள்வோமாயின்—இந்நிறுவனங்கள் அதிகாரவர்க்கத் தன்மை பெறாதபடித் தடுப்பதற்கு யாவும் செய்வோமாயின்—

*அதன்பின் நாம் முன்னேறத் தொடங்குவோம் (அதற்குப் பிற்பாடு இன்னும் நூறு மடங்கு அதிக வேகத்தில் நிச்சயம் முன்னேறுவோம்).*

***1923, ஜனவரி 2***

பிராவ்தா, இதழ் *2*,
***1923, ஜனவரி 4***

நூல் திரட்டு,
*தொகுதி 45,*
*பக்கங்கள் **363-368***

## கூட்டுறவு குறித்து
### என்னும் கட்டுரையிலிருந்து

### 1

''அறிவொளி படைத்த'' (பிரதானமாய் எழுத்தறிவு படைத்த) ஐரோப்பியரின் கண்ணோட்டத்தின்படி கூட்டுறவுச் செயற்பாடுகளில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் தன்முனைப்பில்லாத முறையிலல்ல, முழு முனைப்புடன் பங்கெடுத்துக் கொள்ளும்படி தூண்டுவதற்கு நாம் மேலும் செய்ய வேண்டியுள்ளது அதிகமில்லை. சுருராய்க் கூறுகையில் நாம் மேலும் செய்ய வேண்டியிருப்பது ''ஒன்றே ஒன்றுதான்'': கூட்டுறவுகளில் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்வதன் அனுகூலங்களை நம் மக்கள் புரிந்து கொள்ளும்படியும், இவ்வாறு எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யும்படியும் அவர்களை ''அறிவொளி'' பெறச் செய்வதுதான் அது. இந்த ''ஒன்றே ஒன்றுதான்'' மேலும் செய்ய வேண்டியதெல்லாம். சோஷலிசத்துக்கு முன்னேறிச் செல்வதற்குத் தற்போது வேறு வழிமுறைகள் தேவைப்படவில்லை. ஆனால் இந்த ''ஒன்றே ஒன்றைச்'' செய்து முடிப்பதற்கு ஒரு பெரும் புரட்சியே நடந்தேறியாக வேண்டும்—மக்கள் அனைவரும் கலாசார வளர்ச்சி பெறுவதற்குரிய ஒரு கட்டத்தைக் கடந்தாக வேண்டும். ஆகவே, தத்துவார்த்தம் பேசுவதையும் கர்ணமடித்து வித்தை புரிவதையும் கூடுமான அளவுக்குக் குறைத்துக் கொள்வதென நாம் விதி செய்து கொண்டாக வேண்டும். இவ்விதத்தில் புதிய பொருளாதாரக் கொள்கை ஒரு முன்னேற்றமாகும். ஏனெனில் இது சர்வ சாதாரண விவசாயியின் நிலைக்கு ஏற்றதாகக் கூடியதாய் இருக்கிறது,

இந்த நிலைக்கு உயர்வானது எதையும் அது விவசாயியிட மிருந்து கோரவில்லை. ஆனால் மக்கள் தொகையினர் அனைவரை யும் புதிய பொருளாதாரக் கொள்கையின் வாயிலாய்க் கூட்டுறவுகளில் பங்கு கொள்ளச் செய்வதற்கு ஒரு முழு வரலாற்றுச் சகாப்தமே வேண்டியிருக்கும். யாவும் நன்கு அமையின் இதைச் சாதிப்பதற்குப் பத்து, இருபது ஆண்டு களாவது ஆகும். ஆயினும் இது ஒரு தனி வர லாற்றுச் சகாப்தமே ஆகும். இந்த வரலாற்றுச் சகாப்தம் இல்லாமல், அனைத்து மக்களும் எழுத்தறிவு பெறாமல், போதிய அளவு விவேகமுடையோராய் இராமல், புத்தகம் படிக்கும் பழக்கம் ஏற்படப் போதிய அளவுக்கு மக்கள் பயிற்சி பெறாமல், இதற்குரிய பொருளாயத அடித்தளம் இல்லாமல், உதாரணமாய் அறுவடை மோசமாகிவிடுதல், பஞ்சம் போன்ற பலவற்றிடமிருந்தும் பாதுகாப்பு பெறுவதற்கு வேண்டிய ஓரளவு நிறைவு நிலை இல்லாமல்—இவை யாவும் இன்றி நாம் நமது குறிக்கோளை அடைய முடியாது. செயல் களில் விரிவான புரட்சிகர வீச்சை, புரட்சிகர ஆர்வத்தை நாம் வெளிப்படுத்திக் காட்டி—மிகுதியாய் வெளிப்படுத்திக் காட்டி—முழு அளவில் வெற்றி பெற்றுவிட்டோம். இந்தப் புரட்சிகர வீச்சையும் ஆர்வத்தையும் விவேகமுள்ள, அறிவு பெற்ற வர்த்தகருக்குரிய திறனுடன் (நான் இவ்வாறு கிட் டத்தட்ட சொல்ல உத்தேசிப்பது) இணைக்கத் தெரிந்து கொள்வதுதான் இப்பொழுது தலையாயதாகும். சிறந்த கூட் டுறவாளராவதற்கு விவேகமும் அறிவுமுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் இருந்தால் போதும். வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் என்பதன் மூலம் நான் பண்பாடு டைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றலையே குறிப்பிடு கிறேன். வர்த்தகம் புரிகிறோம் என்பதால் தாம் நல்ல வர்த்த கர்களே என்பதாய்க் கற்பனை செய்து கொள்ளும் ருஷ்யர்கள் அல்லது விவசாயிகள் இதைத் தெளிவாய்ப் புரிந்து கொண் டாக வேண்டும். முன்னதிலிருந்து பின்னது பெறப்பட்டுவிட வில்லை. அவர்கள் வர்த்தகம் புரிவது மெய்தான், ஆனால் பண் பாடுடைய வர்த்தகர்களாய் இருப்பதற்கும் அதற்கும் நெடுந் தூரம். இப்பொழுது அவர்கள் ஆசிய முறையில் வர்த்தகம் புரிகின்றனர், ஆனால் நல்ல வர்த்தகராய் இருக்க வேண்டு மாயின் ஐரோப்பிய முறையில் வர்த்தகம் புரிந்தாக வேண்

டும். அந்த நிலையிலிருந்து அவர்கள் ஒரு முழுச் சகாப்தம் பின்தங்கியோராய் இருக்கின்றனர்.

***1923, ஜனவரி 4***

## 2

ராபர்ட் ஓவன் போன்ற பழைய கூட்டுறவாளர்களுடைய திட்டங்கள் விபரீதமான கற்பனைகளாய் இருந்தது ஏன்? ஏனெனில் அவர்கள் வர்க்கப் போராட்டம், தொழிலாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல், சுரண்டும் வர்க்கத்தினுடைய ஆதிக்கத்தை வீழ்த்தல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைக் கருதாமலே அக்காலத்திய சமுதாயத்தை சமாதான வழியில் சோஷலிசமாய்த் திருத்தியமைக்கலாமெனக் கனவு கண்டனர். எனவேதான் நாம் இந்தக்''கூட்டுறவு''சோஷலிசத்தை முற்றிலும் கற்பனைமயமானதென்றும், நாட்டின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதாலேயே வர்க்கப் பகைவர்களை வர்க்க ஒத்துழைப்பாளர்களாகவும், வர்க்கப்போரை வர்க்க அமைதியாகவும் (சமூக அமைதி என்பதாய்க் கூறப்பட்டது) மாற்றி விடலாம் என்ற கனவைப் புத்தார்வ மனப்பாங்காகவும் கொச்சையானதாகவும்கூட கருதுவதில் பிழை ஏதுமில்லை.

தற்போதுள்ள அடிப்படைப் பணியின் கண்ணோட்டத்தின்படி இவ்வாறு கருதுவது முற்றிலும் சரியே. ஏனெனில் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதற்கான வர்க்கப் போராட்டம் இல்லாமல் சோஷலிசத்தை நிறுவிவிட முடியாது.

ஆனால் இப்பொழுது அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு மாறியதால், சுரண்டலாளர்களுடைய அரசியல் ஆட்சியதிகாரம் வீழ்த்தப்பட்டதால், உற்பத்திச் சாதனங்கள் யாவும் (தொழிலாளர் அரசு தானே விரும்பி குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் குறிப்பிட்ட காலத்துக்குச் சலுகை உரிமைகளின் வடிவில் சுரண்டலாளர்களிடம் விட்டு வைப்பதைத் தவிர்த்து) தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருப்பதால், நிலைமை எப்படி மாறிவிட்டது பாருங்கள்.

நமக்குக் கூட்டுறவின் வளர்ச்சியே முற்றிலும் சோஷலி

சத்தின் வளர்ச்சிக்கு ஒப்பானதாகிவிட்டது (மேற்கூறிய ''சிறிய'' விதிவிலக்கைத் தவிர்த்து) என்று இப்பொழுது நாம் முழு உரிமையுடன் கூறலாம். அதே போது சோஷலிசத்தைப் பற்றிய நமது கண்ணோட்டம் அனைத்திலும் ஒரு தீவிர மாற்றம் ஏற்பட்டிருப்பதையும் நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும். முன்பு நாம் அரசியல் போராட்டத்தையும் புரட்சியையும் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதையும் இன்ன பிறவற்றையுமே பிரதானமாய் வலியுறுத்தி வந்தோம், வலியுறுத்தி வரவும் வேண்டியிருந்தது. வலியுறுத்தலானது இப்பொழுது சமாதான வழியிலான ஒழுங்கமைப்பு வகைப்பட்ட ''கலாசாரப்'' பணிக்கு இடம் பெயர்ந்து மாறி வருகிறது. நமது சர்வதேச உறவுகளையும், உலக அளவில் நாம் நமது நிலைக்காகப் போராட வேண்டியிருப்பதையும் கருதத் தேவை இல்லையாயின், வலியுறுத்தல் கலாசாரப் பணிக்கு மாறிச் செல்லுகிறது என்று நான் கூற வேண்டியிருக்கும். ஆனால் இதைக் கருதாது ஒதுக்கி விட்டு, உள்நாட்டுப் பொருளாதார உறவுகளுடன் நிறுத்திக் கொள்வோமாயின், நமது பணியில் வலியுறுத்தலானது நிச்சயமாய்க் கலாசாரத் துறைக்கே இடம் பெயர்ந்து மாறிச் செல்கிறது.

இரண்டு பிரதான பணிகள் நம்மை எதிர்நோக்குகின்றன. இந்தச் சகாப்தமே இவ்விரு பணிகளாலுமானது தான். முதலாவது, நமது அரசின் இயந்திரத்தைத் திருத்தியமைத்தல். இந்த இயந்திரம் முற்றிலும் உபயோகமற்றதாகும்; முந்திய சகாப்தத்திலிருந்து முழுமையாய் இவ்வியந்திரத்தை நாம் பெற்றுக் கொண்டோம். போராட்டத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த இயந்திரத்தைத் தீவிரமாய்த் திருத்தியமைக்கவில்லை, திருத்தியமைக்க முடியவும் இல்லை. நமது இரண்டாவது பணி விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணி. விவசாயிகளைக் கூட்டுறவுகளில் ஒன்றுதிரளச் செய்வதே, விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணியின் பொருளாதார நோக்கம். விவசாயிகள் அனைவரும் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டப்பட்டிருப்பார்களாயின், இப்பொழுது நாம் சோஷலிசத்தில் இரு கால்களையும் ஊன்றிக் கெட்டியாய் நின்று கொண்டிருப்போம். ஆனால் விவசாயிகள் அனைவரையும் கூட்டுறவுகளில் ஒன்று திரட்டும் முன் விவசாயிகளுடைய (மிகப் பெருவாரி

யான மக்கள் திரளான விவசாயிகளுடைய) கலாசார நிலையை உயர்த்தியாக வேண்டும். கலாசாரப் புரட்சி இல்லாமல் உண்மையில் இப்பணியை நிறைவேற்ற முடியாது.

போதிய அளவு கலாசார வளர்ச்சி பெருத ஒரு நாட்டில் நாம் சோஷலிசத்தை நாட்ட முற்பட்டது குருட்டுத் துணிச்சலான காரியமாகுமென நமது எதிராளிகள் திரும்பத் திரும்பக் கூறினர். தத்துவத்தால் (எல்லா வகையான பகட்டுப் புலமையாளர்களது தத்துவத்தால்) விதிக்கப்பட்டதற்கு எதிர் முனையிலிருந்து நாம் தொடங்கினோம் என்றும், நமது நாட்டில் அரசியல், சமுதாயப் புரட்சி கலாசாரப் புரட்சிக்கு முன்னதாகவே நடைபெற்றது—இப்பொழுது நம்மை இதே கலாசாரப் புரட்சி எதிர்நோக்குகிறது—என்றும் கூறி அவர்கள் தவறு செய்தார்கள்.

இந்தக் கலாசாரப் புரட்சி இப்பொழுது நம் நாட்டை முழுநிறை சோஷலிச நாடாக்குவதற்குப் போதுமானதாகும். ஆனல் இப்புரட்சி முற்றிலும் கலாசாரத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் நாம் எழுத்தறியாதோராய் இருக்கிறோம்), முற்றிலும் பொருளாயதத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் கலாசார வளர்ச்சி பெறுவதற்கு நாம் பொருளாயத உற்பத்திச் சாதனங்களில் குறிப்பிட்ட ஓர் அளவு வளர்ச்சி அடைந்தாக வேண்டும், குறிப்பிட்ட ஒரு பொருளாயத அடித்தளத்தைப் பெற்ருக வேண்டும்) மிகப் பெரிய அளவில் உண்டாக்குகிறது.

***1923, ஜனவரி 6***

*1923, மே மாதம் 26, 27 தேதிகளில் பிராவ்தா, இதழ் 115, 116 முதலில் வெளியிடப்பட்டது*

*நூல் திரட்டு, தொகுதி 45, பக்கங்கள் 372-373, 375-377*

## நமது புரட்சி
## (நி. சுஹானவின் குறிப்புகள் சம்பந்தமாய்)
### என்னும் கட்டுரையிலிருந்து

**2**

சோஷலிசத்தைக் கட்டியமைப்பதற்கு நாகரிகம் அவசியம் என்கிறீர்கள். மிக்க நல்லது. ஆனால் நாகரிகத்துக்கு வேண்டிய முன்தேவைகளை, நிலப்பிரபுக்களையும் ருஷ்ய முதலாளிகளையும் வெளியேற்றுவது போன்ற இந்த முன் தேவைகளை, ஏன் நாம் முதலில் தோற்றுவித்துக் கொண்டு, அதன் பிறகு சோஷலிசத்தை நோக்கி முன்செல்லக் கூடாது? நிகழ்ச்சிகளின் வழக்கமான வரலாற்று வரிசைக் கிரமத்தில் இப்படிப்பட்ட உருத்திரிபுகள் அனுமதிக்கப்படுவதில்லை என்றோ, சாத்தியமற்றவை என்றோ எங்கே, எந்தப் புத்தகத்தில் படித்தீர்கள்?

நெப்போலியன் என்று நினைக்கிறேன், "On s'engage et puis... on voit" என்றெழுதினர். சரளமாய் மொழி பெயர்த்தால் இதன் பொருள்: "மெய்யான போர் ஒன்றில் முதலில் ஈடுபடு, பிறகு என்ன நடைபெறுகிறதென்று பார்". நல்லது, 1917 அக்டோபரில் நாங்கள் மெய்யான போர் ஒன்றில் முதலில் ஈடுபட்டோம், பிறகு பிரேஸ்த் சமாதானம்[71], புதிய பொருளாதாரக் கொள்கை முதலானவை போன்ற வளர்ச்சியின் விவரங்களை (உலக வரலாற்றின் கண்ணேட்டத்தில் இவை சிறு விவரங்களே) பார்த்தோம். பிரதானமாய் நாம் வெற்றி ஈட்டியுள்ளோம் என்பதில் இப்பொழுது சந்தேகம் இருக்க முடியாது.

வேறு எவ்வழியிலும் புரட்சிகள் நடத்த முடியாது என்பது நமது சுஹானவ்களுக்கு—இன்னும் வலப்புறத்தே இருக்

கும் சமூக-ஜனநாயகவாதிகளைப் பற்றி சொல்லவே வேண்டாம்—கனவிலும் கருத முடியாத ஒன்று. கிழக்குலக நாடுகளில், மக்கள் தொகையில் இன்னும் மிகப் பெரிய, சமூக நிலைமைகளில் மேலும் பெரிய அளவுக்குப் பல்வேறுபட்ட இந்நாடுகளில், இனி நடைபெறப் போகும் புரட்சிகள் ருஷ்யப் புரட்சியைக் காட்டிலும் இன்னும் கூட அதிகமாய்த் தனி இயல்புகளை நிச்சயம் வெளிப்படுத்திக் காட்டும் என்பது நமது ஐரோப்பிய கிணற்றுத் தவளை மனப்பான்மையினருக்குக் கனவிலும் கருத முடியாத ஒன்றுதான்.

காவுத்ஸ்கி வழிகளில் எழுதப்பட்ட பாடப்புத்தகம் அதன் காலத்தில் மிகவும் பயனுடையதாகவே இருந்ததென்பதைக் கூறத் தேவையில்லை. எவ்வளவுதான் அது பயனுடையதாய் இருந்திருப்பினும், அதற்குப் பிற்பட்ட உலக வரலாற்றின் வளர்ச்சியினுடைய எல்லா வடிவங்களையும் அது முன்னறிந்து கூறிவிட்டதாய்க் கொள்ளும் கருத்து விட்டொழிக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. இப்படி அது முன்னறிந்து கூறிவிட்டதாய் நினைப்போர் அடி முட்டாள்களே என்று சொல்வது காலத்துக்கு உகந்ததாய் இருக்கும்.

***1923***, *ஜனவரி* ***17***

பிராவ்தா, இதழ் ***117***ல்,
***1923***, மே ***30***ல்
வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி ***45***,
பக்கங்கள் ***381-382***

## குறிப்புகள்

[1] விவசாய செகண்டரிப் பள்ளிப் பண்ணைகளும் விவசாய சமுதாய மாற்றத்திற்கான பள்ளிகளும் என்ற கட்டுரையானது லெனினல் 1895ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் செ. நி. யுழக்கோவின் கட்டுரையான ஒரு கல்விக் கற்பனு உலகம். நாடு தழுவிய கட்டாய இடைநிலைக் கல்விக்கு ஒரு திட்டம் என்பதற்குப் பதிலளிக்கும் முகமாக எழுதப்பட்டது. 1895 மே மாதத்தில் ரூஸ்கொயே பகாத்ஸ்த்வோ (ருஷ்யன் செல்வம்) என்னும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது.

யுழக்கோவினல் முன்வைக்கப்பட்ட திட்டத்தை லெனின் கடுமையாக விமர்சித்தார். யுழக்கோவ் விவசாயப் பள்ளிகளில் (ஜிம்னுசியத்தில்) கட்டாய இடைநிலைக் கல்வி கற்பிக்க வேண்டும் எனப் பிரேரேபித்தார். அத்திட்டத்தின்படி மிக ஏழை மாணவர்கள் அவர்களுடைய படிப்புச் செலவை விவசாயத்தில் உழைத்து ஈடுகட்ட வேண்டும். அந்தத் திட்டத்தின் பிற்போக்குத் தன்மையை லெனின் சுட்டிக் காட்டினுர்.—21.

[2] ரூஸ்கொயே பகாத்ஸ்த்வோ (ருஷ்யன் செல்வம்)—ஒரு மாதப் பத்திரிகை; பீட்டர்ஸ்பர்கில் 1876 முதல் 1918 மத்தி வரை வெளியிடப்பட்டது. 1890களின் ஆரம்ப காலம் முதல் இது மிதவாத நரோத்னிக்குகளின் செய்தித்தாளாக இருந்தது. இது ஜார் அரசாங்கத்துடன் சமரசமாக இருப்பதை ஆதரித்தது. மார்க்சியத்தையும் ருஷ்ய மார்க்சியவாதிகளையும் எதிர்த்து கடுமையாகப் போரிட்டது.—21.

3 நரோதியம்—இது 1860க்கும் 1870க்கும் இடைப்பட்டக் காலத்தில் ருஷ்ய புரட்சி இயக்கத்தில் எழுந்த ஒரு குட்டி முதலாளித்துவப் போக்கு. நரோத்னிக்குகள் ஏதேச்சாதிகாரத்தை ஒழித்து நிலப்பிரபுக்களின் பண்ணைகளை விவசாயிகளிடம் ஒப்படைப்பதற்கு முயன்றுர்கள். அதே நேரத்தில் அவர்கள் ருஷ்யாவில் முதலாளித்துவ உறவுகளின் வளர்ச்சி இயற்கையான ஒருபோக்கு என்பதை மறுத்தனர். எனவே அக்கருத்தின்படி விவசாயிகளைத்தான் முக்கிய புரட்சி சக்தியாகக் கருதினர், பாட்டாளி வர்க்கத்தை அல்ல. கிராம கூட்டுச் சமுதாயத்தைச் சோஷலிசத்தின் கரு எனக் கருதினர். ஏதேச்சாதிகாரத்துக்கு எதிரான போராட்டத்தில் விவசாயிகளை கிளர்ந்து எழச் செய்ய வேண்டும் என்றக் குறிக்கோளுடன் நரோத்னிக்குகள் கிராமப்புறங்களுக்கு ''மக்களிடையே'' சென்றனர். ஆனால் அங்கு அவர்களுக்கு ஆதரவு கிடைக்கவில்லை.

நரோதியம் புரட்சிகர ஜனநாயகத்திலிருந்து மிதவாதம் வரை பல கட்டங்களைக் கடந்து வந்தது.

1880-90களில் நரோத்னிக்குகள் ஜாராட்சியுடன் சமரச நிலை மேற்கொண்டு குலாக்குகளின் நலன்களில் அக்கறை காட்டினுர்கள். அவர்கள் மார்க்சியத்தை எதிர்த்து மிகக் கடுமையாகப் போரிட்டனர்.—21.

4 வோலஸ்த்—புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் சில கிராமங்களை ஒன்றிணைத்த கீழ்மட்ட நிர்வாக-பிராந்திய அமைப்பாகும்.—22.

5 செகண்டரிப் பள்ளி (ஜிம்னுசியம்)—இடை நிலைப் பொதுக் கல்வி பள்ளிக்கூடம். ஜிம்னுசியம் எனில் லத்தீன், கிரேக்க மொழிகளைப் போதிப்பதாகும். ஜிம்னுசியத்தில் படித்து முடித்தவர்களுக்குப் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல உரிமையுள்ளது.—22.

6 ஸேம்ஸ்துவோ—உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கு இடப்பட்ட பெயர், ஜாரிஸ்ட் ருஷ்யாவில் 1864ல் மத்திய குபேர்னியாக்களில் நிறுவப்பட்டன. அவற்றின் அதிகாரம் வெறும் உள்ளாட்சி, பொருளாதாரப் பிரச்சினைகளுடன் (மருத்துவ மனை, சாலை அமைப்பது, புள்ளியியல், இன்ஷுரன்ஸ் போன்ற இத்தியாதி) மட்டும் வரையறுக்கப்பட்டது. அவற்றின் நடவடிக்கைகள் குபேர்னியா ஆளுநர்களாலும் உள்துறை அமைச்சகத்தாலும் கட்டுப்படுத்தப்பட்டன. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத எந்த முடிவுகளையும் அமுல்படுத்துவதைத் தடுக்க அவற்றால் முடியும்.—23.

7 ருஷ்யர்கள் அல்லாத தேசிய இனங்கள்—புரட்சிக்கு முந்திய காலத்தில் சிறுபான்மை தேசிய இனங்கள் இந்தப் பெயரில் அழைக்கப்பட்டனர்.—24.

8 இந்தக் கட்டுரை ரபோச்சியே தேலோ (தொழிலாளர் இலட்சியம்) என்ற செய்தித்தாளுக்காக எழுதப்பட்டக் கட்டுரைகளில் ஒன்று. இப்பத்திரிக்கை, ''தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைப் போராட்டத்திற்கான குழுவின்'' பீட்டர்ஸ்பர்க் கழகத்தால் தயாரிக்கப்பட்டது. ரபோச்சியே தேலோவின் முதல் இதழ் லெனினால் தொகுக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டது.—33.

9 புனித ஸினேட்—ஜாரின் ருஷ்யாவில் ஆர்த்தோடாக்ஸ் சர்ச்சின் உயர் மட்டக் குழு—33.

10 இங்கே குறிப்பிடப்பட்டது முதியோருக்கான, குறிப்பாகத் தொழிலாளர்களுக்கான ஞாயிற்றுக்கிழமை பள்ளிகளாகும். புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் இப்பள்ளிகளைத் தொழிலாளர்களின் அரசியல் கல்விக்காகப் பயன்படுத்தினர்.—33.

11 டயோசீசன்—ஒரு சர்ச்-நிர்வாக அமைப்பாகும். இந்தச் சர்ச்சின் எல்லைக்குட்பட்ட பகுதி பிஷப்பால் ஆட்சி செலுத்தப்பட்டது.—36.

12 ஊந்தெர்கள்—புரட்சிக்கு முந்திய ருஷ்யப் படையில் இருந்த படை சார்ஜென்டுகள்.—37.

13 பண்ணையடிமை, ருஷ்யாவில் 1861ல் ஒழிக்கப்பட்டது. இந்தச் சீர்திருத்தம் ஜார் அரசாங்கத்தால் பண்ணையடிமையாளர்-நிலப்பிரபுக்களின் தேவைகளுக்காக அமுலாக்கப்பட்டது. நில உடைமை மாற்றப்படவில்லை, அப்படியே இருந்தது. விவசாயிகளின் நிலங்கள் நிலப்பிரபுக்களுக்குச் சொந்தம் என அறிவிக்கப்பட்டது. சட்டத்தால் நிறுவப்பட்ட (அப்பொழுது கூட நிலப்பிரபுவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு) அளவிற்கு ஏற்ப விவசாயி நிலத்தைப் பெற முடிந்தது. அந்த நிலத்தையும் அவன் மீட்க வேண்டியிருந்தது. அதாவது அதற்காக பணம் கொடுக்க வேண்டியிருந்தது. பண்ணையடிமை ஒழிக்கப்பட்ட பின் விவசாயிகள் ''தற்காலிகமாக'' கட்டுப்பட்டிருந்தனர். அதாவது, அவர்கள் நிலப்பிரபுக்களுக்கு விலக்குக் கூலி, அல்லது அடிமைத் தொழில் போன்ற பணிகளைச் செய்தனர். இந்தச் சீர்திருத்தம் நிலப்பிரபுக்கள் விவசாயி

களால் முன்னுல் பயிரிடப்பட்ட நிலங்களில் ஐந்தில் ஒரு பகுதியைக் குறைத்து தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வழிவகுத்தது. நிலப்பிரபுக்கள் இந்தக் குறைக்கப் பட்ட நிலங்களைத் தங்களுடைய சொந்த உடைமை யாக்கிக் கொண்டனர். விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்ட இந்தப் ''பகுதி நிலங்கள்'' (புல்தரைகள், நீர் உள்ள இடங்கள்,மேய்ச்சல் நிலம் போன்றவை) மிகச் சிறந்தவை. இவை இல்லாமல் விவசாயிகள் சுதந்திரமாக விவசாயம் செய்ய முடியாது.

1861ம் ஆண்டு சீர்திருத்தத்தை, விவசாயத்தில் முளைப் பருவத்தில் இருந்த முதலாளித்துவத்தின் நலனுக்காக, விவசாயிகளுக்கு எதிராக, செய்யப்பட்ட வன்முறைச் சட்டம் என்று லெனின் கூறினுர். நிலப்பிரபுக்கள் தங் களுடைய ''பண்ணைகளை முதலாளித்துவத்திற்காக விடு வித்தளித்தனர்.''—39.

14 அரசாங்க டூமா—1905ம் ஆண்டு புரட்சி நிகழ்ச்சிகள் ஜார் அரசாங்கத்தை நிர்பந்தித்து கூட்டும்படி வைத்த ஒரு பிரதிநிதித்துவ சபையே. டூமா என்பது ஒரு சட்டமியற்றும் நிறுவனமாக இருந்தது. ஆனுல் நடை முறையில் அதற்கு உண்மையான எந்தவித அதிகாரமும் கிடையாது. டூமாவிற்காக நடத்தப்படும் தேர்தல்கள் மறைமுகமானது, சமத்துவமற்றது, நாடு தழுவியது அல்ல. உழைப்பாளர்களுக்கும் ருஷ்யாவில் குடியேறி வாழும் ருஷ்யர்கள் அல்லாதாருக்கும் ஓட்டுரிமை மிக வும் குறைக்கப்பட்டிருந்தது. விவசாயிகள், தொழிலாளர் களின் கணிசமான பகுதியினருக்கு எவ்விதமான வாக் குரிமையும் இருக்கவில்லை.

முதல் டூமா (ஏப்ரல்-ஜூன் 1906), இரண்டாவது டூமா (பிப்ரவரி-ஜூன் 1907) ஆகியவை அரசாங்கத்தால் கலைக்கப்பட்டன. மூன்ருவது டூமாவில் (1907-1912), நான்காவது டூமாவில் (1912-1917) பெரும் முதலாளிகள், பெரும் நிலப்பிரபுக்கள் ஆகிய கூட்டத்தினரின் ஆதிக்கத் துக்காக தொழிலாளர்கள், விவசாயிகள், நகர்புற குட்டி முதலாளி வர்க்கத்தினரின் வாக்குரிமை இன்னும் அதிக மாக குறைக்கப்பட்டது.

இங்கு குறிப்பிடப்பட்டது நான்காம் டூமாவைப் பற்றிய தாகும்.—41.

15 ரேச் (பேச்சு)—ஒரு தினசரி செய்தித்தாள், காடேட்டு களது கட்சியின் மத்தியச் செய்தித்தாள். 1906 முதல் 1918 வரை பீட்டர்ஸ்பர்கில் வெளியிடப்பட்டது.—41.

16 காடேட்டுகள் (அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சி)—ருஷ்யாவில்

இருந்த மிதவாத-முடியரசு முதலாளித்துவ வர்க்கத்தினரின் கட்சி. இது ருஷ்யாவில் முக்கியமான முதலாளித்துவக் கட்சியாக இருந்தது. இது 1905 அக்டோபரில் நிறுவப்பட்டது. ஜனநாயகம் என்ற பொய்யான போர்வையின் கீழும், ''மக்கள் சுதந்திரக் கட்சி'' என்ற பெயரிலும் இந்தக் காடேட்டுகளின் முக்கிய கோரிக்கை அரசியல் சட்ட ரீதியான முடியரசு வேண்டும் என்பதாகும். புரட்சி இயக்கத்துடன் போரிடுவதை அவர்களுடைய முக்கிய பணியாகக் கருதினார்கள். ஜாருடனும் அடிமையுடைமையாளர்-நிலப்பிரபுக்களுடனும் அதிகாரத்தில் ஒரு பங்கைப் பெற முயற்சித்தனர். 1917ம் ஆண்டு பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் போது அவர்கள் முடியாட்சியைக் காக்க முயன்றார்கள். 1917ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2 (15)ம் தேதி உருவாக்கப்பட்ட முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் இந்தக் காடேட்டுகள் தலைமையான நிலையைப் பிடித்துக் கொண்டு மக்களுக்கு எதிரான எதிர்புரட்சிக் கொள்கையைக் கடைப் பிடித்தார்கள். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் அவர்கள் ஆயுதம் தாங்கிய எதிர்புரட்சி நடவடிக்கைகளிலும் சோவியத் குடியரசுக்கு எதிரான தலையீட்டாளர்களின் பலாத் காரப் போர்களிலும் பங்கு ஏற்றனர்.—42.

17 **அக்டோபர்வாதிகள் (அக்டோபரிஸ்டுகள்)**—அக்டோபரிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் (இவர்கள் ''அக்டோபர் பதினேழு சங்கம்'' என்றும் அழைக்கப்படுவார்கள்), 1905 அக்டோபர் 17 (30)ல் ஜாரால் வெளியிடப்பட்ட அறிக்கை ''சிவில் சுதந்திரங்கள்'', ''சட்டசபை'' டூமா ஆகியவற்றைத் தருவதாக அறிவித்தது. இந்த அறிவிப்புக்குப் பின் தோன்றிய எதிர்ப்புரட்சிக் கட்சியாக இது இருந்தது. இந்த எதிர்புரட்சிக் கட்சி முதலாளித்துவ வழியில் ஆட்சி செலுத்திய பெரும் முதலாளி வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் நலன்களைப் பாதுகாத்தது. அக்டோபரிஸ்டுகள் ஜார் அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளுக்கு முழு ஆதரவு கொடுத்தார்கள்.—42.

18 **முற்போக்குவாதிகள்**—ருஷ்ய மிதவாத-முடியரசுவாத முதலாளித்துவ அரசியல் குழு. இவர்கள் டூமாவிற்கான தேர்வின் போதும் டூமாவிற்குள்ளும், முதலாளித்துவ-நிலப்பிரபுக்களின் கட்சிகள், குழுக்கள் ''கட்சி சார்பற்றவர்கள்'' என்ற கொடியின் கீழ் உள்ள குழுவினர் போன்ற பல்வேறு சக்திகளை ஒருங்கிணைக்க விரும்பினார்கள்.

1912 நவம்பரில் முற்போக்குவாதிகள் கீழ்க்கண்ட திட்டத்துடன் ஓர் அரசியல் கட்சியைத் தனியே ஆரம்பித்தார்

கள்: வரையறுக்கப்பட்ட வாக்குரிமையுடன் கூடிய ஒரு மிதமான அரசியல் சட்டம், சிறு சீர்திருத்தங்கள், ஒரு பொறுப்புள்ள மந்திரிசபை, அதாவது டூமாவிற்குப் பதிலளிக்கும் பொறுப்புள்ள அரசாங்கம், புரட்சிகரமான இயக்கத்தை நசுக்குவது. 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு இக்கட்சியின் தலைவர்களில் சிலர் இடைக்கால முதலாளித்துவ அரசின் உறுப்பினர்களாயினர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் இந்த முற்போக்குவாதிகள் சோவியத் ஆட்சியை எதிர்த்து மிக வலுவுள்ள போராட்டத்தை நடத்தினார்கள்.—43.

19 ''அவர்களுடைய பங்கிற்கு எதிர்ப்பு'' அல்லது ''மாட்சிமை தங்கிய அரசரின் எதிர்க்கட்சி''—அது காடேட்டுகளின் தலைவரான பா.நி. மில்யுக்கோவ்வைக் குறிக்கிறது. 1909ம் ஆண்டு ஜூன் 19ம் தேதி (ஜூலை 2) லண்டன் மாநகர் மேயருடன் காலை உணவருந்தும் பொழுது மில்யுக்கோவ் பிரகடனப்படுத்தினார்: ''...இன்னமும் ருஷ்யாவில் சட்டசபை இருக்கிறது. அது வரவு செலவைக் கட்டுப்படுத்துகிறது. ருஷ்ய எதிர்க்கட்சி மாட்சிமை தங்கிய அரசரின் எதிர்க்கட்சியாக உள்ளது. ஆனால் மாட்சிமை தங்கிய அரசரை எதிர்க்கும் எதிர்க்கட்சியல்ல.''—44.

20 துருதொவிக்குகள்—அரசாங்க டூமாக்களில் இருந்த குட்டி-முதலாளித்துவ ஜனநாயகவாதிகளைக் கொண்ட ஒரு குழு. இதில் நரோத்னிக் கருத்தைச் சார்ந்த விவசாயிகளும் அறிவாளிகளும் இருந்தார்கள். இந்தக் குழு 1906 ஏப்ரலில், முதல் டூமாவில் இருந்த விவசாயிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டது. துருதொவிக்குகள் காடேட்டுகளுக்கும் சமூக-ஜனநாயகவாதிகளுக்கும் இடையில் ஊசலாடினார்கள்.

துருதொவிக்குகளின் கோரிக்கைகளில் சமுதாயப் படிநிலை ஆதீனங்கள், தேசிய இனம் ஆகியவற்றின் அடிப்படையிலான எல்லாத் தடைகளையும் ஒழித்தல்; ஸேம்ஸ்துவோ, நகர்புற சுய ஆட்சி அமைப்பு ஆகியவற்றை ஜனநாயகப் படுத்துதல், டூமா தேர்தல்களில் சர்வப் பொது வாக்குரிமை ஆகியவை அடங்கியிருந்தன.

1917ல் அவர்கள் முதலாளி வர்க்கத்தினரின் இடைக்கால அரசாங்கத்துக்குத் தீவிர ஆதரவு அளித்தார்கள். அக்டோபர் சோஷலிசப் புரட்சியைத் தொடர்ந்து அவர்கள் முதலாளித்துவ எதிர்புரட்சியை ஆதரித்தனர்.—46

21 டூமாவிற்கான போல்ஷிவிக் பிரதிநிதிக்காக இந்தப் பேச்சின்

நகல் (*Selected works*, vol. 19, supplement, 137-146, Moscow, 1963 பார்க்கவும்) லெனினுல் எழுதப்பட்டது. அ. எ. பதாயெவ் என்பவரால் இப்பேச்சு 1913 ஜூன் 4 (17)ல் ஆண்டிற்கான மக்கள் கல்வி அமைச்சக மதிப்பீடுகள் மீதான வரவு-செலவு குழுவின் அறிக்கையின் மீது நடந்த விவாதத்தின் போது நிகழ்த்தப்பட்டது. லெனினின் நகலின் பெரும்பகுதி கிட்டத்தட்ட வார்த்தைக்கு வார்த்தை திரு. பதாயெவால் வாசிக்கப்பட்டது. ஆனுல் அவர் தமது பேச்சை முடிக்கவில்லை. ''இந்த அரசாங்கம் மக்களால் விரட்டியடிக்கத் தக்க அரசாங்கம் அல்லவா?'' என்ற வரியை அவர் வாசித்ததும் அவரது பேச்சுரிமை பறிக்கப்பட்டது.—50.

22 அல்தீன்—பழைய ருஷ்ய செப்பு நாணயம் (மூன்று கோபெக்குகள்).—51.

23 டெஸியாட்டினு—நிலத்தை அளப்பதற்கு மெட்ரிக் முறை புகுத்தப்படுவதற்கு முன் பயன்படுத்தப்பட்ட நில அளவையாகும். இது 1.092 ஹெக்டார் பரப்பிற்குச் சமம். —53.

24 **அரசாங்க கவுன்சில்**—ஜார் காலத்திய ருஷ்யாவில் இது அரசாங்கத்தின் மிக உயர்மட்ட அமைப்புகளில் ஒன்று. இது 1810ல் ஒரு சட்ட ஆலோசனைக் குழுவாக அமைக்கப்பட்டது. இதனுடைய உறுப்பினர்கள் ஜாரினுல் நியமிக்கப்படுவார்கள் அல்லது அங்கீகரிக்கப்படுவார்கள். இந்த அமைப்பு பிற்போக்கானது, டூமாவினுல் அங்கீகரிக்கப்பட்ட மிதமான மசோதாக்களைக் கூட இது நிராகரித்துவிட்டது. —53.

25 **உரியாத்னிக் (தாலூகா போலீஸ்)**—புரட்சிக்கு முந்திய ருஷ்யாவின் மிகக் கீழ்மட்ட போலீஸ்.—57.

**கருப்பு நூற்றுவர்**—இது புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ஜாரிஸ்டுப் போலீசாரால் குண்டர் கும்பலிலிருந்து திரட்டி நிறுவப்பட்டவர்கள். புரட்சிக்காரர்களை அவர்கள் கொலை செய்தனர். முற்போக்கான அறிவுஜீவிகளைத் தாக்கினுர்கள், யூத எதிர்ப்பு படுகொலை அமைப்புகளை ஏற்படுத்தினுர்கள்.—57.

27 **1907, ஜூன் 3ம் தேதி** இரண்டாவது அரசாங்க டூமாவைக் கலைப்பது, தேர்தல் சட்டங்களில் மாற்றங்கள் ஆகியவை ஜாரின் அறிக்கையில் வெளியிடப்பட்டது. இப்பொழுது

இந்த அறிக்கை மூன்றுவது அரசாங்க டூமாவில் பெரும் பான்மை நிலப்பிரபுக்களுக்கும் முதலாளிகளுக்கும் இடம் அளிக்க வழி வகுத்தது. ஜார் அரசாங்கம் அரசியல் சட்ட உரிமைகளை அழித்தது. இரண்டாவது அரசாங்க டூமாவில் இருந்த சமூக-ஜனநாயகப் பிரிவினர் நீதி மன்றங்களுக்கு அனுப்பப்பட்டு, கடும் தண்டனைகள் கொடுக்கப்பட்டனர். —*58.*

28 புரோஸ்வெஷேனியே (அறிவொளி)—*1911* டிசம்பர் முதல் *1914* ஜூன் வரை பீட்டர்ஸ்பர்கில் சட்டரீதியாக வெளியிடப்பட்ட ஒரு மாதாந்திர போல்ஷிவிக் பத்திரிகை.

இதனுடைய இரண்டாவது இதழ் தெம்யான் பேத்னியின் கட்டுக்கதையான ''மெழுகுவர்த்தி'' என்ற கதையைத் தாங்கி வந்தது. இக்கதைக்காகவே அந்த இதழ் பறிமுதல் செய்யப்பட்டது.—*61.*

29 காடேட் படைவகுப்பு பள்ளி—புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் இது குறிப்பிட்ட குழந்தைகளுக்கான ஓர் இராணுவப் பள்ளியாக இருந்தது. இப்பள்ளி குழந்தைகளை இராணுவ அதிகாரிகளாக்க அல்லது இராணுவ அதிகாரிகளாக மாற்ற பயிற்சியளிக்கும் பள்ளிகளுக்குத் தயாரித்தது. —*63.*

30 நேவ்ஸ்கயா ஸ்வெஸ்தா (நெவாவின் நட்சத்திரம்)—சட்டபூர்வமான போல்ஷிவிக் செய்தித்தாள். இது *1912* பிப்ரவரி *26* (மார்ச்சு *10*) முதல் அக்டோபர் *5 (18)* வரை பீட்டர்ஸ்பர்கில் வெளியிடப்பட்டது. மொத்தத்தில் இருபத்தேழு இதழ்கள் வெளிவந்தன. வெளிநாட்டில் இருந்த லெனின் சித்தாந்த ரீதியாக இந்தச் செய்தித்தாளுக்கு வழிகாட்டினார். இச்செய்தித்தாள் அரசாங்கத்தால் தொடர்ந்து அலைக்கழிக்கப்பட்டது.—*63.*

31 வியாத்கா—ஒரு நகரம் (இப்பொழுது கீரவ்). புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் நாடு கடத்தப்பட்டோரின் நகரமாக இருந்தது.—*64.*

32 இங்கு குறிப்பிட்டிருப்பது *1905—1907*ல் நடைபெற்ற ருஷ்ய புரட்சியாகும்.—*65.*

33 கியெவ்ஸ்கயா மீஸ்ல் (கீவ் சிந்தனை)—ஒரு முதலாளித்துவ-ஜனநாயக தினசரி செய்தித்தாள். *1906*ம் ஆண்டு முதல் *1918* வரை கீவில் வெளியிடப்பட்டது.—*66.*

34 ஸபரோஷ்ஸ்கயா சேச்—தினீப்பர் என்னும் ஆற்றின் கீழ் பகுதியில் அதாவது, கற்பாங்கான பகுதியின் கீழ் உள்ள உக்ரைனிய கசாக்குகளின் ஸ்தாபனம் இது. தப்பி ஓடிய பண்ணையடிமை விவசாயிகளால், நகர்புற ஏழைகளால், பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டது.

ஸபரோஷ்ஸ்கயா சேச் தாத்தார்களையும் துருக்கியர்களையும் எதிர்த்துப் போரிட்டது. 1648-1654ல் நடைபெற்ற உக்ரைனிய மக்களின் விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டது. உக்ரைனியா ருஷ்யாவில் ஐக்கியமானதும் ஸபரோஷ்ஸ்கயா சேச் என்ற உருவில் சுய ஆட்சி (கசாக் சுயாட்சி) ஒன்றை நிறுவிக் கொண்டது.—67.

35 புந்து சங்கம் ஆதரவாளர்கள் (அல்லது புந்துக்காரர்கள்)—புந்தின் உறுப்பினர்.

புந்து என்பது ''லித்துவேனியாவையும் போலந்தையும் ருஷ்யாவையும் சேர்ந்த யூதத் தொழிலாளர்களது பொதுச் சங்கத்தின்'' சுருக்கப் பெயர். 1897ல் நிறுவப்பட்டது. ருஷ்யாவின் மேற்கு பிராந்தியங்களைச் சேர்ந்த யூத அரைப் பாட்டாளிப் பிரிவோராகிய கைத்தொழிலாளர்களையே பிரதானமாய் இது ஒன்று திரட்டியது. 1898ல் நடைபெற்ற ரு.ச.ஜ.தொ. கட்சியின் (ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி) முதல் காங்கிரசில் புந்து ரு.ச.ஜ.தொ. கட்சியில் சேர்ந்தது.

ரு.ச.ஜ.தொ. கட்சிக்குள்ளே புந்துக்காரர்கள் தொடர்ந்து சந்தர்ப்பவாத பகுதியினரை ஆதரித்தனர். போல்ஷிவிக் கட்சியினரை எதிர்த்து ஒரு போராட்டம் நடத்தினர். போல்ஷிவிக் திட்டத்தினுடைய கோரிக்கையான தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைகளை புந்து எதிர்த்தது. அது ''கலாச்சார-தேசிய'' சுயாட்சியை எதிர்த்தது. முதல் உலகப் போரின் போது (1914-1918) புதுக்காரர்கள் சமூக-தேசியவெறி நிலைகளை எடுத்தனர். 1917ல் புந்து, முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தை ஆதரித்தது. மேலும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் எதிரிகளின் பக்கமாக நின்று போரிட்டது. 1921 மார்ச்சில் புந்து தன்னைக் கலைத்துக் கொண்டது.—70.

36 இங்கே குறிப்பிடப்பட்டது பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த குட்டி முதலாளித்துவ இடதுசாரி நரோதியவாதக் கட்சிகளின் மாநாடாகும். அதாவது 1907 ஏப்ரல் மாதம் 16-20 தேதிகளில் பின்லாந்தில் நடைபெற்ற ருஷ்ய தேசிய-சோஷலிச கட்சிகளின் மாநாடாகும்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன:

தேசிய-சோஷலிச கட்சிகளின் காங்கிரசுகளை ஆண்டுதோறும் கூட்டுவது பற்றிய ஒரு தீர்மானம், மாநாட்டின் முடிவுகளைச் செயல்படுத்த தனிச் செயற் குழு ஒன்றை அமைப்பது, தேசிய-சோஷலிச கட்சிகளிடையேயுள்ள உறவுகளைப் பற்றிய முடிவு, செயற் குழுவால் வெளியிடப்படும் ஒரு சஞ்சிகையைப் பற்றியது.—74.

37 கலைப்புவாதிகள்—1905-1907 புரட்சியின் தோல்விக்குப் பின் மென்ஷிவிக்குகளிடையே பரவிய ஒரு சந்தர்ப்பவாதப் போக்கின் பிரதிநிதிகள் இவர்கள். (இவர்கள் ரு.ச.ஜ.தோ. கட்சியின் ஒரு சந்தர்ப்பவாத பிரிவினர்.)
இவர்கள் தொழிலாளி வர்க்கத்தினுடைய சட்ட ரீதியற்ற புரட்சிக் கட்சியைக் கலைக்கும்படி கோரினார்கள். போர்குணமிக்க கட்சிக்குப் பதிலாக அவர்கள் சந்தர்ப்பவாத "பரந்த தொழிலாளி வர்க்க கட்சி" ஒன்றை உருவாக்க விரும்பினார்கள். அந்தக் கட்சி புரட்சிகர கோஷங்களைக் கைவிட்டுவிட்டு ஜார் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட சட்டப்பூர்வ நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடும். அவர்களுடைய இந்தக் கொள்கையைத் தொழிலாளர்கள் ஆதரிக்கவில்லை. ஜனவரி 1912ல் பிராக்கில் நடைபெற்ற ரு.ச.ஜ.தொ. கட்சி மாநாடு அவர்களை கட்சியிலிருந்து வெளியேற்றியது.—74.

38 இடதுசாரி நரோத்னிக்குகள்—சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்—ருஷ்யாவில் 1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் நிறுவப்பட்ட குட்டி முதலாளித்துவக் கட்சியின் உறுப்பினர்கள். வெவ்வேறு நரோத்னிக்குகளின் குழுக்களும் வட்டங்களும் ஒரு சக்தியாக இணைந்ததின் விளைவாக இக்கட்சி தோன்றியது. முதலாம் உலகப் போர் காலத்தில் (1914-1918) பெரும்பாலான சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சமூக-தேசியவெறியர்களாக மாறினர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின், மென்ஷிவிக்குகள், காடேட்டுகள் ஆகியோரும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும்தான் முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ இடைக்கால அரசாங்கத்தின் மற்றும் எதிர்ப்புரட்சியின் ஆதாரமாக இருந்தவர்கள். சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் தலைவர்கள் அதனுடைய உறுப்பினர்கள். அக்டோபர் சோஷலிசப் புரட்சியைத் தொடர்ந்து, சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் எதிர்புரட்சி நடவடிக்கையில் ஈடுபட்டனர். ருஷ்ய நாட்டிற்குள் ஊடுருவிய அன்னிய நாட்டினருக்கும் வெண்காவலர் தளபதிகளுக்கும் ஆதரவளித்தனர். சோவியத் அரசு, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைவர்களுக்கு எதிராக பயங்கர இயக்கத்தை அமைத்தனர்.—75.

39 **மதக்குருக்களின் பள்ளிக்கூடங்கள்**—புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் இருந்த ஆரம்பப் பள்ளிக்கூடங்கள். இவை மதக் குருக்களால் நடத்தப்பட்டன. இப்பள்ளிகளில் மத போதனை, சர்ச் ஸ்லாவோனிய மொழியைப் படித்தல், சமயப் பாடல்களைப் பாடுவது ஆகியவற்றிற்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. ருஷ்ய மொழி, கணக்கு ஆகிய வற்றிற்கு மற்ற ஆரம்பப் பள்ளிகளில் காட்டிய கவனத் தை விட குறைவான கவனமே காட்டப்பட்டது.—77.

40 **அர்ஷீன்**—இது ஒரு ருஷ்ய நீட்டலளவையாகும். மெட்ரிக் முறை புகுத்தப்படுவதற்கு முன் பயன்படுத்தப்பட்ட முறையாகும். ஓர் அர்ஷீன் என்பது 71.12 செ.மீ. ஆகும். —78.

41 **பெயிலிஸ் வழக்கு**—1913ம் ஆண்டில் கீவ் நகரில் ஜார் அரசாங்கத்தால் தொடுக்கப்பட்ட ஆத்திரமூட்டும் வழக்கு இது. சடங்கு காரியங்களுக்காக ஒரு கிருஸ்துவ பையனைக் கொலை செய்ததாக பெயிலிஸ் என்ற யூதர் ஒருவர் மீது பொய் வழக்குப் போடப்பட்டது. (உண்மையில் அந்தப் பையனைக் கொலை செய்தது கருப்பு நூற்றுவர்கள்) யூதர் களுக்கு எதிராக ஆத்திரமூட்டி யூதப் படுகொலைகளைத் தூண்டுவிட்டு, மும்முரமாகி வந்த புரட்சி இயக்கத்திலி ருந்து மக்கள் பெருந் திரளினரைத் திசை திருப்பி விடு வதே இந்த வழக்கு விசாரணையின் நோக்கம். இந்த வழக்கு பொது மக்களிடையே பெரிய பரபரப்பை ஏற் படுத்தியது. அநேக நகரங்களில் தொழிலாளர்களின் கண் டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. பெயிலிசுக்குக் குற்ற விடுதலைத் தீர்ப்பளிக்கப்பட்டது.—82.

42 **சேவெர்னயா பிராவ்தா (வடதிசை உண்மை)**—1913ம் ஆண்டில் ஆகஸ்டு 1 (14)க்கும் செப்டம்பர் 7 (20)க்கும் இடைப்பட்டக் காலத்தில் தோன்றிய போல்ஷிவிக் பிராவ் தாவின் பெயர்களில் இது ஒன்று.—83.

43 1913ம் ஆண்டில் செப்டம்பர் மாதம் 23ம் தேதி முதல் அக்டோபர் 1ம் தேதி வரை (6-14 அக்டோபர்) போலந்து பரோனின் கிராமத்தில், (கிராக்கவ் என்னும் நகருக்கரு கில்) நடைபெற்ற ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழி லாளர் கட்சி (ரு.ச.ஜ.தொ. கட்சி)யின் மத்தியக் கமிட்டி. அதனுடைய ஊழியர்களின் மாநாட்டைப் பற்றிக் குறிப் பிடுகிறது.

அந்த மாநாட்டின் முக்கியப் பிரச்சனை தேசிய இனப் பிரச்சனையாகும். அந்த மாநாடு கட்சி திட்டத்தின் அடிப்

படையில் நடந்தது. அது மென்ஷிவிக்குகள், புந்துக்காரர்கள் ஆகிய சந்தர்ப்பவாதிகளின் கோரிக்கையான ''கலாச்சார-தேசிய சுயாட்சியை'' நிராகரித்து. தேசியப் பிரச்சனையைப் பற்றி லெனினுல் வகுக்கப்பட்ட திட்டத்தின் கோட்பாடுகளை அம்மாநாடு எடுத்துக் கொண்டது. அம்மாநாடு, நாட்டினங்களின் சுயநிர்ணய உரிமைக்கான கோஷத்தையே கட்சியின் முக்கிய கோஷமாக ஏற்றுக் கொண்டது. அதாவது பிரிந்து சென்று சுதந்திரமான ஓர் அரசை அமைக்கும் உரிமை. அதே நேரத்தில் எந்த ஒரு நாட்டின் பிரிந்து செல்லும் உரிமையின் தகுதியும் ஒவ்வொரு நாட்டின் விஷயத்திலும் சுதந்திரமாக அந்த நாட்டாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும். சமுதாயத்தில் வளர்ந்து வரும் பாட்டாளி வர்க்கத்தின் சோஷலிசத்திற்கானப் போராட்டத்தின் சூழ்நிலையில் இது தீர்மானிக்கப்பட வேண்டும்.—85.

44 ந.க. க்ருப்ஸ்கயாவினுடைய மக்கள் கல்வியும் ஜனநாயகமும் என்ற நூல் திட்டமிட்டபடி ''பாருஸ்'' (கப்பற்பாய்) பதிப்பகத்தாரால் வெளியிடப்படவில்லை. 1917ல் தான் ''ஷீஸ்ன் இ ஸ்ஞனியே'' (வாழ்க்கையும் அறிவும்) பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.—87.

45 குலாக்குகள்—''பணக்கார விவசாயிகள். கூலிகளை அமர்த்தி அல்லது வட்டிக்குப் பணம் கொடுத்து இன்னேரன்னவற்ருல் பிறர் உழைப்பைச் சுரண்டுகிறவர்கள்''. (லெனின்). —96.

46 1919ம் ஆண்டில் ஜனவரி மாதம் 12-19 தேதிகளில் மாஸ்கோ நகரில் சர்வதேசியவாதிகளான ஆசிரியர்களின் இரண்டாவது அகில ருஷ்ய காங்கிரஸ் நடைபெற்றது. கல்வித்துறை மக்கள் கமிசாரகம் உருவாக்கப்பட்டப் பின் விரைவில் சர்வதேசியவாதிகளான ஆசிரியர்களின் சங்கம் அமைக்கப்பட்டது. இச்சங்கம் கல்வித் துறை மக்கள் கமிசாரகத்துக்குப் பெருமளவில் உதவி செய்தது. சோஷலிச கருத்துக்களைப் பரப்புவதிலும் பள்ளிக்கூடங்கள் அரசியலிலிருந்து பிரிந்து இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் பிற்போக்கு ஆசிரியர்களைத் தீவிரமாக எதிர்ப்பதிலும் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் குழு ஒன்றை இந்த ஆசிரியர்களின் சங்கம் தழுவிக் கொண்டது.

வி.இ. லெனின் தன்னுடைய வாழ்த்து உரையில், ''விரிந்த, கூடுமானவரையில் எல்லோரையும் தழுவிய'' ''ஆசிரியர்கள் சங்கத்தை'' உருவாக்குவதற்கான முயற்சியை ஒரு பணியாக முன்வைத்தார். ''கல்வியிலும் சோஷ

விசக் கலாச்சாரத்திலும் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களின் அகில ருஷ்ய சங்கம்'' ஒன்றை அமைக்கும்படி காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்று வலியுறுத்தியது.—*98.*

47 **இரண்டாவது அகில-ருஷ்ய தொழிற்சங்கங்களின் காங்கிரஸ்** *1919*ம் ஆண்டில் ஜனவரி மாதம் *15-25* தேதிகளில் மாஸ்கோவில் நடைபெற்றது.—*100.*

48 **வெண்காவல் படையினர், வெண்காவலர்கள்**—ருஷ்ய முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ எதிர்புரட்சியாளர்களின் ஆயுதமேந்திய சக்திகள். இச்சக்திகள், சோவியத் அதிகாரத்திற்கு எதிரான அன்னிய ஊடுருவல்காரர்களுடன் சேர்ந்து கொண்டன.—*101.*

49 *1919*ம் ஆண்டில் பெர்லினில் நடைபெற்ற பொதுக் கிளர்ச்சி நசுக்கப்பட்டது பற்றி இது குறிப்பிடுகிறது. இராணுவ மந்திரி கே. நோஸ்கேயால் தலைமை தாங்கி நடத்தப்பட்ட எதிர்புரட்சி துருப்புகள் எல்லையற்ற கொடுரத்துடன் பெர்லின் பாட்டாளி வர்க்க கிளர்ச்சியை நசுக்கின. ஜனவரி 15ல், ஜெர்மன் தொழிலாளி வர்க்கத் தலைவர்களான திரு. கார்ல் லீப்க்னெஹ்ட்டையும் திருமதி ரோஸா லுக்சம்பர்க்கையும், ஆயுதம் தாங்கிய துருப்புகள் கைது செய்து மிருகத்தனமாகக் கொன்றனர். *1918*ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தொடங்கிய முதலாளித்துவ ஜனநாயக புரட்சி *1919* ஜனவரியில் நசுக்கப்பட்டதுடன் முடிந்தது.—*102.*

50 **மக்கள் கமிசார்களின் கவுன்சில் (ம.க.க.)**—வி.இ. லெனினால் தலைமை தாங்கப்பட்டது. *1917* அக்டோபரில் சோவியத்துக்களின் அகில ருஷ்ய காங்கிரசில் இக்கவுன்சில் அமைக்கப்பட்டது.—*106.*

51 ''பாட்டாளி வர்க்க கலாசாரம்'' என்ற போர்வையில், மார்க்சியத்திற்கு விரோதமான கருத்துக்கள் வளர்க்கப்பட்டன. இதனை வி.இ. லெனின் இங்கு குறிப்பிடுகிறார். கலாசாரக்-கல்வி நிறுவனம் (புரொலெட்குல்ட்) என்பது கல்வித் துறை மக்கள் கமிசாரகத்துடன் சேவாமனப்பாங்குடன் இயங்கும் ஒரு ஸ்தாபனமாக இணைக்கப்பட்டது. மேலும் இது கலைத்துறையில் பல்வேறு துறைகளில் பாட்டாளிகளின் நடவடிக்கையைத் தழுவிக்கொண்டு செயல்படுகிறது. இது *1917* செப்டம்பர் மாதம் உருவாக்கப்

பட்டது. அக்டோபர் புரட்சிக்குப் பின் அதனுடைய சுதந்திரத்தை நிலைநாட்ட விழைந்தது. இவ்வாறாக புரொலெட்குல்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும் பாட்டாளி அரசையும் தானே எதிர்த்தது. அதன் விளைவாக முதலாளித்துவ அறிவுஜீவிகள் இந்த நிறுவனத்திற்குள் நுழைந்து அதனுடைய கோட்பாட்டில் தமது உறுதியான செல்வாக்கைப் பயன்படுத்த முயற்சிக்கலாயினர். புரொலெட்குல்டின் உறுப்பினர்கள் முந்தைய தலைமுறையினர்கள் விட்டுச்சென்ற கலாசாரத்தை வாரிசாக ஏற்றுக் கொள்ளும் முக்கியத்துவத்தை நடைமுறையில் மறுத்தனர். மக்கள் திரளினரிடையே கல்வி, மற்றும் கலாசாரப் பணியாற்றுவதை அலட்சியப் படுத்தினார்கள். வாழ்க்கையிலிருந்து அவர்கள் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொண்டனர். ''சோதனைச் சாலை முறையினால்'' தனியான ''பாட்டாளி வர்க்க கலாச்சாரம்'' ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் முயன்றார்கள். புரொலெட்குல்ட் என்பது ஒத்தக் கருத்துடையவர்களைக் கொண்ட ஒரே சீரான அமைப்பல்ல. பல புரொலெட்குல்டின் நிறுவனங்களுக்கு முதலாளித்துவ அறிவுஜீவிகள் தலைமை தாங்குகிறார்கள். அதனுடன் தொழிலாள இளைஞர்களும் உள்ளனர். இந்த இளைஞர்கள் சோவியத் அரசினுடைய கலாசார மேம்பாட்டு நடவடிக்கையில் உண்மையாக உதவி செய்ய ஆர்வமுள்ளவர்கள். 1919ல் புரொலெட்குல்டின் நிறுவனங்கள் நன்றாக வளர்ந்தன. ஆனால் 1920ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் அவை வீழ்ச்சியடைந்தன. 1932ல் புரொலெட்குல்ட் முற்றிலுமாக அழிந்துவிட்டது.—108.

52 **கற்றவர்களை ஒன்றுதிரட்டல், சோவியத் அமைப்பு முறையைப் பற்றிய பிரசார ஒழுங்கமைத்தல் குறித்து** 1918 டிசம்பர் 10ல் மக்கள் கமிசார்களின் கவுன்சிலால் ஏற்கப்பட்டதான அரசாணை இங்கே குறிப்பிடப்படுகிறது. இந்த அரசாணை மக்கள் கமிசார்களின் கவுன்சிலால் டிசம்பர் மாதம் 12ம் தேதி ஏற்றுக்கொள்ளப்பட்டு ''இஸ்வேஸ்தியா வ்த்ஸிக்'', இதழ் 272ல் பிரசுரிக்கப்பட்டது. எழுதப் படிக்கத் தெரிந்த எல்லா மக்களையும் பதிவு செய்து, அவர்களிடையே நன்கு படிக்கத் தெரிந்தவர்களை ஒரு குழுவாக அமைக்க வேண்டும் என்று அந்தச் சட்டம் பிரேரேபித்தது. இந்தக் குழுவின் வேலை, ''...முதலாவதாக, எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு அரசாங்கம் ஏற்று நடத்தும் எல்லா விஷயங்களைப் பற்றியும் எடுத்துக் கூறி பரிச்சயப்படுத்துவது. இரண்டாவதாக, பொதுவாக எல்லா மக்களின் அரசியல் கல்வியையும் மேம்பாடடையச் செய்வது...''—109.

53 Karl Marx, *Capital*, *(The Transformation of Money into Capital)*, vol. I, Moscow, *p. 178 பார்க்கவும்.—114.*

54 *38 குறிப்பைப் பார்க்கவும்.—115.*

55 **மென்ஷிவிக்குகள்**—ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்ப வாதப் போக்குடையோர்.

*1903ம் ஆண்டில் ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது மாநாடு நடந்தது. அம்மாநாட்டில் நடந்த ரு.ச.ஜ. தொ. கட்சியின் மத்திய நிர்வாகத்திற்கான தேர்தலில் லெனிஞல் தலைமை தாங்கப்பட்ட புரட்சிகர சமூக-ஜன நாயக கட்சியினர் பெரும்பான்மை பெற்றனர். ருஷ்யனில் போல்ஷின்ஸ்த்வோ எனில் பெரும்பான்மை என்று அர்த்தம் (போல்ஷின்ஸ்த்வோ என்ற சொல்லிலிருந்து போல் ஷிவிக்குகள் என்ற சொல் தோன்றியது). அதே மாநாட்டில் சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மை பெற்றனர். ருஷ்யனில் மென்ஷின்ஸ்த்வோ எனில் சிறுபான்மை என்று அர்த்தம் (மென்ஷின்ஸ்த்வோ என்ற சொல்லிலிருந்து மென் ஷிவிக்குகள் என்ற சொல் தோன்றியது).*

*1905-1907ம் ஆண்டுகளில் நடந்த புரட்சி காலத்தில் மென்ஷிவிக்குகள், புரட்சியில் தொழிலாளி வர்க்கத் தலைமைக்கு எதிராகவும், தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் ஒன்று சேர்வதற்கு எதிராகவும் இருந்தனர். மேலும் அவர்கள் மிதவாத முதலாளித்துவத்துடன் உடன்பாடு ஒன்று செய்யக் கோரிஞர்கள். மென்ஷிவிக்குகளின் கருத்தின்படி மிதவாத முதலாளித்துவம் புரட்சிக்குத் தலைமை வகித்திருக்க வேண்டும். 1905-1907ம் ஆண்டு புரட்சியின் தோல்விக்குப் பின் பிற்போக்கு ஆண்டுகளில் மென்ஷிவிக்குகளில் பெரும்பான்மையினர் கலைப்புவாதிகளாக மாறிஞர்கள். சட்டபூர்வமற்ற தொழிலாளி வர்க்க கட்சியைக் கலைக்க வேண்டுமென கோரிஞர்கள். 1917ம் ஆண்டு பிப்ரவரி முதலாளித்துவ சமூக-ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்குப் பின் மென்ஷிவிக்குகள், முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பதவிகள் ஏற்ருர்கள். அவர்கள் இடைக்கால அரசாங்கத்தின் ஏகாதிபத்திய கொள்கையை ஆதரித்து, தயாராகிக் கொண்டிருந்த சோஷலிசப் புரட்சியை எதிர்த்தனர்.*

*அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் மென் ஷிவிக்குகள் வெளிப்படையாகவே எதிர்புரட்சியாளராக மாறிஞர்கள். இக்கட்சியினர் சோவியத் ஆட்சியைத் தூக்கி எறிய இயக்கப்பட்ட இரகசியமாக சதிகள் செய்த ஸ்தாபனத்தின் அமைப்பாளர்களாகவும் அதில் பங்கு கொள்வோராகவும் இருந்தனர்.—115.*

56 முதல் கம்யூனிஸ்ட் சுப்போத்னிக் மாஸ்கோ-கஸான் ரயில் பாதையிலுள்ள ஸொர்திரோவச்னயா என்னும் ரயில் நிலையத்தில் ரயில்வே தொழிலாளர்களால் 1919 ஏப்ரல் 12ல் ஏற்பாடு செய்யப்பட்டது. பின்னல் இந்த சுப்போத்னிக்குகள் பல்வேறு நிறுவனங்களிலும் நாட்டின் பல்வேறு நகரங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டன.—147.

57 அரசியல் கல்விக்கான தலைமை நிறுவனத்தைப் (கிலாவ் பலித்புரஸ்வேத்) பற்றிய மக்கள் கமிசார்களின் கவுன்சில் அரசாணை லெனின் அறிவுரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு 1920 நவம்பர் 12ல் லெனினல் கையெழுத்திடப்பட்டு 1920 நவம்பர் 23ல் இஸ்வேஸ்தியா வ்த்ஸிக் நாளிதழிலில் பிரசுரிக்கப்பட்டது.—153.

58 பூடு—ருஷ்ய நிறுத்தலளவையில் ஓர் அலகு. ஒரு பூடு என்பது 16.38 கி. கிராமிற்குச் சமம் (மெட்ரிக் முறை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன் உபயோகிக்கப்பட்டது).—167.

59 இவை நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்ன க்ரூப்ஸ்கயாவின் ஆய்வுகளைப் பற்றிய லெனினின் குறிப்புகள். திருமதி க்ரூப்ஸ்கயா ரு.க. கட்சியின் மத்திய கமிட்டியால் (போல்ஷிவிக்குகள்) கூட்டுவிக்கப்பட்ட கட்சி மாநாட்டில் மக்கள் கல்வி சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி ஆற்ற வேண்டிய உரைக்காக தயார் செய்த அறிக்கை இது. இந்த மாநாடு 1920 டிசம்பர் 31 முதல் 1921 ஜனவரி 4 வரை மாஸ்கோவில் நடந்தது. இதனுடைய குறிக்கோள் ரு.க.கட்சி (போல்ஷிவிக்குகள்) பத்தாவது மாநாட்டுக்காகக் கல்வி சம்பந்தமான விவரங்களைச் சேகரிப்பதாகும். திருமதி ந.க. க்ரூப்ஸ்கயாவின் சுகவீனம் காரணமாக பாலிடெக்னிக் கல்வியைப் பற்றிய அவர்களுடைய அறிக்கை வெளியிட முடியவில்லை.—170.

60 கோஎல்ரோ (ருஷ்யாவை மின்சாரமயமாக்குவதற்கான அரசுக் கமிஷன்)—நாட்டை மின்சாரமயமாக்குதலின் அடிப்படையில் அமைக்கப்பட்ட மக்கள் பொருளாதார, புனருத்தாரண மற்றும் வளர்ச்சி பற்றிய தொலைநோக்குத் திட்டம். இத்திட்டமானது வி.இ. லெனின் போதனையின் படி 1920ம் ஆண்டில் ருஷ்யாவை மின்சாரமயமாக்குவதற்கான அரசுக் கமிஷனல் தயாரிக்கப்பட்டது.—172.

61 க்ரின்கோ, கிரிகோரி ஃபியோதரவிச் இவர் உக்ரைனில் கல்வித் துறை மக்கள் கமிசாராக இருந்தவர். பொதுக்

கல்விக்கான தன்னுடைய சொந்தத் திட்டத்தை முன் வைத்தவர். அது கீழ்க்கண்ட இரண்டு கொள்கைகளின் அடிப்படையில் அமைந்தது: 1) 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்காக ''சமூக கல்விக்கான ஒரே ஒரு முறை இருக்கும். அதில் எல்லா அமைப்பு வடிவங்களும் உழைப்புக் கோட்பாட்டின் படி நிறுவப்பட்டு இருக்கும். (மழலைப் பள்ளிகள், குழந்தைகள் இல்லங்கள், ஏழு ஆண்டு பள்ளிக் கூடங்கள் ஆகியவை அதில் அடங்கி இருக்கும்)''; 2) 15 வயதிற்குப் பிறகு ''குறிப்பிட்ட உற்பத்தித் துறையில் சிறப்புப் பயிற்சியளிக்கப்படும்''.

ஓ.யூ. ஷ்மீத் இவர் அப்பொழுது கல்வி துறை மக்கள் கமிசாரகத்தின் தொழில் பயிற்சி, பல் துறைத் தொழில் நுட்பப் பள்ளிகள், மேற்கல்வி நிலையங்களது மைய நிர்வாகத்தின் உதவித் தலைவராக இருந்தார். ''உற்பத்தியில் உள்ள ஆர்வமானது, பொதுக்கல்வியைக் குறைக்கக் கோரியது, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் ஸ்தூலமான சிறப்பு அறிவுரைகளை அது கோரியது'' என்று வாதிட்டார். ஓ.யூ. ஷ்மீத் பாலிடெக்னிக் கல்விக்கு எதிராக செய்தித்தாளில் கட்டுரைகள் எழுதினர். உற்பத்தித் துறையில் ஏதாவது ஒன்றில் பயிற்சி அளிப்பதற்கு சாதகமாக வாதித்தார். இந்தத் திட்டம் கல்வித்துறையில் ரு.க.கட்சி (போல்ஷிவிக்குகள்)யின் திட்டத்திற்கு முரண்பட்டதாகும். இத்தகைய கருத்துக்களை லெனின் கூர்மையாக விமர்சித்தார்.—174.

62 **அன்டான்ட்**—ஏகாதிபத்திய உடன்படிக்கை. இது, பிரிட்டன், பிரான்ஸ், ருஷ்யா ஆகிய ஏகாதிபத்திய சக்திகளின் ஒரு கூட்டணி. 1907ல் முழு உருவெடுத்தது. இது முக்கூட்டு ஒப்பந்த நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு எதிராகத் திருப்பப்பட்டது. 1904ல் முடிந்த ஆங்கிலோ-பிரான்ஸ் ஒப்பந்தத்திலிருந்து (''Entente cordiale'', அதாவது, ''நெஞ்சத்தின் ஒப்புரவு'') இப்பெயர் உருவாயிற்று. 1914-1918ம் ஆண்டுகளில் நடைபெற்ற முதல் உலகப் போரின் காலக் கட்டத்தில் (1914-1918) இந்த அன்டான்டுடன் அமேரிக்க ஐக்கிய நாடும் ஜப்பானும் மற்ற நாடுகளும் சேர்ந்து கொண்டன. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் இந்தக் கூட்டணியின் முக்கிய உறுப்பு நாடுகளான: பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடு, ஜப்பான் ஆகியவை சோவியத் ஆட்சியின் மீது ஆயுதப் படையெடுப்பை ஏற்பாடு செய்வனவாயும் அமைப்பாளராக ஊக்குவிப்பனவாகவும் மாறிய நாடுகளாகும்.—175.

63 புதிய பொருளாதாரக் கொள்கை (நேப்)—முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாற்றம் ஏற்பட்ட காலத்தில் இருந்த பாட்டாளி வர்க்க அரசின் ஒரு பொருளியயல் கொள்கை. இதற்கு முன்பு வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு செய்தபொழுதும் உள்நாட்டுப் போர் நடந்த காலத்திலும் சோவியத் ருஷ்யா கடைபிடித்த பொருளாதாரக் கொள்கை ''போர் கம்யூனிசம்'' *(1918-1920)* என்று பெயரிடப்பட்டு வரலாற்றில் இடம் பெற்றது. இந்தப் ''போர் கம்யூனிஸக்'' கொள்கையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக இது ''புதிய'' பொருளாதாரக் கொள்கை என அழைக்கப்பட்டது. ''போர் கம்யூனிசம்'' என்பது உற்பத்தியையும் உற்பத்திப் பொருள்களையும் வினியோகம் செய்யும் அதிகாரம் முழுவதையும் மையத்தில் குவித்து வைப்பதற்கு அதுவாகவே தீர்மானித்துக் கொண்டது. சுதந்திரமான வர்த்தகத்திற்குத் தடை விதித்தது. இன்றியமையாத பொருள்களின் உபரி முறை என்பதை அமுலாக்கியது. அதன்படி விவசாயிகள் விவசாய உற்பத்திப் பொருள்களிலுள்ள உபரிப் பொருள் எல்லாவற்றையும் அரசிடம் கொடுக்க வேண்டும்.

உபரிப் பொருள்களைக் கொடுப்பது என்பதற்குப் பதிலாக பணமாக அல்லாமல் பொருளாக வரி கொடுக்க வேண்டும் என்ற முறை வந்ததும் விவசாயிகளால் அவர்களுடைய உபரிப் பொருள்களை அவர்கள் தகுந்த விலை என்று எண்ணிய விலைக்கு விற்கவும். சந்தையில் விற்கவும், அவர்களுக்குத் தேவையான நுகர்பொருள்களை வாங்கவும் முடிந்தது.—*183.*

64 குபேகோஸோ (குபேர்னியா பொருளாதார மாநாடுகள்) என்பது, எட்டாவது அனைத்து ருஷ்ய சோவியத்துகளின் முடிவுப்படி *1920* டிசம்பரில் அமைக்கப்பட்ட தொழில், பாதுகாப்பு கவுன்சில்களின் வட்டார ஸ்தாபனங்களாகும். அவை குபேர்னியா நிர்வாகக் குழுவுடன் சேர்க்கப்பட்டன.—*185.*

65 *1920* பிப்ரவரியில் வி. இ. லெனின் முன்முயற்சியால் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் ரு.சோ.கூ. சோ. குடியரசின் தொழிலாளர் விவசாயிகளது மேற்பார்வைத் துறை மக்கள் கமிசாரகம். (ருஷ்யன் சுருக்கம் ரப்கிரீன்) அமைக்கப்பட்டது.—*185.*

66 F. Engels, *Flüchtingsliteratur* (குடியேறியவர் இலக்கியம்) (Marx and Engels, *Werke*, Bd. 18, S. 532) பார்க்க—*192.*

67 பத் ஸ்னுமினெம் மார்க்சிஸ்மா (மார்க்சியக் கொடியின் கீழ்) 1922 முதல் 1944 வரை மாஸ்கோவில் வெளியிடப்பட்ட ஒரு தத்துவ இயல் சமூக-பொருளாதார சஞ்சிகை.—196.

68 சோவியத்துக்களின் எட்டாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்பட்டத் தீர்மானத்தை லெனின் கருத்தில் கொள்கிருர்.—199.

69 உயெஸ்து—புரட்சிக்கு முன் ருஷ்யாவில் இருந்த நிர்வாக அமைப்பு. இது குபேர்னியாவுடன் இணைக்கப்பட்டது.—199.

70 கல்வி போதிக்கும் ஊழியர்களின் மாநாடு. இது மாஸ்கோவில் 1922ம் ஆண்டு 21-25 தேதிகளில் நவம்பர் மாதத்தில் நடைபெற்றது. இந்த மாநாடு லெனினை அதனுடைய மதிப்பிற்குரிய தலைவராகத் தேர்ந்து எடுத்து அவருக்கு வாழ்த்து அனுப்பியது.—201.

71 பிரேஸ்த் சமாதானம் சோவியத் ருஷ்யாவிற்கும் ஜெர்மன் கூட்டணிக்கும் (ஜெர்மனி, ஆஸ்திரியா-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி) இடையே 1918 மார்ச்சு 3ல் பிரேஸ்த் லித்தோவ்ஸ்க்கில் முடிவுற்றது. அதனுடைய ஷரத்துக்கள் சோவியத் ருஷ்யாவுக்கு மிகவும் பாதகமானதாக இருந்தன. பிரேஸ்த் சமாதான உடன்பாடு, லே.த. திரோத்ஸ்கிக்கும் ''இடதுசாரி கம்யூனிஸ்டுகளின்'' ஒரு குழுவிற்கும் எதிராக ஒரு கடுமையான போராட்டத்தை உருவாக்கியது. வி.இ. லெனினின் முயற்சியால் ஜெர்மனியுடன் சமாதான உடன்பாடு கையெழுத்தாயிற்று. ஜெர்மனியில் முடியரசாட்சியைத் தூக்கி எறிந்த (1918 நவம்பர்) புரட்சிக்குப் பின், அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, நியாயமற்ற கொள்ளைக்காரப் பிரேஸ்த் உடன்படிக்கையை ரத்து செய்தது.—216.

# பெயர்க் குறிப்பகராதி

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1895)*—விஞ்ஞானக் கம்யூனிசத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர். சர்வதேசியப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவரும் ஆசிரியருமாவார். கார்ல் மார்க்சின் தோழரும் அவருடன் இணைந்து பணியாற்றியவருமாவார்.—*8, 36, 192, 194.*

ஓவன் [Owen], ராபர்ட் *(1771—1858)*—ஆங்கிலேய கற்பனாவாத சோஷலிஸ்ட். முதலாளித்துவ முறையின் அடிப்படைகளை மிகக் கடுமையாக விமரிசித்தார். ஆனால் அவரால் முதலாளித்துவ முரண்பாட்டின் உண்மையான வேர்களைக் காண முடியவில்லை. சமூக சமத்துவமின்மையின் முக்கியமான காரணம் கல்வியைப் பரப்புவதில் உள்ள குறையாக அவர் கருதினார். ஆனால் முதலாளித்துவ உற்பத்தி முறையாலேயே விளைந்தது எனக் கருதவில்லை. கல்வியைப் பரப்புவது, சமூக சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் மூலம் இக்குறையை நீக்க முடியும் என்ற பெரிய திட்டம் ஒன்றைப் பிரேரேபித்தார்.—*213.*

ககோவ்த்ஸெவ், விளதீமிர் நிக்கலாயெவிச் *(1853—1943)*—ஜார் காலத்திய ருஷ்யாவின் ராஜதந்திரி. 1911 முதல் அமைச்சரவையின் தலைவராக இருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் வெண்காவலராக குடிபெயர்ந்தார்.—*53, 55.*

கல்ச்சாக், அலெச்சாந்தர் வசீலியெவிச் *(1873—1920)*—ஜார் காலத்திய கப்பல் படைத் தளபதி, முடியரசுவாதி.

1918-19ல் ருஷ்ய எதிர்புரட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர். அன்டான்டின் கையாளாக இருந்தவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் ருஷ்யாவின் ஆளும் உயர் ஆட்சியாளராகத் தன்னைத்தானே அறிவித்துக் கொண்டார். யூரல் மலைப் பகுதிகள், சைபீரியா, தூரக் கிழக்கு ஆகிய பகுதிகளிலுள்ள முதலாளிகள்-நிலவுடைமையாளர்கள் ஆகியோர்களின் இராணுவ சர்வாதிகாரத்தின் உயர் தலைவராக தன்னைத் தானே பிரகடனப்படுத்திக் கொண்டார். அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் அவருக்கு உதவினார்கள்.—*109, 117, 144, 158.*

கஸ்ஸோ, ல. அ. *(1865—1914)*—பெரும் நிலப்பிரபு. ஹார்கவ், மாஸ்கோ பல்கலைக்கழகங்களின் பேராசிரியராக இருந்தார். 1910-14 ஆண்டுகளில் மக்கள் கல்விக்கான அமைச்சராக இருந்தார். ஆரம்பப் பள்ளி, செகண்டரிப் பள்ளி, உயர்கல்விப் பள்ளி ஆகியவற்றைப் பற்றிய அவருடைய கோட்பாடுகள் பிற்போக்குத்தன்மையானவை. புரட்சிகர மாணவர்களும் முற்போக்குப் பேராசிரியர்களும் அவரால் மிகவும் துன்புறுத்தப்பட்டனர்.—*41, 46, 53, 55, 56.*

காவுத்ஸ்கி [Kautsky], கார்ல் *(1854—1938)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் தலைவர்களில் ஒருவர். இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். முதலில் மார்க்சியவாதி, ஆனால் பின்னால் மார்க்சியத்திற்குத் துரோகம் செய்பவராக மாறினார். மையவாதத்தின் (காவுத்ஸ்கி வாதம்) சித்தாந்தியாக மாறினார். இது மிகவும் அபாயகரமானதும் கேடுவிளைவிக்கக் கூடியதுமானவற்றில் ஒன்றாகும். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் (1917) பாட்டாளிப் புரட்சிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்திற்கும் போல்ஷிவிக் கட்சிக்கும், சோவியத் அரசிற்கும் எதிராக பகிரங்கமாக செயல்பட வெளிவந்தார்.—*217.*

கேரென்ஸ்கி, அலெக்சாந்தர் ஃபியோதரவிச் *(1881—1970)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர். 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் சட்ட மந்திரியாகவும், இராணுவ, கப்பல்படை ஆகியவற்றின் மந்திரியாகவும் அதன் பிறகு முதலாளித்துவத் தற்காலிக அரசாங்கத்தின் தலைவராகவும் உயர் தலைமைத் தளபதியாகவும் இருந்தார். மக்கள் விரோத

அரசியலை செயல் திறனுடைய முறையில், ஏகாதிபத்தியப் போர் நீடிப்பதற்காகவும் பெரும் முதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் ஆட்சியைக் காக்கவும் நாட்டில் புரட்சியை நசுக்கவும் நடத்தினர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போரிட்டார்.—*158, 159.*

**கோர்க்கி, அலெக்சேய் மக்சீமவிச் (பேஷ்கொவ், அ.ம.)** *(1868—1936)*—பாட்டாளி வர்க்கத்தின் எழுத்தாளர். சோவியத் இலக்கியத்தின் மூலாதாரமாக நின்றவர்.—*87.*

**க்ரின்கோ, இரிகோரி ஃபியோதரவிச்** *(1889—1938)*—ஒரு கம்யூனிஸ்ட். *1921*ல் உக்ரைனில் கல்விக்கான மக்கள் கமிசாராக இருந்தார்.—*174.*

**க்ருப்ஸ்கயா, நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னு** *(1869—1939)*—நீண்டகால, மூத்த கட்சி உறுப்பினர். வி.இ. லெனின் மனைவியும் உடன் பணியாற்றியவருமாவார். பிரபல சோவியத் கல்வி நிபுணர்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் கல்வித் துறை மக்கள் கமிசாரகக் கூட்டத்தின் உறுப்பினர். *1921* முதல் முக்கிய அரசியல் கல்வி நிறுவனத்திற்குத் தலைமை தாங்கினர். *1929* முதல் கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தினது உதவி தலைவராக இருந்தார்.—*14, 17, 170*

**க்லூழெவ், இ. ஸ.** *(1856ல் பிறந்தார்)*—இவர் ஓர் அக்டோபரிஸ்டு. ஸமாரா உயேஸ்து, ஸமாரா என்னும் நகரம் ஆகியவற்றின் மக்கள் பள்ளிகளின் கண்காணிப்பாளர். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது அரசாங்க டூமாக்களின் பிரதிநிதியாக இருந்தார்.—*59, 60, 61, 62, 63, 64.*

**சுஹானவ், நி. (கிம்மெர், நிக்கலாய் நிக்கலாயெவிச்)** *(1882ல் பிறந்தார்)*—பொருளாதார நிபுணர், குட்டி முதலாளித்துவ எழுத்தாளர், மென்ஷிவிக் கட்சியினர். முதல் உலகப் போரில் *(1914-1918)* சர்வதேசியவாதி. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் சோவியத் பொருளாதார நிறுவனங்களில் வேலை பார்த்தார். லெனின் தன்னுடைய நூல்களில் சுஹானவின் மென்ஷிவிக் கருத்துக்களைக் கடுமையான விமர்சனத்திற்கு ஆட்படுத்தினர்.—*11, 216.*

**ச்ஹென்கேலி, அக்காக்கி இவானவிச்** *(1874—1959)*—

சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். 1917 பிப்ரவரி புரட்சிக்குப் பின், அதாவது முதலாளித்துவ-ஜனநாயக புரட்சிக்குப் பின், இவர் டிரான்ஸ்காக்கஸஸ் இடைகால அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருந்தார்.—74.

டிரேவஸ் [Drews], ஆர்தர் (1865—1935)—ஆரம்பகால கிறிஸ்துவத்தின் ஜெர்மன் வரலாற்று ஆசிரியர். அவருடைய நூல்களில் அவர் ஏசு கிறிஸ்துவை ஒரு வரலாற்று நபர் என்பதனை மறுத்தார். ஆனால் அவர் சர்ச்சின் வறட்டுச் சூத்திரத்தையும் தப்பெண்ணங்களையும் கருத்துமுதல்வாதத்தின் கண்ணோட்டத்தில் இருந்து விமர்சனம் செய்தார்.—195.

துர்னேவோ, இ. நி. (1830—1903)—ருஷ்ய ராஜதந்திரி. ஜார் அரசாங்கத்தின் அதிகார வர்க்கத்தின் பிரதிநிதி. உள்நாட்டு அமைச்சர் (1889—1895), அமைச்சர்கள் கமிட்டியின் தலைவர் (1895—1903). ஸேம்ஸ்துவோ கண்காணிப்பாளர்கள் என்ற ஒரு புதிய நிறுவனத்தை அறிமுகப்படுத்தியவர். ஸேம்ஸ்துவோ நிறுவனங்களைப் பற்றிய புதிய சட்டம் ஒன்றையும் இயற்றினர். இச்சட்டம் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதிநிதிகளாக வருவதைத் தடுத்தது. அவருடைய தூண்டுதலினல் தேசிய சிறுபான்மையினர் துன்புறுத்தப்பட்டனர். தணிக்கையின் கடுமையும் கூடியது.—33, 37.

தெனீக்கின், அந்தோன் இவானவிச் (1872—1947)—ஜார் அரசாங்கத்தின் தளபதி, வெளிநாட்டினரின் இராணுவ ஊடுருவல் நேரம் (1918—1920) வரை நடைபெற்ற உள்நாட்டுப் போர் காலத்தில் தென் ருஷ்யாவில் வெண் காவலர் படைகளின் முதன்மை தளபதியாக இருந்தார். 1920 மார்ச்சில் செஞ்சேனையால் அவர்கள் தோற்கடிக்கப்பட்டதும் அவர் வெளிநாட்டிற்குக் குடிபெயர்ந்தார்.—117, 144.

தொப்ரஸோர்தவ், கா.—''அரசாங்க டூமாவும் மக்கள் கல்வியும்'' என்ற கட்டுரையின் ஆசிரியர். இக்கட்டுரை நேவ்ஸ்கயா ஸ்வெஸ்தா என்ற போல்ஷிவிக் பத்திரிகையின் 6ம் இதழில், 1912 மே 22ல் வெளிவந்தது.—63.

நீக்கொன் (பெஸ்ஸோனவ், நி.) (1869—1919)—கறுப்பு நூற்றுவர், நான்காவது அரசாங்க டூமாவின் பிரதிநிதி. 1913ல் யெனிசே விக்கார், கிரஸ்னெயார்ஸ்கின் பிஷப்பாக நியமிக்கப்பட்டார்.—66, 67, 68.

நெப்போலியன் I (போனப்பார்ட்) *(1769—1821)*—*பிரான்ஸ் நாட்டின் சக்கரவர்த்தி (1804—1814, 1815).—216.*

பக்ரோவ்ஸ்கி, மிஹயீல் நிக்கலாயெவிச் *(1868—1932)*—*1905 முதல் போல்ஷிவிக் கட்சியின் உறுப்பினர். பிரபல சோவியத் ராஜதந்திரி, வரலாற்று ஆசிரியர்.*
*1918 முதல் ரு.சோ.கூ.சோ. குடியரசின் கல்வித் துறை மக்கள் கமிசாரின் உதவி தலைவராக இருந்தார்.*
*—178.*

பிரகோவ், நிக்கலாய் இவானவிச் *(1810—1881)*—*மருத்துவத் துறையில் பிரபலமான விஞ்ஞானி, சமூக ஊழியர். ஒதெஸ்ஸா, கீவ் ஆகிய கல்வி மாவட்டங்களின் கண்காணிப்பாளராக இருந்து கொண்டு இவர், சமுதாய அந்தஸ்து, தேசிய, வகுப்பு என்ற அடிப்படையில் கல்வி கற்க விதிக்கப்பட்ட எல்லாத் தடைகளையும் எதிர்க்கும் கல்வி முறையை கடுமையாக எதிர்த்தார். அதே நேரத்தில் பலப் பிரச்சனைகளில் அவர் பிற்போக்குத்தனமான கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தார். மாணவர்களுக்கு உடலை வருத்தும் தண்டனைகள் கொடுப்பதை ஒத்துக் கொண்டார் என்பது அவற்றில் ஒன்று. கல்வி முறைகளில் சீர்திருத்தங்களைப் புகுத்த முயற்சித்த ஒரு முயற்சிக்காக அவர் அவருடைய பதவியிலிருந்து 1861ல் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டார்.—44.*

புகச்சோவ், யெமெலியான் இவானவிச் *(கிட்டத்தட்ட 1742—1775)*—*பண்ணையடிமை முறையை எதிர்த்து விவசாயிகளும் கசாக்குகளும் 18ம் நூற்றுண்டில் ருஷ்யாவில் நடத்திய மிகப்பெரிய கலகத்தின் தலைவர்.—36.*

புரிஷ்கேவிச், விளதீமிர் மித்ரஃபானவிச் *(1870—1920)*—*பெரும் நிலப்பிரபு, கறுப்பு நூற்றுவர், முடியரசு ஆதரவாளர். வன்முறைகளையும் யூத எதிர்ப்பு இயக்கங்களையும் உருவாக்குவதில் பிரபலமானவர்.—40, 66, 82.*

பெத்லியூரா, சிமோன் வசிலியெவிச் *(1877—1926)*—*உக்ரைன் முதலாளித்துவத் தேசியவாதிகளின் தலைவர்களில் ஒருவர். அந்நியரின் இராணுவ படையெடுப்பின் போதும் உள்நாட்டுப் போரிலும் (1918—1920) உக்ரைனில் எதிர்புரட்சித் தலைவர்களில் ஒருவராக இருந்தார்.—158.*

பென்தாம் [Bentham], ஜெரிமி *(1748—1832).—ஓர் ஆங்கில*

சட்ட நிபுணர், தத்துவஞானி, முதலாளி வர்க்கத்தினரது மிதவாதத்தின் சித்தாந்தி, பயன்பாட்டுக் கோட்பாட்டின் தத்துவஞானி. அவருடைய போதனைப்படி சமூகம் என்பது தனிமனிதர்கள், அவர்களுடையச் சொந்த நலன்களுக்காக இணைந்ததாகும்.—*114, 115, 117.*

பேத்னி, தெம்யான் (பிரித்வோரவ், யெஃபீம் அலெக்சேயெவிச்) *(1883—1945)*—ஒரு சோவியத் கவிஞன். போல்ஷிவிக் கட்சியின் உறுப்பினர். அவருடைய கவிதைகளும் கட்டுக் கதைகளும், முதலாளித்துவ முறையையும் அதைப் பாதுகாப்பாளர்களையும் எதிர்த்துப் போராடும் வர்க்கப் போராட்ட உணர்ச்சியில் ஊறியவையாகும். வெளியாரின் இராணுவ ஆக்கிரமிப்புப் போதும் உள்நாட்டுப் போரின் போதும் *(1918—1920)* போர்முனைக்குச் சென்று, போர்வீரர்கள் மத்தியில் கிளர்ச்சியாளராகச் செயல்பட்டார்.—*61.*

பொபெதனேஸ்த்ஸெவ், கன்ஸ்தன்தீன் பெத்ரோவிச் *(1827—1907)*—ஜார் காலத்திய ருஷ்ய நாட்டு பிற்போக்குத் தன்மையுள்ள ராஜதந்திரி. அவர்தான் உண்மையில் அரசாங்கத்தின் தலைவராவார். மூன்றும் அலெக்சாந்தர் காலத்தில் பண்ணையடிமை முறை கட்டுக் கடங்காத பிற்போக்குவாத இயக்கத்தின் முக்கியமான தூண்டுகோலாக விளங்கியவர். இரண்டாம் நிக்கலாயின் காலத்திலும் அவர் முக்கியமான பங்கினை தொடர்ந்து செய்து வந்தார். அவருடைய வாழ்நாள் முழுவதும் புரட்சி இயக்கத்திற்கு எதிராக மிகக் கடுமையான போராட்டத்தை நடத்தியவர். 1860-களில் முதலாளி வர்க்கத்தினர் செய்த சீர்திருத்தங்களைக் கூடத் தீவிரமாக எதிர்க்கும் நபர் இவர். வரம்பிலா எதேச்சாதிகாரத்தின் ஆதரவாளர். விஞ்ஞானம், கல்வி ஆகியவற்றின் எதிரி.—*33, 37.*

பௌவர் [Bauer], ஓட்டோ *(1882—1938)*—ஆஸ்திரிய சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். ''ஆஸ்திரிய மார்க்சியம்'' என்றழைக்கப்படும் சித்தாந்தி. ''ஆஸ்திரிய மார்க்சியம்'' என்பது சீர்திருத்தத்தின் ஒரு வகையாகும். ''கலாசார-தேசிய சுயாட்சி'' என்ற முதலாளித்துவ-தேசிய தத்துவத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு விரோதமான போக்கை கடைபிடித்தவர்.—*75.*

மக்லகோவ், வசிலி அலெக்சேயெவிச் *(1870—1959)*—*வலது சாரி காடேட்டு, நிலப்பிரபு, வக்கீல் தொழில் செய்தவர். அநேக அரசியல் வழக்குகளில் வாதிட்டுள்ளார். 1917ல் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் பாரிசில் முதலாளித்துவ இடைகால அரசாங்கத்தின் தூதுவரானார்.—55.*

மஹ்னோ, நெஸ்டர் இவானவிச் *(1884—1934)*—*உக்ரைனில் எதிர்புரட்சி, அராஜகவாதிகள், குலாக்குகள் ஆகியோர்களின் படைகளின் தலைவர். இப்படைகள் சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போரிட்டன. மஹ்னோவின் படைகள் 1921 வசந்தத்தில் அடியோடு அழிக்கப்பட்டன.—158.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)*—*விஞ்ஞான கம்யூனிசத்தின் நிறுவகர், சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் தலைவரும் ஆசிரியரும் ஆவர். — 8, 36, 114, 115, 129, 130, 170, 194.*

யுதெனிச், நிக்கலாய் நிக்கலாயெவிச் *(1862—1933)*—*ஜார் படையின் தளபதி. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் வடகிழக்குப் பகுதியில் வெண்காவலர் படையின் தளபதியானார். அன்டான்ட் ஏகாதிபத்தியவாதிகளின் பரந்த ஆதரவை அனுபவித்தார்.—158.*

யூழக்கோவ், செர்கேய் நிக்கலாயெவிச் *(1849—1910)*—*மிதவாத நரோதியத்தின் சித்தாந்தவாதிகளில் ஒருவர், சமூகவியலாளர், பொது விவகார கட்டுரையாளர். மார்க்சியத்திற்கு எதிராக மிகக் கசப்பான போர் தொடுத்தவர்.* விவசாய செகண்டரிப் பள்ளிப் பண்ணைகளும் விவசாய சமுதாய மாற்றத்திற்கான பள்ளிகளும், நரோத்னிக் திட்ட பேராசைக்காரர்களின் மாணிக்கங்கள் *போன்ற தன்னுடைய கட்டுரைகளில்* லெனின் யுழக்கோவின் அரசியல்-பொருளாதார கருத்துக்களை மிக்க கூர்மையான விமரிசனத்திற்கு ஆட்படுத்தினர். —22, 23, 24, 25, 26, 27, 28, 30.*

ராஸின், ஸ்தெபான் திமஃபேயெவிச் *(1671ல் இறந்தார்)*—*1660ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ருஷ்யாவின் மிகப்*

---

* *இக்கட்டுரைகள்* V. I. Lenin, *Selected Works*, Vol. II, pp.73-80, 459-486, Moscow, 1972 *பார்க்கவும்.*

பெரிய எல்லை முழுவதும் பரவிய விவசாயிகளின் மிகப் பெரிய போரின் தலைவராக இருந்தவர்.—*36.*

**லித்கென்ஸ், எ. அ.** *(1888—1922)—1919 முதல் போல்ஷிவிக் கட்சியின் உறுப்பினர். 1921 ஜனவரி முதல் ரு.சோ.கூ.சோ. குடியரசின் கல்வித் துறை மக்கள் கமிசாரின் உதவி தலைவராக இருந்தார்.—178.*

**லிப்மன், ஃபி., (கேர்ஷ், ஃபி. மா.)** *(1882ல் பிறந்தார்)—இவர் புந்துவாதி. 1911ம் ஆண்டில் புந்தின் மத்திய குழுவின் உறுப்பினர். முதல் உலகப் போரின்போது (1914—1918) ஜார் அரசாங்கத்தின் நாடுபிடிக்கும் கொள்கையை ஆதரித்தார்.—83. 84.*

**லுனச்சார்ஸ்கி, அனத்தோலி வசீலியெவிச்** *(1875—1933)—புரட்சியையே தொழிலாகக் கொண்டவர். பிரபல சோவியத் ராஜதந்திரி. 1917-1929 ஆண்டுகளில் கல்வித் துறை மக்கள் கமிசாராக இருந்தார். அதன் பிறகு சோவியத் யூனியனின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் விஞ்ஞானக் கமிட்டியின் தலைவரானார். அவர் ஒரு பத்திரிகையாளர்; கலை, இலக்கியம் ஆகியவற்றைப் பற்றிய பல கட்டுரைகளின் ஆசிரியராவார்.—14, 106, 171,178.*

**லெனின், விளதீமிர் இலியீச் (லெனின் நி., உலியானவ் வி.இ.)** *(1870—1924).—179, 200, 201.*

**விராங்கெல், பியோத்தர் நிக்கலாயெவிச்** *(1878—1928)—ஜார் அரசாங்கத்தின் படைத் தளபதி, ஒரு சீமான், முடியரசு ஆதரவாளர், வெளிநாட்டுக்காரர்கள் ஊடுருவிய காலத்திலும் உள்நாட்டுப் போர் நடந்த காலத்திலும் (1918-1920)—இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகளின் கையாளாக இருந்தார். தென் ருஷ்யப் பகுதியில் எதிர்ப்புரட்சியின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். செஞ்சேனையால் எதிர்ப்புரட்சி தோற்கடிக்கப்பட்ட பின் வெளிநாட்டிற்கு ஓடினார்.—166.*

**வீப்பர், ரோபெர்த் யூரியெவிச்** *(1859—1954)—வரலாற்று ஆசிரியர், மாஸ்கோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியர். பல பாடநூல்களின் ஆசிரியர்.—194.*

**ஷ்மீத், ஒட்டோ யூலியெவிச்** *(1891—1956)—பிரபல சோவியத் விஞ்ஞானி, சமுதாய ஊழியர். 1920 முதல் 1921*

வரை கல்வித் துறை மக்கள் கமிசாரகத்தின் கூட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்.—174.

ஸலகூப், ஃபி. (தெதேர்னிக்கவ், ஃபியோதர் குஸ்மீச் (1863—1927)—சீர்கேடுற்ற-எழுத்தாளர். குறுமை பிசாசு (1905) என்ற நாவலில் அவர் குட்டி முதலாளித்துவ நாட்டுப்புற வாழ்க்கை முறையைப் பற்றி ஒரு படம் பிடித்துக் காட்டியுள்ளார். முதல் ருஷ்ய புரட்சிக் காலத்தில் (1905-1907) அவர் எழுதிய கவிதைகள், கிளர்ச்சி செய்த தொழிலாளிகளுக்காக அனுதாபம் காட்டும் குரலாக ஒலித்தன. பிற்போக்கான ஆண்டுகளிலும் (1907-1910) ஒரு புதிய புரட்சிகர எழுச்சியின் போதும் அவர் படைப்புக்களில் நம்பிக்கையின்மை பிரதிபலித்தது.—60.

ஸ்குவர்த்ஸோவ்-ஸ்தெபானவ், இவான் இவானவிச் (1870—1928)—ருஷ்ய புரட்சி இயக்கத்தின் பங்குகொண்ட மூத்த உறுப்பினர்களில் இவர் ஒருவர். கம்யூனிஸ்ட் கட்சியின், சோவியத் அரசின் முக்கியமான ஊழியர். மார்க்சிய எழுத்தாளர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் பல பொறுப்புள்ள பதவிகளை வகித்தார்.—198, 199.

ஸ்தலீப்பின், பியோத்தர் அர்க்காதியெவிச் (1862—1911)—ஜார் ருஷ்யாவின் ராஜதந்திரி, அமைச்சர்களின் தலைவர், உள்நாட்டு அமைச்சர் (1906-1911). 1907 முதல் 1910 முடிய உள்ள கால கட்டத்தில் ஸ்தலீப்பினின் மிருகத்தனமான அரசியல் பிற்போக்குத் தனம் முழுமைக்கும் தன்னை அர்ப்பணித்தார்.—199.

ஹதரோவ்ஸ்கி, இ.இ. (1885—1940)—1903] முதல் போல்ஷிவிக் கட்சியின் உறுப்பினர். அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் போது மாஸ்கோவில் நடைபெற்ற எழுச்சியில் கலந்து கொண்டார். அக்டோபர் புரட்சிக்குப் பின் கட்சி, சேனை, சோவியத் வேலை ஆகியவற்றில் ஈடுபட்டார்.—207, 209.

## வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

## விற்பனையாளர்கள்

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

### தலைமை அலுவலகம்

41. பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட். சென்னை—600098.

### ஷோ-ரூம்

136. மவுண்ட் ரோடு. சென்னை—600002.

### கிளைகள்

80. மேலக் கோபுர வீதி. மதுரை—625001.

87/89. ஒப்பணக்கார தெரு. கோயம்பத்தூர்—641001.

சிங்காரத் தோப்பு. திருச்சிராப்பள்ளி—620008.

செர்ரி ரோடு. சேலம்—636001.

### விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.

66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

В. И. Ленин

О НАРОДНОМ ОБРАЗОВАНИИ

*На тамильском языке*

**V. I. Lenin**

ON PUBLIC EDUCATION

*in Tamil*